நாடகவியல் கலைச்சொல் விளக்க அகராதி

க. இரவீந்திரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

நாடகவியல் கலைச்சொல் விளக்க அகராதி

முனைவர் க. இரவீந்திரன்
பேராசிரியர் (பணி நிறைவு)
நாடகத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-454-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 411

நூல்	:	நாடகவியல் கலைச்சொல் விளக்க அகராதி
ஆசிரியர்	:	முனைவர் க. இரவீந்திரன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	அகராதி
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2046, ஆவணி (செப்டம்பர் 2015)
பக்கம்	:	188 +10
அளவு	:	டெம்மி 1/8
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ
படிகள்	:	1000
விலை	:	உரூ. 190.00
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் க. பாஸ்கரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

அணிந்துரை

விரிந்து பரந்த தமிழ் மரபில் அகராதிகள் அளவிட இயலாத பயன்பாடும் முக்கியத்துவமும் கொண்டவை. மிகுதியான அகராதிகளின் பயன்பாட்டையும் சொற்களஞ்சியப் பெருக்கத்தையும் உடையவர்களது மொழிநடை சிறந்து விளங்கக் காணலாம். ஒவ்வொரு சொல்லும் வெறும் மொழி அலகாக மட்டுமன்றி, நீள் நெடுங்கால வாழ்வை; பண்பாட்டைச் சுமந்து பயணம் செய்கின்றன என்பார் சொல்லாய்வறிஞர் அருளியார்.

தமிழில் அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் போன்றவை காலனியக் காலத்தில், ஆங்கில அறிவுப் புத்தெழுச்சிக் காலத்திற்குப்பின், பெருமளவு புழக்கத்திற்கு வந்தாலும், புதிய வகைமைகளில் உருப்பெற்றாலும், ரேவண சித்தர் தொடங்கி, தொடக்க கால முயற்சிகளும் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே எனும் தொல்காப்பிய வரையறையும் தமிழ்மரபில் ஆழங்கால் பட்டவை.

தமிழல்லாத வேற்று மொழியினத்தில் பிறந்து வளர்ந்த போதும், தமிழை முழுதுணர்ந்தோதி, சதுரகராதி உருவாக்கி, தனித்த தடம்பதித்த வீரமாமுனிவரை அகராதி வரலாறு என்றென்றும் உட்பொதிந்துகொள்ளும். அந்த வகையில் தமிழ் - ஆங்கில அகராதி தயாரித்த வின்சுலோ முதல் சமகால க்ரியாவின் தற்காலத் தமிழகராதி வரை நீண்ட நெடிய வரலாறு மூன்று நூற்றாண்டுகள் கடந்தும் வளர்ந்து வருகிறது.

துறைதோறும் கலைச்சொல் விளக்க அகராதிகள் ஆங்கிலத்தைப் போலவே தமிழிலும் வகைமை நோக்கில் பல்கிப் பெருகி நாள்தோறும் வளர்ந்தோங்கி வருவதைப் பார்க்கிறோம்.

வேறெங்குமில்லாத வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே அகராதிக்கென தனித்துறையும், பெருஞ் சொல்லகராதித் திட்டம், தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் திட்டம் என அகராதிச் செயல்பாடுகள் விரிவாக இயங்கி வருகின்றன.

அகராதிகள் சொற்களுக்குப் பொருள் விளக்கம் மட்டும் தராமல் பல காலகட்டங்களின் மொழி, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணிகளைத் தருவன.

Entrance Ticket *(நுழைவுச்சீட்டு)* முதல் Exit door *(செல்வாயில்)* வரை நாடகம் எனும் பெரும்பரப்பில் நுழைந்து வெளியேறுகிற இடம் வரையான பல்வேறு சொற்களுக்குப் பொருள் விளக்கமும், வரலாற்றுப் பின்புலமும் அளித்துள்ளது இந்நூல். 'திரை' எனும் சொல்லுக்குப் பழந்தமிழில் சுட்டப்படும் 'எழினி' எனவும், Drawcurtain எனும் சொல்லுக்குப் 'பொருமுக எழினி' எனும் சொல்லையும் தந்துள்ளமை பாராட்டுக்குரியது. Tension எனும் சொல்லுக்கு 'மனபாரம்' எனும் பழைய பொருள் தவிர்த்து 'உள் அலைவு' எனத் தந்துள்ளமையும், Roastrum எனும் சொல்லுக்கு 'மேடைத்தட்டு' எனவும், உட்கூடான பெட்டியில் பட்டாணிகளைப் போட்டுக் குலுக்கும் பெட்டிக்கு 'மழையொலிப்பெட்டி' எனவும் பொருள் தந்திருப்பது கவனத்திற்குரியது.

சுழலச்சு மூலம் சுழற்றப்படும் மாறுபட்ட காட்சிகள் மேடையில் காட்சிப்பட, சுழல்பக்கத்தட்டி, 1857க்கு முன்பே பயன்படுத்தப்பட்டது குறித்தும், நாடகக் கலைஞர்களைக்

கூத்தாடிகள் என மக்கள் வெறுக்கும் மனப்பாங்கை மாற்றிய தில் பம்மல் சம்மந்த முதலியார், சங்கரதாசு சுவாமிகள் ஆகியோரது பங்கு குறித்தும், பாலாமணி அம்மாள் நாடகச் சிறப்புக் கருதி, பாலாமணி சிறப்பு புகைவண்டி விட்டது குறித்தும் பலவிதமான சுவையான வரலாற்றைத் தரும் மிக முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது இந்நூல்.

இந்நிலையில் ‘நாடகக் கலைச்சொல் விளக்க அகராதி’ எனும் இந்நூல் வெளிவருவதில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பெருமிதம் கொள்கிறது. நூலாசிரியருக்குப் பாராட்டும் வாழ்த்தும்.

ஆய்வாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயன் பெறும் வகையில் அரும்பெரும் செய்திகளை உள்ளடக்கிய இந்நூலை தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு மகிழ்ச்சியுடன் வழங்குவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமையடைகிறது. இந்நூலை வாங்கிப் பயன்பெறுமாறு வேண்டுகிறேன்.

க.பாஸ்கரன்

10.09.2015
தஞ்சாவூர்.

முன்னுரை

'நாடகவியல்' என்றறியப்படுகிற நாடகத்தின் பல வகைக் கூறுகளையும் உள்ளடக்கிய சொற்றொடர், கலையின் முத்தமிழின் முகமாய் விளங்கும் காட்சி வெளிப்பாடாகும். உலகளாவிய நிலையில் நாடகம் இன்று காட்சிப்படுத்தலுக் காக மட்டுமன்றிக் கருத்துப் பிரச்சாரம், விழிப்புணர்வு, உரிமை மீட்பு, கல்விப் பயிற்சி ஆகிய துறைகளிலும் ஊடு ருவியுள்ளது. இச்சூழலில் தமிழ் நாடகக் கலைச்சொல் விளக் கத்துக்கான பேரகராதியின் பங்குபணி குறிப்பிடத்தக்கதாக அமையும் என்ற அடிப்படைக் குறிக்கோளுடன் இக்கலைச் சொல் விளக்கப் பேரகராதி உருவாக்கப்பட்டுள்ளது. 2000இல் தொடங்கி 2003இல் இப்பணி முடிக்கப்பெற்றது.

தமிழ் நாடகம் குறித்த கலைச்சொற்கள் அவ்வப் போது அங்கொன்றும் இங்கொன்றுமாக நூலடைவுகளில் வரிசைப்படுத்துவதோடு அமையக் காண்கின்றன. முறை யான நாடகக் கலைச்சொல் விளக்கம் இதுவரை உருவாக்கம் பெறவில்லை. இக்குறையை இப்பணி போக்கும் என்ற நம் பிக்கை ஏற்படுகிறது. பம்மல் சம்பந்த முதலியார் நாடகப் படைப்பாளிகளையும் படைப்புகளையும் தொகுத்துத் தந்துள்ளார். நாடகக் கலைக்களஞ்சியம் (திரு. பாபநாசம்) உலகளாவிய நாடக நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்துத் தருவதாக அமைந்து 1964இல் வெளிவந்தது. கோவையில் உருவாக்கம் பெற்ற கலைக்களஞ்சியத் தொகுதிகளில் ஆங் காங்கே நாடகக் கலைச்சொற்கள் சிலவற்றுக்கான விளக்கம் தரப்பட்டுள்ளன. மேலும், சேரன் அவர்கள் உலக நாடகாசிரி யர்கள் என்ற பெயரில் சில நாடக ஆசிரியர்கள், படைப்புகள் பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளார். இவை அகராதிப் பணி களாக அமையவில்லை.

இப்பணிக்கான அடிப்படை அகராதிகளோ மற்றும் நூல்களோ தமிழில் நாடகக் கலைச்சொல் தொடர்பான நூல்களோ குறிப்பிடத்தக்க அளவில் ஏதும் வெளிவரவில்லை. மேலும், நாடகக் கலைச்சொற்களுக்கு உலகளவில் வழங்கப்பட்டு வரும் பொதுமைத்தன்மைக்கு நிகரான கலைச்சொல்லாக்கம் தமிழில் மிகவும் அவசியமாகவுள்ள நிலையில் அது குறித்த தீவிர சிந்தனை தமிழில் இதுவரை இல்லாமலேயே இருந்துள்ளது. இதனால், அடிப்படைக் கலைச்சொற்களுக்குத் தரப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கலைச்சொற்களைப் பெரிதும் நாட வேண்டியிருந்தது. இவ்வகையில் 'The Oxford Companion to the Theatre', (Ed. Phylis Hartnool), Penguin Dictionary of Theatre, Current Literary Terms (Ed. A.F. Scott), A Dictionary of Literary Terms (J.A. Cuddon), Dictionary of Literary Terms (Harry Shaw), *கழகத் தமிழ் அகராதி*, Chambers Everyday Dictionary மேலை இலக்கியச் சொல்லகராதி (வை. சச்சிதானந்தம்), சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் தமிழ் அகராதி ஆகியன கலைச்சொல் தேர்வுக்கும், அவற்றின் விளக்கத்திற்கும் துணைநின்றன. மேலும், சங்க இலக்கிய நூல்களும் பிற இந்திய, நாடக நூல்களும் கலைச்சொல் விளக்கத்தில் துணைநின்றன.

கலைச்சொற்கள்

இவ்வகராதிக்கென நாடகவியலோடு தொடர்புடைய கலைச்சொற்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. அன்றாடம் வழக்கிலுள்ள கலைச்சொற்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. நாடகக் கலைஞர்களின் ஸ்திரீ பார்ட், இராஜபார்ட், பாலபாடம் போன்ற பயன்பாட்டுச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆடுகளம், ஆடுபரப்பு, கூத்தாட்டவை போன்ற இலக்கிய வழக்குச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் கலைச்சொற்கள் தமிழில் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றுள்ளது. அடிப்படைக் கருத்தும், மூலமும் சிதையாமல் பார்த்துக் கொள்ளப் பெற்றுள்ளது. எளிமை, கருத்தாடலில்

வலிமை, புரிதிறன், பயன்பாடு ஆகியவற்றின் முக்கியத் துவம் கலைச்சொல்லாக்கத்தில் பேணப்பட்டுள்ளது.

தொகுக்கப்பெற்றுள்ள கலைச்சொற்களுக்கான விரிவான விளக்கம் அளிக்கப்பெற்றுள்ளது. சொல் மூலம், உருவாக்கம், பயன்பாடு, வரலாறு போன்றவற்றின் அடிப்படையில் கலைச்சொல் விளக்கம் அளிக்கப் பெற்றுள்ளது. நாடகத்துறை, நாடகக் களஞ்சியம் அவற்றுடன் தொடர்புடைய பணிகள் மூலம் பெற்றுள்ள துறை அனுபவம் இதற்குக் கைகொடுத்துள்ளது.

இவ்வகராதித் தயாரிப்பில் என்னைப் பணித்த மாண்பமை முன்னைத் துணைவேந்தர்கள் முனைவர் கதிர் மகாதேவன், முனைவர் இ. சுந்தரமூர்த்தி, முனைவர் ம. இராசேந்திரன் ஆகியோருக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றி உரியது.

இப்பணியினை நுண்ணாய்வு செய்து அறிக்கை தந்த மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர் பேரா. முனைவர் தி. நடராசன் அவர்களுக்கும், தஞ்சாவூர் மன்னர் சரபோசி கல்லூரி ஆங்கிலத் துறைப் பேராசிரியர் முனைவர் செல்வராசு அவர்களுக்கும் நன்றி உரியது. இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த மாண்பமை துணைவேந்தர் முனைவர் **க. பாஸ்கரன்** அவர்களுக்கும், பதிவாளர் முனைவர் **சே. கணேஷ்ராம்** அவர்களுக்கும், பதிப்புத்துறை துணை இயக்குநர் முனைவர் **ஞா. பழனிவேலு** அவர்களுக்கும் நன்றி. மேலும், இப்பணியில் உதவிய பதிப்புத்துறை, அச்சகத்துறை பணியாளர்களுக்கும் மெய்ப்புத் திருத்தத்தில் உதவிய மேனாள் உதவிப் பதிப்பாசிரியர் திரு மா. பாலகிருட்டினன் அவர்களுக்கும் நன்றி உரியது.

– க. இரவீந்திரன்

நாடகவியல் கலைச்சொல் விளக்க அகராதி

Absurd:

இயல்பு முரண்

(*பார்க்க:* Theatre of the absurd)

Absurd Play:

இயல்பு முரண் நாடகம்

(*பார்க்க:* Theatre of the absurd)

Academic Drama:

கல்வியாளர் நாடகம்

பொதுவாக வகுப்பறையில் கற்போருக்காக, மாணவர்களால் எழுதி, நடித்து, இயக்கி வழங்கப் பெறும் நாடகம் கல்வியாளர் நாடகம் எனப்படுகிறது. மேனாடுகளில் இவ்வகை நாடகங்கள் கல்வி கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் பெரிதும் பயன்தரத்தக்க வகையில் படைத்தளிக்கப் பெறுகின்றன.

Acrobatics:

கழைக்கூத்து

உடலை இயல்புக்கு மீறி வளைத்து, அசைத்து, நகர்த்தி செய்யும் கூத்து கழைக்கூத்து எனப்படுகிறது. சங்க இலக்கியத்தில், கயிற்றினைக் களமாக்கி கழைக் கூத்தினைச் செய்து காட்டிய நிகழ்ச்சி குறிப்பிடப் பெற்றுள்ளது. சற்று உயரமாக, இருபுறமும் முறுக்கிக் கட்டப் பெற்ற கயிற்றின் மேல் இவ் வித்தையைச் செய்து காட்டிய நடனமங்கை 'ஆடுமகள்' என்றழைக்கப் பெற்றாள்.

Act:

அங்கம்

நாடகக் காட்சிப்படுத்துதலின் எளிமை கருதி பிரிக்கப்படும் பெரும் பகுதி இது. பல அங்கங்கள் இணைந்த தொகுப்பே முழு நாடகமாகப் பரிணமிக்கிறது. நாடகப்போக்குக்குச் சீர்மை சேர்க்கும் வண்ணமும், கதைப் போக்கில் எவ்வித தடையு மேற்படுத்தா வண்ணமும் அங்கம் அமைந்திருத்தல் சிறப்புத் தரும். காட்சி வெளிப்பாட்டின் சூழல் மாற்றத்திற்கு அங்கம் முதலான

பாகுபாடு இன்றியமையாததா கிறது.

ஒவ்வொரு அங்கமும் பல காட்சிகளாகப் பகுக்கப்படுவ துண்டு. பொதுவாக நாடகங்கள் ஐந்து அங்கங்களாகப் பகுக்கப் படுகின்றன. தற்பொழுது நாடகப் படைப்புகள் ஓரங்கமாகவோ அல்லது ஈரங்கமாகவோ படைத் தளிக்கப்படும் நிலை அதிகமாகக் காணப்படுகிறது.

Act bell:

காட்சி மணி

நாடகக் காட்சியின் தொடக்கத்தினை அறிவிக்கும் மணி.

Act curtain:

காட்சி மாற்ற மறைப்புத் திரை

வண்ணமடிக்கப் பெற்ற இவ்வகைத் திரைகள் ஒவ்வொரு காட்சி அல்லது அங்கங்களின் முடிவில் இறக்கப்பட்டு அடுத்த காட்சி மாற்றத்திற்கான மறைப்புத் திரையாகப் பயன் படுத்தப்படு கிறது. இத்திரைகளுக்கும் நடத்தப் படுகிற நாடகங்களுக்கும் சூழலை உருவாக்குவதில் எந்தத் தொடர்பு மில்லை. இத்திரைகள் நாடகம் நடக்கவிருக்கின்ற அரங்கின் நிரந்தர அமைப்போடு தொடர்புடையனவாகும்.

Act Drop:

காட்சி மாற்ற மறைப்புத்திரை

(பார்க்க: act curtain - காட்சி மாற்ற மறைப்புத்திரை)

Acting Area:

ஆடுபரப்பு

நடத்துக்கலைகளின் நடிப்பியல் பரப்பினை ஆடுபரப்பு என வழங்குவது முறையாகும். நடிப்பிற்கென அல்லது நடிப்பிடத்திற்கென அல்லது நடத்திடத்திற்கென எடுத்துக் கொள்ளும் பரப்பினை இது குறிக்கும். ஆடுகளத்தில் நடை பெறும் நிகழ்ச்சியில் கலைஞர் களின் நகர்வுத் தன்மைக்கேற்ப ஆடுபரப்பின் விரிவும், சுருக்கமும் பயின்று வரும். சங்க இலக்கியம் வெறி, தைநீராடல் போன்ற நடத்துக்கலைகள் முறையே மணல்மேடு, ஆற்றின் கரையோரம் ஆகிய பரப்புகளில் நடைபெற்றதாகக் குறிப்புத் தருகிறது. வள்ளி, குரவை போன்ற நடத்துக்கலைகள் குன்றின் மேற்பரப்பில் நடைபெற்றதாகத் தெரியவருகிறது. நற்றிணைப் பாடல் 'ஆடுமகள்' எனப்படும் நடனமங்கை கயிற்றின் மேலே ஆடியதாகக் குறிப்புத் தருகிறது.

Acting Arena:

ஆடுகளம்

திறந்தவெளி நடிப்பிடக் களமானது ஆடுகளம் எனப் பெயரிட்டு வழங்கப்படுகிறது. ஆடல், கூத்து இரண்டுக்கும் பொதுவான களமாக இதனைக் கொள்ளலாம். பொதுவான களமாகவே இது அமைந்து குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது ஆடுகளமாகப் பயன்படுத்தப் பெற்றிருக்கலாம். சங்க இலக்கியம் ஆடுகளம் குறித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. 'கூத்தர் ஆடுகளம் எடுக்கும் அகநாட்டையே...' எனப் புறநானூறும் 'நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த...' எனப் பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிடுகின்றன. போர்க்களம், வயல்கள், ஆற்றுப்படுகை, மணல் மேடுகள் போன்றவை சங்ககால ஆடுகளங்களாக அமைந்தன.

Acting space:

ஆட்டவெளி

நாடகப் படைப்பாக்கத்தின் போது கலைஞர்களின் நடிப்பு நகர்வுகளுக்கிடையே உருவாக்கிக் கொள்ளும் வெளியே ஆட்ட வெளி எனப்படுகிறது. இவ்வகை வெளி திறந்தவெளிக் களத்தில் அதிகமாகவும், அரங்க மேடையில் வரையறுக்கப் பட்டும் அமைந்து நிற்கும்.

Action:

நடிப்பு

'போலச் செய்தல்' என்னும் கூறின் அடிப்படையில் அமைந்து விளங்குவது நடிப்பு ஆகும். நாடகத்தில் இயல்பானதொரு நிலையிலிருந்து வேறுபட்டு பிறி தொன்றாக மாறிக்காட்டும் செயல்பாடு இது. நாடகக் கதை மாந்தர்கள் இக்கூறினால் உயிர் பெற்று பார்வையாளரிடம் தாக்க மேற்படுத்துவதால் நாடகத்தின் ஆழமான வெளிப்பாட்டுக்கு நடிப்பு இன்றியமையாததாகிறது. பாத்திரமேற்கும் கலைஞர் வேறு அவர் ஏற்றுக் கொள்ளும் பாத்திரம் வேறு என்பதை உணர்ந்து கொள்ளும் நிலையில் மட்டுமே நடிப்பின் உண்மைத் தன்மையை பார்வையாளரால் சரியாகப் புரிந்துகொள்ள இயலும். நாடகத்தின் கதைப் பின்னல் மற்றும் நாடகப் பாத்திரங்களின் விடுவிப்பு இவை நடிப்பின் முக்கிய கூறுகளாகக் கருதப்படுகின்றன.

Action Formula:

நடிப்பு வழிமுறை

நடிப்புத் தொடர்பான செயல் முறை விளக்கங்கள், கோட்

பாடுகள் போன்றன நடிப்பு வழி முறைகள் எனக் கொள்ளப் படுகின்றன. தமிழில் வி.கோ.சூரிய நாராயண சாத்திரியாரின் 'நாடகவியல்', பம்மல் சம்பந்த முதலியாரின் 'நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி' போன்ற நூல்கள் இவ்வகையில் உதவி புரியத்தக்கனவாகும். மேயர் கோல்டு, பிரெக்ட், ஸ்டானிஸ் லாவ்ஸ்கி போன்றோர் மேனாட்டளவில் நடிப்பு வழி முறைக்கான பல குறிப்புகளை வகுத்துத் தந்துள்ளனர்.

Action in Drama:

நாடக நடிப்பு

(பார்க்க : Action- நடிப்பு)

Action Oriented Drama:

நடிப்பாக்க நாடகம்

நடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து படைக்கப்படும் இவ்வகை நாடகங்களில் நடிப்புக் கூறு விஞ்சியும், தேவையானதாக வும் இருக்கும். தமிழில் மனிதன், வியட்நாம் வீடு போன்ற நாடகங் களை இவ்வகை நாடகங்களாகக் கொள்ளலாம்.

Actor:

நடிகர்

நாடகத்தின் கதை மாந்தர் களில் ஆண் வேடம் தாங்கி நடிப்பவர் நடிகர் எனப்படுவார். ஏற்றுக் கொண்ட பாத்திரத்தின் பண்பு நலனுக்கேற்பவும் கதை யோட்டத்திற்கும் சூழலுக்கும் ஏற்பவும் தம்மை மாற்றிக் கொண்டு போலச் செய்தல் என்ற நாடக வெளிப்பாடு மூலம் நாடகக் காட்சிப்படுத்தலில் நடிகர் முக்கியமானவராகிறார்.

தொடக்ககால நடிகர்கள் சமய நிகழ்வுகளில் பங்கு பெற்று வந்தவராகவே இருந்தனர். கிரேக்க நகைச்சுவை நாடங்களில் நடிகர் களின் சமுதாயநிலை தாழ்வாகவே இருந்துள்ளது.

வட்டார மொழி நாடகங் களின் தோற்றம், உலகளாவிய நிலையில் தொழில்முறை நாடக நடிகர்களின் அறிமுகத்திற்கு வித்திட்டது.

தமிழகத்திலும் தொழில்முறை நாடக நடிகர்கள் முக்கிய பங்கு பெற்றிருந்தனர். எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாடகமேடையில் ஏற்பட்ட தாழ்வான செயல் பாடுகளினாலும் தரக்குறைவான உரையாடல்களாலும் நாடகக் கலைஞர்கள், 'கூத்தாடிகள்' என்று அடை மொழியிட்டு அழைக்கப்பட்ட நிலையும்

உருவானது. எனினும் 1891இல் பயின்முறை நாடக முறையின் கீழ் பம்மல் சம்பந்த முதலியாரும் அதே கால கட்டத்தில் தொழில் முறை நாடக முறையின் கீழ் தமிழ் நாடக மேடையில் சீர்திருத்தப் பணியாற்றத் தொடங்கிய சங்கரதாச சுவாமிகளும், தங்கள் நாடகப் பயிற்சியின் மூலம் மிகச் சிறந்த நடிகர்களை உருவாக்கித் தந்தனர். இதன் பின்னர் பல திறம்பட்ட நடிகர்கள் தமிழகத்தில் உருவானதோடு அவர்கள் மூலமாக நல்ல நாடகக் குழுக்களும் உருவாகித் தமிழ் நாடக மேடை மிகச் சிறந்த வளர்ச்சி பெறலா யிற்று. இம்மாறுபட்ட வளர்ச்சி யினால் நடிகர்கள் தற்போது நல்ல கலைஞர்களாகப் போற்றப் படுகின்றனர்.

Actress:

நடிகை

நாடகத்தின் கதைமாந்தர் களில் பெண்வேடம் தாங்கி நடிப்பவர் நடிகை எனப்படுவார். ஏற்றுக் கொண்ட பாத்திரத்தின் பண்பு நலனுக்கேற்பவும், கதை யோட்டத்திற்கும் சூழலுக்கும் ஏற்பவும் தம்மை மாற்றிக் கொண்டு போலச் செயல் என்ற நாடக வெளிப்பாடு மூலம் நாடகக் காட்சிப்படுத்தலில் நடிகை முக்கியமானவராகிறார். தொடக்ககால நாடகங்களில் பெரும்பாலும் பாடகர்களும், நடனக்காரர்களுமே பங்கு பெற்று வந்தனர். எழுதி வடிவமைக்கப்பட்ட உரை யாடல் இல்லாதிருந்தது. கடவுள் வழிபாட்டுக் கலையாக நாடகம் அமைந்திருந்த நிலை இதற்குக் காரணமாயிற்று. தொழில்முறை அமைப்பிலான நடிகையர் இத்தாலி நாட்டில் முதன் முதலாகத் தோற்றம் கண்டதாகத் தெரியவருகிறது. எலிசபெத்தியன் நாடகங்களில் பெண்களே வேடமேற்கவில்லை. சேக்சுபியரின் நாடகங்களில் பெண் வேடங்கள் யாவும் இளைஞர்களாலும் சிறுவர் களாலுமே ஏற்கப்பெற்றன. 1660ம் ஆண்டு வாக்கில் லண்டன் நாடக மேடையில் பெண்கள் நடிகையராக அறிமுகம் ஆயினர்.

தமிழகத்திலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வளர்ச்சி பெற்றிருந்த பாலர் சபைகளில் முழுக்கச் சிறுவர் களே பெண் வேடமேற்றனர். இதற்கெனவே அவர்கள் நீள மான தலைமுடி வளர்த்திருந்தனர். பெண்கள், குழுக்களில் இடம் பெறாததால் ‘ஒரிஜினல் பாய்ஸ்

கம்பெனி' என்ற பெயரில் கூட குழுக்கள் விளங்கின. பின்னர் மெல்ல பெண்களுக்கான வேடங்களைப் பெண்களே ஏற்றுக் கொள்ளும் நிலை தமிழகத்தில் ஏற்படலாயிற்று.

Adaptation:

தழுவல்

ஒரு படைப்பிலக்கியத்தின் மூலத்தன்மை கெடாவண்ணம் அதனை இன்னொரு மொழிக்காக மாற்றிக்கொள்ளுதலே தழுவல் எனப்படுகிறது. நாடகத்தின் தழுவலின்போது அதன் மூலக்கதைப் பின்னலில் பயின்று வரும் நடிப்பு, பாத்திரப்படைப்பு, முடிந்த அளவு குரலசைவுக்கேற்ற மொழி இயல்பு போன்றவை பழுதுபடாமல் இன்னொரு வடிவத்திற்கு அல்லது மொழிக்கு மாற்றம் செய்யப்படும். இதுவே சிறப்புத் தருவதாகவும் அமையும். நாவல்களையும் சிறுகதைகளையும் நாடகத்துக்காகத் தழுவல் செய்வதும் வழக்கில் உள்ளது.

Adlib:

வேண்டு நிலை

நடிப்பிலோ, பேச்சிலோ முன் கூட்டிய தயாரிப்பின்றி அந்த வேளைக்கு ஏற்ப விருப்பம் போல் செயல்படல் சமயோசிதம் எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக மேடையில் ஒரு நடிகர் உரையாடும் போது தமக்குரிய பாடப்பகுதி மறந்து போய்விடின், தாமாகவே அந்தச் சூழலுக்கேற்ப சமாளித்துப் பேசுதல் அல்லது நடித்தல் இவ்வகைத்தே ஆகும்.

Advertisement Curtain:

விளம்பரத் திரை

நாடக அரங்க மேடையின் முன் முகப்பிலிருந்து தொங்கவிடப் பட்டிருக்கும் இத்திரைகளில் உள்ளூர் வணிக மையங்கள், நிதி உதவி வழங்கிடும் நிறுவனங்களின் முகவரிகள் வண்ணச் சுவரொட்டிகள் எழுதப்பட்டோ ஒட்டப் பட்டோ இருக்கும். இதிலிருந்து பெறுகிற வருமானம் நாடகக் குழுக்களுக்கு அன்றாடச் செயல் பாட்டு வகையில் உதவிகரமாக இருக்குமாதலால் இவ்வகை விளம்பரங்கள் மேற்கொள்ளப் பெறுகின்றன. சில நேரங்களில் ஒளிப்படங்கள் மூலம் பாதுகாப்புத் திரைகளில் இவ்வகை விளம்பரங்களை திரையிட்டும் விளம்பரப் பணியை மேற்கொள்வதும் உண்டு.

Aesthetic:

அழகுணர்ச்சி

நுண்கலைகளில் தத்துவ ரீதியான அடிப்படையாக

விளங்கும் கூறு அழகுணர்ச்சி எனக் கருதப்பெறுகிறது. அழகு குறித்த போற்றுதல் அல்லது விமரிசனப் பார்வையாவும் இவ்வகையில் அடங்கும் எனலாம்.

Aesthetic Movement:

அழகியல் இயக்கம்

1890களில் தோற்றம் கண்டது இவ்வியக்கம். கலைக்கும் அதன் கலைஞருக்கும் இடையேயான உறவின் அடிப்படையில் மலர்ந்தது இது ஆஸ்கார் வைல்ட், எர்னஸ்ட் டங்கன், லியோனல் ஜான்சன் போன்றோரால் தோற்றம் பெற்றது. எனினும் இவ்வியக்கம் நகைப்புக்கும் ஆளாகியது.

Affectionate of Drama:

நாடகம் விரும்புநர்

நாடகக் கலைக்கூறுகளின் பால் ஈடுபாடு மிகக் கொண்டு அதன்பால் அளவற்ற நாட்டம் கொள்வோர் அனைத்து நாடுகளிலும் உள்ளனர். நாடகத்தால் ஈர்க்கப்பெறும் வகையால் அக்கலையோடு தம்மை ஒன்றச் செய்து அதனோடு தொடர்பு மிகக் கொள்வது இவர்களது வழக்கம் எனலாம்.

After-piece:

முடிவமைதிக் காட்சி

துன்பியல் நாடகங்களின் வரிசைக்குப்பின் நாடக முடிவில் பார்வையாளர்களின் மன இறுக்கத்தைத் தளர்த்தவேண்டி தனியாக சிறு நகைச்சுவை நாடகக் காட்சிகள் நடத்தப்படுவதுண்டு. இதுவே முடிவமைதிக் காட்சி எனப்படுகிறது.

Agon:

வாய்ச் சண்டை

ஒரு நாடகத்தில் இடம்பெறும் இரண்டு பாத்திரங்களுக்கிடையே நிகழ்வதாக அமையும் வாய்ச் சொல்லால் உருவாகும் முரண்பாடு இவ்வகையில் அமைகிறது. இந்நிகழ்வின்போது காட்சியில் இடம்பெறும் நாடகக் குழுவினரின் சரிபாதி ஆதரவு இரு பாத்திரங்களுக்கும் கிடைக்கக் கூடும். இவ்வகை நிகழ்வு கிரேக்க நாடகங்களில் பொதுவாக இடம் பெறுவதுண்டு. தமிழ் நாடகத்திலும் குறிப்பாக ஸ்பெஷல் நாடகங்கள்' எனப்படும் சிறப்பு நாடகங்களிலும் இவ்வகையிலமைந்த தருக்க நிகழ்வுகள் இடம் பெறுவதும் அவற்றைப் பார்வையாளர் விரும்பி ஏற்றுக் கொள்வதுமான நிகழ்வுகள் அறியக் கிடைக்கின்றன.

Alarum:

உணர்த்து ஒலி

நாடக மேடையில், நடைபெறவிருக்கும் ஆயுதப் போருக்கு முன்னோடியாக இவ்வொலி பயன்படுத்தப்படுகிறது. இச்சொல், பரம்பரை வழக்கினை ஒட்டி பயன்பாட்டில் உள்ளது. சில நேரங்களில் பின்திரைக் காட்சியமைப்பில் ஒலிக் குறிப்புகளாக மட்டும் இது பயன் படுத்தப்படுவதும் உண்டு.

Alazon:

வெற்றுப்பேச்சு வீரன்

கிரேக்க நகைச்சுவை நாடகங்களில் இடம்பெறக் கூடிய 'வெற்றுப்பேச்சு வீரன்' பாத்திரம் இது. இது பெரும்பாலும் நகைச்சுவை நாடகங்கள் யாவற்றிலும் பயின்று வரும் நிலையான பாத்திரப்படைப்பாகும்.

Alienation:

அந்நியமாதல்

நாடகம் படைப்போர்க்கும் நடிப்போர்க்கும், பார்வையாளர்க்கும் நாடகப் படைப் பாக்கத்தின் போது நாடகம் என்பது வாழ்வின் பிரதிபலிப்பு என்பதைத் தெளிவுபடுத்துதலின் அடிப்படையில் நடிப்பவர்கள் தாங்கள் ஒரு பாத்திரத்தை ஏற்று நடிப்பவர்கள் மட்டுமே என்ற நிலையிலும் பார்வையாளர்கள் ஒரு நாடகத்தைக் கண்டு களிப்பவர்கள் மட்டுமே என்ற வகையிலும் கட்டுப்படுத்திக்கொள்ளல் வேண்டுமென்பதைக் கூறும் விதியே அந்நியமாதல் எனப்படுகிறது. இவ்வகையில் நடிகரையும் பார்வையாளரையும் நாடகக் காட்சிப் படுத்துதலின் போது நாடகப் பிணைப்பிலிருந்து சற்று விலக்கியிருத்துவது அல்லது அந்நியப்படுத்துவது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இக்கூறு பிரெக்டின் நாடகக் கொள்கையின் முக்கியமான கூறாகவும் கொள்ளப்படுகிறது. அந்நியமாதல் தன்மையை அடைவதற்கேதுவாக நாடகக் காட்சிப்படுத்துதலின்போது எழுத்து அட்டைகள், முகமூடிகள், பாடல்கள், கருத்துப் படங்கள் போன்றவற்றை இடையிடையே புகுத்தி நாடகப் போக்குக்குத் தடை ஏற்படுத்தப்படும் நடிகர்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டியிருக்கிறது. தாம் ஏற்றுக் கொள்ளும் நாடகப் பாத்திரத்தினின்று சற்றே வேறுபட்டு நின்று தாம் அப்பாத்திரங்கள் அறிந்து கொண்டவர் மட்டுமே என்பது போல நிகழ்வுகளைச் சொல்லிச் செய்வதே இவ்வகையில் நடிப்பின் பணியாகும்.

Allegorical Drama:

தொடர் உருவக நாடகம்

இரட்டை அர்த்தம் கொடுக்கும் வகையிலான உரை அல்லது பாடல் வரிகள் அமைந்த உரையாடலைக் கொண்டு விளங்கும் நாடகம் தொடர் உருவக நாடகம் எனப் படும். இரட்டை அர்த்தம் வெளிப் படையாகவோ, பொருள் பொதிந்தோ பயின்று வரும். தொடர் உருவக நாடகங்கள் தோற்றத்தில் பழமையானது. இது அடிப்படையில் சமயம் சார்ந்ததாக அமைந்தது. தற்பொழுது இவ்வகை நாடகங்கள் அருகியே காணப் படுகின்றன.

Allegory:

தொடர் உருவகம்

(பார்க்க: Allegorical Drama- உருவக நாடகம்)

Allegro:

எழுச்சிப்பாடல்

வேகமான சுறுசுறுப்பு மிக்க, உயிரோட்டமுள்ள நகர்வுகளை உள்ளடக்கிய வார்த்தைகளால் அமைக்கப்படும் பாடல் வகை இது.

Amateur:

பயின்முறை

படைப்பாக்க நிலையில், நாடகத்தை முழுநேரத் தொழிலாகக் கொள்ளாமல் வேறு தொழில் செய்வோரும் ஓய்வு நேரத்தில் நாடகங்களைப் படைத் தளிக்கத்தக்க நாடக முறையே பயின்முறை நாடகமுறை எனப் படுகிறது. இது மேனாட்டு நாடகத் தாக்கத்தால் தமிழகத் திற்குக் கிடைத்த நாடகப் படைப்பு முறையாகும். உலக நாடுகள் பலவற்றிலும் பயின் முறை நடைமுறையே குறிப்பிடத் தக்க அளவில் வளர்ச்சிபெற்று வந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்தகைய நாடகமுறைக்கு முன்னோடியாக விளங்கியவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவர். 1891இல் தோற்றுவிக்கப் பெற்ற இவரது சுகுணவிலாச சபை இவ் வகையில் குறிப்பிடத்தக்க பயின் முறை நாடக சபையாக விளங் கியது. இச்சபையில் பட்டதாரி களும், வழக்கறிஞர்களும் எனக் கற்றோர் பலரும் நாடகப் பணிக்கான பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கிலாந்து நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வகை நாடகக் குழுக்களே வளர்ச்சி பெற்று விளங்கின. பயின்முறைக் குழுக்களின் செயல் பாடுகள் பொதுவாக நான்கு நிலைகளில் அமைந்தன. கல்வி

நிலையங்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் நன்கொடை நிகழ்ச்சிகளை நடத்தும் குழுக் களாகவும், மகளிர் அமைப்புகள், சமுதாய அமைப்புகளுக்காக நாடகம் நடத்தும் குழுக்களாக வும், ஏற்கெனவே வெற்றி கண்ட நாடகங்களை நடத்தும் குழுக் களாகவும், சிறு குழுக்களாகவும் நாடகப் பங்களிப்பு செய்தன. கல்வி பயிற்றுவித்தலில் நாடகம் பயனாக்கம் பெற்ற நிலையில் பயின்முறை நாடகங்களின் பங்களிப்பு அதிகமாயிற்று.

Ambience:

செயல்நிலைச் சார்புக்கூறு

நடிகரை செயல்நிலைக்குச் சார்புபடுத்தும் கூறுகளான மனநிலை, தரம், குரல், பாத்திரம், சுற்றுச்சூழல் போன்றன செயல் நிலைச் சார்புக் கூறுகளாகும். எடுத்துக் காட்டாக தமிழில் பாலர் சபைகளோடு தொடர்பு கொண்ட நடிகர்கள் கடின உழைப்பு, பயிற்சி, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய செயல்நிலைக் கூறுகளைக் கொண்டிருந்தனர்.

Amphi Theatre:

வட்டரங்கம்

திறந்த வெளிப்பரப்பை மைய மாகக் கொண்டு சுற்றிலும் ஒன்றன் பின் ஒன்றாக இருக்கைகள் அமைக்கப்பட்ட நிலையில் இது காணப்படுகிறது. மேனாடுகளில் இவ்வகை அரங்குகள் தொடக்கத் தில் ‘சர்க்கஸ்’ எனப்படும் வித்தை நிகழ்ச்சிகளுக்கான அரங்கு களாக விளங்கின. 1769 முதல் இலண்டன் மாநகரில் பிலிப் ஆசுடிலி என்பவரால் செயல் படுத்தப் பெற்று வந்த ஆசுடிலி ஆம்பி தியேட்டர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும். ஆசுடிலி யின் மறைவுக்குப் பின்பு அவரது மகன் டேவிஸ் என்பவர் இவ்வரங்கில் இன்பியல் நாடகங் களை மேடையேற்றியதாக வரலாறு குறிப்பிடுகிறது. இந்தியாவில் வட்டரங்கம் குறித்த செய்திகள் பல கால கட்டத்தி லும் பரவலாகத் தெரிய வந்துள்ளன. இவற்றில் ஆந்திர மாநிலத்தில் நாகார்ஜுன கொண்டாவில் 1954இல் நில அகழ்வாய்வு மூலமாகக் கண்டறியப் பெற்ற வட்டரங்கம் குறிப்பிடத்தக்கதாகும்.

Anagnorisis:

அறியவரும் தருணம்

பழைய கிரேக்கத் துன்பியல் நாடகங்களில் இடம் பெற்று வரும் உண்மையை உணரும் நேரம் அல்லது கண்டுபிடிக்கும் நேரம் இது. நகைச்சுவை நாடகங்

களில் இத்தருணத்தினைத் தொடர்ந்து வெற்றிச் சூழல் அமைந்து வரும்.

Analogue:

ஒத்த நிகழ்வு

ஒன்று மற்றொன்றைப் போல் ஒப்புமை கொண்டு விளங்கும் நிலையில் அந்தச் சொல் அல்லது பொருள் இவ்வகைப்படுகிறது. ஒரு மொழி நாடகத்தில் இடம் பெறும் கிளைக் காட்சிக்கு ஏற்ற கதை நிகழ்வு இன்னொரு மொழி இலக்கியத்திலோ அல்லது மரபு காட்சிக் கதைத் தொகுப்பிலோ பயின்று வரும் நிலையும் இவ் வகைப்படும். காப்பிய நாடகங் களின் பல நிகழ்வுகள் இவ்வகை யில் அமைந்து வரக் காணலாம்.

Animal Personation:

மிருக வேடம்

(பார்க்க: impersonation - வேட மாற்றம்)

Antagonist:

எதிர்நிலைப் பாத்திரம்

ஒன்றோடு முரண்படும் இன்னொரு பாத்திரமாக நாடகங்களில் இது பயின்று வருவதுண்டு. தலைமைப் பாத்திரத்திற்கு நேரெதிர் பண்பு களைக் கொண்ட பாத்திரமாக வும் இது இடம் பெறுவது உண்டு.

Antecedent Action:

முன் நிகழ்வு

ஒரு குறிப்பிட்ட நாடக நிகழ் விற்கு முன்னமையும் நிகழ்வு இவ்வகைப்படுகிறது.

Anti -Climax:

எதிர் உச்சம்

நாடகத்தின் உச்சநிலைக்கு அடுத்து வரும் இறக்கநிலை இது. எதிர்பாராத விதமாக திடீரென நிகழ்வது போல இது அழைக்கப் பட்டிருக்கும் விறுவிறுப்பான உச்சகட்டத்தில் உள்ள நிகழ்வு களுக்கு நேர் எதிரான மென்மை யான நிலையில் இது நிகழ்வதாக இருக்கும் நாடகம் பார்ப்போர்க்கு சுவையூட்டுவதாகவும், மன நிறைவை அளிப்பதாகவும் அமைகிற எதிர்உச்ச நிகழ்வு பெரும்பாலும் நகைச்சுவை ததும்பியதாகவும் இருப்பதைக் காணலாம்.

Anti-Hero:

எதிர்நிலை கதைத் தலைவன்

நாடகத்தின் தலைமைக் கதை மாந்தருக்கு எதிரான நிலையில் உள்ள தலைமை மாந்தராக தைரியமானவனாகவும், பல சாலியாகவும் இரக்கமற்ற குண நலன் கொண்டவனாகவும் இருப்பவன் எதிர்நிலை கதைத்

தலைவன் ஆவான். நாடகத்தில் இத்தகைய கதைப் பாத்திரத்தின் வருகை பலவித எதிர்பார்ப்பு களையும் அச்ச உணர்வுகளை யும் ஏற்படுத்துவதாக அமையும். இத்தகைய பாத்திரப் படைப்புகள் தங்களின் தவறான நடவடிக்கைகளினால் இறுதியில் தோல்வியைச் சந்திப்பதாகவே சித்தரிக்கப்படுவது பொதுவான நாடக நடை முறையாக உள்ளது. எனினும் தமிழகத்தில் எதிர் நிலை கதைத் தலைமை மாந்தரை மட்டுமே முதன்மைப் படுத்தி அமைந்த நாடகங்கள் சில திராவிட இயக்க நாடகங்களாக இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மேடை யேற்றம் செய்யப் பெற்றமையும் உண்டு.

Anti-Masque:

முன் நிகழ்வுக் கலை

முதன்மை நாடகக் கதை யோட்டத்தினூடே முன்னதாகப் பயின்றுவரும் பாடல், இசை, நடன நிகழ்வு இது. ஆடல், பாடல், இசை நிறைந்த காட்சிக்கு முன்னரோ அல்லது இடை யேயோ இந்நிகழ்வு அமையும். நாடகக் காட்சியின் விறுவிறுப்பான நிலை பார்வை யாளர்களுக்கு அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தா வண்ணம் நாடகயுணர்வூட்டி இயல்பு நிலையில் வைத்திருக்க இவ்வகை நிகழ்வு உதவுகிறது. இவ்வகைக் கலை வடிவம் பழமை வாய்ந்த தோடு நாட்டுப் புறக் கலை வடிவத்தினின்று உருவாக்கப் பட்டதாகத் தெரிகிறது. மாறு வேடத்தில் பரிசுப் பொருள் களுடன் மன்னனைப் பார்க்க வரும் விருந்தினர்கள் ஆடிப் பாடி மகிழ்வதாக அந்நாட்டுப் புறக்கலை வடிவம் அமைந்திருந்தது. இரட்டை வேடம் புனையும் கலைஞர் களைக் கொண்டு இக்கலை வழங்கப் படும்போது இது இரட்டை நிகழ்வுக்கலை (Double Masque) என்று வழங்கப்படு கிறது.

Anti Play:

எதிர்நிலை நாடகம்

வரையறுக்கப்பெற்ற மரபு சார்ந்த நாடகக் கூறுகள் ஏது மின்றி முற்றிலுமாக நாடக இலக்கணத்தின்று மாறுபட்டு அமையும் நாடகங்கள் எதிர் நிலை நாடகங்கள் எனப்படு கின்றன. குறிப்பிடத்தக்க கதைப் பின்னலோ, வளர்ச்சி நிலையில மைந்த பாத்திரக் கூறுகளோ இன்றி இவை அமைந்து நிற்கும். உரையாடல்களும், நடிப்புத் தன்மைகளும் தொடர்பின்றி

அமைக்கப் பெற்றிருக்கும். சில நேரங்களில் இவ்வகை நாடகங்கள் கூட வெற்றி பெறுவதுண்டு.

Antistrophe:

எதிர் சுற்று

கிரேக்க நாடக இசைக்குழு மேடையின் இடது புறத்திலிருந்து வலது புறமாக நகர்ந்து செல்லும்போது, முன்னர் வலது புறத்திலிருந்து இடது புறமாக நகர்ந்து சென்றபோது பாடிய பழைய பாடலுக்கு எதிர் பாடல் கூறினை இசைத்துச் செல்லும் முறைமையை இது குறிக்கிறது.

Apologue:

கதை கூறல் உருவகம்

இது ஒருவகையான உருவக நாடகம் ஆகும். பொதுவாக நல்வழிப்படுத்தும் நீதிக் கதைகள் இவ்வகையில் உருவகப்படுத்தப் படுகின்றன.

Apron Stage:

முன் மேடை

(பார்க்க: Fore Stage- முன் மேடை)

Aravan Kalappali:

அரவான் களப்பலி

பாரதக் கூத்தின் ஒரு பகுதி அரவான் களப்பலி நாடகமாக நடிக்கப்பெற்று வருகிறது. பாண்டவர்களுக்கும் கவுரவர் களுக்கும் இடையேயான பதினெட்டு நாள் போர் தொடர்பான கதைக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு இது அமைந்துள்ளது. பீசுமர் சகாதேவனிடம் போர் தொடங்கும் நேரத்தை அறிந்து கொண்டும், அரவானிடம் களப்பலிக்கு இசைவு கேட்டுக் கொண்டும் வருமாறு கூற களப் பலிக்கான அமாவாசை நேரம் குறிக்கப்படுகிறது. அரவானும் களப்பலிக்கு ஒப்புக்கொள் கிறான். பாண்டவர்க்கு வெற்றி கிட்டும் வண்ணம் அரவான் பலியாகிறான். துன்பியல் நாடக மாக இது அமைந்துள்ளது.

Arc Light:

பிறை விளக்கு

மேனாடுகளில் மின்சாரப் பிறை விளக்குகளின் பயன்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டி லேயே இருந்து வந்தமை அறியக் கிடக்கிறது. தமிழகத்தில் மின்சாரத்தின் வருகைக்குப்பின் இவ்விளக்குகள் மேடையில் பயன்படுத்தப்பட்டன. விரிந்த தலைப்பகுதி, கண்ணாடி வில்லை மற்றும் பிரதிபலிப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட இவ்விளக்கு பரப்பு விளக்காகவும்(flood light),

ஒளிவட்ட விளக்காகவும் (spot light) கூட பயன்படுத்தத்தக்கது.

Arena Stage:

களத்து மேடை

சுற்றிலும் பார்வையாளர் அமர்வுக்கான இடம் அமைக்கப் பெற்று நடிப்புக்கான களம் சம பரப்பில் அமைக்கப் பெற்றதாக வடிவமைக்கப்பெறும் மேடை இது.

Arena Theatre:

களத்து அரங்கு

பார்வையாளர் சுற்றிலும் அமரத்தக்க வகையில் அமையும் அரங்கு களத்து அரங்கு எனப் படுகிறது. சங்க காலத்தில் இவ்வகை அரங்குகள் செயல் பாட்டில் இருந்தமைக்கான குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பிற்காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கூத்துக் கலைக்கென இவ்வகை அரங்கு கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. தற்பொழுதும் நாட்டுப்புறக் கலை வடிவங்களுக்கென இவ்வகை அரங்குகள் செயல்பாட்டில் உள்ளன.

Art Ballad:

கலைநயக் கதைப்பாடல்

ஆசிரியர் பெயர் அறியப் பெற்று, இலக்கியத்தன்மைமிக்கு கலை நயத்தோடு விளங்கும் கதைப் பாடல் கலைநயக் கதைப் பாடல் என வழங்கப்படுகிறது. கதை கூறு முறையில் உணர்வுக் கூறுகள் மிகக் கொண்டு விளங்கு வனவாக இவை அமையும். தமிழில் வில்லுப் பாட்டுக் கதைகள் பல இவ்வகை யில் காணக்கிடக்கின்றன.

Art Education:

கலைக் கல்வி

இன்று உலக நாடுகளில் குழந்தைகளுக்கான கல்வி முறை யில் கலைக்கல்வி முறையையும் பயன்படுத்தத் தொடங்கி யுள்ளனர். சிறு வயதுக் குழந்தை களின் சுதந்திரமான சிந்தனைக்கு இவ்வகைக் கல்விமுறை மிகவும் பயனுள்ள பங்களிப்பு நல்குவ தாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையும் ஆக்கசக்தி பெற்று விளங்குகிறதென்ற அடிப்படைக் கோட்பாடே இக்கல்வி முறை யில் முக்கியமாகக் கொள்ளப் படுகிறது. இக்கோட்பாடு கலையை ஒரு நிகழ்வாகவோ அல்லது தயாரிப்பாகவோ கருதி கலையை வாழ்க்கைக்கான அடிப்படைக் கூறாகவும் கொள்கிறது. இதனை மனத்தில் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தப்படு கிறது. குழந்தைகள் வாழ்வின்

இயல்பான தன்மையை எதிர் கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்கின்றன. இத்திறனை உருவாக்கி வட்டமடித்துப் பறக்க கற்பனையும் தத்துவச் சிந்தனையும் அவற்றுக்குத் தேவையாகின்றன. இதனை வழங்குவதாக கலைக்கல்வி அமைகிறது.

Art for Arts Sake:

கலை கலைக்காகவே

கலை ஒழுக்க ரீதியிலான நோக்கம் கொண்டு விளங்குவது மட்டுமன்றி உள்ளார்ந்த மதிப்பும் கொண்டு விளங்குவது என்னும் கொள்கையே கலை கலைக் காகவே என வெளிப்படுத்தப் பெற்றது. இக்கோட்பாடு 1766இல் 'லெஸ்ஸிங்' என்பவரால் அறிமுகம் செய்யப் பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பல எழுத்தாளர்களுக்கு இக்கோட்பாடு வழிகாட்டு நெறியாக விளங்கியுள்ளது. ஆஸ்கார் வைல்ட் இக் கோட்பாட்டின் குறிப்பிடத்தக்க பரப்புநராக விளங்கினார். எனினும் இக் கோட்பாடு பலரது விமரிசனத்தினின்றும் தப்ப இயலவில்லை.

Artistic:

கலைநய மேனிலை

இயல்புக்கு எதிரான நிலையில் வெளிப்படும் அல்லது உருவாக்கப் படும் மனித ஆற்றலின் கூறே கலைநய மேனிலைத் தன்மை எனப்படுகிறது. இவ்வகைத் தன்மை பயிற்சியினாலும் படிப்பினாலும் மெருகு கொள்வதாக அமையும். ஒரு ஓவியனின் வெளிப்பாடு, ஒரு நடிகனின் வெளிப்பாடு போன்றவை இவ்வகையின்பாற்பட்டதெனலாம்.

Aside:

உள்தொனிச் சொல்

மேடையில் சக பாத்திரங்களுக்குப் புலப்படாவண்ணம் ஒரு பாத்திரம் தாழ்குரலில் பார்வையாளர்களுக்கு மட்டும் கேட்குமாறு பேசுதல் இவ்வகையில் அமையும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேடையில் அதிகம் கடைப்பிடிக்கப்பெற்ற இத்தகைய முறை இப்பொழுது அதிகமாக வழக்கில் இல்லாமல் உள்ளது. இன்பியல் நாடகங்களில் அதிகம் பயன்படுத்தப் பட்ட இந்நாடகமுறை இயல்பியல் நாடகங்களின் அறிமுகத்திற்குப் பின் பயன்பாடிழந்தது. எனினும், குறியீட்டு நாடகங்களிலும் கேலி நாடகங்களிலும் இம்முறை பயன் படுத்தப்பட்டு வருகிறது.

Asphaleian System:

அசுபேலியன் முறை

மேடைத்தளத்தினைக் கட்டுப்படுத்துவதற்காகக் கையாளப்பெற்ற பழைய முறை இது. இவ்வகையில் மேடைப் பரப்பானது பல தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று ஒவ்வொன்றும் தனித்தனியான அழுத்தக் கருவிகளில் இணைக்கப் பெற்று தனிப் பகுதிகள் மேலெழும்பவும், நகரவும் செய்யும் வண்ணம் கட்டமைப்பு செய்யப் பட்டிருக்கும்.

Atmosphere:

சூழல்

நாடகத்தின் கதை நிகழ்வுக் கென உருவாக்கப்படுகின்ற இயல்பான தன்மையே சூழல் எனப்படுகிறது. நாடகங்களில் இவ்வகைச் சூழல் காட்சியமைப்பு, காட்சி விளக்கம், உரையாடல் மூலம் உருவாக்கம் பெறுகின்றன. நாடகத் தொடக்கத் துக்கு முன் ஆற்றப் படும் அறிமுக உரைகூட நாடகத்திற்கான சூழலை உருவாக்குகின்றது. அறிமுக இசையும் இப்பங்கினைச் செய்வதாக அமைகின்றது. தமிழ் நாடகங் களில் கட்டியங்காரன் ஆற்றும் அறிமுக உரை நாடகக் கதையின் போக்கினை விளக்கி உரிய சூழலை உருவாக்குவதாய் அமைகிறது.

Audience:

அவையோர்

நாடகக்கலை உள்ளிட்ட அனைத்துக் கலைகளுக்கும் பார்ப் போரும் கேட்போரும் மிகவும் இன்றியமையாதவராகிறார். நல்ல நாடகம் நல்ல பார்வையாள ரைக் கொண்டிருக்கும். அது போலவே நல்ல பார்வையாளருக்காக நல்ல நாடகம் உருவாக்கம் பெறவும் செய்யும். எனவே நாடக மேடை யின் வளமான வளர்ச்சிக்குப் பார்வையாளர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகிறது. நாடகம் மேடையினின்று நேரடியாகவே பார்வையாளரிடம் கொண்டு செலுத்தப்படுவதால் உடனடி யான மறுசெயல்பாடு பார்வை யாளரிடமிருந்து தெரிய வரு கிறது. இது நாடகத்தின் அடுத்த கட்ட மேம்பட்ட மேடையேற்றத் திற்கு உதவிப் புரிவதாக அமை கிறது.

Audio:

கேட்பொலி

காதால் கேட்கப்படும் ஒலி இது. உரையாடல், இசைக் கூறுகள் யாவும் செவிக்கு விருந்து பயப் பனவே.

Auditorium:

கேள் அவை

நாடகம் உள்ளிட்ட நடத்துக் கலைகள் நடைபெறுகின்ற அரங்குகள் 'அவை' என்றழைக்கப் படுகின்றன. அவையில் அமர்ந் திருப்போர் அவையோர் என்றும் குறிப்பிடப் பெறுகின்றனர். திருக்குறளில் கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்; போக்கும் அது விளிந்தற்றே (துறவறம்; பாடல்: 332) என வரும் பாடல் குறிப்பு கூத்து நடைபெற்ற அவையை கூத்தாட்டவை என்று குறிப்பிடுகிறது. இவ்வகை அரங்குகள் தற்கால அரங்கு களைப்போல அடைப்பு அரங்காக அமைந்திருக்க வாய்ப்பில்லை. தற்காலத்தைய அரங்குகள் பெரும்பாலும் அடைப்பு அரங்கு களாகவே அமைந்துள்ளன. சில அரங்க மேடை மட்டும் அடைப்பு நிலையில் அமைந்து அவையோர் இருப்பிடம் திறந்தவெளியில் அமைக்கப்பட்டிருக்கும் நிலை யில் உள்ளன. மேலும் சில முழுக்க திறந்த வெளியிலேயே அமைந்தும் உள்ளன. வடிவமைக்கப்பட்ட அடைப்பு அரங்கு குறித்த செய்தியை முதன் முதலாக சிலப்பதிகாரம் தருகிறது. மாதவியின் நடன அரங்கேற்றம் இவ்வகை அரங்கில் நடைபெற்றதற்கான குறிப்பு கிடைக்கிறது. மேனாடுகளில் 18ஆம் நூற்றாண்டு வாக்கில் முழுமையான அவைகள் தோற்றம் கண்டன. தற்காலத்தில் 'அவைகள்' நடுவில் அரங்கத்திரை அமைத்து சுற்றிலும் பார்வையாளர் இருக்கை அமைத்தோ, ஒன்றன்பின் ஒன்றாக தட்டு இருக்கைகள், பெட்டி இருக்கைகள் அமைத்தோ வடிவமைக்கப்பட்டுள்ளமை யைக் காண முடிகின்றன. 'அவை களின்' வடிவமும் தோற்றமும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட தோற்றம் கொண்டு விளங்கு கின்றன.

Auleum:

முன் மறைப்புத் திரை

திறந்தவெளி உரோமானிய நாடக மேடையை நாடகம் தொடங்கு முன் சுற்றியிருக்கும் பார்வையாளரிடமிருந்து மறைப் பதற்காகவும், தடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்ட திரை இது.

Avant Garde Theatre:

முன்னிலைச் சோதனை நாடகம்

நாடகத்தில் புதுமுயற்சிகள், குறிப்பாக சோதனை முயற்சிகள் மேற்கொண்டு நாடகக்கதை, வடிவம், வடிவாக்கம் போன்ற நிலைகளில் முற்றாய்தல் செய்து

புதிய முறைகளை ஆக்குதல், புதிய பாதையைக் கண்டு கொள்ளுதல் போன்ற புரட்சிகரமான நிலைகளில் முன்னெடுத்துச் செல்லும் நிலையில் அமைவது.

Ayan Raja Part:

முதன்மை ஆண் வேடதாரர்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகங்களில் தலைமைப் பாத்திரத்தில் ஆண் வேடமேற்கும் நடிகர் அல்லது நடிகையர் அயன் ராஜபார்ட் என்று அழைக்கப்பட்டார். அயன் எனப்படுவது ஆளுமைக்குரிய குறியீடாக அமைந்து நிற்கிறது. தலைமைப் பாத்திர மேற்று நடிப்பதோடு எந்த வேடத்திலும் நடிப்பதற்கும், எந்த பாத்திரங்களுக்கான உரையாடலையும் ஏற்ற இறக்கங்களோடு பேசுவதற்கும் இவர்கள் உரிய திறன் பெற்று விளங்கினர். குழுவில் இவர்களுக்குத் தனி மரியாதை வழங்கப்பட்டது.

Ayan Stiri Part:

முதன்மை பெண் வேடதாரி

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகங்களில் தலைப் பாத்திரத்தில் பெண் வேடமேற்கும் நடிகர் அல்லது நடிகையர் அயன் ஸ்திரீபார்ட் என்று அழைக்கப்பட்டனர். அயன் எனப்படுவது ஆளுமைக்குரிய குறியீடாக அமைந்து நிற்கிறது. தலைமைப் பாத்திரமேற்று நடிப்பதோடு எந்த வேடத்திலும் நடிப்பதற்கும், எந்த பாத்திரங்களுக்கான உரையாடலையும் ஏற்ற இறங்கங்களோடு பேசுவதற்கும் இவர்கள் உரிய திறன் பெற்று விளங்கினர். குழுவில் இவர்களுக்குத் தனி மரியாதை வழங்கப்பட்டது.

Baby Spot Light:

சிறு குறியிட விளக்கு

குறிப்பிட்ட இடத்தினை இலக்காக வைத்து ஒளியினை கோடுகளாகப் பீச்சும் தன்மை வாய்ந்த சிறிய விளக்குகள் சிறு குறியிட விளக்குகள் எனப்படுகின்றன. பக்கத் தட்டிகளிலும் மேடையின் முன் வரிசையிலும் இவை கட்டப்பட்டிருக்கும். இக்காலத்தில் மிக்க சக்திவாய்ந்த குறியிட விளக்குகள் (Spot lights) ... பெரும்பாலும் பயன்பாட்டில் உள்ளன. நிலைப்படுத்தப்பட்ட விளக்குகள், பிரதிபலிப்பான் கொண்டும் நகரக்கூடிய குவிப்பான்கள் கொண்டு இவ்வகைக் குறியிட விளக்குகள் அமைக்கப்படுகின்றன.

Back Cloth:

பின் நிழற்றிரை

மரச்சட்டத்திினின்று மேலிருந்து கீழாக இவ்வகைத் திரைகள் தொங்கவிடப்படுவதுண்டு. கீழேயும் மரச்சட்டம் இணைக்கப் பட்டிருக்கும். காட்சியமைப்பின் போது நுணுக்கமான விளைவு களை உருவாக்கிக்காட்ட இவ் வகைத் திரைகள் பயன்படுகின்றன.

Back Drop:

பின் தொங்கு திரை

மேடையின் பின்னால் சட்ட மிடப்படாமல் வெறுமனே தொங்கவிடப்பெறும் வெற்றுத் திரையே பின் தொங்கு திரை எனப்படுகிறது.

Back Lighting:

பின்னொளி

மேடையின் பின்னாலிருக்கும் விளக்கு மூலம் முன்னோக்கி அல்லது பக்கவாட்டில் செலுத்தப் படும் ஒளி. நாடகக் காட்சியமைப் பின் தேவைக்கேற்ப இதன் செயல்பாடு அமையும்.

Back Stage:

பின்னரங்கு

நாடக மேடையின் பின்பகுதி இவ்வாறு அழைக்கப்படுகிறது. பின்னரங்கில் கட்டப்படும் காட்சித்திரை கடைசிக் காட்சிப் படுத்தலுக்குப் பயன்படுவ தாகவே பொதுவாக அமைகிறது. மற்ற நேரங்களில் பொருட்களை மறைத்துப் பாதுகாத்து வைக்க வும் இப்பகுதி பயன்படுத்தப்படு கிறது. நடிகர்களின் ஆடை, அணி அறைகளும் ஒப்பனை அறைகளும் கூட சில நேரங் களில் இப்பகுதியில் அமைவ துண்டு.

Background Music:

பின்னணி இசை

நாடகக் காட்சிகளுக்கேற்ப, அதன் உயிரோட்டத்தினை மேம்படுத்தி ஒருங்கிணைப்பு செய்யும் வண்ணம் பின்னணியில் இசைக்கப்படும் இசையே பின்னணி இசை எனப்படுகிறது. நாடகக் காட்சிப்படுத்துதலில் பின்னணி இசையின் பங்கு வெகுவானதாகும்.

Background Sound:

பின்னணி ஒலி

நாடகக் காட்சிகளின் தன்மைக் கேற்பவும், பயன்படுத்தப்படும் பொருட்களுக்கேற்பவும் பின்னணி யில் எழுப்பப்படும் ஒலிக் கூறுகளே பின்னணி ஒலி எனப் படுகிறது. மழைபெய்தல், இடி இடித்தல், காற்று வீசுதல், கடல் அலை எழும்புதல், வாகனங்கள்,

மிருகங்கள் போன்றவற்றின் **ஒலிக் குறிப்புகளை** உதாரண **மாகக்** கொள்ள லாம்.

Backing:

தாங்கல்

மேடையில் வைக்கப்பெறும் தட்டிகளுக்குப் பின்னால் அவற்றை தாங்கி நிறுத்துவதற் கேற்ப பொருத்தப்படும் அமைப்பே தாங்கல் எனப்படுகிறது. காட்சி யின்போது தாங்கும் வண்ணமும், பின்பு அதனை மடித்து வைக்கும் வண்ணமும் இது பொருத்தப் பெற்றிருக்கும்.

Backing Flat:

தாங்கு தட்டி

மேடையின் வாயில் அல்லது பிற திறப்புகளின் உள்ளீடாக உள்ள காட்சிகள் வெளியே தெரியா வண்ணம் மறைப்பதற்காக வைக்கப்பெறும் தட்டிகள் தாங்கு தட்டிகள் எனப்படு கின்றன.

Backing Strip Light:

பின் ஓர விளக்கு

மேடையில், மரச்சட்டத்தில் வரிசையாக தொங்கவிடப்படும் தொங்கு வகை விளக்கு இது. மேலிருந்து கீழாக ஓர விளக்குத் தொங்க விடப்படுவதுண்டு. இவை பகுதியாக பிரிக்கப்பட்டு தொங்கவிடப்படும். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு விளக்கு, ஒரு பிரதி பலிப்பான் (reflector), வண்ண வடிப்பான் ஆகியன இடம் பெற்றிருக்கும்.

Balance:

சமநிலை

நாடகம் உள்ளிட்ட இலக்கியப் படைப்புகளில், கதைக்கரு, கதைப் பின்னல், பாத்திரப் படைப்பு ஆகியவற்றில் சீரான பங்கீடு தேவையென்பதால் சமநிலை பேணப்படுவது முக்கியமாகிறது. சில நேரங்களில் தலைமைப் பாத்திரங்களின் குணநலன்களுக் கேற்ப இச்சமநிலைத் தன்மை மாறுபட்டு ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதுண்டு.

Balcony:

மாடியிருக்கை வரிசை

நாடக அரங்கம், திரை அரங்கத்தின் உள் கூட்டில் பார்வையாளர் அமர்வதற்கேற்ப மேலே உயரத்தில் மாடியமைப் பில் இருக்கையினை வரிசையாக அமைப்பது வழக்கமாக உள்ளது. பிற பார்வையாளர்க்கு எந்த தடங்கலும் இல்லாதவாறு இவை அமைக்கப்பட்டிருக்கும்.

Ballad:

கதைப் பாடல்

இசையும் உரையும் கலந்து கதை கூறும் கலை வடிவமே கதைப் பாடல் எனப்படுகிறது. மக்களிடையே அறிமுகமான, வழக்கில் உள்ள கதை வடிவங்களே இவ்வகையில் நாடகமாக்கி வழங்கப்படுகின்றன. தமிழில் பல நாட்டுப்புறக் கதைப் பாடல் வடிவங்கள் வழக்கில் உள்ளன. மதுரைவீரன் கதை, அல்லி அரசாணி கதை போன்றன இவ்வகைப்பாற்பட்டதே ஆகும்

Ballad Opera:

கதைப் பாடலிசை நாடகம்

பார்க்க: (Ballad- *கதைப் பாடல்)*

Band:

இசை மேளம்

(பார்க்க: Music in the theatre- *நாடக அரங்கில் இசை)*

Barn Door:

ஒளி வாயில்

(பார்க்க: Barn door shutter- *ஒளி வாயில் மறைப்பான்)*

Barn Door Shutter:

ஒளிவாயில் மறைப்பான்

மேடையில் ஒளியமைப்பின் போது அதனை விரித்தும் சுருக்கியும் பாய்ச்சுதற்கு ஏ... உத்திகள் கையாளப்படுதலு... இவ்வகையில் விழித்திரை ம... ஒளியைக் கூட்டிக் குறைக்கு... முறையும் நெற்களஞ்சியத்தில் ஒளிவரு நிலைபோல வரும் ஒளியைக் கூட்டிக் குறைக்கும் மறைப்பு முறையும் (Barn Door Shutters) வாயுவிளக்குகள் பயன் படுத்தப்பட்ட வேளையில் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளன. 1914ஆம் ஆண்டு வாக்கில் இத்தகைய ஒளியமைப்பு முறை மேலை நாடுகளில் பயன்பாட்டில் இருந்தன. தமிழகத்திலும் இக்காலக் கட்டத்தில் இதையொத்த ஒளியமைப்பு முறை பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. காற்றழுத்த விளக்கு இதற்காகப் பயன் படுத்தப்பட்டன.

Barrel:

குழல் உருளைச் சட்டம்

(பார்க்க: Pipe Battern *-குழாய் உருளைச் சட்டம்)*

Basic Stage Training:

பால பாடம்

தமிழ்நாடக மேடையில் சிறுவர்களை மேடையேற்றத் திற்குத் தகுதிப்படுத்த மேற் கொள்ளப் பெற்ற அடிப்படைப் பயிற்சி முறை பாலபாடம் எனப்

பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலகட்டத்தில் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய பாலர்சபைகள் இப்பயிற்சி முறையை முக்கியமாகக் கடைபிடித்து வந்தன. இதனை சங்கரதாச சுவாமிகள் உருவாக்கித் தந்தார். மேடையில் அறிமுகமாகும் நிலை, அதனைத் தொடர்ந்து கடவுள் வாழ்த்துப் பாடல்களான மூலமந்திர கஜமுக வதனா, சிவனுமை அதிவிநாயகா, மணிசத்தம் தும்பிக்கை தேவந்துறை, ஆதிமூலமான ஆதிமூலப் பொருளே போன்ற விநாயகர் துதிகளும் வெள்ளைவாணி, கல்விக்குரிய கலைவாணி, வாணி சரசுவதி போன்ற கலைமகள் வாழ்த்துப் பாடல்களும் பாடப்படும். இப் பாடல்கள் மேடையில் சிறுவர்களின் மனத்தை ஒருநிலைப் படுத்தின. பின்னர் 'நாவில் வந்ததைப் பாடுவோம் நாடகம் தினம் ஆடுவோம் நாங்கள் சிறுவர் எங்கள் பிழையை நீங்கள் பொறுப்பீர் நாளுமே' என்ற பாடல் பாடப்பட்டது. தொடர்ந்து வார்த்தை உச்சரிப்பு பயிற்சிக் கேற்றவாறு வடிவமைப்பு செய்யப் பெற்ற

'விகடனைக் கோமாளியென்று... விளம்புவார்கள் தெரியாதவர்கள்' என்று தொடங்கும் பாடல் அனைவராலும் பாடப்பட்டபின் அனைத்துச் சிறுவர்களும் மேடையேற்றப் பயிற்சி செய்வார்கள். இப்பயிற்சி முறை ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை மட்டுமே பின்பற்றப்பட்டு வந்தது.

Batten:

தளப்பற்று மரச் சட்டம்

துணியாலும் தோலினாலுமான திரைகளை விறைப்பாக்கும் வண்ணம் மேலும் கீழுமாக பொருத்தப்படும் மரச்சட்டம் மேடையமைப்பில் முக்கிய கூறாகப் பயன்படுகிறது. பல வகை விளக்குகளைத் தொங்க விடுவதற்கும் இவ்வகைச் சட்டம் பயன்படுத்தப் பெறுவது உண்டு. இவ்வாறு விளக்குக்காக அமைக்கப்படும் சட்டம் பல கூறாகப் பகுக்கப்படுவதும் உண்டு. இவ்வாறு பகுக்கப்படும் பகுதிக்கு பிரிவு விளக்கு வரிசைச் சட்டம் என்று பெயர். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு விளக்கு, ஒரு பிரதிபலிப்பான், வண்ண வடிப்பான் ஆகியன இடம் பெற்றிருக்கும்.

Beam Light:

ஒளிக்கோடு

ஒளி விளக்குகள், குவிப்பான் மூலமாக செலுத்தப்படும்போது குறுகலாகி நேர்கோட்டில் செல்

கின்றன. இவையே ஒளிக் கோடு என்றழைக்கப்படுகின்றன.

Bifocal Spot:

இரு முகப்புக் குறியிட விளக்கு

(பார்க்க: Spot குறியிட விளக்கு)

Bio-mechanics:

உயிரமைவு இயக்கவியல்

நாடகக் கலைஞர்களுக்கு நடிப்பதற்கும் இயக்குவதற்கும் அளிக்கப்படும் மேயர் கோல்டு பாணி பயிற்சி முறையில் அடிப் படையானது உயிரமைவு இயக்க வியல் எனப்படுகிறது. இப்பயிற்சி முறையில் நடிகர்களின் மனமும் ஆளுமையும் இயக்குநரின் விருப்பத்திற்கேற்ப முழுமையாக வெளிப்பட்டு வர வேண்டும். மேலும் நாடகக் காட்சியமைப்பு களும் விளக்கக் காட்சியமைப்பு களும் அப்புறப்படுத்தப்பட்டு அவை பார்வையாளரின் கற்பனைக்கு விடப்படும் நிலையும் மேற் கொள்ளப் பெறுகிறது.

Biographical Play:

வாழ்க்கை வரலாற்று நாடகம்

தனிமனித வாழ்க்கையினைச் சித்திரிக்கும் வண்ணம் அமைத்துக் காட்டப்பெறும் நாடக வகை இது. அனைத்து நாடுகளிலும் வாழ்வில் குறிப்பிடத்தக்க சாதனை களைச் செய்தோரை ந மாக்கும் நிலை காணப் படுகி தமிழிலும் பல வாழ்க்கை வரலாறு நாடகங்கள் எழுதி மேடை யேற்றம் செய்யப் பெற்றுள்ளன. இராஜராஜ சோழன், தேசபக்தர் சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற நாடகங்கள் இவ்வகை நாடகங் களாகும். மேலும் எழுத்து வடிவில் பல வாழ்க்கை வரலாற்று நாடகங்கள் வெளிவந்துள்ளன.

Black Comedy:

இருள் நகை

வெறுப்பு மனப்பான்மை, மாயையிலிருந்து விடுபடல் என்ற மனித மனங்களைச் சித்தரிக்கும் நகைச்சுவை நாடக வகை இது. நம்பிக்கையற்ற, விதியை எண்ணு கின்ற மனிதர் களைப் படம் பிடித்துக் காட்டும் இவ்வகை நாடகம் மனிதர்களின் கசப்பான நம்பிக்கையற்ற தன்மையை வெளிப்படுத்தி அதன் மூலம் நகைப்பை வரவழைப்பதை உத்தி யாகக் கொண்டுள்ளது.

Black Face:

கறுப்பு முகம்

அமெரிக்க நாட்டில் 1840 முதல் 1880 வரைச் செல்வாக்குப் பெற்றிருந்த நீக்ரோ பாடல் வடிவ

நிகழ்ச்சியில் இடப்பட்ட கறுப்பு நிற ஒப்பனையைக் கொண்டு இப்பெயர் அமைந்துள்ளது. இது குடும்பத்தினருக்கான நிகழ்ச்சியாக கூடங்களில் நிகழ்த்திக் காட்டப் பெற்றது. தொடக்கத்தில் இவ் வேடங்கள் வெள்ளை நிறத்தவரால் ஏற்கப்பட்டு அவர்களது முகம் மட்டும் செயற்கை முறையில் கறுப்பாக்கப் பெற்றது. பின்னர் இப்பாத்திரங்களை முழுக்க கறுப்பு நிற நீக்ரோ இனத்தவரே ஏற்றுக் கொள்ளலாயினர்.

Blending:

இணைவு

நாடகப் படைப்புக் கூறுகளில் குறிப்பிடத்தக்க கூறு இணைவு ஆகும். கதை, நடிப்பு, இசை இவையாவற்றையும் இணைவு செய்து ஒன்றாக்கி அவற்றை ஒன்றோடொன்று பிரித்தறிய இயலாதபடி ஒருங்கிணைப்புச் செய்தல் இன்றியமையாத தன்மை யாகும். இதுவே இணைவு எனப் படுகிறது.

Blocking:

தடைச் செப்பம்

நாடகக் காட்சிகளின் நகர்வு களில் தடையேற்படுத்திக் கோர்வைக்கேற்ப செப்பனிடும் முறைமை இது. நாடக ஓட்டத்தின் சீரான செயல்பாட்டிற்கு இவ்வகை உத்தி பயன்படுகிறது. இது முழுக்க நாடக இயக்குநரின் கற்பனைக்கு உட்பட்ட நிகழ்வாக அமைகிறது.

Blues:

துன்பப் பாடல்

ஆங்காங்கே தட்டையான இசைக்குறியீட்டுடன் இது அமைந்து வரும். ஆப்ரோ - அமெரிக்காவில் தோற்றம் பெற்ற துன்பப் பாடல் வகையின் வடிவம் மூன்று வரிப் பத்திகளைக் கொண்டு அமைந்து வரும். இரண்டாவது வரியானது முதல் வரியின் மறு நிலைப்படி (repetition) ஆக விளங்கி வரும்.

Blues - a

நீல வண்ணத்திரை

(பார்க்க: Border- மறைப்பு ஓரம்)

Boat Truck:

நகர்வுத் தடம்

மேடையில் நிலைச் சட்டத்தின் மேல் நகரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள தடம். இதன் மேல் காட்சியமைப்புகளும் பொருத்தப்பட்டு நகர்த்தப்படும். அரங்கின் முன்புறம் ஒன்றும் வெளிப்புற மூலையில் ஒன்றுமாக இரண்டு நகர்வுத் தடங்கள் வைக்கப் பெற்று உள்ளேயும் வெளியேயு

மாக நடிப்புப் பரப்பின் மீது நகர்த்தப்பட்டால் அது கத்திரிக் கோல் மேடை (Scissor stage) என்றும் அழைக்கப்படுகிறது. அரங்கின் பின்புறத்தின் உச்சியில் பொருத்தப்பட்ட ஆப்பு வடிவிலான சக்கரத்தில் பல காட்சித் திரைகள் அடுத்தடுத்து பொருத்தப்பட்டு கழற்றப்படும் போது அவை உரிய இடத்தில் வந்து நிற்பதற்கு அமைக்கப் பெறும் மேடை பிரிவமைவு மேடை (Segment stage) என்று அழைக்கப் படுகிறது. பிரிவமைவு மேடையின் மேம்பட்ட நிலையாக மிகப் பெரிய அரங்குகளில் தண்டவாளம், மேலுயர்த்தும் கருவிகள் மூலம் ஐந்து பிரிவமைவு மேடைகள் உருவாக்கம் செய்யப்படுகின்றன. இவை நழுவு மேடை (Slip stage) என்றழைக்கப்படுகின்றன.

Bobo:

போபோ

முந்தைய ஸ்பானிசு நாடகங் களில் இடம்பெறக்கூடிய முரட்டுக் கோமாளி. தம்முடைய நகைச்சுவை உணர்வாலும், செயல்பாட்டா லும் நகைப்பை வரவழைக்கக் கூடிய வல்லமை பெற்றவர்.

Body Expression:

உடற்கூற்று வெளிப்பாடு

நாடகப் படைப்பு நிலையில் மேடையில் தோன்றும் கலைஞர் களின் அங்க அசைவுகள் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்து நிற்கும். கால் கள், கைகள், கண்கள் இவற்றின் மூலம் மிக நுண்ணிய நடிப்புக் கூறுகள் கலைஞர்களால் வெளிப் படுத்தப்படுகின்றன. இதற்கான தனிப்பயிற்சி முறைகளும் நடை முறையில் இருந்து வருகின்றன.

Body Language:

உடல் அமைவு

இது குறியீட்டு நிலையில் அமைந்த ஒரு மேடை வெளிப் பாடாகும். எந்தவிதமான உரையாடல்களும் இன்றி உடலின் நிறுத்துநிலை மூலமாக வெளிப் படுத்தப்படும் மொழியாக இது அமையும்.

Body Movement:

உடல் அசைவு

நாடகப் படைப்பின்போது மேடையில் நடிக்கும் கலைஞர் களின் நடிப்புத்திறனுக்கு அவர் தம் மெய் அசைவு அடிப்படை யாக விளங்குகிறது. மேடையில் கலைஞர்களுக்கிடையேயான இடைவெளி சரியாக நிலைப் படுத்துதல் செய்ய மெய் அசை வின் கட்டுப்பாடு இன்றியமையாத தாகிறது. சங்ககாலக் கூத்துக் களின்போது இவ்வகை மெய்

அசைவு வேகமாக இருந்து குதித்து ஆடும் நிலை இருந்தமை அறிய முடிகிறது. ஒலிபெருக்கி வசதி தோன்றாத நாட்களில் மெய் அசைவின் மூலமே நாடக வெளிப்பாடு அமைந்து நின்றது. சமசுகிரதத்தில் இவ்வகைச் செயல்பாடு 'ஆங்கிகாபிநயம்' எனக் குறிப்பிடப் பெறுகிறது.

Body Position:

உடல் நிறுத்துநிலை

மேடையில் காட்சிப் படுத்துதலின் போது கலைஞர்கள் பேண வேண்டிய உடற் கோணம் நாடக மேடை வெளிப்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும். நாடகக் கதைமாந்தர் குணநலன்களைப் பிரதிபலிப்பதாகவும், பார்வையாளரைச் சென்று சேரும் வண்ணமாகவும் உடலை நிறுத்துதல் செய்தல் சிறப்பு வாய்ந்ததாகும்.

Book:

நாடகப் பிரதி

எழுதப்பட்ட அல்லது அச்சிடப் பெற்ற நாடகத்தின் பொதுப் பெயராக இது அமைந்து வருகிறது. இலக்கியக் கூறமைந்த உரைநடைப் பகுதியினைக் கொண்டமைவதால் நாடக உலகில் இப்பெயரே வழக்கில் உள்ளது.

Book Ceiling:

விரிப்புக் கூரை

(பார்க்க: Ceiling Cloth - உட்கூரைத் திரைகள்)

Book-flat:

விரிப்புத் தட்டி

(பார்க்க: flat- தட்டி)

Book - holder:

நாடக அடி நினைவூட்டுநர்

நாடக மேடையில் நடிகர்களுக்கான உரையாடல்களை அடி மாறாமல் நினைவூட்டுவதோடு, அவர்களுக்கான உரிய காட்சிப் பொருட்கள் பொறுப்பையும் ஏற்றுப் பணி மேற்கொள்பவர் இவர்.

Book - keeper:

நாடகப் பிரதிக் காப்பாளர்

பின்னரங்கில் நாடகப் பிரதியின் பொறுப்பை மேற்கொண்டு அவற்றினைப் படியெடுத்து அனைத்து நடிகர்களுக்கும் வழங்கும் பணியை மேற்கொள்பவர். நாடகம் நடைபெறாத வேளையில் அப்பிரதிகளைப் பத்திரப்படுத்தும் பணியும் இவரைச் சார்ந்ததே ஆகும்.

Book -Wings:

சுழல் பக்கத்தட்டி

இவ்வகைத் தட்டிகள் காட்சி மாற்றத்திற்காகப் பெரிதும்

பயன்படும் வகையிலான வடிவமைப்புக் கொண்டவை. ஒவ்வொரு சுழல்பக்கத் தட்டியும் நான்கு தட்டிகள் நடுவில் ஒரு சுழலும் அச்சுத்தூணில் பொருத்தப் பட்டிருக்கும். இதிலிருந்து தொடுக்கப்பட்ட கயிறு உருளச்சு ஒன்றுடன் பொருத்தப் பட்டிருக்கும். காட்சிச் சூழலுக்கு ஏற்றவாறு ஒரே நேரத்தில் இவ்வகைத் தட்டிகள் சுழலச்சு மூலமாகச் சுழற்றப்பட மாறுபட்ட காட்சிகள் மேடையில் காட்சிப்படும். இவ்வகைத் தட்டிகளின் பயன்பாடு விக்டோரியன் அரங்குகளில் 1857க்கு முன்பாகவே இருந்தமை அறியமுடிகிறது.

Boom:

விட்டம்

மேடையில் நடிப்புப் பரப்பிற்கு நேரே மேலே கட்டப்படும் விளக்குகளைப் பொருத்துவதற்காக பக்கத் தட்டிகளில் விட்டம் இணைக்கப் பட்டிருக்கும் எனினும் இக்காலத்தில் மேடையின் ஓரச் சுவர்களின் மேலே இவ்வகை அமைப்புகள் நிரந்தரமாக வைக்கப் பெறுவதுமுண்டு.

Booths:

பெயரும் அரங்கக் குழுக்கள்

சிறிய, பயணப்படும் தன்மை கொண்ட அரங்கங்கள் இவ்வகையில் பெயரிட்டு அழைக்கப் படுகின்றன. நிரந்தரமான குழுக்களினின்று மாறுபட்டு, இடம் பெயர்ந்து சென்று காவடி போன்ற அமைப்புகள் மூலம் நாடகம் நடத்திக்காட்டும் தன்மையையே இது காட்டுகிறது. துணியினால் கூரை அமைக்கப் பெற்று, உள்ளே மரப் பலகைகளினால் இருக்கை அமைக்கப் பெற்றிருக்கும். இவை யாவும் நாடகம் முடிந்த பின் சுருட்டப் பெற்று வாகனங்களில் ஏற்றிச் செல்லத்தக்க வகையில் எளிமையானதாக உருவாக்கப்பட்டிருக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

Border:

மறைப்பு ஓரம்

மேடையில் மேற்கூரையின் உட்பகுதி பார்வையாளர் கண்களுக்குத் தெரியாதவண்ணம் மறைப்பதற்காகக் கட்டப்படும் அகலம் குறைந்த வண்ணத் துணியே மறைப்பு ஓரம் எனப்படுகிறது. பல வரிசைகளில் இது கட்டப் படுவதுண்டு. இதன் கீழ்ப்பகுதி பல வடிவங்களில் வெட்டப்பட்டு அழகு படுத்தப்பட்டிருக்கும். கீழ்ப்பகுதி இலை வடிவில் வளைத்து வெட்டப்பட்டிருப்பின் அதனை மர அமைப்பு ஓரம் (Tree border) எனலாம். மேல் மறைப்புத்

திரை (Cloudings) எவ்வகைக் காட்சியமைப்பிற்கும் பொருந்துமாறு அமைவதாகும். மறைப்பு ஓரத்திரையின் இரண்டு பகுதிகளிலும் இணைக்கப்படும் தொங்குதிரைகள் மூலமாக வளைவுகள் உருவாக்கப்படுவதுமுண்டு. மேக ஓரத்திரையினை (Sky border) அதன் வண்ணத் தோற்றத்தினால் நீலம் (Blue) என்றும் குறிப்பிட்ட நிலை விக்டோரிய காலகட்டத்தில் மேனாடுகளில் வழக்கில் இருந்து வந்தது.

Border Light:

ஓர விளக்கு

(பார்க்க: Backing Striplight-*பின் ஓர விளக்கு)*

Box - office:

அவையிருக்கைப் பதிவறை

நாடக அவைக்கூடத்தில் நாடகம் பார்க்க வருவோர் தங்களுக்கான இருக்கைகளைப் பதிவு செய்யவும், பெற்றுச் செல்லவும் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள இடம் இது. பொதுவாக ஒன்று முதல் ஆறு பேர் வரை இப்பதிவுப் பணியாளராகப் பணிபுரிவர். சில அரங்குகளில் தனித்தனி பிரிவுக்கான தனித்தனிப் பதிவு அறைகளும் இருப்பதுண்டு. அவையிருக்கைப் பதிவறைப் பணியாளர்களுக்கு மேலாண்மையாளராகச் செயல் படுபவர் அவையிருக்கைப் பதிவறை மேலாளர் என அழைக்கப் படுகிறார்.

Box-office Manager:

அவையிருக்கைப் பதிவறை மேலாளர்

(பார்க்க: Box-office -*அவையிருக்கைப் பதிவறை)*

Box-set:

அறைக்கூட்டுக் காட்சியமைப்பு

நாடகமேடையில் மூன்று சுவர்கள், மேலே உட் கூரை கொண்ட அறை போன்ற அமைப்பை தட்டிகளால் செயற்கையாக அறைபோல உருவாக்கிக் காட்டும் காட்சியமைப்பு இது. பொதுவாக திரைகளில் ஓவியமாக வரைந்து காட்சிப்படுத்துதல் போலன்றி இவ்வகைக் காட்சியமைப்பில் உண்மையாகவே அறைகளில் பொருத்தப்பட்டுள்ளது போன்ற கதவுகள் சாளரங்கள் போன்ற பொருத்தப்பட்டு நடிகர்கள் அவற்றினூடே உள்ளே செல்லவும் வெளியே வரவும் வகையில் இது உருவாக்கப்பட்டிருக்கும். இத்தகைய காட்சியமைப்பு அடைப்பரங்குகளில் மட்டுமே பயன்படுத்தத்தக்கனவாகும்.

திறந்தவெளி அரங்குகளுக்கு இவை பொருத்தமானவையல்ல.

Boxes:

பெட்டி இருக்கை

நாடக அவைகளில் தனி யிருக்கைக்காகப் பெட்டி வடிவில் ஓரமாக அமைக்கப்பட்டிருக்கும் அமைப்பாகும். தொடக்கத்தில் இருபது பேர் வரை அமரத் தக்கதாக உருவாக்கப் பெற்ற இவ்வமைப்பு இக்காலத்தில் சுமார் ஆறு பேர் மட்டுமே அமரத்தக்க அளவில் உள்ளது. எனினும் மேடையை நேராகப் பார்க்கும் வசதியின்றி பக்க வாட்டிலேயே பார்க்கும் நிலை இவ்வகைப் பெட்டிகளில் ஏற்படுவதால் இவை இக்காலத் தில் செல்வாக்கின்றி உள்ளன.

Boy Bishop:

பாய் பிசப்

ஐரோப்பிய நாடுகளில் இடைக் காலத்தில் சிறுவர்களின் கலை விழாக்களுக்காகத் தேர்ந் தெடுக்கப்படும் சிறுவர் ஆட்சியாளரே இப்பெயரிட்டு அழைக்கப்பெற்றார். தேவாலயங் களின் குழுப்பாடல் முறைமை யில் தோற்றம் பெற்ற இந்நிகழ்வு கள் பின்னர் சிறுவர்களுக்கான கல்வி முறைக்கான நாடகமாக அண்மைக் காலம் வரை (1963) நடைபெற்று வந்துள்ளது.

Boys Company:

பாலர் நாடக சபை

சிறுவர்களைக் கொண்டு, தமிழ் நாடக மேடையில் நாடகம் படைத் தளித்த நாடகக் குழுக்களே பாலர் நாடக சபைகள் என்றழைக்கப் படுகின்றன. தவத்திரு சங்கரதாச சுவாமிகள் இக்குழு முறைக்கான முன்னோடியாகத் திகழ்ந்தார். 1918இல் அவர் தோற்றுவித்த 'தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபா' என்னும் பாலர் நாடக சபை முழுக்க முழுக்கச் சிறுவர் களைக் கொண்டு செயல்பாட்டுக்கு வந்த முதல் பாலர் நாடகசபை ஆகும். அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட பாலர் நாடக சபைகள் வலுவுடன் செயல்பட்டுவரலாயின. பாலர் சபைகள் 'பாய்ஸ் கம்பெனி' என்றும் அழைக்கப் பெற்றன. பாலர் சபைகளில் சிறுமியர் சேர்த்துக் கொள்ளப் பெற்ற நிலை ஏற்பட்ட பொழுது சிறுவர்களை மட்டுமே வைத்துக் கொண்ட நாடக சபைகள் 'ஒரிஜினல் பாஸ் கம்பெனி' என்று பெயர் பெற்றழைக்கப் பட்டன. தமிழ் நாடக மேடை யின் மாறுபட்ட மேம்பாடான

வளர்ச்சியில் பாலர் நாடக சபைகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

Boys Company Drama:

பாலர் சபை நாடகம்

தமிழகத்தில் தனித்துவம் வாய்ந்த நாடகக் குழு முறையான பாலர் நாடக சபைகளின் கீழ் படைத்தளிக்கப்பட்ட நாடகங்கள் பாலர் சபை நாடகங்கள் என்று அழைக்கப் படுகின்றன. கதை, கதைப் பின்னல், உரையாடல், நடிப்பு மற்றும் காட்சியமைப்பு ஆகிய அனைத்துக் கூறுகளிலும் இவை சிறப்புப் பெற்று விளங்கின. நாடகக் குழுக்களுக்கென தனி நாடக ஆசிரியர் அமர்த்தப் பெற்ற நிலையும் ஒரே நாடக ஆசிரியரின் நாடகங்கள் வெவ்வேறு பாலர் நாடக சபைகளில் நடத்தப் பெற்ற நிலையும் அறியக் கிடைக்கின்றன. மக்களுக்கு நல்ல செய்திகளை முன் வைப்பதில் இவை முக்கியத்துவம் கொண்டு விளங்கின. தெய்வம், தேசம், மொழி, பண்பாடு என முன்னுரிமை கொடுத்து நாடகம் படைத் தளிக்கப் பெற்ற நிலையும் தெரிய வருகிறது.

பாலர் நாடக சபை நாடகங் கள் தமிழ் மொழியின் போற்று தலுக்கும் முதன்மையளித்துள்ளன. விடுதலை இயக்கத்தின் போது மிகச் சிறந்த பங்களிப்பும் செய்துள்ளன. தி.க. சண்முகம் சகோதரர்களின் இமயத்தில் நாம், முதல் முழக்கம் போன்ற நாடகங் கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவையாகும். தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர் தமது கதரின் வெற்றி நாடகத்தை இலண்டன் மாநகருக்குக் கொண்டு சென்று தமது சிறுவர் குழுவின் மூலம் விடுதலை வேள்வி நடத்தியமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பாலர் சபை நாடகங்கள் மக்களிடம் மிகுந்த மன மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் நாடக மேடைபால் அவர்கள் மீண்டும் ஆர்வம் செலுத்தத் தூண்டியது. தமிழ் நாடக மேடை புதுப்பொலிவுடன் திகழ பாலர் நாடகசபை நாடகங்கள் மிகப் பெரிய பங்களிப்பினை நல்கி யுள்ளன.

Boys Company System:

பாலர் நாடக சபை முறை

தமிழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

செயல்பட்டு வந்த பல நாடகக் குழுக்கள் அவற்றில் நடித்து வந்த பெரிய நடிகர்களின் ஒழுக்க மின்மையினையும் கட்டுப் பாடின்மையினாலும் நலிவுற்று செயல்பாடு இழக்கத் தொடங்கின. நடிகர்கள், நாடக மேடையைத் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் இடமாகவும், ஒழுக்கமற்ற பேச்சுக் களைப் பேசும் கூடமாகவும் மாற்றிக் கொண்டனர். மேல் நிலை மக்கள் இந்நிலையால் தமிழ் நாடக மேடையை வெறுக்கலா யினர். அருவருப்புக் காட்சிகளை விரும்பிக் காண வந்த கீழ்நிலைப் பார்வையாளர்களுக்காகத் தமிழ் நாடக மேடை மேலும் தரம் தாழ்ந்து கொண்டது. அக்காலக் கட்டத்தில் நாடகக் கலைஞர் களைக் 'கூத்தாடிகள்' என மக்கள் அழைத்து வெறுத்தனர். அவர் களுக்குக் குடியிருப்பதற்குக் கூட இடம் கிடைக்காத நிலை ஏற்பட லாயிற்று.

இக்காலக்கட்ட நிகழ்வுகளைக் கண்டு மனம் வெதும்பிய நிலையில் 1891இல் தமிழ் நாடக உலகில் அடியெடுத்து வைத்த தவத்திரு சங்கரதாச சுவாமிகளும், பம்மல் சம்பந்த முதலியாரும் தொழில் முறை, பயின்முறை என இரு நிலைகளில் தமிழ் நாடக மேடையை முன்னெடுத்துச் செல்லத் தலைப்பட்டனர். இவ் வகையில் சங்கரதாச சுவாமிகள் தமிழ்நாடக மேடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றைக் கொணர்தல் முக்கியமெனக் கருதி சோதனை முயற்சிகளில் ஈடுபடலானார். தமிழ் நாடக மேடையில் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணமான பெரிய நடிகர்களை அப்புறப்படுத்தி விட்டு அவர்களது வேடங்களில் களங்கமில்லாத சிறுவர்களை நடிக்க வைத்தால் புதுப் பெற முடியுமென எண்ணி அம்முயற்சி யில் நாட்டம் கொள்ளலானார். இவ்வேளையில் கும்பகோணத் தில் தாப்பா வெங்கடாசலம் என்பார் சிறுவர்களை வைத்து நடத்திக் காட்டிய நலுங்கு நிகழ்ச்சி மக்களிடையே பெற்றுக் கொண்ட பெரும் வரவேற்பு கண்டு சங்கரதாச சுவாமிகள் வியப்பு கொண்டார். தமது நாடக முயற்சிக்கு நலுங்கு நிகழ்ச்சியை அடிப்படையாக்கிக் கொண்டு முழுக்க சிறுவர்களைக் கொண்டு நாடகம் நடத்திக் காட்டும் நிலையை மேற்கொண்டார். இவ்வகையில் பாலர் நாடகசபை முறை தோற்றம் பெறலாயிற்று.

அவை 'பாலர் நாடக சபை சபைகள்' எனப் பெயரிடப் பெற்றன. ஒழுக்கம், கட்டுப்பாடு, பயிற்சி எனக் 'குருகுல' முறையில் நிரந்தரக் குழுவாக இவை செயல் படுத்தப் பெற்றன. சிறுவர்கள் நடித்த நாடகங்களைக் காண மக்கள் ஆர்வமுடன் திரண்டனர். நல்ல தமிழில், நல்லொழுக்க நாடகங்கள் இவ்வகையில் காட்சிப்படுத்தப் பெற்றன. தொடர்ந்து தேசிய இயக்க நாடகங்களும், சமூக, வரலாற்று நாடகங்களும் இக்காட்சிகள் மூலம் படைத் தளிக்கப் பெற்றன. தமிழ் நாடக மேடை இப் பரிசோதனை முயற்சி மூலம் புதுப்பொலிவு கண்டது. பல பாலர் சபைக் கலைஞர்கள் நாடக, நிலையில் உருவாக்கம் பெற்றனர். தி.க. சண்முகம் சகோதரர்கள், எம்.ஜி.இராமச் சந்திரன், சிவாஜி கணேசன், என்.எஸ்.கிருஷ்ணன், எஸ்.வி.சகஸ்ரநாமம், எஸ்.எஸ்.இராசேந்திரன், டி.என்.சிவதாணு, எம்.ஆர். ராதா போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்க கலைஞர்களாவர். பல நாடகாசிரியர்களும், நாடகப் பாடலாசிரியர்களும் பாலர் சபையின் கொடையாக தமிழுக்குக் கிடைக்கலாயினர்.

Brace:

பற்றுக்கொக்கி

நாடக மேடையில் நிறுத்தப் பட்டிருக்கும் தட்டிகளின் முதுகுப் புறத்தையும், மூலைவாட்டான கீழ்ப்பகுதியையும் இணைக்கும் வண்ணம் பொருத்தப்பட்டிருக் கும் அமைப்பு இது. பெரும்பா லும் மரத்தால் செய்யப்பட்டு, குறுக்கவும் விரிக்கவும் வசதியாக இது பொருத்தப்பட்டிருக்கும். தட்டிகளை மேடைப் பகுதியில் நிறுத்தி நிலைப்படுத்துவதற்காக இவ்வகை அமைப்பில் தட்டியின் முதுகுப்புறத்தையும், தரைப் பகுதியையும் இணைக்கும் வண்ணம் தாங்கு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுவதும் உண்டு.

Brace Jack:

பற்றுக் கொக்கி

பார்க்க: Brace- பற்றுக்கொக்கி

Bridge:

மேலெழுப்பி

கனமான காட்சிப் பொருட் கள், திரைகள் போன்றவற்றை மேலெழுப்புவதற்கோ அல்லது மேடை அடி அமைவிலிருக்கும் நடிகர்களை மேடைப் பரப்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கோ பயன்படுத்தப்படும்

எந்திர வடிவமே மேலெழுப்பி என்றழைக்கப்படுகிறது. இக்கால கட்டத்தில் அறிவியல் வளர்ச்சிக் கேற்ப பல வடிவ மேலெழுப்பிகள் பயன்பாட்டில் உள்ளன. ஒளியமைப்பிற்கும், காட்சித் திரைகளின் செயலாக்கத்திற்கும் கூட இவ்வகை மேலெழுப்பிகள் பயன்படுத்தப்படுகின்றன.

Bristle Trap:

மயிரிழை வண்ண மேடை அடி அமைவு

(பார்க்க: traps- மேடை அடி அமைவு)

Brochure:

சிற்றேடு

நாடகத்தின் போதோ, அது நிகழ்வதற்கு முன்போ விவரக் குறிப்புகளுடன் வழங்கப்படும் சிறிய நூல் வடிவிலான புத்தகம் இது. நாடகம் குறித்த பிற விவரங்கள், குழுவினர் விவரங்கள், காட்சியமைப்புக்களின் விவரங்கள் கூட இவற்றில் குறிக்கப் பெற்றிருக்கும்.

Bucco:

பக்கோ

உரோமன் நாடகத்தில் வரும் நிலையான கோமாளி வேடமே இவ்வாறு அழைக்கப்பெறுகிறது. பருத்த கன்னங்களும், வாய்ப் பேச்சு வல்லமையும், சாப்பிடுவதில் தேர்ந்த நிலையும் இப்பாத்திரத்தின் சிறப்புக் கூறுகளாகும்.

Buffoon:

கோமாளி

நகைச்சுவை நடிகரினின்றும் வேறுபட்டவர். தமது தோற்றத்தாலும் அங்க அசைவுகளாலும் சற்றே கீழ்த்தரமான செயல்பாடுகளினாலும் சிரிப்பை வர வழைக்க வல்லவர். நகைச்சுவை நாடகங்களில் இவரது பங்களிப்பு அதிகமாக இருக்கும். பிற நாடகங்களிலும் கதையோட்டத் திற்குத் தொடர்பு அதிகமின்றி இப்பாத்திரம் இடம் பெறுவதும் உண்டு. நாடகம் தவிர பிற 'சர்க்கஸ்' போன்ற நிகழ்ச்சிகளிலும் இவரது பங்களிப்பு முக்கியமாக இடம் பெறுவதுண்டு.

Built Stuff:

பிடிப்புக் கட்டுமானம்

மேடையில் நகர்வுத் தடத்தின் மேலே முப்பரிமாண நிலையில் மேடைத் தட்டுகள், கடின நிலைக் காட்சிப் பொருட்கள் போன்றன பிடிப்புடன் கட்டப்படும் நிலையையே இது காட்டுகிறது. பெரும்பாலும் மேடைத் தட்டு இவ்விதமாகக் கட்டப்படுகிறது.

Burlesque:

கேலியாக்கம்

எழுத்து, பேச்சு, நடிப்பு மூலம் **கேலியான** பொருண்மைக் கூறினை **உருவாக்**குதலே இவ்வகைப் படு**கிறது**. போலச் செய்தல், **கருத்துப்** படக்கூறுகள், பெரிய **வற்றைச்** சின்ன நிலையி லும் **சின்ன**வற்றைப் பெரிய நிலையி **லும்** கொள்ளும் தன்மை போன்றன இவ்வகை நிகழ் வாக்கத்திற்குத் துணை செய்கின்றன.

Burletta:

குறுநகைச்சுவை நாடகம்

இசையோடு கலந்து நகைச் சுவையை வழங்கவல்ல குறு நாடகம் இவ்வகைப்படுகிறது. மேலை நாடுகளில் 19ஆம் நூற்றாண்டுகளில் இவ்வகை நாடகம் செல்வாக்குப் பெற்றிருந்தது. காட்சி இடை வேளைகளின் போது தனி நடனங்களும் இவ்வகை நாடகங் களில் இடம் பெறலாயின.

Call:

அழைப்பு

நாடகத்தில் உரிய காட்சி நேரம் வரும்போது குறிப்பிட்ட நடிகருக்கு நினைவூட்டி அழைப்பு விடுப்பதே அழைப்பு எனப்படு கிறது. ஒத்திகைக்கான அழைப் பும் இதுபோல விடுக்கப்படுவ துண்டு. இதற்கான தனி ஆட்கள் நாடகக் குழுக்களில் அமர்த்தப் படிருப்பவர். மேடையில் நடிகர் வருகைக்காக அழைப்பு மணி பொருத்தப்பட்டிருப்பதும் இக்காலத்தில் நடைமுறையில் உள்ளது.

Call Board:

தகவல் பலகை

அரங்கின் மேடை வாயிலில், அரங்க வாயிற் பாதுகாவலர் பகுதிக்கு அருகில் தகவல் பலகை அமைக்கப்பட்டிருக்கும். இப் பலகையில் ஒத்திகை விவரங்கள். காட்சி முடிவு குறித்த விவரங்கள் யாவும் ஒட்டப்பட்டிருக்கும்.

Call boy:

அழைப்பாள்

ஒப்பனை அறையிலிருந்து நடிகர்களை, உரிய காட்சி நேரத்தின் போது அழைத்து வருவதற்காக நியமிக்கப் பட்டிருக்கும் பையன் இவ்வாறு குறிப்பிடப்படுகிறான். ஆங்கில மேடையில் இப்பழக்கம் அறிமுக மானது. இக்காலத்தில் இப் பணிக்காக உள் ஒலி பெருக்கி மூலம் தகவல். தரப்படுகிறது. மேடைப் பொறுப்பாளரும்

இப்பணியை ஏற்றுச் செயல் படுவதுமுண்டு.

Carpenter Scene:

அவ்காசக் காட்சி

நாடக மேடையில் அடுத்துவர வேண்டிய விரிவானக் காட்சித் திரையினைத் தயார் செய்வதற் காகத் தச்சர்கள் பணி செய்வதற்கு நேரமளிப்பதற்காக மேடையில் முன்பரப்பில் வண்ணத்திரைக்கு முன் நடைபெறும் நாடகக் காட்சி. இக்காட்சிக்காக இடப்படும் வண்ணத்திரையும் இப் பெயரி லேயே அமைகிறது.

Carpet Cut:

மேடை விரிப்புத் தறிப்பு

முன்னரங்கினின்று பின்னோக்கிச் செல்லும் முழுப் பரப்பிலும் விரிக்கப்பட்டிருக்கும் மேடை விரிப்புத் துணி. நடிக்க வருவோர், இடறிவிடாமல் தடுப்பதற்காக அதன் ஓரங்கள் மேடையின் ஓரத்தில் உள்ள திருகுகள் பொருத்தப்பட்ட தொங்கல்களின் அடிப்பகுதி யோடு பொறுத்தப்பட்டிருக்கும்.

Catastrophe:

உயரழிவு

உச்சகட்ட திருப்பத்தை ஒரு நாடகத்தில் உருவாக்கும் உணர்ச்சி நிலை இது. ஒரு நாடகத்தின் முடிவு நிகழ்வை உருவாக்குவதில் இது முக்கியமானதாகிறது.

Ceiling:

உட்கூரை

(பார்க்க: Ceiling Cloth- உட் கூரைத் துணி)

Ceiling Cloth:

உட்கூரைத் துணி

பெட்டி இருக்கையின் உட் கூரையை மறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் துணி இது. மரச்சட்டங்களால் விறைப் பாக்கப்பட்டு மேலே அமைக்கப் பெற்றிருக்கும். சுருட்டப் பெறும் வடிவில் இருபக்கமும் இரண்டு மரச்சட்டங்கள் அமைக்கப் பெற்றுள்ள நிலையில் உள்ள மறைப்புத்துணி சுருள்நிலைக் கூரை (roll ceiling) எனவும், புத்தக வடிவில் இரு பகுதிகளாக பிரிக்கப் பட்டு பயன்படுத்தாத நிலையில் ஒன்றையொன்று ஒட்டிக் கொண்டும், விரிக்கும்போது இரு பகுதியாகப் பிரிந்து கொண்டும் அமையும் துணி விரிப்புக்கூரை (Book Ceiling) எனவும் பெயர் பெறும்.

Central Theme:

மையக் கரு

நாடகம் உள்ளிட்ட இலக்கிய வடிவங்களில் மேலோங்கி நிற்

கின்ற கருத்து அல்லது எண்ணமே மையக் கரு எனப்படுகிறது. முழுக் கதையமைப்பும் மையக் கருவைச் சுற்றியே பின்னப் பட்டிருக்கும். நாடகத்தின் மூல மாக வெளிப்படுத்தப் பெறும் அடிப்படைச் செய்தி (Message) இதுவாகத்தானிருக்கும். எடுத்துக் காட்டாக தெ. பொ. கிருட்டின சாமிப்பாவலரின் கதரின் வெற்றி நாடகத்தின் மையக்கரு 'தேச பக்தி'யை அடிப்படையாகக் கொண்டிருந்த நிலையைக் கொள்ளலாம்.

Centre Stage:

நடு மேடை

மேடையின் மையப்பகுதி இது. பின்பக்க மையப்பகுதி, (up centre) மையப் பகுதி (centre) முன்பக்க மையப்பகுதி (down centre) என இடத்திற்கேற்ப இது பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

Character:

பாத்திரம்

நாடகத்தில் கதைப் பின்னலுக்கு அடிப்படையாகி நிற்பவை கதைமாந்தரே ஆவர். இவர் களைச் சுற்றித்தான் முழு நாடகக் கதையும் அமைந்து நிற்கும்.

Character Actor:

பண்பு உணர் நடிகர்

ஏற்றுக் கொள்ளும் பாத்திரத் தின் பண்பு நலனுக்கேற்ற சித்திரிப்புடன் நடிக்கும் நடிகர் பண்பு உணர் நடிகராகக் கொள்ளப்படுகிறார். இவ்வகை நடிப்புத் தன்மை நாடகத்தின் உயிரோட்டத்திற்கு மிகவும் துணையாக அமையத்தக்கன வாகும். நாடகத்தின் பாத்திரம் இதனால் முழுப் பரிமாணத் துடன் மிளிரும்.

Character Make up:

பண்பு உணர் ஒப்பனை

நாடகத்தில் பாத்திரத்திற் கேற்ப பொருத்தமாகச் செய்யப் படும் ஒப்பனை பண்பு உணர் ஒப்பனை எனப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. நாடக ஆசிரியர் தம் மனத்தில், ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தினைக் கற்பனை செய்துள்ள தோற்றத் தின் ஒப்பனை மூலம் வெளிப் படுத்திக் கொள்ளும் போது அது பண்பு உணர் ஒப்பனையாக மிளிரும். நாடகத்தின் ஒட்டு மொத்த சிறப்புக்கும் இது முக்கிய பங்களிப்பினை நல்குவதாகவும் அமையக்கூடும். தமிழில் தி.க.சண்முகம் சகோதரர்களின் 'எது வாழ்வு' நாடக ஒப்பனை

இவ்வகையில் சிறப்பு வாய்ந்த தாகக் கருதப்படுகிறது.

Characterization:

பாத்திரப் படைப்பு

நாடகத்தில் கற்பனையாக உருவாக்கப்படும் பாத்திரப் படைப்பு மேடையேற்றத்தின் போது உண்மையான உயிரோட்டமுள்ள பாத்திரமாக மாறி பார்ப்போர் மனத்தில் பதிந்துவிடுகிறது. இத்தகைய பாத்திரங்களை உருவாக்கிக் காட்டுதலே பாத்திரப் படைப்பு ஆகிறது. உருவாக்கப்படும் பாத்திரத்தின் பண்புநலன் அப்பாத்திரத்தின் 1. நடிப்பு 2.பேச்சு 3. எண்ணம் 4. நேரடித் தோற்றம் 5. பிற பாத்திரங்க்ள் குறிப்பிட்ட இப்பாத்திரத்தைக் கணிக்கும் தன்மை ஆகியவற்றால் வெளிப் படுவதுண்டு. இவற்றை வெளிப் படுத்தும் பாத்திரப் படைப்பே முழுமையான பாத்திரப் படைப்பாக அமைய முடியும்.

Children's Theatre:

குழந்தைகள் நாடகம்

குழந்தைகளுக்காகப் பெரியவர்களும் இணைந்து படைத்தளிக்கும் நாடக வகை இது. பாலர் நாடகசபை நாடகங் களிலிருந்து முற்றிலும் மாறு பட்டது. இவ்வகை நாட... தொழில்முறை நாடகக் கட... களும் பயின் முறை நா... கலைகர்களும் படைத்தளிப்... பார்வை யாளராகக் குழந்தைகள் இடம் பெறுவர். குழந்தைகளின் மன நிலைக்கொத்த வகையில் நாடக ஆசிரியர், இயக்குநர், பிற தொழில் நுட்பக் கலைஞர்களின் ஒட்டுமொத்த உருவாக்கமாக இவ்வகை நாடகம் அமைகிறது. பிற நாடகங்களைப் போலன்றி பார்வையாளராக வீற்றிருக்கும் குழந்தைகளுக்கு நல்ல நாடகம் படைப்பதே மேற்கண்ட குழுவினரின் எண்ணமாக இருக்கும்.

Choregus:

குழுத்தலைவன்

நற்கருணை நாடகம் (liturgy) நடத்தப்பெறும் பொழுது குழுப் பாடல் நிகழ்வுக்காக தலைமைப் பொறுப்பு ஏற்பவர் இவர். இன்பியல், துன்பியல் போன்ற நிகழ்வுகளை அமைப்பவர் இவரே. பாடல் எழுதும் கவிஞர்களுக்கும் நடிக்கும் நடிகர்களுக்கும் இடையேயான போட்டியாகவும் இது அமைவதுண்டு.

Choreographer:

தொகுப் பாடல் அமைப்பாளர்

(பார்க்க: Choreography- தொகுப்பாடலமைவு)

Choreography:

தொகுப்பாடலமைவு

நாடகத்திலும் திரைப் படத்திலும் குழு நடனங்களை ஒருங்கிணைப்பு செய்து காட்டுவ தென்பது தனிக்கலையாக நிகழ்த்தப்படுகிறது. இவ்வொருங் கிணைப்பு, வெவ்வேறு கலைஞர் களைத் தொகுத்துத் தருவதாக அமைவதால் தொகுப் பாடலமைவு அல்லது தொகுதி ஆடல் அமைவு எனப்பெயர் பெறுகிறது. இவ் வகையில் நடனக் கலைஞர்களை ஒருங்கிணைத்து ஆடற் பயிற்சியளித்து வழங்கும் ஒருங்கிணைப்பாளரை தொகுதி ஆடல் அமைப்பாளர் (Choreo - grapher) என்றும் குறிப்பிடலாம். கலைஞர்களை ஒருங்கிணைத்து பயிற்சியளிப்பது முதல் நாடகம் அல்லது திரைப்பட இயக்குநரோடு இணைந்து பணியாற்றி நிகழ்ச்சியை காட்சிப்படுத்துவது வரை இவரது பொறுப்பாகவே இருக்கும்.

Chorus:

குழுக் குரல்

மேடையில் படைத்தளிக்கப் படும் நாடகத்திற்குத் துணை செய்ய வேண்டி, தோன்றி நடிக்கும் நடிகர்களுடைய செயல்பாட்டுக்கு ஏற்ப மேடையில் ஓரமாக நின்று கொண்டு பங்களிப்பு செய்யும் குழுவினரின் ஒலியும் பாடலுமே குழுக்குரல் எனப்படுகிறது. துன்பியல், இன்பியல் ஆகிய இருவகை நாடகங்களிலும் இவர் களுடைய பங்களிப்பு இன்றி யமையாத ஒன்றாக அமைந்து நிற்கிறது. மேனாடுகளில் இதன் பயன்பாடு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. தமிழ் நாடக மேடையைப் பொறுத்தவரை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இதன் பங்களிப்பு அதிகமாக அமைந்திருந்தது.

Christian Theatre:

கிறித்துவ நாடகம்

கிறித்துவக் கருத்தமைவு நாடகங்கள் மேடையேற்றம் செய்யப்படும்போது கிறித்தவ நாடகங்கள் என்று அழைக்கப் படுகின்றன. பொதுவாக மேனாடு களில் பைபிளில் வரும் பத்து கட்டளைகள் உள்ளிட்ட நிகழ்வு கள் நாடகமாக நடத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்திலும் ஞானசவுந்தரி, ஏசுநாதர், புனித சிலுவை உள்ளிட்ட கிறித்துவ நாடகங்கள் நடத்துப் பெற்று வரு கின்றன. 'பாஸ்கா' எனப்படும் நாடகமும் இவ்வகையிலேயே அடங்கும்.

Chronicle Play:

கால வரலாற்று நாடகம்

வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில் தொடர்புடைய கிளைக் கதைகளைக் கால வாரியாகத் தொகுத்து உருவாக்கப்படும் நாடக வகை இது. அனைத்து நிலைப் பார்வையாளர்களுக்கும் இக்கதைகள் வரலாற்று உண்மைகளைப் போதிப்பதாலும், நாடகத்தின் வளமான காட்சியமைப்புக்களாலும் போர்க்களக் காட்சிகளாலும் இவ்வகை நாடகங்கள் மிகவும் பிரபலமானவையாக உள்ளன. சேக்சுபியரின் பெரும்பாலான நாடகங்கள் இவ்வகை நாடகங்களே ஆகும். தமிழில் இராசராச சோழன் நாடகத்தைக் குறிப்பிடலாம்.

Church Drama:

தேவாலய நாடகம்

பைபிள் கதைகளை நாடகமாக தேவாலயத்தின் முன் நடத்திக் காட்டுதலே இவ்வகையில் பெயர் கொண்டமைகிறது. கிறித்துவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரையிலான நிகழ்வுகள் சுழற்சி முறையில் நாடகமாகப் படைத்தளிக்கப் பெறுகின்றன. கற்றுத் தேர்ந்தவர்களால் இவ்வகை நாடகம் நடத்திக் காட்டப்படுகின்றன என்பது கு... தக்கது.

Classic Drama:

காவிய நாடகம்

இவ்வகை நாடகங்கள் அவற்றின் கருத்துச் செறிவினாலும், நிலைத்து நிற்கக்கூடிய தன்மையினாலும் மேலானவையாகக் கருதப்படுகின்றன. இலக்கியச் செறிவும், காவியப் பண்பும் மிளிரத்தக்கன. இத்தகைய நாடகங்கள் முழுமையானவை. இவற்றைச் சிதைக்கவோ, இவற்றோடு எதையும் சேர்க்கவோ இயலாது எனக் கருதத்தக்க அளவில் இணக்கமும் கட்டுப்பாடும் கொண்ட அமைப்பினை உடையது.

Cliche:

படியாக்கக் கதைப்பின்னல்

பலமுறை முன்னரே பயின்று வந்த கதை, கதையமைப்பு, பாத்திரப்படைப்பு இவற்றைக் கொண்டு மறுபடியும் நாடகமாக்குதல் ஒரே தோற்றத்தினையே தருவதாக அமையும். இவ்வகையில் படியாக்கம் போலப் படைப்புகள் உருவாகும் நிலையினையே அச்சில் வார்த்தமை போன்ற ஒரே மாதிரியான (Stero type) தன்மை என்று குறிப்பிடுவர். காலப்போக்கில் இவ்

வகைப் படைப்புகள் கலைத் தன்மை இழந்து வழக் கொழிந்து விடும்.

Cliff - hanger:

சிலிர்ப்பூட்டும் நிகழ்வு

நாடகமயமான திரையும் தொலைக்காட்சியின் ஒவ்வொரு பகுதிக்காட்சியும் பரபரப்பான எதிர்பார்ப்புமிக்க செய்தியோடு முடிவு அமைக்கப்பட்டிருக்கும் நிலையையே இது காட்டுகிறது. கடைசி வரை என்ன முடிவு ஏற்படும் என்பதை அறிய முடியாத வகையில் வடிவமைக்கப்படும் எந்த நிகழ்வுக்கும் இச்சொல் பொருந்தும்.

Climax:

உச்சம்

நாடகத்தில் மிக்க அழுத்தத்தை உருவாக்கும் சிக்கல் ஏற்படும் நிலை தோன்றி அதனையடுத்து அச்சிக்கல் தளர்வதான நிலை யேற்படும் குறிப்பிட்ட பரபரப் பான கட்டமே உச்சம் எனப் படுகிறது.

Closet Drama:

படித்துணர் நாடகம்

உரைவடிவில் அமைந்து, அறை யில் அமர்ந்து படிக்கத் தக்கதாக மட்டுமே அமைந்துள்ள நாடக வகை இது. நடிப்பதற்கு உகந்தது அல்ல. நாடக இலக்கியமாகக் கருதத்தக்க வகையில் இது நீளமாகவும் இருக்கிறது. இத்தகைய நாடகங்கள் பெரும்பாலும் கவிஞர்களாலேயே ஆக்கப் பட்டிருந்ததும், படிப்பதற்கு மட்டுமேயான இவற்றின் காவியத் தன்மையைப் புலப்படுத்தும்.

Cloudings:

மேல் மறைப்புத் திரை

மேடையின் மேற்பகுதியில் மேற்கூரையை மறைக்கும் வண்ணம் நிரந்தமாக அமைக்கப் பட்டிருக்கும் மங்கலான ஓரத் திரை. இருபக்கமாகவும் இழுத்துக் கொள்ளும் வகையில் அமைந் திருக்கும். இவற்றின் பயன்பாடு கி.பி. 1743 வாக்கிலேயே அறியக் கிடைக்கின்றது. இவ்வகைத் திரைகள் காட்சியமைப்பின் சூழலை உருவாக்குவதற்கும், பின்னால் கட்டப்பட்டிருக்கும் திரைகளின் மேற்பகுதியை மறைப்பதற்கும் கூடப் பயன் படுகின்றன.

Clown:

கோமாளி

நாடகத்தில் நகைச்சுவையை தனியாகவே ஊட்டவல்ல நாடகப்பாத்திரம் இது.

Collective Creation:

கூட்டாக்கம்

ஒரு குழுவினரின் கூட்டு முயற்சியில் ஒரு நாடகத்தின் அடிப்படைக் கதைக்கூற்றின் உருவாக்கம் முதல் முழுமை பெற்ற நாடகப் படைப்பாக்கம் உருவாக்கம் பெறுவதான செயல் பாடே கூட்டாக்கம் எனப்படு கிறது.

Comedian:

நகைச்சுவையாளர்

நாடகத்தில் நகைச்சுவைப் பகுதிக்குரிய பணியினைத் தமது நடிப்புத்திறமையால் வெளிப் படுத்துபவர் நாடக நகைச்சுவை யாளர் ஆவார். துன்பியலுக்கு நேர் எதிரான இன்பியல் நாடகத் தில் நகைச்சுவையாளரின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமையும். நாடகக் கதை யோட்டத்திற்கும், பிற நாடகப் பாத்திர ஒருங்கிணைப்புக்கும் கூட நகைச்சுவையாளரின் பங்கு இன்றியமையாததாகிறது. அழுத்தமான காட்சிகளுக்கி டையே மன அமைவு ஏற்படுத் தும் பணியையும் நகைச்சுவை யாளர் செய்கிறார். பெரும்பாலும் நாடகங்களில் நகைச்சுவையாளர் பிற பாத்திரங்களோடு இணைந்தே நகைப்பை ஏற்படுத்திச் செல்கிறார். தனியாக நின்று நகைச்சுவையை ஊட்டுவதும் உண்டு. உரையாடல், குரல், உடல் அசைவு, இரு பொருள் தரும் வார்த்தை உச்சரிப்புகள் போன்றவை நகைச்சுவை யாளருக்குத் துணை நிற்கும் கூறு களாகும்.

Comedic Ballet:

இன்பியல் இசை நடனம் (இன்பியல் துணுக்கு)

உரையாடலும் இசையும் கலந்து ஆவலுடன் அரசவைக் கலையாக உருவான வடிவம் இது. பதினைந்தாம் லூயிசு மன்னனது அவையில் நடத்திக் காட்டப் பெற்ற இந்நிகழ்வில் அரசனும் சேர்ந்தே ஆடினான். மோலியர் இவ்வகைக் கலைக்கு நாடக வடிவம் தந்தார்.

Comedy:

நகைச்சுவை

சிரிப்பை வரவழைக்கும் வண்ணம் கற்பனையான சம்பவங் களை வடிவமைத்துக் கூறுவதே நகைச்சுவையாகும். நகைச்சுவை இன்ப முடிவையே அடிப்படை யாகக் கொண்டிருக்கும். துன்பிய லுக்கு நேர் எதிரான நிலைப் பாட்டினை நகைச்சுவை கொண்டிருக்கும். நாடக

உரையாடல், நடிகரின் செயல்பாடு, உருவாக்கப்படும் சூழல் போன்றவை நகைச்சுவை நயத்தினை உருவாக்கும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

Comedy of Humours:

நகை மேவு திற நகைச்சுவை

ஒருவரைப் போல பாத்திரப் படைப்பு உருவாக்கப்பட்டு அதன் மூலம் நகைச்சுவையை வெளிப்படுத்துவது நகைத்திறன் மிக்கதான நகைமேவுதிற நகைச் சுவை எனப்படும். தோற்றத்தின் மூலமாகவே இவ்வகை நகைச் சுவை வெளிப்படுத்தப்படுகிறது.

Comedy of Ideas:

கருத்து சார் நகைச்சுவை

எண்ணங்களையும், கோட்பாடு களையும் நகைச்சுவை கலந்து விவாதமாகக் காட்சிப் படுத்துதலே கருத்து சார் அல்லது எண்ண நகைச்சுவை எனப்படுகிறது.

Comedy of Intrigue:

உட்கிளர்ச்சி சார் நகைச்சுவை

முழுதும் வியப்பிலாழ்த்தும் வகையிலான கலப்பு மிக்க கதைப் பின்னல் கொண்டு இரண்டாம் நிலைப் பாத்திரங்களுக்கும் கதையோட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கும் வண்ணம் அமைந்துவரும் நகைச்சுவை.

Comedy of Manners:

வீண் பெருமைசார் நகைச்சுவை

சமுதாய அவலங்களைப் படம் பிடித்துக் காட்டி நகைப்பை உருவாக்கி சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைவது.

Comdey of Morals:

ஒழுக்கம் சார் நகைச்சுவை

நடைமுறைச் சமுதாயத்தின் போலித்தனங்களைச் சுட்டிக் காட்டி திருத்தும் வண்ணம் அமைந்து வரும் நகைச்சுவை இது. இதன் ஆளுமை அந்தந்த வட்டாரத்துக்குள் மட்டுமே இருந்து வரும்.

Comedy Theatre:

நகைச்சுவை நாடக அரங்கம்

நகைச்சுவை நாடகங்களை மட்டுமே மேடையேற்றுவதற் கென்று மேனாடுகளில் இவ்வகை அரங்குகள் பல தோற்றம் கண்டன. 1881இல் இலண்டன் மாநகரில் முதல் நகைச்சுவை அரங்கம் செயல்பாட்டுக்கு வந்தது. 4 அடுக்கு வரிசைகளில் 820 பேர் அமரக்கூடிய வகையில் இவ்வரங்கு அமைக்கப்பெற்றது. 1909இல் நியூயார்க் நகரில் நகைச்சுவை அரங்கம் தோற்றுவிக்கப் பெற்றது.

Comic Relief:

நகைச்சுவை அமைவு

துன்பியல் நாடகங்களில் உருவாகும் அழுத்த நிலையைத் தணிப்பதற்காக இடையே நிகழ்த்தப்படும் நகைச்சுவைக் காட்சி இது. இத்தகைய காட்சியமைப்பு உணர்ச்சி அழுத்தத்தினின்று பார்வை யாளரை சற்று விடுபடச் செய்ய வேண்டியும், அதே நேரத்தில் துன்பியல் காட்சியின் முனைப்புத் தன்மையை அதிகப்படுத்தவும் வேண்டி நாடகாசிரியரால் உருவாக்கி உட்புகுத்தப்படுகிறது.

Commedia Dellarte:

கலை நகைச்சுவை

கி.பி. பதினாறாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இத்தாலியில் மிகவும் பிரபலமாக விளங்கிய நகைச்சுவை நாடக வடிவம் இது. இவ்வகை நாடகத்தில் முகமூடி அணிந்த நடிகர்கள் உரையாடலிலும் நடிப்பிலும் மேலுருவாக்கம் செய்து வழக்க மான கதையமைப்பையும் பாத்திரப் படைப்பையும் வேறு படுத்திக் காட்டினர். இந் நாடகத்தினைப் படைத்தளித் தவர்கள் நாடகக் கலைஞர் களாகவும் பல நாடுகளுக்கும் பயணம் செய்து நாடகம் படைத்தளித்தவர்களாகவும் விளங்கினர். இதனால் இவ்வகை நாடகம் 'தொழில் முறைக் கலைஞர் நகைச்சுவை நாடகம்' எனவும் பெயர் பெற்றது. ஒவ்வாக் காதல் இவ்வகை நாடகத்தின் மையக் கருத்தாக விளங்கியது.

Company:

நிறுவனம்

நாடகக் குழுக்களின் ஒருங் கிணைந்த கலைஞர்களின் கூட்டமைவின் காரணமாக இப் பெயர் பெறலாயிற்று. மேனாடு களில் நாடகக் குழுக்கள் பல இப்பெயரிலேயே செயல்பட்டு வருகின்றன. வியாபார நோக்கமும் இதற்குக் காரணமாக இருந்தது எனலாம்.

மேனாட்டுத் தாக்கத்தின் அடிப்படையில் இந்தியாவில் மும்பையில் தோற்றம் கண்ட 'பார்சி' நாடகக் குழுவினர் தங்களது நாடகக் குழுக்களைக் 'கம்பெனி' என்றே பெயரிட்டு அழைக்கலா யினர். எடுத்துக் காட்டாக, 1877இல் பெஸ்டோன் ஜிபிரேம்ஜி என்பவர் 'தி ஒரிஜினல் தியேட்டிரிக்கல் கம்பெனி (The Original Theatrical Co) என்ற பெயரிலும், குருவித்ஜி

பலிவாலா என்பவர் 'விக்டோரியா தியேட்டிரிகல் கம்பெனி (Victoria Theatrical Company) என்ற பெயரி லும் நாடகக் குழுக்களை நடத்தி வந்தனர். இதைப்போன்று பல நாடகக் கம்பெனிகள் செயல் பாட்டிற்கு வந்தன.

'பார்சி' நாடகக் குழுக்கள் தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கம் தமிழக நாடகக் குழுக்களின் பெயரிலும் செல்வாக்குப் பெற்றது. தமிழகத்தின் நாடகக் குழுக்கள் பல 'கம்பெனி' என்ற அடை மொழியைச் சேர்த்துக் கொண்டு செயல்படத் தொடங்கின. அதன் அடிப்படையிலேயே, பாலர் சபைகள் 'பாய்ஸ் கம்பெனி (Boys Company) என்ற பெயர் பெறலா யிற்று. பாலமுருகன் பாய்ஸ் கம்பெனி, ஏ.கே.ஆர்.எஸ். நாடகக் கம்பெனி, முத்துக் கிருஷ்ணன் பாய்ஸ் கம்பெனி, பார்சி பாலமன மோகன நடன நாடகக் கம்பெனி போன்றன இவ்வகையில் குறிப்பிடத்தக்க நாடகக் குழுக் களாகும். நாடகக் குழுக்களின் செயல்பாடு பெயருக்கு ஏற்ப வியாபார நோக்கிலேயே அமையலாயிற்று.

Compartment Batten:

பிரிவு விளக்கு வரிசைச் சட்டம்

(பார்க்க: Batten- மரச்சட்டம்)

Composite Setting:

பன்முகக் காட்சியமைப்பு

இக்காலத்தில் மேடையில் பல இடங்களில் நடைபெறும் காட்சியினை ஒரே நேரத்தில் காட்டுதற்கேற்ப அமைக்கப்படும் காட்சியமைப்பு முறை இது. எடுத்துக்காட்டாக, பூங்கா, வகுப் பறை, தெரு, வீடு போன்ற யாவும் மேடையில் ஒரு சேர அமைக்கப் பெற்றிருக்கும். காட்சி நடை பெறவிருக்கிற பகுதி வெளிச்சப் படுத்தப்படும். பொதுவாக ஒரு நேரத்தில் ஒரு பகுதியில் மட்டும் வெளிச்சம் அதிகப்படுத்தப் பட்டிருக்கும். ஒன்றுக்கு மேற் பட்ட பகுதிகள் தேவைக்கேற்ப வெளிச்சப்படுத்தப்படுதலுண்டு. இதே அமைப்பில் இடைக் காலத் தில் மேற்கொள்ளப்பெற்ற காட்சியமைப்பு பல்நிலைக் காட்சியமைப்பு (Multiple setting) என்றழைக்கப்பட்டது.

Composition:

கூட்டமைவு

நாடகத்தின் தேர்வில் திட்ட மிடல் மற்றம் வடிவாக்கத்தை வெளிப்படுத்தி நிற்கும் நிலையே கூட்டமைவு எனப்படுகிறது.

Concentration:

மன நிலைப்பு

நாடகத்தில் மேடையேற்றத் தின் போது ஒரு நடிகர் மேற்

கொள்ள வேண்டிய முக்கியமான கூறு இது. மேடைக்குள் வந்ததும் தனியாக அமர்ந்து தாம் ஏற்றுக் கொண்டுள்ள பாத்திரம் பற்றி யும் உரையாடல் பற்றியும் மனதை ஒருநிலைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தியான முறை கூட இதற்கு உகந்த ஒன்று.

Confident:

அணுக்கப் பாத்திரம்

நாடகத்தில் இது குறிப்பிடத் தக்க பாத்திரப்படைப்பாக அமையும். நடிப்பதற்கு பெரிய வாய்ப்பான பாத்திரமாகவோ அல்லது ஆழமான பாத்திர மாகவோ இது அமையாது. ஆனால் நேர்நிலைத் தலைமைப் பாத்திரத் திற்கு மிகவும் அணுக்கமான, ஆதரவான பாத்திரப் படைப்பாக இது அமைந்து நிற்கும். நேர்நிலைத் தலைவனின் மன ஓட்டங்களைப் புரிந்து கொண்டு அதில் அதிக கவனத்தையும் செலுத்தி உதவும் பாத்திரமாக இது அமைந்து வரும்.

Conflict:

முரண்

நாடகத்தில் பாத்திரங்களுக் கிடையே அழுத்தமான உணர்வு களின் அடிப்படையில் உருவாகும் மாறுபட்ட செயல்பாடே முரண் எனப்படுகிறது. கதைப் பின்ன லின் வடிவமைப்புக்கு முரண் அடிப்படையாக அமைகிறது. மனிதனுக்கும் இயற்கைச் சக்தி களுக்கும் இடையே நிகழும் மோதலால் உருவாகும் முரண் 'இயற்கை முரண்' எனப்படுகிறது. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே நிகழும் மோதலால் உருவாகும் முரண் 'சமூக முரண்' எனப்படுகிறது. மனிதனுக்குள்ளே உருவாகும் ஆசைகளின் மோதலால் உருவாகும் முரண் 'உள்ளார்ந்த முரண்' எனப்படுகிறது.

Consequent Emotion:

உணர்வு விளைவு

நாடகத்தில் உருவாக்கப்படும் அல்லது உருவாகும் உணர்வு நிலைகளோடு தொடர்ந்து வரும் விளைவு அல்லது வினைப்பயன் இதுவாகும். நாடகத்தின் தொடர் கதையோட்டத்தில் இது முக்கிய பங்கு பணி ஆற்றுவதாக அமைந்து வரும்.

Contrast:

எதிர் நிற்றல்

ஒன்றுக்கொன்று எதிரான அல்லது மாறுபாடான நிலை களை வேறுபடுத்திக்காட்டும் வண்ணம் காட்சிப்படுத்துதல் இவ்வகைப்படும். எடுத்துக்

காட்டாக, நம்பிக்கை - ஏமாற்றம், இளமை - முதுமை, மழை - வெயில் போன்றவற்றைக் கொள்ள லாம்.

Controller of Artistes:

சட்டாம்பிள்ளை / கலைஞர்கள் கட்டுப்பாட்டாளர்

நாடகக் குழுக்களில் நடிகர்கள் மற்றும் பிற கலைஞர்களைக் கட்டுப்படுத்தும் நபர் சட்டாம் பிள்ளை என்றழைக்கப்பட்டார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் செல்வாக்குடன் விளங்கிய நிரந்தர நாடகக் குழுக்களில் 'சட்டாம் பிள்ளை' என்பவர் அமர்த்தப் பட்டிருந்தார். நாடக ஒத்தகைக்கும், மேடையேற்றத் திற்கும், மேடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு பேணுதற்கும் இவர்கள் உழைத்தார்கள். நடிகர்கள் மேல் கண்டிப்பான கண்காணிப்பினை மேற்கொள்ளும் அதிகாரம் இவர்களுக்கு வழங்கப் பட்டிருந்தது.

Conversation Line:

உரைத்துணுக்கு

எளிய நடையில் அமைந்து; பேச்சுப் பாங்கில் வடிவம் கொண்ட பாடல் வகை இது. வலுவான பொருண்மைகள் இவற்றில் கருவாக அமைவதில்லை.

Conversation Piece:

பேச்சுத் துணுக்கு

நாடகத்தில் கதைப் பின்னல் அல்லது கதைக் கருவைவிட அதன் உரையாடல் பேசப்படும் தன்மை மேலோங்கி நிற்பது சிறப்பாகக் கருதப்படுவதுண்டு. அத்தகைய பேச்சினைப் பேச்சுத் துணுக்கு எனப் பெயரிட்டழைத்தல் மரபாகக் கொள்ளப்பட்டுள்ளது. பெர்னார்டு ஷாவின் நாடகங்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவையாக விளங்கின.

Costume:

ஆடை

நாடகத்தில் நடிகர்களை அடையாளப் படுத்துவதில் ஆடை அணிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. உடைகளும், அணி களும் பாத்திரச் சித்திரிப்பிற்கும், பிற பாத்திரங்களினின்று வேறு படுத்திக் காட்டுவதற்கும் மிகவும் இன்றியமையாததாகும். மனிதனை உருவப்படுத்துகிற உடையானது அணியப்படும்போது ஆடை யென்றாகிறது.

கிரேக்க நாடகங்களே ஆடை அணிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பனவாக அமைந்தன. முகங்களில் அணியும் முக மூடிகள் கூட ஆடை அணிகளின் பாற் பட்டதே ஆகும்.

தமிழிலும் நாடகக் கலையில் ஆடை அணிகளின் பங்களிப்புச் சங்க காலம் தொட்டே அறியக் கிடைக்கிறது. ஆடல் மகளிர் குறித்த செய்திகள் இதனைப் புலப்படுத்தும். சிலப்பதிகாரத்தில் 'மாதவி' ஆடிய பதினோராடலின் போது அணிந்திருந்த ஆடை, அணிகள் நடன மங்கையை நன்கு படம் பிடிப்பதாகவே அமைந்திருந்தன.

தெருக்கூத்தும் ஆடை, அணிகளுக்கு மிக்க முக்கியத்துவம் வழங்குவனவாக உள்ளன. ஆடைக்கும், பாத்திரப் படைப்புக் கூறுகள், தோள் அணிக்கும், முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. பொதுவாக ஆடை, அணிகள், பாத்திரங்களின் தன்மையோடு கலையின் ஒருமித்த வெளிப்பாட்டிற்கும் கூடத் துணை நிற்கின்றன. 'பார்சி' நாடகங்களின் தாக்கம் தமிழகத்தின் நாடகமேடையில் ஆடை, அணிகளின் தாக்கத்தினை அதிகப்படுத்தின.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடக மேடையில் திரைப் படத்திற்கு இணையான ஆடை, அணிகள் பயன்படுத்தப்பட்டன. வளமான உடைகள் வரலாற்று நாடகங்களிலும், தொன்ம இலக்கிய நாடகங்களிலும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. இவற்றை வளப்படுத்துவதே ஆடை. அணிகள் என்றால் மிகையல்ல.

Costume Design:

ஆடை வடிவமைப்பு

நாடகப் பாத்திரங்களின் தன்மைக்கேற்பவும் பாத்திர வெளிப்பாட்டிற்கேற்பவும் உடைகள் தயாரிக்கப்படும். வரலாற்று நாடகங்கள், அக்காலகட்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்க வேண்டுமாதலால் அதற்கான உடைகளைக் கொண்டு விளங்கும். தொன்ம நாடகங்களும் பாத்திரத்திற்கேற்ற உடைகளுடன் விளங்கும்; இவ்வாறு உரிய ஆடைகளை உருவாக்குதலே ஆடை வடிவமைப்பு எனப்படுகிறது. நாடகப் பாத்திரங்களுக்கான ஆடை, அணிகளின் வடிவமைப்பு, திட்டமிடப் பெற்று மாதிரி வரைவுகள் உருவாக்கிக் கொள்வதும் உண்டு. தமிழிலும் நிரந்தரக் குழுக்களில் ஆடை, அணிகள் வடிவமைப்புக்கான தனி ஆடை வடிவமைப்பாளர் அமர்த்தப்பட்டிருந்த நிலை அறிய முடிகிறது.

Costume Designer:

ஆடை வடிவமைப்பாளர்

(பார்க்க: Costume Design- ஆடை வடிவமைப்பு)

Costume Piece:

வரலாற்று நாடகத் துணுக்கு

(பார்க்க: Chronicle Play- கால வரலாற்று நாடகம்)

Costume Play:

ஆடை வள நாடகம்

நாடகத்தில் ஆடை, அணிகளின் பயன்பாடு குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக வரலாற்று நாடகங்களில் ஆடை, அணிகள் மிகவும் வளமை பெற்று விளங்கும். இவ்வாறு வளமை பெற்று, முதன்மைக்கூறாக ஆடைகளைக் கொண்டு படைத் தளிக்கப்படும் நாடகங்களே உடைநிறை நாடகங்கள் எனப்படும்.

தமிழகம், 'பார்சி' நாடகக் குழுக்களின் வருகைக்குப்பின் வளமான ஆடைகளைக் கொண்டு படைக்கப்பெற்ற பல வரலாற்று, தொன்ம நாடகங்களைக் கண்டு கொண்டது. இவற்றில் ஆடைகள் மிகவும் வளமையாக அமைக்கப் பட்டிருந்தன. இராசராச சோழன், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் போன்ற பல தொன்ம நாடகங்களை இவ்வகையில் குறிப்பிடலாம்.

Counter Turn:

எதிர்திருப்பம்

குழுப்பாடல் நிகழ்வில் எதிர்ச் சுற்றுக்கான பணிகளைச் செய்யும் நிலையினை இச்சொல் குறிக்கிறது. மேலும் நாடகங்களிலும் சிறுகதைகளிலும் ஏற்படும் எதிர்பாராத திருப்பங்களைக் குறிப்பிடவும் இச்சொல் பயன் பாட்டில் உள்ளது.

Counter Move:

எதிர்ச்செயல் முறை

நாடகத்தில் முரண் பாத்திரம் உருவாக்கிக் கொள்ளும் அணுகு முறை இவ்வகைப்படுகிறது. நேரான செயலுக்கு எதிரான செயல்களை உருவாக்கித் தம்மை அடையாளப் படுத்துவதில் முரண் பாத்திரம் முனைந்து முன்னேறிச் செல்லும் நாடகத்தின் உயிரோட்டத்திற்கு இவ்வகைச் செயல்பாடு உதவுகிறது.

Counter Plot:

எதிர்நிலைக் கதைப் பின்னல்

முதன்மைக் கதைக்கருவுக்கு அடுத்த நிலையில் அதற்கு வேறுபட்ட அல்லது எதிரான நிலையில் பயின்றுவரும் கதைப் பின்னல் இது.

Counter Point:

பண்ணிசைவுத் திறன்

இசையில் வரும் பல பல ராகங்களின் கூட்டான நிலையைக் குறிப்பிடுவதே பண்ணிசைவுத் திறன் எனப்படுகிறது.

Counter Song:

எதிர்ப்பாட்டு

ஒரு பாட்டுக்கு எதிர்ப்பாட்டு பாடும் முறை நாடக மேடையில் சுவைதரத்தக்க நிகழ்வாகும். தமிழில் இவ்வகைப் பாடல்கள் 'தர்க்கப் பாடல்கள்' என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. குறிப்பாக நாட்டுப்புற நாடகங்களில் இவ்வகைப் பாடல்கள் முக்கிய இடம் பெறுகின்றன. சங்கரதாச சுவாமிகளின் நாடகங்களின் தர்க்கப் பாடல்கள் தனித்தன்மை வாய்ந்தவையாகக் கருதப் பெறுகின்றன. 'வள்ளி திருமணம்' நாடகத்தின் தருக்கப் பாடல்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கனவாகும். கலைஞர்களையும் பார்வையாளரையும் கவர்ந்த பாடல்கள் இவை எனலாம்..

Counter Weight:

எதிர் எடை

காட்சித் திரைகளின் பயன்பாட்டில் இக்காலத்தில் எதிர் எடை உத்தி பயன்படுத்தப் படுகிறது. கயிறுகள், கப்பிகள், எதிர் எடைகள் இவை இன்றைய காட்சித் திரைகளின் நகர்வுக்குப் பயன்படுத்தப் படுகின்றன. காட்சித் திரைகளின் கயிறுகள் அவை தொங்க விடப் பட்டிருக்கும் உருளைக் கட்டைகளில் இணைக்கப் பெற்று அவை காட்சித்திரைக்கு இணையான எதிர் எடைத் தளத்தில் கட்டப் பட்டிருக்கும். எதிர் எடை மேலும் கீழுமாக நகரும் போது காட்சித் திரைகள் நகரவும், மாறவும் செய்யும். இவ்வகை எடைகள் இடையூறில்லாத வகையில் மேடைக்கு வெளியே தனித் தளங்களில் அமைக்கப் பெற்றிருக்கும்.

Coupde Theatre:

நாடகீயத் திருப்பம்

நாடகங்களின், கதைப் பின்னலிலும் நடிப்பிலும் ஏற்படும் விறுவிறுப்புத் தன்மை வாய்ந்த திடீர் திருப்பம் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைகிறது. நாடகத்தில் அமைதியாகவே திகழும் ஒரு பாத்திரம் ஒரு கட்டத்தில் திடீர் வேகம் கொண்ட செயல்பாட்டில் ஈடுபடும் பொழுது நாடகக் கதைப்பின்னலிலும், நடிப்பிலும் ஏற்படும் திருப்பத்தினை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

Court Fool:

அரசவை விகடன்

அரசவைகளில் அரசனுக்குச் ***சிரிப்பூட்***டும் பணியை மேற் ***கொள்ளு***ம் பணிக்காக, அரச ***குடும்பத்***தினரால் அமர்த்தப் ***படுபவரே*** அரசவைவிகடன் ஆவார். ***அரச விகட***ன் (Kings' Jester) என்ற ***பெயரு***ம் இவருக்கு உண்டு. ***நாடக***ங்களில் இவ்வகைப் ***பாத்***திரங்கள் சமுதாய நிகழ்வு களைப் படம்பிடித்துக் காட்டு வதற்காகப் பயன்படுத்தப்படு கின்றன.

Craft Cycle:

சுழல்முறை நாடகம்

தேவாலயங்களில் இயேசு நாதரின் இறுதி உணவு விழா வினை நாடகமாக்கி சுழல்முறை நாடகமாக மேடையேற்றியமை குறிப்பிடத்தக்க நாடக முயற்சி யாகும். வழிபாட்டுச் சடங்கும் இறைப்பாடலுமென விளங்கிய இவ்வகை நாடகம் உரையாடல் வடிவிற்கு உருமாறியது. தற்கால நாடகத்திற்கு அது ஒரு தரவாகவும் கருதப்படுகிறது. இவ்வகை நாடகத்தின் வெவ்வேறு நிகழ்வு களும் தனித்தனி திரையிடப் பெற்ற சக்கர வண்டிகளில் அமைக்கப் பெற்றன. இவ்வண்டி களின் கீழ்ப்பகுதி உடைமாற்று அறையாகப் பயன்படுத்தப் பட்டது. ஒரு நிகழ்வு நாடகம் முடிந்தவுடன் அந்நாடக வண்டி அங்கிருந்து புறப்பட்டு முன்னா லுள்ள வண்டி நாடகம் நடத்திச் சென்ற இடத்திற்குச் சென்று அங்கே தொடர் நிகழ்வாக நடத்திக் காட்டியது. இவ்வாறு சுற்றிச் சுற்றி அனைத்து மக்களும் அந் நாடகத்தை காணும்படிச் செய்தமையால் இது 'சுழல் முறை நாடகம்' எனப்பட்டது.

Creative Dramatics:

ஆக்க நாடகம்

இது குழந்தைகளுக்கான ஒரு நாடகக் கலை. இவ்வகை நாடகம் குழந்தைகளையே நாடக ஆசிரியர்களாகவும் நடிகர் களாகவும், பார்வையாளர் களாகவும் கொண்டிருக்கும். குழந்தைகள் வல்லுநர்களின் வழிகாட்டுதல் மூலம் தங்களது விளையாட்டுகளையே நாடக மாக மேலுருவாக்கம் செய்து கொள்வர். கதைக்கரு, குழுவினருக் கிடையே ஏற்படும் அனுபவத் தின் அடிப்படையிலேயே வடிவம் பெற்றுக்கொள்ள தாமாகவே உரையாடலை நிகழ்த்தும் ஆற்றலை வளர்த்துக் கொள் கின்றனர். ஆக்க நாடகத்தில்

காட்சியமைப்போ, ஆடையணியோ, ஒளியமைப்போ, காட்சிப் பொருட்களோ, ஒப்பனையோ குறிப்பிடத்தக்க அரங்கமோ தேவையில்லை. ஒரு குழந்தைகள் குழு, அதற்கு ஒரு தலைவர், ஒரு விரிவான பரப்பிடம், ஒரு நாடகக் கதை வளர்ப்புக்கு ஏற்புடைய கருத்துரு இவையே ஆக்க நாடகத்திற்குத் தேவையான கூறுகளாகும்.

Crisis:

திருப்பம்

நாடகத்தில் அழுத்தமான சூழல்களால் உருவாகும் உச்சத்தையும் அதனின்று உருவாகும் அடுத்தகட்ட தீர்வு நிகழ்வதற்கான பரபரப்பான மாற்றத்தையும் உருவாக்கிக் கொள்ளும் இடமே திருப்பம் எனப்படுகிறது. இது போன்ற திருப்பங்கள் நாடக உச்சத்திற்கேற்ப ஒன்றிற்கு மேற்பட்டும்கூட நிகழலாம். நாடக உச்சத்திற்குத் திருப்பம் முக்கியமான காரணியாக விளங்குகிறது.

Cue:

நினைவூட்டுக் குறிப்பு

(பார்க்க: Cue sheet- நினைவூட்டுக் குறிப்புத்தாள்)

Cue Sheet:

நினைவூட்டுக் குறிப்புத்தாள்

நாடகத்தில் நடிகருக்கு வழி காட்டும் குறிப்பாக இது அமைகிறது. ஒரு குறிப்பிட்ட நடிகர் பேசவேண்டிய பகுதியினைத் தெரிந்துகொள்ள, அதற்கு முந்தைய பகுதியின் இறுதிச் சொல்லை நினைவுபடுத்திக் கொடுத்து பேசத் தூண்டுவது நினைவூட்டல் குறிப்பு (Cue) ஆகும். பின்பாட்டுக்காரருக்கு நினைவூட்டும் வண்ணமும் இக்குறிப்பு பயன்படுத்தப்படுகிறது. இதற்கான வரைவுக் குறிப்புகள் இடம்பெற்றிருக்கும் படிவமே நினைவூட்டல் குறிப்புப் படிவம் என்றழைக்கப்படுகிறது.

Curtain:

மறைப்புத் திரை

மேடையில் மறைப்புக்காகப் பயன்படுத்தப்படும் திரையே மறைப்புத் திரை எனப்படுகிறது. திறந்த வெளி அரங்குகளில் இவ்வகைத் திரைகளின் தேவை அருகியே இருக்கிறது. மேடையின் முன்னால் கட்டப்படும் முகப்புத்திரை (Front Curtain) அரங்க முகப்பில் (Proceninum) கட்டப் படும் அரங்க முகப்புத் திரை போன்றன குறிப்பிடத்தக்க மறைப்புத் திரைகளாகும்.

Curtain Call:

அவையோர் அழைப்பு

நாடகம் முடிவுற்றபின் அந் ***நாடகத்***தில் வேடமேற்று நடித்த ***நடிகர்க***ளை மேடையில் ஒன்றாக ***மறுபடி***யும் தோன்றுமாறு ***அ***வையோர் வேண்டுகோள் விடுப்பதே அவையோர் அழைப்பு எனப்படுகிறது.

Curtain music:

தொடக்க இசை (அ) திரைவிலக்கலிசை

நாடகத்துவக்கத்திற்கு முன்பான திரைவிலகுகின்ற வேளையில் இசைக்கப்படும் இசை இது. திரை விலகுதல் நாடகத் தொடக்கத்தைக் குறிப்பிடுவதால் அவ்வேளையில் இசைக்கப்படும் இவ்வகை இசையினைத் திரை விலக்கலிசை எனவும் அழைப்ப துண்டு.

Curtain Raiser:

திரை விலக்கல்

முழு நேர நாடகத்திற்கு முன் பாக அல்லது ஐந்தங்க நாடகத் திற்கு முன்பாகத் தொடக்கத்தில் நடத்தப்படும் ஓரங்க நாடகம் திரை விலக்கல் நாடகம் எனப் படுகிறது. இந்நாடகம் பெரும் பாலும் நகைச்சுவை அல்லது கதைப் போக்கின் அறிமுகமாக அமைந்து நிற்கும்.

Curtain Set:

திரைமேடை

முழுக்க முழுக்கத் திரைச் சீலைகளைப் பயன்படுத்தி எளிமையாக வடிவமைக்கப்படும் நாடக மேடை இது. இது ஒன்று அல்லது இரண்டு பக்கத்திரை கள், ஒரு பின்திரை, ஓரங்கள், இழுப்புத்திரை போன்றவை கொண்டு வடிவமைக்கப்படும். வளமான காட்சி மாற்றங்கள் ஏதும் செய்யப்படாமல் ஒளியமைப்பு உத்திகள் மட்டுமே பயன்படுத்தப்படும்.

Curtain Speech:

திரைமுன் உரை

நாடகம் தொடங்குவதற்கு முன்போ இடைவேளையின் போதோ நடிகரோ, தயாரிப் பாளரோ, இயக்குநரோ, நாடக ஆசிரியரோ முகப்புத் திரைக்கு முன்னால் வந்து நின்று நிகழ்த்தும் உரை இவ்வகைப்படுகிறது.

Cycle:

சுற்றுத் தொகுதி

ஒரே மையக் கருவினைக் கொண்டுள்ள பல நாடகங்களின் அல்லது பாடல்களின் தொகுப்பு இவ்வகைப்படுகிறது.

Cyclorama:

வளைவு காட்சித்திரை

நாடக அரங்க மேடையில் பின்பகுதியில் எழுப்பப்பட்டுள்ள சுவரின் மேற்பகுதி வளைவாக வடிவமைக்கப்பட்டு அதன்மீது ஒளிக்கதிர்கள் விழச் செய்ய ஏதுவாக ஆக்கப்பட்டிருக்கும். இச்சுவர் கடினமானதாகவும், பலமுள்ளதாகவும் கட்டப் பட்டிருக்கும். இது அசையத் தக்கதாக இல்லாமல் நிலையாக இருப்பதால் பல இடையூறுகள் ஏற்படுவதுண்டு. எனவே தற்காலத்தில் மேற்கூறிய முழுமையான வளைவு காட்சித் திரைக்குப் பதிலாக மாற்றத்தக்க நிலையில் உட்கூடு அமைப்பிலே அல்லது பகுதியான நிலையிலோ இவ்வகை வளைவு காட்சித்திரை அமைப்புகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

Cymbal:

தாளம்

இது ஒருவகையான இசைக் கருவியாகும். இரண்டு சம பகுதி களாக உள்ள உலோகத்தாலான வட்ட வடிவ அமைப்பி னைக் கொண்டது. இரண்டு விரல் களைக் கொண்டு இயக்கி ஒலி யெழுப்பதத்தக்கது. தெருக் கூத்துக்களிலும், வில்லுப்பாட்டு மற்றும் கதை கூறல் நி... லும் இது மிகவும் பயன்ப... பட்டு வருகிறது. நாடகங்க... பொறுத்தவரை இதன் பங்களி... வரைமுறைக்கு உட்பட்டு சி... குறிப்பிட்ட சூழலுக்கு மட்டுமே பொருந்தி வருவதாக உள்ளது.

Dance:

நடனம்

அழகான திட்டமிடப்பெற்ற, இலக்கண நெறி முறைகளுட னான அசைவுகள் கொண்டு விளங்கும் ஆடல் அல்லது நாட்டியமே நடனம் எனப்படு கிறது. 'பரதம்' எனப்படும் ஆடல் கலையே முன்னோடி நடனக் கலையாகக் கருதப்படுகிறது. 'சதிராட்டம்' என்ற பெரு வழக்குப் பெயரும் இதனோடு அமையத் தக்கது. 'ஆடுகள மகளிர்' எனச் சங்க இலக்கியம் ஆடல் மகளைப் பற்றிய குறிப்புத் தருகிறது. 'ஈடவார் சிலம்பினை அதிரும் ஓசையும்' எனச் சூளாமணி குறிப்பிடு கிறது. திருஞான சம்பந்தர் நடம், நடனம், நாட்டியம், கூத்து போன்ற சொற்களால் நடனத்தைக் குறிப்பிடுகிறார். 'சதிர்' என்ற பெயராலும் குறிப்பிட்டுச் செல் கிறார்.

'விதிவழி மறைபவர் மீழலையு
ளிர்நயம்
சதி வழி வருவதோர் சதிரே'

எனச் சொல்லி விளக்குகிறார்.

சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் மாதவி ஆடிய பதினோராடல் பற்றிய செய்தியும் இக் கலையின் மாண்பினை உயர்த்தும் செய்தியே. 'நாட்டிய நன்னூல் நன்குக் கடைப்பிடித்து மாதவி ஆடியதாக இளங்கோவடிகள்' குறிப்பிடுவது நடனத்திற்கான இலக்கணம் வடிவமைக்கப் பெற்றிருந்த நிலையை எடுத்துக் காட்டுகிறது. சோழர் காலக் கல்வெட்டுகளும் அக்காலத்தில் நடனக்கலை தழைத்து வந்தமையை படம் பிடித்துக் காட்டுகின்றன. பிற்காலத்தில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கிய குறவஞ்சி நாடகங்களும் ஆடற்கலையின் தன்மையைப் பிரதிபலிப்பதாக உள்ளன.

இக்காலத்தில் தமிழரின் உள்ளங்கவர் கலையாக நடனம் (நாட்டியம்) இடம் பெற்றுள்ளது. பரத நாட்டியம் தமிழகத்தில் பரவலாகத் தாக்கத்தினை ஏற்படுத்தி வளர்ச்சியடைந்துள்ளது. குழு நடனம், தனி நடனம் ஆகியனவும் பல்வேறு நிலைகளில் தமது இருப்பினை நிலை நிறுத்திக் கொண்டுள்ளன.

Dance Choreographer:

நடன அமைப்பாளர்

(பார்க்க: Choreographer- குழு நடன அமைப்பாளர்)

Dance Drama:

நாட்டிய நாடகம்

நாடகத்தின் உட்கூடான உரையாடல் பாடல் வடிவில் ஆக்கப்பெற்று அவை இசைக் குழுவினரால் பாடப்பெறும். அப்பாடல்களுக்கு ஏற்ப நடனக் குழுவினர் பாடல் வரிகளை அர்த்தப்படுத்தும் வண்ணம் நடன அசைவுகளுடன் நடித்துக் காட்டுவார்கள். இதுவே நடன நாடகம் எனப்படுகிறது. இவ்வகை நாடகங்கள் இசை ஆர்வலர்களையும் நடன ஆர்வலர்களையும் நாடக ஆர்வலர்களையும் மகிழ்ச்சியூட்ட வல்லனவாக அமைவதால் மிகுந்த வரவேற்பினைப் பெறுவதுண்டு. சென்னை கலாசேத்திரா அமைப்பு இவ்வகை நாடகங்களில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. மறைந்த புத்தனேரி சுப்பிரமணியன் இவ்வகை நாடகங்களை ஆக்குவதில் சிறந்து விளங்கினார். இவரது சிவகாமியின் சபதம் நாடகம்

சந்திரகாந்தா குழுவினராலும் 'காவேரி தந்த கலைச்செல்வி' நாடகம் ஜெயலலிதா குழுவினராலும் நடத்தப்பெற்று புகழ்பெற்று விளங்கின. சித்திரப்பாவை, பசுமாசுரா, மோகினி ஆகிய நாடகங்கள் முறையே இராச சுலோசனா, ஊர்மிளா, மஞ்சுளா விஜயகுமார் குழுவினரால் நடத்தப்பெற்ற நடன நாடகங்களாகும். திருச்சி பாரதன் இத்துறையில் ஈடுபட்டு பல நாட்டிய நாடகங்களை உருவாக்கியுள்ளார்கள். இவற்றில் சிலவற்றை திருச்சி ரேவதி முத்துசாமி குழுவினர் நாட்டிய நாடகமாகப் படைத்தளித்துள்ளார்கள். தஞ்சைக் கவிஞர் கோபால கிருட்டிணனின் 'காரக்கால் அம்மையார்' நாடகமும் இவ்வகையில் குறிப் பிடத்தக்க நாடகமாக உள்ளது. பதினேழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பள்ளு, நொண்டி, குறவஞ்சி, கீர்த்தனை போன்ற இசை நாடகங்களும் நாட்டிய நாடகமாகப் படைத்தளிக்கவல்ல கூறுகளைக் கொண்டு விளங்குகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

Dance move:

நடன நகர்வு

நடன அசைவுகளும் ... வைப்புகளுமே நடன நகர்வு எனப்படுகிறது. இசைக்கேற்பவும், தாளத்துக்கேற்பவும் இவ்வகை நகர்வு அமைந்து விளங்கும்.

Dance Pattern:

நடனப் பாங்கு

நடன நிகழ்ச்சியினைப் பல்வேறு நிலைகளில் வடிவாக்கம் செய்யும் பாணியே நடனப் பாங்கு என்றழைக்கப்படுகிறது. தனி நடனம். குழு நடனம் போன்ற நிலைகள் இவ்வகையில் முக்கியமானவையாகும். பாடலுக்கேற்ற நடன நிகழ்ச்சிகளும் இக்காலத்தில் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு நடன நிகழ்ச்சியினை வடிவாக்கம் செய்பவர் நடன (ஆடல்) அமைப்பாளர் (dance choreographer) என்றழைக்கப் படுகிறார்.

Denouement:

முடிவமைதி

நாடகத்தின் சிக்கல், முடிவை நோக்கிச் செல்லும் நிலையில் உருவாகும் முடிச்சவிழ்ப்பையும் அதனைத் தொடர்ந்துவரும் நாடக முடிவுக்கான வெளிப்பாட்டினையும் குறித்து நிற்பது இது. இது பெரும்பாலும் நகைச்சுவை

நாடகங்களிலும் துன்பியல் நாடகங்களிலும் மிகுதியாகப் பயின்றுவரும்.

Detail Scenery:

தொகுதி காட்சித் திரை அமைப்பு

(பார்க்க: formal setting- *தொகுதிக் காட்சி அமைப்பு)*

Dialect:

வட்டார மொழி

ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடையே அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவினரிடையே பேசப்படும் மொழி இது. இலக்கணத்தால், ஒலியமைப்பால், ஒலிப்பால் மற்றவரிடமிருந்து அல்லது மற்ற பகுதியினின்று இது மாறுபட்டிருக்கும் நாடகம் உள்ளிட்ட இலக்கிய வடிவங்களில் இம்மொழி, பாத்திரப் படைப்புருவாக்கத்தில் பெரிதும் பயன்படுகின்றது. மாந்தர்களுக்கிடையேயான சமுதாய நிலையைப் படம் பிடிப்பதில் இம்மொழி பங்களிப்பு செய்கிறது.

Dialogue:

உரையாடல்

நாடகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களுக்கிடையே நடைபெறும் பேச்சுப் பரிமாற்றம் உரையாடல் எனப்படுகிறது. இது கருத்துப் பரிமாற்றமாகவோ, ஆலோசனைப் பரிமாற்றமாகவோ, பாத்திரக் குணநலன்கள் குறித்தோ அல்லது பொதுவாகவோ அமையலாம். நாடக உரையாடல்கள் கதைப் பின்னலுக்கும், பாத்திரச் சித்திரிப்பிற்கும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பினைச் செய்கிறது. உரையாடல்களின் சிறப்பினை மட்டுமே முன்னிலைப்படுத்தி பல நாடகங்கள் உருவாக்கப்பட்டு அவை வெற்றி பெற்ற வரலாற்றையும் அறிய முடிகிறது.

Dialogue delivery:

உரையாடல் ஒலிப்பு

பாத்திரத்திற்கேற்ற உரையாடலை ஏற்ற இறக்கங்களோடு வெளிப்படுத்துதலே பாத்திரத்தின் உரிய பரிமாணத்தை வெளிப்படுத்துவதாக அமையும். தமிழ் நாடகங்களிலும் இவ் உச்சரிப்பு முறைகள் முக்கியமானதாகக் கருதப்பட்டன. குறிப்பாக பாலர் சபைகளில் வார்த்தைகளை உரிய முறையில் பேசுதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது. சங்கரதாச சுவாமிகள் இப் பயிற்சிக்கென அதற்கேற்ற வார்த்தைகளை உரையாடல் பகுதிகளாகவே நாடகங்களில்

அமைத்து வழங்கிய நிலையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

Dimmer:

ஒளி நிலை மாற்றி

மேடையில் ஒளியமைப்பின் போது ஒளியைப் படிப்படியாகக் கூட்டவும் குறைக்கவும் உதவும் கருவி இது. பல்வேறு சக்திநிலை கொண்ட மின்கம்பிகளைப் பொருத்தி விளக்குகளின் வெளிச்சம் மாறுபடுத்தப்படுகிறது.

அனைத்து ஒளி நிலை மாற்றிகளும் மனிதரால் இயக்கப்படும் வண்ணம் அமைக்கப்படுவதுண்டு. இக்காலத்தில் அறிவியல் வளர்ந்துள்ள நிலையில் அனைத்து ஒளிநிலை மாற்றிகளும் தனிச் சக்கரவடிவ சுழல்கிற கட்டுப்பாட்டுக் கருவியில் பொருத்தப்பட்டு இயக்கப்படுகின்றன.

Direct sound:

நேர் ஒலி

(பார்க்க: Sound- ஒலி)

Direction:

நெறிப்படுத்துகை

ஒரு நாடகத்தின் படைப்பாக்கத்தின் முக்கியமான கூறுகளில் அதனை நெறிப்படுத்தும் அல்லது வடிவமைக்கும் நிலையும் ஒன்றாகும். நாடகக் கதைத் தேர்வு, நடிகர் தேர்வு, ஒத்திகை, மேடையேற்றம் யாவற்றிலும் நெறிப்படுத்துகையின் தாக்கம் மேலோங்கி நிற்கும். நாடகாசிரியரின் எழுத்துருவானது நெறிப்படுத்துகையின் மூலமே உயிரோட்டம் பெறுவதாக அமையும். இத்தகைய நெறிப்படுத்துகையை மேற்கொள்பவர் நெறிப்படுத்துநர் (Director) எனப்படுகிறார். நாடக நெறிப்படுத்துநர் நாடகக் கூறுகள் குறித்து நன்கு உணர்ந்தவராகவும், நல்ல நாடக ஆர்வலராகவும் அமைதல் இன்றியமையாததாகும்.

Director:

நெறிப்படுத்துனர்

(பார்க்க: Direction- நெறிப்படுத்துகை*)*

Discovery Space:

பார்வை வெளி

மேடையின் பின் சுவருக்குப் பின்னால் குறுகலாக அமைக்கப்பட்டிருக்கும் பரப்பு இது. மேடையின் பின்சுவரில் வாயில் அமைக்கப்பெற்று இப்பரப்பு கதை நிகழ்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுவதுண்டு. குகைகள், கூடாரங்கள், தனி அறைகள் போன்ற நிகழ்விடங்கள் இப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும்.

'உள்மேடை' (inner stage) என்றும் அழைக்கப்படும் இப்பகுதியின் பெயர் நாளடைவில் கண்டுபிடிப்பு வெளி என்று பெயர் பெறலாயிற்று. இப்பகுதியில் நடிக்கும் நடிகர்களைக் கண்டுபிடித்தவுடன் அவர்கள் பார்வையாளர் நன்கு கண்டு கொள்ளும் வண்ணம் மேடையின் முன்பகுதிக்கு வந்து நடிப்பைத் தொடங்குவார்கள். இது போன்ற பகுதி சில நாடங்களில் இடம்பெறும் மறைவிடக் காட்சியமைப்பிற்குத் தேவையானதாகிறது.

Disguising:

மாறுவேடமணிதல்

(பார்க்க: Mumming play - *முக மறை நாடகம்)*

Division:

பகுப்பு

(பார்க்க: Division of a play- *நாடகக் காட்சிப் பகுப்பு)*

Division of a Play:

நாடகக் காட்சிப் பகுப்பு

நாடகம், காட்சிப்படுத்தலுக்கு ஏற்ற வகையில் சிறு காட்சிகளாகப் பகுக்கப்படுவதுண்டு. காட்சி நிகழிடம், காட்சிக்கான பாத்திரங்கள் இவற்றின் அடிப்படையில் இப்பகுப்பு நிகழும். இவ்வகையில் அங்கங்கள் (Acts) என்ற பெரும் பிரிவுகளாகவும், ஒவ்வொரு அங்கமும் காட்சிகள் (scenes) என்ற சிறு பிரிவுகளாகவும் பகுக்கப்படுவதுண்டு. நாடக்க் கதையோட்டத்திற்கு உதவும் வகையில் இப்பிரிவுகள் அமைந்து நிற்கும். எனினும் இக்காலத்தில் ஒரே காட்சியாக ஒரு முழு நீள நாடகத்தைப் படைக்கும் நிலையும் காணப்படுகிறது. ஓரங்க நாடகம் (one act play) என்ற நிலையில் குறு நாடகங்கள் மேடையேற்றம் செய்யப்படுவது போலவே முழு நீள நாடகங்களும் இவ்வகையில் மேடையேற்றம் செய்யப்படுகின்றன. காலத்தின் அவசரமே இவ்வகை மாறுதல்களுக்கு முக்கிய காரணமாகிறது.

Documentary Drama:

ஆவண நாடகம்

(பார்க்க : Documentary Theatre- *ஆவண நாடகம்)*

Documentary Theatre:

ஆவண நாடகம்

உண்மை ஆதாரங்களையும், வரலாற்று ஆவணங்களையும் அடிப்படையாகக் கொண்டு பத்திரிக்கைச் செய்திகள், ஆவணக் காப்பகங்கள், அதிகாரபூர்வ வரலாறுகள், குறிப்பேடுகள், இதழ்கள் இவற்றின் துணை

யுடன் உருவாக்கப்படும் நாடகங்கள் ஆவண நாடகங்கள் ஆகும்.

Domestic Comedy:

உயர்வுறுவோர் இன்பியல் நாடகம்

சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் உள்ளோரைப் பிரதிபலிக்கும் நாடகம் இது. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் சிறப்புற்று விளங்கிவரும் இவ்வகை நாடகம் குடும்பச் சூழலையும் குடும்பப் பிரச்சினைகளையும் படம் பிடிப்பதாக அமைகின்றன.

Domestic Tragedy:

துயருறுவோர் துன்பியல் நாடகம்

நடுத்தரவர்க்கத்தின் குடும்ப அவலங்களை அதற்கேற்ற பாத்திரப் படைப்புக்கள், காட்சியமைப்புகள் முரண்களுடன் படம்பிடித்துக் காட்டும் நாடகம் இவ்வகையில் அமைகிறது. இவ்வகை நாடகங் களில் சமூகத்தின் உயர்நிலை மாந்தர்கள் ஒருபோதும் இடம் பெறுவதில்லை. இருபதாம் நூற்றாண்டில் அன்றாட வாழ்வில் அல்லலுறும் மக்கள் குறித்த இது போன்ற நாடகங்களைப் படைத்தளிக்கும் மனநிலை நாடகப் படைப்பாளர்களிடம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Double cast:

இரட்டைப் பாத்திர வேடம்

ஒரே நடிகர் இரண்டு வெவ்வேறு பாத்திரங்களை ஒரே நாடகத்தில் ஏற்று நடிப்பதே இரட்டைப் பாத்திர வேடம் எனப்படுகிறது. இது பெரும்பாலும் ஒரே காட்சியில் நிகழாமல் வெவ்வேறு காட்சிகளில் பயின்ற வருவதாக அமையும். ஒரு குறிப்பிட்ட நடிகர் நடிக்க வர இயலாதபோது வேறு ஒரு நடிகர் கூடுதலாக அப் பாத்திரத்தில் நடிக்கும் நிலை ஏற்படும் போதும் இது போன்ற நிகழ்வு நடைபெறுவதுண்டு. தமிழில் பாலர் சபை நாடகங்களில் இது போன்ற பாத்திர வேடம் ஏற்கும் தன்மை அதிகமாகக் காணப்பட்டது. அதற்கென சிறுவர்களுக்குத் தனிப் பயிற்சியும் அளிக்கப் பெற்றிருந்தது.

Double masque:

இரட்டை நிகழ்வுக் கலை

(பார்க்க: Anti masque- முன் நிகழ்வுக் கலை)

Down centre:

நடிப்பிட நடுமுன்மேடை

நாடக மேடைப்பகுதியில் அரங்கின் முன் பாதியின் நடுவில் அமையும் நடிப்பிடப்பகுதி நடிப்பிட நடுமுன் மேடை ஆகும்.

இப்பகுதி பார்வையாளருக்கு மிக அருகாமையில் அமைந்திருக்கும்.

Down centre stage area:

நடிப்பிட நடுமுன் மேடைப் பரப்பு

மேடையின் முன்பகுதியில் வலது, இடது பகுதிகளுக்கு நடுவிலமைந்த பகுதி இது. நடிப்புக் கூறுகள் அதிகமாக இவ்விடத்தில் அமைவதாக இருக்குமாதலால் இப்பகுதி சிறப்பிடம் பெறுவதாக உள்ளது.

Down left:

முன் இடது

(பார்க்க: Stage - மேடை)

Down right:

முன் வலது

(பார்க்க: Stage - மேடை)

Down stage:

முன் மேடை

நாடக மேடைப் பகுதியில் அரங்கின் பார்வையாளருக்கு மிகவும் நெருக்கமான பகுதி இது. இப்பகுதியில் இடது புறமோ, வலதுபுறமோ அல்லது மையத்திலோ நடப்பிடப்பகுதி அமைந்து நிற்கும்.

Drama:

நாடகம்

உரைநடையும் மெய்யசைவுகளாலான உணர்வு வெளிப்பாடுகளும் கலந்து கதை கூறல் நோக்கில் அமைந்த உரையாடலுடன் முரண் உச்சம், முடிவமைதி என்ற நிலைகளைக் கொண்டு மேடையில் படைத்தளிக்கத்தக்க கூறுகளைக் கொண்ட நடத்துக் கலை வடிவமே நாடகம் எனப்படுகிறது. நாடகம் என்ற சொல்லுக்கு 'செய்', 'நடி' போன்ற பொருள்கள் உண்டு. நாடகம் எனப்படுவது மேடையில் நடிகர்களும் எதிரில் பார்வையாளர்களுமென உய்த்துணரப்பட வேண்டியதோர் அரிய கலை. எனவே, நாடகம் படைத்தளிக்க வல்லதாக அமைய வேண்டும். தவிர படிப்பதற்காக என மட்டும் அமைதல் சிறப்பன்று. நாடகக் கலை உலக நாடுகள் அனைத்திலும் வழிபாட்டினை மையமாகக் கொண்டே தோற்றம் பெற்றுள்ளமையை உலகளாவிய நாடக வரலாறு தெளிவுபடுத்துகிறது. வழிபாட்டின் போது நிகழ்த்தப்படும் சடங்குகளான குழந்தை வரம், வாழ்வு வரம், இறப்பு போன்றவற்றின் கூறுகளே நகைச்சுவை, துன்பியல் நாடகங்களுக்கான மூல உணர்வுக் கூறுகளாயின. காலம் செல்லச் செல்ல உள்ளடக்கமும் நாடகக் கூறுகளும் விரிந்து பரந்து ஆழமாக வளர்ச்சியடைந் துள்ளன. எனினும் நாடகக் கலையின்

தோற்றம் முதல் இன்று வரை அது மனித சமுதாயத்தின் பிரதிபலிப்பாகவே இருந்து மக்களுக்கு உரையாடல், நடிப்பின் மூலமும் கலை விருந்து படைத்து வருகிறது.

Drama advertisement:

நாடக விளம்பரம்

நாடகம், காட்சிப்படுத்தலுக்குத் தயாராகும்போது முன் கூட்டிய விளம்பரம் தேவைப் படுகிறது. நாடகம் மேடையேற்றம் செய்யப்படுமுன் மேற்கொள்ளப் படும் விளம்பரங்களே நாடக விளம்பரங்கள் எனப்படுகின்றன. சிற்றேடுகள், துண்டுப் பிரசுரங்கள், விளம்பரத் தட்டிகள், ஒலிப் பெருக்கி மூலமான விளம்பரங்கள் போன்றன நாடக விளம்பர ஊடகங்களாக உள்ளன. வானொலி, பத்திரிகை, தொலைக் காட்சிப் பெட்டி போன்றனவும் நாடக விளம்பரத்துக்குத் துணை செய்வனவாக உள்ளன. மின்சார வசதியும் அறிவியல் உத்திகளும் இல்லாத பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மாட்டு வண்டி விளம்பரம், அதிர்வேட்டு விளம்பரம் போன்ற நிலைகளில் நாடக விளம்பரங்கள் விளங்கின. திருமண அழைப்பிதழ் வடிவ விளம்பரம், தந்தி வடிவ விளம்பரம் போன்றன பாலர் சபை நாடகங்களுக்கான புதுமை யான விளம்பர முறைகளாக அமைந்தன.

Drama Company:

நாடகக் குழு

(பார்க்க: Company- குழு)

Drama context:

நாடகக் கருத்தமைவு

நாடகத்தில் இடம்பெறும் கருத்துகள், எண்ணங்கள், அறிக்கைகள், உண்மைகள் யாவுமே கருத்தமைவுகள் ஆகும். எந்த ஒரு நாடகமும் இவற்றின் கூறுகளை ஒட்டு மொத்த மாகவோ, ஓரளவிற்கோ கொண்டே விளங்கும்.

Drama experiment:

நாடகப் பரிசோதனை

நாடகக் கட்டமைப்பு, கால அளவு, வடிவம் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் சோதனை முயற்சியே நாடகப் பரிசோதனை எனப்படுகிறது. காலத்துக்கேற்ப மாறுதலை ஏற்றுக்கொள்ளும் கலைவடிவமே வளரும் கலை யாக மாற்றம் பெறும். இவ்வகை யில் நாடகக் கலையும் பல மாற்றங்களை விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளன. பத்தொன்ப தாம் நூற்றாண்டில் விடிய விடிய

நடந்த கூத்துகள் கால அளவின் நீட்சியாலும் உத்திகளில் புதுமை இல்லாததாலும் தமிழகத்தில் ஓரளவு வீழ்ச்சியடையத் தொடங்கின. மேனாட்டு நாடகத் தாக்கம் வடிவமைப்பில் புதிய நிலையை தமிழிலும் ஏற்படுத்தின.

தவத்திரு சங்கரதாச சுவாமிகள் தோற்றுவித்த பாலர்சபை நாடக முறை (Boys Company Drama System) சோதனை முயற்சியில் மேற்கொள்ளப் பெற்ற நாடக முறையே ஆகும். இது வெற்றியையும் பெற்றுத்தந்தது.

Drama of ideas:

தர்க்க நாடகம்

இவ்வகை நாடகத்தின் உள் கட்டமைப்பு எண்ணங்கள், கொள்கைகள் குறித்து நடக்கின்ற விவாதமாக அமைந்து நிற்கும். சங்கரதாச சுவாமிகளின் 'வள்ளித் திருமணம்' நாடகத்தின் தர்க்க காட்சிகள் இவ்வகைத்தே ஆகும்.

Drama of sensibility:

மெய்யுணர்வு நாடகம்

மனித உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் நாடகம் இது. நல்லவர்களாகவும், மோசமானவர்களாகவும் சித்திரிக்கப்படும் நாடக மாந்தர்களிடையே நடைபெறும் உணர்வுப் போராட்டமும், மற்றவர் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவனாகச் சித்திரிக்கப் பெறும். தலைமை மாந்தரின் குணநலன்களும் இவ்வகை நாடகத்தின் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன.

Drama presentation:

நாடகப் படைப்பு

நாடகம் மேடையில் படைத்தளிக்கப்படும் நிலையே நாடகப் படைப்பு எனப்படுகிறது. நாடகத் தயாரிப்பு நிலைகளான கதைத் தேர்வு, நடிகர் தேர்வு, பிற தொழில் நுட்பக் கலைஞர்கள் தேர்வு போன்ற நிலைகளைத் தொடர்ந்து அமையும் 'ஒத்திகை' நாடகப் படைப்பின் முக்கியமான கட்டமாகும். மேடையில் நாடகம் படைத்தளிக்கும்போது இப்பணி முழுமையடைகிறது. இதில் வெற்றிகாணும் நாடகமே முழுமையான நாடகப் படைப்பாக அமையும்.

Drama production:

நாடகத் தயாரிப்பு

ஒரு நாடகம் அதன் பிரதி நிலையிலிருந்து படைப்பாக்க நிலைக்கு எட்டும் வரையான செயல்பாட்டு முறைகளே நாடகத் தயாரிப்பு எனப்படுகிறது. கதைத்

தேர்வு, நடிகர் தேர்வு, பிற தொழில் நுட்பக்கலைஞர்கள் தேர்வு, விளம்பரங்கள் மேற்கொள்ளுதல் போன்ற யாவுமே நாடகத் தயாரிப்பு நிலைகளாகும். நிரந்தரக் குழுமுறை (Permanent Troupe System)யில் நாடகத் தயாரிப்புக் கெனத் தனி புரவலர் இடம் பெற்றிருந்தார். இவரை 'நாடக முதலாளி' (Drama Owner) என்று கூடப் பெயரிட்டழைத்த நிலை யும் அறியமுடிகிறது. நாடகத் தயாரிப்புக்கான செலவுகள் அனைத்தையும் இவரே மேற்கொள்வதும், நாடக வசூல் மூலமாக அதனை ஈடு செய்து கொள்வதும் வழக்கம்.

Drama properties:

நாடகப் பொருட்கள்

(பார்க்க: Props- *மேடைப் பொருட்கள்)*

Drama Romantique:

புனைவியல் நாடகம்

உரையும் பாடலுமாக அமைந்துவரும் நாடகவகை இது. இன்பியல் சார்ந்த இவ்வகை நாடகங்கள் சிக்கலான கதைப் பின்னலைக் கொண்டு விளங்கு வனவாகும். பாத்திரப்படைப்பில் அதிக கவனம் செலுத்தப்படாத நிலையில் அமைக்கப் பட்டிருக்கும் பிரான்சு நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வகை நாடகங்கள் சிறப்புற்று விளங்கின.

Drama School:

நாடகப் பள்ளி

நாடகக் கலையின் கூறு களைக் கற்றுத்தரும் பள்ளி இது. மேனாடுகளில் அதிகமாக இவ்வகைப் பயிற்சிக் கூடங்கள் உள்ளன. இந்தியாவில் டெல்லி தேசிய நாடகப் பள்ளி இவ்வகை யில் அமைந்தது ஆகும். தமிழகத் தில் சில பயிற்சிக் கூடங்கள் செயல்பாட்டில் இருந்துள்ளன. எனினும் நாடகக் குழுக்களே தங்கள் குழுவினர்க்குப் பயிற்சி யும், ஒத்திகையும் வழங்கும் நிலையே அதிகமாக உள்ளன. பாலர் சபை நாடகக் குழுக்கள் மிகச் சிறந்த நாடகப் பள்ளி களாகவும் விளங்கின. இக்காலத் தில் பல்கலைக் கழகங்களில் நாடகத்துக்கென்று தனித்துறை கள் தோற்றுவிக்கப்பெற்று நாடக ஆய்வும் பயிற்சிகளும் மேற் கொள்ளப்பெற்று வருகின்றன.

Dramatic Action:

நாடக நடிப்பு

(பார்க்க: Action - *நடிப்பு)*

Dramatic Art:

நாடகக் கலை

(பார்க்க: Drama- *நாடகம்)*

Dramatic Concept:

நாடகக் கருத்துப் படிமம்- நாடகக் கருத்துரு

நாடகத்திற்குள்ளே பொதிந்து கிடக்கும் கருத்துகளின் பொதுமைத் தன்மையே நாடகக் கருத்துப்படிமம் எனப்படுகிறது. இது நாடகத்தின் குறிக்கோளை விளக்குவதாகவும் அமையும்.

Dramatic Convention:

நாடக வழக்கு

நடப்பியலுக்கு மாற்றான ஒரு உத்தியை பார்வையாளர் இயல்பானதெனவும், உண்மையானதெனவும் நம்பச் செய்யும் வண்ணம் மேடையில் படைத்தளிக்கும் வழக்கம் இவ்வாறு குறிப்பிடப்பெறுகிறது.

அரங்கமேடையில் திரைகள் விலகுவதும் மூடுவதும் கூட ஒரு நாடக வழக்கே ஆகும். உள்ளே நடப்பவற்றை உண்மையானவை என நம்பச் செய்யும் செயலை அத்திரைகள் செய்கின்றன. அது போலவே நடிகர்களை உண்மையான கதை மாந்தர்களாக ஏற்றுக் கொள்ளுதல் கூட இவ்வகையிற் பட்டதாகும். நாடகத் தனிமொழி கூட நாடக வழக்கின் பாற்பட்டதே எனலாம். நாடக அரங்கக்கலையே முழுக்க முழுக்க நாடக வழக்கின்பாற் பட்டதாகும். அனைத்து இலக்கிய வடிவங்களும் ஏற்றுக் கொள்ளத் தக்க உத்திகளைக் கொண்டிருந் தாலும் நாடகம் மட்டுமே கற்பனை மிகுந்த, புத்திசாலித்தனமான, பார்வையாளர் விருப்பத்திற்கேற்ற உத்திகளை அதிகமாகக் கொண்டு விளங்குகிறது.

Dramatic Elements:

நாடகக் கூறுகள்

நாடகத்தின் அடிப்படைக் கூறுகள் இவ்வகையில் அடங்கும். கதை, கதைக்கரு, பாத்திரப் படைப்பு, நடிகர், நடிப்பு, நாடக அமைப்பு, உரையாடல், தொடக்கம், உச்சம், முடிவு போன்றன யாவுமே நாடகக் கூறுகளாக அமையும். இவ்வகை நாடகக் கூறுகளில் சில கூறுகள் நாடகத்தில் மட்டுமன்றி பிற இலக்கிய வடிவங்களிலும் இடம் பெற்று வருவதுண்டு. எடுத்துக்காட்டாக 'சிலப்பதிகாரம்' விளங்குகிறது. கதைப்போக்கில் இது நாடகக் கூறுகளின் தன்மை கொண்டு விளங்குகிறது. கபிலர் பாடல்களிலும் நாடகக் கூறுகள் அமைந்து நிற்பதாகக் கருதப் படுகின்றன.

Dramatic Exposition:

நாடக வெளிப்பாடு

நாடகத்தின் ஒட்டு மொத்தக் கூறுகளின் மூலமாக அறியலாகும் வெளிப்பாட்டு நிலை அதன் தன்மையைப் பிரதிபலிப்பதாக அமையும். நாடகத்தின் உரையாடல், நடிப்பு ஆகியவற்றின் மூலமாக இது பெரும்பாலும் வெளிப்பட்டு நிற்கும். சில நாடகங்களில் நாடகப் பாத்திரங்களை நாடகத் தொடக்கத்திலேயே அறிமுகப் படுத்தும் முறைமையினை நாடக ஆசிரியர்கள் மேற்கொள்வதுண்டு. அவ்வேளையில் இக்கட்டத்திலேயே நாடக வெளிப்பாடு தோன்றுமாறு அமையும்.

Dramatic Illusion:

நாடகப் போலி

நாடகத்தில் போலியான தோற்றத்தை உருவாக்கி பார்வையாளரை ஏமாற்றும் உத்தியின் நிகழ்வு இது. உளவியல் முறையில் கூறினால் இயல்புக்கு முற்றும் மாறான தோற்றத்தை உருவாக்கிக் காட்டுவது இது எனலாம். நாடகத்தில் பயன்படுத்தப்படுகின்ற காட்சித் திரைகள், காட்சியமைப்புகள், உரையாடல்கள் யாவும் இவ்வித தோற்றத்தின் பிரதிபலிப்பேயாகும். நாடக மேடைக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பார்வையாளர் ஒருவர் தம் முன்னே அரங்க மேடையில் நடக்கும் நிகழ்வுகளை வெறும் நாடகமாகக் கருதி ஒதுக்கி விடாமல், அதில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் கால கட்டத்தின் நிகழ்வுக்கே தன் மனத்தினை ஒன்றச் செய்து அந்த அரங்க மேடையை நாடகப் படைப்பின் முக்கிய கதை நிகழ்வுக் களமாகக் கருதிக் கொள்வது இவ்வகை உத்தியின் பாற்பட்டதே ஆகும். மேடையில் நடக்கும் கொலைகள், இரத்தக் களரிகள், இவற்றில் மடியும் நடிகர்களை இறந்தவர்களாகவே பார்வையாளர் ஏற்றுக் கொள்வதும் (குறிப்பிட்ட காட்சியில் இறந்தவர்களாக நடிப்பவர்கள் இன்னொரு மேடையில் மீண்டும் இதேபோல் மறுபடியும் மடியத் தக்கவர்கள் என்பதை உணர்ந்திருந்தும்) இவ்வகை உத்தியின் பாற்பட்டதே ஆகும்.

Dramatic Irony:

நாடக முரண்நகை

நாடகத்தில் வரும் ஒரு குறிப்பிட்ட சூழலின் அர்த்தம் குறித்துப் பார்வையாளர் புரிந்து கொண்ட போதும் நடிக்கின்ற

நடிகர்கள் அதை அறியாமலிருக்கும் நிலை.

Dramatic Lyric:

நாடகப் பாடல்

நாடகத்தில் பயின்றுவரும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் இவ்வகைப்படும். இப்பாடல்கள் பெரும்பாலும் பார்வையாளரை நோக்கி முன்வைக்கப்பெறும் பாடலாக அமைக்கப்பட்டிருக்கும்.

Dramatic monologue:

நாடக ஒருமொழி

நாடகத்தில் ஒரே ஒரு நடிகர் பேசும் பேச்சு அல்லது பாடல் வடிவம் இது. முக்கியமான நாடகச் சூழலை வெளிப்படுத்துவதாக இவ்வகை நாடகப் பேச்சு அமைந்துவிடும்.

Dramatic personae:

நாடகமாந்தர்

நாடகத்தில் பயின்று வரும் பாத்திரங்கள் நாடக மாந்தர் எனப்படுவர். அச்சு வடிவில் வெளியிடப்பெறும் நாடக நூல்களிலும் தொடக்கத்திலேயே நாடகமாந்தர்கள் குறித்த செய்திகள் வெளியிடப் பெறுவதுண்டு.

Dramatic poetry:

நாடகக் கவிதை

உரையும் கவிதையும் மாறி மாறிக் கலந்து எழுதப்பட்ட நாடகவடிவிலமைந்த கவிதை இது. தமிழில் சங்கரதாச சுவாமிகளின் நாடகங்களில் இவ்வகை உரையாடல் வடிவம் பயின்று வருவதைக் காணலாம்.

Dramatic prose:

நாடக உரை

முழுதும் உரைநடையாய் நாடகம் அமைக்கப்படும் நிலை இது. உரைநடை இங்கு முக்கிய பங்கு பெறுவதாக அமையும். பாத்திரச் சித்திரிப்பு, பண்பு நலன், கதையோட்டம் ஆகியவற்றிற்கேற்ப இது அமைந்துவிடும். தமிழில் உரைநடையால் மட்டுமே ஆக்கப்பட்டுள்ள நாடகங்கள் பல உள்ளன.

Dramatic sentiment:

நாடக உணர்வு நிலை

அறிவார்ந்த காரணக் காரியத்தை மீறியமையும் உணர்வு நிலைகள் நாடகத்தில் மேம்பட்டு நிற்பதுண்டு. இதுவே நாடக உணர்வு நிலை எனப்படுகிறது. சம்பவங்களையோ, சூழல்களையோவிட உணர்வு நிலையே அதிகமாக உணரப்படும்.

Dramatic space:

நாடக வெளி

(பார்க்க: space - வெளி)

Dramatic structure:
நாடகக் கட்டமைப்பு

நாடகத்திற்கெனத் தனித் தன்மை வாய்ந்த வடிவம் உண்டு. தொடக்கம், எழுச்சி, முரண், உச்சம், இறக்கம், முடிவு போன்றன நாடகத்திற்கான பொதுவான வடிவமைப்புக் (Form) கூறு களெனக் கொள்ளப்பட்டுள்ளன.

Dramatic system:
நாடக முறை

நாடகம் நடத்தும் முறையின் அடிப்படையில் பயின்முறை (amateur) எனவும் தொழில் முறை (professional) எனவும் பெயர் பெறுகிறது. மேலும் நிரந்தரமான குழுவாயின் நிரந்தரக் குழுமுறை (Permanent Troupe System) எனவும் தற்காலிகமான குழு எனின் தற்காலிக குழுமுறை (Temporary Troupe System) எனவும் அழைக்கப் பெறுகிறது. மேலும் சிறப்புக் குழுமுறை (Special troupe system) பாலர் சபை முறை (Boys Company System), போன்ற நாடக முறைகளும் தமிழில் குறிப்பிடத் தக்க நாடக முறைகளாகும்.

Dramatic theory:
நாடகக் கோட்பாடு

அறியப்பட்ட உண்மைகளின் அடிப்படையிலமைந்த விளக்கங் களின் மேலமையும் பொதுமைக் கருத்து அல்லது நோக்கு கோட்பாடு எனப்படுகிறது. இது நாடகத்திற்கும் பொருந்தும். கோட்பாடு பொதுவாக நம்பிக்கை அல்லது கருத்தினைக் குறிப்பிடு வதாக அமையும். பெரும்பாலும் இது அனுமானத்தின் அடிப்படை யில் அமையுமே தவிர செய் முறையினடிப்படையில் அமைவது இல்லை. நாடகத்திற்கு எனப் பலரது கோட்பாடுகள் காணக் கிடைக்கின்றன. இவர்களில் ஆர்தர்டு, ஸ்டானிஸ் லாவ்ஸ்கி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழில் வி.கோ.நாராயண சாத்திரியாரின் 'நாடகவியல்' கூட நாடகக் கோட்பாடு குறித்த நூலெனக் கொள்ளலாம்.

Dramatization:
நாடகமாக்கம்

ஒரு மூலக்கதையை நாடக மாக உருவாக்கிக் கொள்ளுதலே நாடகமாக்கம் எனப்படுகிறது. இக்கதை நாவல், சிறுகதை, அல்லது மரபுசார்ந்த கதைகளி லிருந்து கூட வடிவம் பெறலாம். தொடக்ககால நாடகங்களின் கதை மூலங்கள் பெரும்பாலும் தொன்மங்கள், நாட்டுப்புறக் கதைகள் போன்ற காவியங் களினின்று பெறப்பட்டமை

உலகளாவிய நாடக வரலாறு தரும் செய்தியாகும். தமிழில் சங்க இலக்கியம் காட்டும் வெறி, துணங்கை முதலான கூத்துகள் யாவும் கடவுள் வழிபாட்டோடு அமைந்து விளங்கின. பத்தாம் நூற்றாண்டு வாக்கில் சோழர் கால ஆட்சியின்போது நாடக மாக்கம் செய்யப் பெற்ற நாடகங்கள் பிற கதை மூலங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. கி.பி. பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின் மக்களின் சமுதாய வாழ்வைச் சித்திரிக்கும் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், கதை மூல நிலையில் மக்கள் வாழ்வை முன்னிலைப் படுத்தத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல தமிழ் நாடகங்களின் மூலமாக மேனாட்டு நாடகங்களின் கதைகள் அமைந்து வந்த நிலையும் அறிய முடிகிறது. மேலும் இதே காலக் கட்டத்தில் நாட்டுப்புறக் கதைகள் பலவும் நாடகமாக்கம் செய்யப் பெற்றுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் நாவல்கள், சிறுகதைகள் பலவும் நாடக மாக்கம் செய்யப் பெற்றன. இவ்வகையில் தி.க.சண்முகம் சகோதரர்கள் நாடகமாக்கிய இராசாம்பாள், இராசேந்திரா போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். தற்காலத்தில் பல நடப்பியல் நிகழ்வுகள் நாடக மாக்கம் செய்யப் பெற்று வரும் நிலையும் அறியமுடிகிறது. மேலும் பல தொன்மை இலக்கியங்களும் நாடக வடிவில் ஆக்கம் செய்யப் பெற்று வருகின்றன. க.இரவீந்திரனின் மாதவ மேகலை, (மணிமேகலை) மனம் மலரும் நேரம் (எறிபத்த நாயனார் புராணம்) போன்றன குறிப்பிடத் தக்கன.

Dramaturgy:

நாடக உருவாக்கக்கூறு

நாடகப் படைப்பாக்கத்தின் கலை, உத்தி போன்றவற்றின் தொகுதி இது. நாடக எழுத்து, ஆக்கம், நடிப்பு ஆகியன நாடகக் கலையின் முழுப் பரிமாணத்தையும் விளக்குவதாக இக்கூறு அமையும்.

Drapery setting:

மேடைத் திரையாக்கம்

(பார்க்க: Curtain set - திரை மேடை)

Draw Curtain:

பொருமுக எழினி

நடுவில் பிரிந்து இருபக்கமாக விலகிச் செல்வதும் இரு பக்கத்திலுமிருந்து வந்து நடுவில்

பொருந்துவதும் போன்ற அமைப்புடைய திரை இது.

Drawing Room Comedy:

அறைநிகழ் நாடகம்

ஒரே ஒரு அறையும் அதன் விரித்துவைக்கப் பெற்ற சாளரங் களும் அச்சாளரங்கள் வழியே தெரிகின்ற பூந்தோட்டங்களு மென அமைக்கப்பெற்ற அறை வடிவ காட்சியமைப்பில் மட்டுமே நிகழ்த்தி முடிக்கப் பெறுகிற நாடகம் இது. வீட்டு நிகழ்வுகளை நகைச்சுவையாக்கிச் செல்வதையே இவ்வகை நாடகங்கள் குறிக்கோளாகக் கொள்கின்றன.

Dress:

உடை

(பார்க்க: Costume - ஆடை)

Dress Circle:

அரங்க முன் அடுக்கு

நாடக அரங்கின் முன் அடுக்குப் பகுதியில் சிறப்பு விருந்தினர் அமர்வுக்காக அமைக்கப்படும் பகுதி இப் பெயரிட்டு அழைக்கப் படுகிறது. இது இக்காலத்தில் பெரும்பாலும் வழக்கில் இல்லை.

Dress Rehearsal:

உடையணி ஒத்திகை

நாடக ஒத்திகையைத் தொடர்ந்து ஒரு நாடகம் புதிதாக அரங்கேற்றம் செய்யப்படுமுன் உடை ஒப்பனையே... கொள்ளப்படும் முழுடை... ஒத்திகையே உடையணி ஒ... எனப்படுகிறது. நாடகத்... ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு, நடிகர்களின் வேடப்பொலிவு, நாடகக் கால அளவு, இசைச் சேர்க்கை ஆகியவைக் குறித்த கணக்கீடு இதன்வழி அறியப் படும்.

Drop:

தொங்கல்

(பார்க்க: dropping curtain- தொங்கு திரை)

Drop Curtain:

தொங்கு திரை

காட்சிகளுக்கிடையே மாற்றத் திற்காகத் தொங்கவிடப்படும் திரை வகை இது.

Dropping Setting:

தொங்கு காட்சியமைப்பு

இது கீழ்நோக்கி விழும்படி யான காட்சியமைப்பு. இது தொங்கவிடப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். காட்சிக்கேற்ப இக்காட்சிப் பொருள் கீழே விழுமாறு செய்யப் படும். எடுத்துக்காட்டாக மரம் சாய்தல், பாறைகள் உருளுதல் முதலிய காட்சியமைப்புகளைக் கொள்ளலாம்.

Drum and shaft system:

சுழல் உருளை முறை

காட்சித் திரைகளின் மாற்றத் திற்காக மேடையில் வடிவமைக்கப் பெற்றுள்ள எந்திர முறை இது. உருளை வடிவ பீப்பாய் போன்ற அமைப்பின் தண்டுப் பகுதியில் காட்சித் திரைகளின் கயிறுகள் கம்பி வழியாக இணைக்கப் பெற்று எதிர் எடைப் பகுதியோடு கட்டப்பட்டிருக்கும். பல்வேறு காட்சித் திரைகள் ஒரே பீப்பாய் வடிவ அமைப்பில் கட்டப் படுவதும் உண்டு. எதிர் எடை யின் துணையோடு அசைக்கப் படும் பொழுது மிகவேகமாக காட்சித்திரைகள் கண்ணிமைக்கும் நேரத்தில் மாறிச்செல்லும். வேறு வேறு பீப்பாய் வடிவ அமைப்புகள் பயன்படுத்தப்பெறும்போது மாறுபட்ட வேகத்தில் காட்சித் திரைகள் நகரத் தொடங்கும். இது மிகவும் பயனுள்ள காட்சி மாற்று முறையாகும்.

Drum Beating:

முரசு அடி

முரசு ஒருவகை இசைக்கருவி, பழங்காலப் போர் முனைகளில் போர் அறிவிப்புக் கருவியாக இது பயன்படுத்தப்பட்டது. அரசவை அறிவிப்புகளுக்கும் இது பயன்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாடக விளம்பரங்களுக்காகவும் இக்கருவி அடித்தல் மூலம் ஒலி எழுப்பி அறிவிப்பு செய்யப் பெற்றது. நாடக மேடையில் அறிவிப்புக் காட்சிகளிலும் போர்க்களக் காட்சிகளிலும் முரசு பயன்படுத்தப்படுகிறது.

Dry Humour:

வறட்டு நகைச்சுவை

உணர்வற்ற வகையில் உரிய நகைப்புத் தன்மையின்றி உருவாக்கப்படும் நகைச்சுவை இது.

Dry up:

மறதி

மேடையில் நடிகர்கள் தங்களுக் கான உரையாடல் பகுதியை மறந்துபோகும் நிலை இது. இவ் வேளையில் நினைவூட்டுநர் உதவியுடன் இப்பகுதி உணர்த்தப் படும். இல்லாவிடில் நடிகர் தமது திறமையால் அச்சூழலுக்கு ஏற்ப தாமே உரையாடிச் செல்வதும் உண்டு.

Dumb show:

ஊமைக் காட்சி

உரையாடல் ஏதுமின்றி சைகை மூலமாக படைக்கப்படும் காட்சி

இது. நாடகங்களுக்கிடையே முதன்மைக் கதையைச் சித்திரிக்கும் வண்ணம் இடையீடாக இந்நிகழ்ச்சி அமைக்கப் படுவதுண்டு. நாடகத்துள் நாடகமாகவும் இவ்வகைக் காட்சி அமைக்கப்படுவதும் நடை முறையில் உள்ளது.

Dummy Horse Dance:

பொய்க்கால் குதிரை ஆட்டம்

தமிழ் நாட்டுப்புறக் கலைகளுள் குறிப்பிடத்தக்க கலையாக பொய்க்கால் குதிரை ஆட்டம் விளங்குகிறது. குதிரையின் மாதிரிக் கூட்டுக்குள் ஒரு கலைஞர் தமது கால்களில் பொய்யான மரக்கால்களை இணைத்துக் கட்டிக் கொண்டு ஆடுவதால் பொய்க் கால் குதிரை ஆட்டம் எனப் பெயர் கொண்டழைக்கப் படுகிறது. இவ்வகைக் குதிரை, பதப்படுத்தப் பட்ட காகித அட்டையால் செய்யப்பட்டு அழகு படுத்தப் பட்டிருக்கும். குதிரையின் இடுப்புப் பகுதிக்குக் கீழே மறைப்பதற்காக துணி யாலான திரை அமைக்கப் பெற்றிருக்கும். அதனுள்ளே புகும் கலைஞர் குதிரையோடு சேர்ந்து கொண்டு தாளத்துக்கேற்ப ஆடுவார். அவரது நடன அசைவுகள் குதிரையின் அசைவுகளோடு இயைந்து அமைந்திரு இக்கலைஞர் தமது கா சலங்கை கட்டி கொண்டிருப்பதால் அவரது தாள அடிகள் இனிமையாக விளங்கும். பொய்க்கால் குதிரை யாட்டத்தில் இராஜா இராணி வேடம் போட்டு இரு கலைஞர் இணைந்து ஆடுவதும் உண்டு.

Duo drama:

இரு மாந்தர் நாடகம்

ஒரு சிறு தொகுதி நாடகத்தில் இரண்டு கலைஞர்கள் மட்டுமே பங்கு பெறுவதாக அமையும் போது இரு கலைஞர் நாடகம் எனப் பெயர் பெறுகிறது. பெரிய நாடகங்களின் முக்கிய காட்சியை மட்டும் இவ்வாறு சுருக்கமாகக் காட்சிப்படுத்தும் நிலையும் வழக்கில் உள்ளது.

Duologue:

ஈருரைஞர் நாடகம்

சிறு நாடகமாக அமைந்து அதில் இரண்டு பேர் மட்டுமே நடிகராகவும் அந்த இருவர் மட்டுமே உரையாடுவோராகவும் பயின்று வருமாறு வடிவமைக்கப் பட்டுள்ள நாடகம் இவ்வகைப் பாற்படும்.

Ecclesiastical Drama:

திருக்கோயில் நாடகம்

திருக்கோவிலில் இறுதி உணவு விழா நிகழ்ச்சியை நாடகமாக்கிக் காட்டுதல் இவ்வகையில் அழைக்கப் படுகிறது. இயேசு நாதரின் வாழ்க்கை வரலாறு பல்வேறு கோணங்களில் நாடகமாக்கப் பட்ட நிலையில் இது அமைந் துள்ளது.

Echo:

மீள் ஒலி

இது ஒரு ஒலி அல்லது சொல் மீண்டும் வருதல் அல்லது திரும்பி ஒலித்தல் என்பதைக் குறிக்கிறது. அரங்க மேடையில் பேசப்படும் பேச்சுக்கள் மேடை வடிவமைப்பு காரணமாகவோ, அரங்க வடிவின் காரணமாகவோ ஒலிப்பளவில் மீள வருதல் உண்டு. இதுவே மேடையின் இயல்பு மீள் ஒலி எனப்படுகிறது. இவ்வகை நிலை உரையாடலைக் கேட்போருக்கு சிரமத்தை ஏற்படுத்துமாகையால் இவை சரி செய்யப்படும். ஆனால் காட்சிக்காக, அதன் அழுத்தத்தை அதிகப்படுத்துவதற்காக மீள் ஒலிகள் செயற்கையாக உருவாக்கப் படுவதுண்டு. ஒரு ஒலி அதே அளவில் மீண்டும் ஒலிப்பது என்பதே இதன் அடிப்படை யாகும். இவ்வேளையில் ஒரு சொல் இரண்டு மூன்று முறை தொடர்ந்து ஒலிப்பதுபோல் கேட்பதுண்டு.

Educational Drama:

கல்வி நாடகம்

நாடகத்தின் மூலம் கல்வியறி வூட்டுதல் செய்யும் வகையில் படைத்தளிக்கப்படும் நாடகம் இவ்வகைப்படும். கல்வி கற்பித்த லுக்கும், கல்விக்கான ஆர்வத் தைத் தூண்டுவதற்கும் இவ்வகை நாடகம் துணை செய்யும். நல்லொழுக்கத்தினையும் பிற அடிப்படைகளையும் கூட மக்களிடையே கொண்டு செல்லு வதற்கும் இந்நாடகத்தின் பயன் பாடு அமையும்.

Empathy:

ஒத்துணர்வு

பாத்திரத்தோடு படிப்போரை அல்லது பார்வையாளரை ஒன்றச் செய்யும் நிலை இது. ஒரு குறிப்பிட்ட நாடகத்தில் பார வண்டி இழுக்கும் ஒரு பாத்திரம் நம் கண்முன்னே தோன்றும் போது அந்தப் பாத்திரத்திற் குண்டான எடை, வண்டி இழுப்பவரின் உடல் வலி, உழைப்பின் தன்மை யாவும் நம் உடம்புக்குள் உள்ளீடாக ஊடுரு விக் கொள்வது போன்ற நிலை

ஏற்படின் அது ஒத்துணர்வு நிலை எனப்படும். மிகச் சிறந்த பாத்திரப் படைப்பு இவ்வகை உணர்வினை பார்ப்போர் மனத்தில் ஏற்படுத்தும்.

Emphasis:

அழுத்தம்

ஒரு நாடகத்தில் பாத்திரப் படைப்பு, காட்சியமைப்பு, கதைக் கரு ஆகியவற்றிற்கு நாடகாசிரியர் கொடுக்கும் முக்கியத்துவம் அல்லது ஒரு சொல்லை அல்லது வாக்கியத்தை முதன்மைப்படுத்த வேண்டி அதற்கு ஒலிப்பின்போது அளிக்கப் படும் அழுத்தநிலை இன்றியமை யாததாகும். பல நிலைகளில் இவ்வழுத்தம் உருவாக்கப் படுகிறது. திரும்பக் கூறுதல், மாறுபடுத்திக் கூறுதல், வியந்து கூறுதல், உச்சத்தில் கூறுதல், அதிகப்படுத்திக் கூறுதல் போன்ற உத்திகள் இதற்குப் பயன்படும். நாடகக் காட்சிச் சிறப்பிற்கு இது முக்கியமான ஒன்றாகும். நாடகக் காட்சியில் நாடகாசிரியர் பாத்திரங்களைக் கையாளுதல், காட்சிகளை அமைத்தல், கதைப் பின்னலை உருவாக்குதல் ஆகிய நிலைகளில் இது வெளிப்படும்.

Enact:

மேடையேற்று

(பார்க்க: Drama presentation- *நாடகப் படைப்பு)*

Enactment:

மேடையேற்றம்

(பார்க்க: Drama presentation- *நாடகப் படைப்பு)*

Ensemble:

ஒத்தியைபு

இசைக்குழுவினர் இசைக் கோர்வையில் ஏற்படுத்தும் ஒட்டுமொத்த பயனளிப்பு அல்லது தோற்ற மதிப்பீடு ஒத்தியைபு எனப்படுகிறது. நாடகத்தில் இசையின் பங்களிப்பு பயனுள்ளவாறு அமைவதை யொட்டி. இவ் ஒத்தியைபு உருவாக்கம் பெறும்.

Entracte:

நாடக இடைவேளை இசை

நாடகக் காட்சி இடைவேளை யின் போதுள்ள நேரத்தில் நிகழ்த்திக் காட்டப்படும் இசை நிகழ்ச்சி.

Entrance ticket:

நுழைவுச் சீட்டு

காட்சிக்காக உள்ளே அனுமதியும் இருக்கையும் பெற்றுக் கொள்வதற்கான உறுதிச் சீட்டு இது. இச்சீட்டு பெற்றுக்

கொள்பவருக்கான இருக்கை வசதி உள்ளே அமைக்கப் பெற்றிருக்கும். இவ்வகை நுழைவுச் சீட்டிலிருந்து பெறப்படும் வருமானமே குழுவின் செயல் பாட்டுக்கான மூல ஆதாரமாக இருக்கும். இவ்வாறு பெறப்படும் வருமானத்திலிருந்து ஒரு பகுதி அரசுக்குக் கேளிக்கை வரியாக தற்போது வழங்கப்பட வேண்டும்.

Entry:

வருநிலை

மேடையில் காட்சிக்காக உள்ளே வருவதற்கான குறியீட்டு வார்த்தை இது.

Entry door:

வருவாயில்

மேடையில் காட்சிக்குள் வருவதற்காகப் பயன்படும் வாயில் இவ்வாறு பெயர் பெறுகிறது.

Epic Theatre:

காப்பிய நாடகம்

கதைகூறல் முறையில் அமைந்து நடிப்புத்தன்மை, பாத்திரப் படைப்பு, மொழிநயம் கொண்டு போற்றுதற்குரிய கதைத் தன்மை யுடன் விளங்கும் கவிதை வடிவிலான நாடகம் இது. மேலும் 1) செய்மையில் அமைந்து நிற்கும் வரலாற்றுக்காலம், இடம் 2) எளிய நடை 3) எளிய கதைப் பின்னல் 4) மரபும், தொன்மமும் சார்ந்த மைய நிகழ்வுகள் 5) மனித குலத்தின் பொது வான பிரச்சினைகள் 6) பெருமை மிகு கதைத் தலைமை 7) அதீத வலுவுடைய மனம், அல்லது உடல், பண்பு நலன் 8) இயல்பு நிலை கடந்த சக்திகள் நடிப்புக் கூறில் இயைந்து நிற்பது போன்றன காப்பிய நாடகத்தின் தன்மைகளாகும்.

Epilogue:

பின்மொழி

நாடக முடிவில் பேசப்படும் பேச்சு பின்மொழி எனப்படு கிறது.

Epiphany play:

திருவருள் தோற்ற நாடகம்

கிறித்துவ மதச் சடங்கு தொடர்பான நிகழ்வினை வெளிப்படுத்தும் நாடகம் இது. ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதம் ஆறாம் தேதி இந்நிகழ்வு நடைபெறுவதாக அமையும்.

Episode:

கிளைக் கதை

நீளமான கதையில் வரும் சிறு சிறு நிகழ்வுகள் கிளைக் கதைகள் எனப் பெயர் பெறுகின்றன. பெரும்பாலான கிளைக் கதை களும் முதன்மையான கதைப்

பின்னலுக்கு உட்பட்டே அமைந்து விளங்கும்.

Exirrhema:

நகைப்பேச்சு

கிரேக்க நகைச்சுவை நாடகங்களில் பின்னணி இசைக் குழுவினர் அவையோரை முன்னிலைப்படுத்தி கவிஞன் பெயரால் பாடல் பாடிய பின் அதனைத் தொடர்ந்து பாடற் குழுவின் தலைவனாக மேடையில் தோன்றுபவன் நடப்பு விவகாரங் களை வெளிப்படுத்தும் வண்ணம் நகைச்சுவையோடு பேசும் பேச்சு இது.

Exit:

செல் நிலை

மேடையில் காட்சியிலிருந்து வெளியே செல்வதற்கான குறி யீட்டு வார்த்தை இது.

Exit door:

செல் வாயில்

மேடையில் காட்சியிலிருந்து வெளியேறுவதற்காகப் பயன் படும் வாயில் இது.

Exit line:

செல்நிலைப் பேச்சு

நாடகத்தில் காட்சியினின்று மறைந்து செல்லுதற்கான குறிப்பினை உணர்த்தும் படியான நடிகரின் பேச்சு.

நா.க.அ: 5

Experience:

அறிந்துணர்வு

ஒன்றின் தன்மையை பார்த்து உணர்ந்து அதாகவே அறிந்து கொள்ளும் அனுபவம் இது. ஒன்றின் பால் ஆர்வத்தோடு ஈடுபாடுகொண்டு பணி மேற் கொள்ளும் போது ஏற்படும் பணி அனுபவமும் இதன்பாற்படும். நாடகத்தில் பங்கேற்போர்க்கும் பார்ப்போர்க்கும் இவ்வித உணர்வு ஏற்படுவதுண்டு. இவ்வுணர்வு கொள்வோர் தம் தொடர் செயல் பாட்டினை இவ்வழியிலேயே வடிவமைத்துக் கொள்ளவும் ஏதுவாக நேரிடும்.

Experimental drama:

பரிசோதனை நாடகம்

நாடக வடிவம், கட்டமைப்பு, கால அளவு, குழுவின் அமைப்பு நிலை மாற்றத்தினைக் கணக்கில் கொண்டு மேற்கொள்ளப் பெறும் சோதனை முயற்சியால் படைக்கப்பெறும் நாடகம் இவ்வகைப்படும். தமிழில் பாலர்சபைகள் மூலம் படைத் தளிக்கப் பெற்ற பல நாடகங்கள் இவ்வகையில் அமைந்தன. இவற்றின் பாடல்கள் குறைக்கப் பெற்றன. மேடை, காட்சியமைப்புகளில் மாற்றம்

செய்யப்பெற்றன. நடிகர்கள் மாற்றம் செய்யப்பட்டார்கள். கால அளவு சுருக்கம் பெற்றன. புதிய பார்வையாளர்கள் உருவாக்கம் செய்யப்பெற்றனர்.

Exposition:

விளக்கிக் காட்டுதல்

கதைப் பின்னலின் முன்னுரையாக அமைந்து கதைப்பின்னணி குறித்து விளக்கித் தெளிவுபடுத்துதல் சில நாடகங்களின் காட்சிப்படுத்துதலின் போது வழக்கப்படுத்தப்படுகிறது. இதுவே விளக்கிக் காட்டுதல் எனக் குறிக்கப் பெறுகிறது.

Expressionism:

உள் வெளிப்பாடு

உணர்வு வெளிப்பாடுகளை உருவாக்கிக் காட்டுதற்கேற்ப மேற்கொள்ளப்பெறும் பொதுவான நுட்பக்கூறுகளே உள் வெளிப்பாடு எனப்படுகிறது. ஓவியம், சிற்பம் போன்றவற்றில் அவற்றின் வண்ண வேறுபாடே இவ்வுணர்வு நிலையினை அதிகப்படுத்துவதாக அமையும். நாடகங்களில் உணர்வுக் கருத்துக் கூறுகள், பாத்திர எதிர் செயல்பாடுகள், நடப்பியல் குறியீடுகள் ஆகியவற்றின் வழி உள் வெளிப்பாடு அமைந்து வரலாம். இவை யாவும் இயல்பான தன்மையினின்று வேறுபட்டே அமையும்.

Extravanza:

மிகு கற்பனை

நாடகங்களில் எளிய கதைக் கருவும், தளர்வான வடிவமைப்பும், ஆடம்பரமிக்க ஆடைகளும் கொண்ட படைப்பாக அமைக்கப்படும்போது அவை மிகு கற்பனை நாடகங்களாகப் பரிணமிக்கின்றன.

Ezhini:

எழினி

(பார்க்க: Front curtain -முகப்புத் திரை)

Falling Action:

உச்ச வீழ்ச்சி

நாடகத்தின் உச்சகட்டத்தைத் தொடர்ந்து அடுத்து வரும் இறக்கமான நிலை இது. உச்சம் மிகவும் விறுவிறுப்பானதாகவும், எதிர்பார்ப்பு மிக்கதாகவும் அமைய உச்ச வீழ்ச்சி நாடகத்துக்கான முடிவை நோக்கிச் செல்லுதற்குரிய சூழலை ஏற்படுத்துவதற்குரிய இறக்கத்துடன் அமைந்து நிற்கும்.

Falling Flaps:

விழு திரை

இது ஒருவகையான தந்திரக் காட்சியமைப்புக்கான செயல்

பாடாகும். இக்காலத்தில் இவ் விதக் காட்சியமைப்பு நடைமுறையில் இல்லை. இரண்டு பக்கமும் இரண்டு விதமான காட்சிகள் வரையப்பட்ட தட்டிகள் கீல்(hinges)களில் பொருத்தப்பட்டு பிடிப்பான்களால் (catches) நிலைப்புச் செய்யப்பட்டிருக்கும். இப்பிடிப்பான்கள் விலகும் போது இந்தத் தட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக விழும். அப்போது வேகமான காட்சி மாற்றங்கள் நிகழும்.

False Proscenium:

சாயல் அரங்க முகப்பு

அரங்க முகப்பின் வாயிலின் அளவைச் சிறியதாக்கி அணிவாயில் போன்ற அமைப்பினை உருவாக்கும் வண்ணம் தற்காலிகமான அமைப்புகளினால் அரங்க முகப்பிற்குப் பின்னால் அதன் சாயலில் இன்னொரு அரங்க முகப்பு உருவாக்கப் படுவதுண்டு. இதுவே சாயல் அரங்க முகப்பு எனப்படுகிறது. நாடகக் குழுக்கள் மூலம் ஆங்காங்கே சென்று நாடகம் படைப்போருக்கு இவ்வகை அமைப்புப் பயன் படுத்துவதாய் உள்ளது. அரங்க மேடையில் காட்சித்திரைகளின் அளவு சிறியதாக இருப்பின் இவ்வகை சாயல் அரங்க முகப்பு உருவாக்கப் பெற்று அவை கட்டப்பெறும். சாயல் அரங்க முகப்பினை உருவாக்கிட இரண்டு பக்கத் தட்டிகளும், மேலே அவற்றை இணைக்கும் வண்ணம் அரங்க முகப்பு ஓரமும் மட்டுமே போதுமானது. மேலே தொங்கு திரை வளைவுகளாலும் வடிவமைப் பாலும் சிறப்பான கலை நுணுக்க மிக்கதாக உருவாக்கப் பெறும்.

Familiar Story:

அறிமுகமான கதை

மக்களிடையே தொன்று தொட்டே அறியப்பட்டு வரும் பழங்கதை. இராமாயணம், மகாபாரதம், அரிச்சந்திர புராணம், நல்லதங்காள் கதை போன்ற கதைகள் இவ்வகைக் கதைகளில் சிலவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இதுபோன்ற அறிமுகமான கதைகள் பலவும் தெருக் கூத்துகளாகவும், நாடகங்களாக வும் படைத்தளிக்கப்பட்டன.

Farce:

கேலி நாடகம்

இது ஒருவகை மென் நகைச் சுவை நாடகமாம். குறிப்பிட்ட

சூழலை கேலிக்குரியதாக்கி நகைப்பை வரவழைக்கும் நாடகமாக இது விளங்குகிறது. இதனுடைய கதைப்பின்னல் பாத்திரப் படைப்புகளை மையப் படுத்துவதைவிட சூழலை பெரும் பகுதியாக மையப்படுத்தி அமைகிறது. இது நடிப்பையும் உரையாடலையும் முழுக்க முதன்மைப்படுத்தி அமையும் நாடகமாகும்.

Fate Drama:

விதி குறித்த நாடகம்

இது ஒருவகையான துன்பியல் நாடகம். கொலை செய்யப் போகும் செமானின் பின்னே நடந்து செல்லும் பருத்த நாயின் தன்மைகொண்டு இப்பெயர் அமைந்தது. 19ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் வழக்கத்தில் இருந்து வந்த நாடகம் இது. பின் விளைவு என்ன என்பதனை முன்கூட்டியே தெரியப்படுத்தும் தன்மை இத்தகைய நாடகத்தின் குறிப்பிடத்தக்க செயல்பாடாகும்.

Fine Arts:

நுண்கலைகள்

கண்ணுக்கு விருந்தாக அமையும் சிற்பம். ஓவியம், நடனம், நாடகம் யாவுமே நுண்கலைகளாகும். அழகுணர்வை அடிப்படையாகக் கொண்டு இவை சிறப்புற்று விளங்குகின்றன.

Five Act Formula:

ஐந்தங்க நாடக முறை

ஒரு நாடகத்தை ஐந்து அங்கங்களாகப் பிரித்து எழுதும் முறை இது. பொதுவாக இவ்வங்கங்கள் சம நீளத்தையும் சம நிகழ்ச்சிக் கால அளவினையும் கொண்டு விளங்குவதாக அமையும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் குஸ்டான் பிரேடேக் என்னும் செருமன் நாவலாசிரியர் இவ்வகை நாடக முறையை ஒரு பிரமிடு கோபுரத்துக்கு ஒப்பிட்டு நாடக எழுச்சியையும் வீழ்ச்சியையும் விளக்கிக் காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Flash Back:

முன்கூர்தல்

நாடகத்தில் காட்சி சித்திரிப்புக்கிடையே நாடகக் கதை நிகழ்வில் முன்னரே நடைபெற்றதான ஒரு நிகழ்வை கதைத் தொடர்பு கருதி நடத்திக்காட்டும் உத்தி முறை இது. முதல் காட்சிக்கு முன்னதான இக்குறுங்காட்சி முன் நிகழ்வை நினைவு கூறுவதாக கதை கூறல் முறையிலோ, காட்சிப்படுத்தும் முறையிலோ நிகழ்த்திக் காட்டப்படும். மேலும்

ஒரு கதைப்பாத்திரம் கனவு காண்பதாகவோ, நினைத்துப் பார்ப்பதாகவோ அல்லது உரையாடல் மூலமாகவோ இந் நிகழ்வு உருவாக்கப் படுவதுண்டு.

Flash Light:

வெட்டொளி விளக்கு

திடுமென ஒளி உமிழ்ந்து அமைந்து மீண்டும் ஒளி உமிழும் தன்மை கொண்டது இவ்வகை விளக்கு. மேடையில் உறைநிலை உத்தியின்போது இவ்வகை விளக்கு முக்கியமாகப் பயன் படுத்தப்படுகிறது.

Flat:

தட்டி

பொதுவாகச் சட்டமிடப் பெற்ற முரட்டுத்தனமான துணியாலான அமைப்பே மேடை யில் பயன்படுத்தப் பெறும் தட்டியாகப் பயன்படுத்தப் பெறுகிறது. மேடையின் மேற்பரப்பிற்கு மேல் உள்ள உயரத்திற்கேற்ப தட்டியின் உயரம் அமையும். தட்டியின் அகலமும் அதன் உயரத்திற் கேற்ப மாறுபட்டமையும். இத் தட்டிதான் தனிப்பட்ட வகை யில் மேடையில் பல வகையிலும் பயன்பட்டு நிற்கும் பொருள் எனலாம். மேடையின் உள் வடிவமைப்பில் இவ்வகைத் தட்டிகள் மேடை வடிவமைப் பாளரின் கற்பனைக்கேற்ப வடிவப்படுத்தலுக்குப் பயன் பட்டு நிற்கின்றன. மேலும் காட்சிக்கேற்ப மேடையினைப் பிரிவுபடுத்தி வடிவமைக்கவும் இவை முக்கியமாகின்றன. சில நேரங்களில் மறைப்புக்காகப் பயன்படுத்தப்படும்போது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தட்டிகள் புத்தக வடிவில் ஒன்றோடொன்று இணைக்கப்படுவதும் உண்டு. இவை விரிப்புத் தட்டிகள் (book-flats) எனப்படுகின்றன. இவற்றை இரட்டை அல்லது மும்மடிப்பு கள் எனவும் பெயரிட்டழைப்ப துண்டு. இவை நேரான ஓரங் களுடனோ அல்லது வடிவமைக்கப் பட்ட பக்க வாட்டு வடிவங்கள் பொருத்தப்பட்டோ இருக்கும். இவை பக்கத் தட்டிகளாகவும் பயன்படுத்தப்படும்.

இவ்வகைத் தட்டிகள் இணைக்கப் பெற்று பெட்டி வடிவ அமைப்பு வடிவமைக்கப் படுவதுண்டு. இவ்வேளையில் மூன்று வகைகளாக இத்தட்டி களின் பங்களிப்பு இருக்கும். இச்சுவரமைப்பு பறக்கும் நிலையில் அமைக்கப்படும்போது அது பிரென்சு தட்டி (French flat)

என்றழைக்கப்படுகிறது. மேலும் மேடையின் குறுக்கே தரை வரிசையில் வைக்கப்படும் தட்டி தரைவரிசைத்தட்டி (ground row) எனவும் வடிவமைக்கப்பட்டு சித்திர வேலைப்பாடுடன் கூடிய தட்டி காட்சித் தட்டி (set piece) எனவும், திறவுகளுக்குப் பின்னால் உள்ளனவற்றைப் பார்வை யாளருக்குப் படாமல் மறைக்கும் தட்டி தாங்கு தட்டி (backing flat) எனவும் பெயர் பெறுகின்றன. பொதுவாக ஒரு தட்டியானது இருபக்கமாக இரண்டு பக்கச் சட்டங்கள் (side pieces), மேலும் கீழுமான படுக்கை நிலைச் சட்டம் (rail) எனக் கொண்டு ஆக்கப் பட்டிருக்கும். சட்டங்கள் (frames) மரத்தாலானவை ஆகும். மரத்தாலான ஆணிகளே பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டிருக்கும். தட்டிகளின் அளவினை மாற்றியமைக்கும் போது சேதாரம் அதிக மேற் படாமலிருக்க இவ்வகை வழி முறை மேற்கொள்ளப் பெறு கிறது. மரச் சட்டங்களின் குறுக்கே மெல்லிய துணைச் சட்டங்கள் பொருத்தப்படுவதுண்டு. பக்கச் சட்டமும், கீழ் மேல் சட்டமும் சேருமிடத்தில் குறுகிய மூலைச் சட்டம் பற்றுக் கொக்கி (brace) யாக அமைக்கப்படும்.

வடிவமைப்பு ஓரங்கள் அமைக்கப்பட வேண்டுமாயின் அதற்கான இணைப்பும் ஓரத்தில் இந்தக் கட்டத்திலேயே செய்யப் படும். இதன்பின்பு முரட்டுத் துணியால் இக்கூட்டின் முகப்பினை மறைக்கும்படி ஒட்டப்படும். அதிகமாக நீட்டிக் கொண்டிருக்கும் துணியானது கூர்மையான கத்தியால் வெட்டப் பட்டு முறையாக அழுத்தி ஒட்டப் படும்.

இவ்வகைத் தட்டிகளை மேடையில் நிறுத்துவதற்கு ஏற்ப இவற்றில் முதுகுப் புறத்திலிருந்து மேடையில் பொருந்துமாறான அமைப்பு பொருத்தப்படும். இது மேடைப் பற்றுக்கொக்கி (stage brace) எனப்படும். இப்பற்றுக் கொக்கியின் மறுமுனை மேடை யில் ஆணியால் பொருத்தப் பட்டோ அல்லது கனமான பொருளால் தடுப்பு செய்யப் பெற்றோ அமைக்கப்படும். மேலும் முக்கோண வடிவிலான தடுப்புச் சட்டம் செய்யப்பட்டு அதன் மேல் பகுதி 'தட்டியோடு' இணைக்கப்படுவதுமுண்டு. இதற்கு பற்றுக் கொக்கிப்பொறி (brace jack) என்று பெயர். இவ்வகை வண்ணத் தட்டிகள் மேடைத்தட்டு முகப்புகள்

(rostrum fronts), மாடித்தட்டுப் பக்கங்கள், துண்டுத் தட்டிகள் யாவும் தட்டி வகைகளைச் சார்ந்தனவேயாகும்.

மேடைப் பொருட்களிலேயே 'தட்டி' எனப்படுவது தனித்துவம் வாய்ந்த, வியப்புக்குரிய ஒன்றாகும். இது மிகவும் பழமையான மேடையமைப்புப் பொருளாகும். தமிழ் நாடக மேடை வரலாற்றில் மாதவி ஆடிய அரங்கில் கூட அலங்காரங்கள் எனக் குறிப்பிடத் தக்கவை வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்ற இவ்வகைத் தட்டிகளாகவே இருக்கக்கூடும். அவற்றின் வடிவம் வேண்டுமாயின் வேறுபட்டிருக்கலாம். பக்கத் தட்டிகளில் திறவுகள் (openings) வைத்தும் திறவுகள் இல்லாமலும் கூட உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின் இவ்வகைத் தட்டிகளின் பயன்பாடு தமிழ் நாடக மேடையில் குறிப்பிடத்தக்கதாக அமைந்து வந்துள்ளது. இன்று வரை தமிழ் நாடக மேடையிலும் தட்டிகள் பல நிலைகளில் பயன்பட்டு நிற்கின்றன. காட்சிப்படுத்துவதில், மறைப்பதில், மேடையை அழகுபடுத்துவதில் என இதன் பங்களிப்பு மிகவும் அதிகம். வரலாற்று நாடகங்கள் பலவற்றில் அரண்மனைகளின் அழகிய தூண்கள் கூட இவ்வகைத் தட்டிகள் மூலமாகவே காட்சிப் படுத்தப்படுவதும் உண்டு.

Flat Character:

அரைகுறைப் பாத்திரம்

நாடகத்தின் கதையோட்டத்தில் அதிக முக்கியத்துவம் இல்லாத எந்தத் திருப்பத்தையோ, பரபரப்பையோ நிகழ்த்த இயலாத பாத்திரம் இது. இது வளர்ச்சியடையாத நிலையிலமையும் பாத்திரமாகும். இதனால் இதன் தாக்கம் ஆழமாக அமைவதில்லை. முழுமை பெறாத பாத்திரமாகையால் பார்ப்போர் மனத்தில் பதியும் படியான எந்தவித ஆழமான கூறுகளையும் இவ்வகைப் பாத்திரம் கொண்டு விளங்குவதில்லை. மேலும் நாடகத்தில் இவ்வகைப் பாத்திரம் குறுகிய கால அளவு மட்டுமே வந்து போவது போல அமைக்கப் பட்டிருக்கும். எனினும் இவ்வகைப் பாத்திரமும் கதையோட்டத்திற்குத் தேவையானதாக இருப்பதால் பெரும்பாலான நாடகங்கள் இது போன்ற பாத்திரங்களைக் கொண்டே அமையும்.

Flexible Stage:

இசை மேடை

வழக்கமான முகப்புடன் கூடிய வடிவமைக்கப் பெற்ற மேடை அமைப்பினின்று மாறுபட்ட பார்வையாளரையும் நாடகத் தோடு பங்கு பெறுமாறு செய்யத் தக்க அளவில் நெருக்கமாக்கும் வண்ணம் உருவாக்கப்படும் அரங்க அமைப்பு இது. இவ் வமைப்பானது பழைய கிரேக்க அரங்க அமைப்பை நினைவூட்டும் வண்ணம் அமைந்திருக்கும். இதற்கெனத் தனி அரங்கம் தேவையில்லை. எந்தப் பொது அரங்கத்திலும் இவ்வகை மேடை அமைக்கலாம். வட்ட வடிவ அரங்காகவும் (Theatre in the Round) இதனை ஆக்கிக் கொள்ளலாம்.

Flies:

காட்சித் திரைத்தளம்

மேடையின் மேலே, பார்வை யாளர் பார்வைக்குப் படாமல் அமைக்கப்பட்டிருக்கும் காட்சித் திரைகளின் நகர்வுக்காக அமைக்கப் படும் தளமே இது. கயிறுகளின் மூலமாக இவை இயக்கப்படுவதாக வடிவமைக்கப்பட்டிருக்கும். கையால் இயக்கப்படுவதாக உருவாக்கப்படும் இவ்வகைத் தளங்களின் இயக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் கயிறுகளின் பொறுப்பாளராக விளங்குபவர் காட்சித் திரையாளர் (fly-men) எனப்படுவார். இவர் தமது இயக்கத்திற்கெனப் பயன் படுத்தும் தளம் காட்சித் திரைத் தரைத் தளம்(fly-floor) எனப்படும். காட்சித் திரைத் தரைத்தளம் மேடையின் இருபுறமும் அமைக்கப் பட்டிருக்கும். காட்சித் திரை தரைத் தளத்திலிருந்து காட்சித் திரைகளின் கயிறுகள் பூட்டப் பட்ட திரைச் சட்டங்களிலிருந்து தொங்க விடப்பட்டிருக்கும் பக்கத் தட்டிக்கு வர குறுகலான பாதை அமைக்கப்பட்டிருக்கும். இப்பாதைஒடுங்கு பாதை (catwalk) என்றழைக்கப்படுகிறது. இக்காலத்தில் பெரும்பாலும் எதிர் எடை முறை (Counter Weight System) மூலம் காட்சித் திரைகள் இயக்கப்படுகின்றன.

Flipper:

தட்டித் துடுப்பு

தட்டி ஓரங்களில் விரிவாக்கத் திற்கு ஏதுவாக வடிவமைப்புக் களை இணைப்பதற்காகப் பொருத்தப்பட்டிருக்கும் தொங்கும் நிலையிலுள்ள அமைப்பு இது. மேடையில் பயன்படாத போது மடித்து வைப்பதற்கு ஏற்ப கீல் பொருத்தப்பட்டிருக்கும்.

Flood Light:

பரப்பு விளக்கு

வெளிச்சத்தை அதிகமாக உமிழ்வதும், நிழல் விழா வண்ணம் வெளிச்சத்தைப் பரப்புவதும் இவ்வகை விளக்கின் தனிச் சிறப்பாகும்.

Fly Floor:

காட்சித் திரைத் தரைத் தளம்

(பார்க்க: flies- காட்சித் திரைத் தளம்)

Fly Men:

காட்சித் திரையாளர்

(பார்க்க: flies- காட்சித் திரைத் தளம்)

Flying Effect:

பறக்கும் செயலாக்கம்

மேடையின் மேல் மறைப்புத் திரை (cloudings)க்குள் தள மேடையில் மறைக்கப்பட்டு மேடையின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குக் கடந்து செல்வது போன்ற காட்சிகளில் பாத்திரங்களின் வேகமான நகர்வுக்காக இவ்வித உத்தி பயன்படுத்தப்பட்டு வந்தது. இக்காலத்தில் இது போன்ற பறத்தலுக்கு நடிகரின் முதுகில் கொக்கி மூலம் கண்ணுக்குப் புலப்படாத இரும்புக் கம்பிகள் இணைக்கப்பட்டு வேகமாக நகர்த்தப்படும் முறை கையாளப்பட்டு வருகிறது. நாடகத்தில் இத்தகைய காட்சி முக்கியத்துவமென அறியப்படும் வேளையில் மட்டுமே இவ்வித பறத்தல் செயன்மை மேற்கொள்ளப்படுகிறது.

Folk Art:

நாட்டுப்புறக் கலை

நாட்டுப்புற இலக்கியம் போல நாட்டுப்புறக் கலைகளும், மண்ணின் மரபு கூறும் கலைகளாகும். வட்டாரத் தாக்கத்தின் அடிப்படையில் இவ்வகைக் கலைகள் இன்றும் நாட்டுப் புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. பொய்க்கால் குதிரை ஆட்டம், கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், காளை மாடு ஆட்டம், கணியான் ஆட்டம், தேவராட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், புலியாட்டம் எனப் பல நாட்டுப்புறக் கலைகள் தமிழகத்தில் இன்றும் செயல் பாட்டில் உள்ளன. நாட்டுப்புறக் கலைகளை வளர்ப்பதில் அரசும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறை, மத்திய அரசின் தென்னகப் பண்பாட்டு மையம் போன்ற துறைகள் இக்

கலைகளின் மேம்பாட்டுக்காகத் **திட்டமிட்டுப்** பணிகளை மேற் **கொண்டு** வருகின்றன.

Folk Ballad:

நாட்டுப்புறப் பாடலிசை

*(**பார்க்க:** Ballad- கதைப்பாடல்)*

Folk Drama:

நாட்டுப்புற நாடகம்

நாட்டுப்புறங்களில் இடம் பெறும் விழாக்களின் போது நடைபெறக் கூடிய நாடக வகை இது. தமிழில் இவ்வகை நாடகங்கள் மண்ணின் மரபு கூறும் நாடகங்களாக உள்ளன. நாட்டுப் புறக் கதை வடிவங்கள், வீர வரலாறுகள், சிறு தெய்வங்களின் வரலாறுகள் போன்றன நாட்டுப்புற நாடக வடிவங்களாக இன்றும் நடத்துப் பெற்று வருகின்றன. கதைப்பாடல் வடிவிலான கதைக்கூற்று அரங்கமும் (Narrative Theatre) நாட்டுப் புறங்களில் செயல்பாட்டில் உள்ளன. மதுரை வீரன் கதை, அல்லி அர்ச்சுனா போன்றன இவ்வகை வடிவங்களே ஆகும். வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் கதை கூறல் முறையில் அமைந்து வரும் அரங்க வடிவமே ஆகும்.

Folk Epics:

நாட்டுப்புறக் காவியம்

ஒரு பாடல் தொகுதி அல்லது தொகுதித் தெரிவு. அதனை ஆக்கியோர் பெயர் அறியப்படாத நிலையில் நாட்டுப்புறக் காவியம் எனப்படுகிறது. இவ் வகைக் காவியங்கள் மக்களின் அடி மனத்தைத் தொடும் வண்ணம், உணர்வூட்டத்தக்க நிகழ்வுகளைக் கொண்டமையும், ஒரு நல்ல கதைத் தலைவனின் வீர தீரங் களைச் சித்திரிப்பது போன்ற பெரும்பாலான நாட்டுப்புறக் காவியங்கள் அமைந்து வந்துள்ளன.

Folk Festivals:

நாட்டுப்புற விழா

அறுவடை காலம் முடிந்த பின்பு நாட்டுப்புறங்களில் இவ் வகை விழாக்கள் நடைமுறைக்கு வருகின்றன. மரபு வழியாக இவ்வகை நிலைப்பாடு தொடர்ந்து வருகிறது. கோயில் திருவிழாக் களின் போதும் நாட்டுப்புற விழாக்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் சங்க இலக்கியம் கூறும் நாடக வடிவங்கள் சில இவ்வகையில் நாட்டுப்புற விழாவின்போது நடை பெற்ற தாகவே தெரிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் செயல்பட்டு

வரும் தெருக்கூத்துக் கலையும் நாட்டுப்புற விழா சார்ந்த கலையேயாகும். இவ்விழாக்களில் கதைப்பாடல்கள், வில்லுப் பாட்டு நிகழ்வுகள் (Bow Songs), வீர வரலாற்றுப் பாடல்கள் போன்ற பாடல் நிகழ்வுகளும் இடம் பெறுவதுண்டு.

தமிழர் விழாவான 'பொங்கல்' விழா குறிப்பிடத்தக்க நாட்டுப்புற விழா எனலாம். அறுவடையைக் கொண்டாடும் முகத்தான் புதுப் பானையில் பொங்கலிட்டு மகிழும் இவ்விழா மிகவும் முக்கியமான பண்பாட்டு விழாவாகும். மேலும் உணவுக்குத் துணை நிற்கும் மாடுகளைக் கொண்டாடும் வகையிலான மாட்டுப் பொங்கலும் இவ்வகையில் சிறப்பு வாய்ந்ததாகும். 'சல்லிக்கட்டு' என்னும் வீரவிளையாட்டும் நாட்டுப்புற விழாவின் பாற் பட்டதே ஆகும். மலைவாழ் மக்கள் தம் மரபுக்கேற்ப நாட்டுப்புற விழாக்களை விரும்பிக் கொண்டாடுவது தமிழகத்திற்குத் தனிப்பெருமை சேர்ப்பதாகும்.

Folk Literature:

நாட்டுப்புற இலக்கியம்

(பார்க்க: Folklore- *நாட்டுப் புறவியல்)*

Folk play:

நாட்டுப்புற நாடகம்

(பார்க்க: Folk drama- *நாட்டுப்புற நாடகம்)*

Folk Song:

நாட்டுப்புறப் பாடல்

(பார்க்க: Folklore- *நாட்டுப் புறவியல்)*

Folk tale:

நாட்டுப்புறக் கதை

கதை அல்லது கதைகூறல் வடிவம். வாய்மொழி மரபு வழிப் பட்ட மக்களிடையே தோற்றம் பெறும்போது அது நாட்டுப் புறக்கதை எனப்படுகிறது. இச் செயல்பாடு கற்பனைக் கதைகள் தொடங்கி கட்டுக்கதை வரை பலவகைத் தளங்களைக் கொண்டது. தமிழகத்தில் பல நாட்டுப்புறக் கதை வடிவங்கள் காணக்கிடைக்கின்றன. மதுரை வீரன்கதை, அல்லி அரசாணி கதை, தேசிங்குராஜன் கதை போன்றவை குறிப்பிடத்தக்கவை யாகும்.

Folklore:

நாட்டுப்புறவியல்

காலம் காலமாகத் தொடர்ந்து வரும் மரபு வழி நம்பிக்கைகள், பழங்கதைகள், பழக்க

வழக்கங்கள் போன்றவை நாட்டுப் புறவியலாகும். வாய்மொழி இலக்கியமாக மட்டுமே கருதப் பட்டு வந்த நாட்டுப்புறவியலில் இன்று எழுத்து வடிவிலான மரபுச் செய்திகள், இலக்கியங் கள், கைவினைகள், நாட்டுப்புற வழக்கங்கள் யாவும் சேர்ந்து கொண்டுள்ளன. கதைப் பாடல்கள், கற்பனைக் கதைகள், மூதுரைகள் (maxims), புணைந்துரை கள், கட்டுக்கதைகள், விடுகதை கள், பழமொழிகள், தாலாட்டுகள், வீர வரலாறுகள், ஒப்பாரி பாடல்கள், உழவர் பாடல்கள், தர்க்கப்பாடல்கள் போன்ற வற்றில் நாட்டுப்புறவியல் தோய்ந்து நிற்கிறது. தமிழகத்தில் நாட்டுப் புறவியல் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்ப தனித் தன்மை பெற்று விளங்குகிறது. இக்கதைப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் (Folk Songs) எனப் படும். நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து நாட்டுப்புற இலக்கியம் எனப்படுகிறது.

Fool:

பேதை

நகைப்பை உருவாக்கக்கூடிய அறிவிலி போன்ற பாத்திரம் எனினும் அரச விகடன் என்ற நிலையினின்று மாறுபட்ட பாத்திரம் இது. நாட்டுப்புற நடன நிகழ்வின்போது வரக் கூடிய அங்கீகாரம் பெற்ற வேடதாரி. கழுதையின் காதுகளை ஒத்த தொங்கல்களைக் கொண்ட தொப்பியை அணிந்திருப்பார். சில நேரங்களில் தலை, தோள் புறங் களில் மணிகளை அணிந் திருப்பதுமுண்டு. சில நேரங் களில் மர வாளையும், கோமாளித் தலை பொறித்த தடியையும் தாங்கியிருப்பது இவரது வழக்கம். பழங்கால மரபு வழியிலான மிருகங்களை ஒத்த செய்கை நிகழ்வின் வெளிப்பாடாகவே இது அமைந்து நிற்கிறது.

Foot Light:

அடித் திரைவிளக்கு

பல்வகை நிறங்களைக் கொண்ட விளக்குகள், பிரதிபலிப்பான் களுடன் வரிசையாக இணைக்கப் பட்டிருக்கும். இவ்வகை விளக்குகள் மேடை முகப்புக்கு பின்புறமாகவோ அல்லது மேல் வரிசை இருக்கையின் ஓரமாகவோ பொருத்தப்பட்டிருக்கும். ஒளிச் செயலாக்க மேம்பாட்டுக்கு (lighting effects) இவ்வகை விளக்குகள் மிகவும் பயன் படுகின்றன.

Foot Light Trap:

மேடை அமைவு அடித்திரை விளக்கு

நீண்ட செவ்வக வடிவிலான முன் அரங்கு முகப்பின் திறவில் இரண்டு பக்கமும் இரண்டு கம்பங்கள் நடப்பட்டிருக்கும். அவற்றில் மேலும் கீழும் செல்லக் கூடிய சட்டங்களில் வரிசைப் படுத்தப்பட்டிருக்கும் மேடை அடித்திரை விளக்குகள் கட்டப் பட்டிருக்கும். இதனை கீழும் மேலும் அசைக்கும் பொழுது இருட்டும், வெளிச்சமும் உரு வாகும். இதன் மேம்பட்ட நிலை யில் சட்டத்தின் இருபகுதிகளும் கயிற்றால் கட்டப்பட்டு அவை கம்பங்களின் மேலுள்ள கப்பியில் இணைக்கப்பட்டுச் சுருள் உருளை முறைப் (Drum & Shaft System) பொறியில் பொருத்தப் பட்டிருக்கும். இது எதிர் எடை முறையில் (Counter weight system) செயல்படும் வண்ணமான பகுதி யின் வழியாக மேடைப் பரப்பிற்கு அடியில் உள்ள பள்ளமான பகுதியிலுள்ள கப்பியில் இணைக்கப்பட்டிருக்கும். இவ்வகையில் பள்ளத்திற்குள் செல்லாமலேயே வெளியிலிருந்த படியே இவ்வகை ஒளியமைப்பினை இயக்கப் பெற முடியும்.

Fore Shadowing:

முற்குறிப்பு

நாடகத்தில் பின்னால் நடக்க விருக்கும் நிகழ்வினைக் குறிப்பால் உணர்த்தும் வண்ணம் முன்னரே, குறிப்புத் தருதல் இவ்வகை உத்தியாகும். பாத்திரங்கள் மூலமாகவோ, உரையாடல் மூலமாகவோ இதற்கான குறிப்பு தரவியலும்.

Fore Stage:

முன்மேடை

அரங்க முகப்பின் அலங்கார வளைவுக்கும், அரங்கின் முகப்புத் திரைக்கும் இடையேயுள்ள மேடைப்பகுதி முன்மேடை எனப்படுகிறது. மேடையின் முதன்மைப் பகுதியில் இருந்தும், அரங்க முகப்புப் பகுதியிலுள்ள வாயில் வழியாகவும் நடிகர்கள் மேடையில் வர இப்பகுதி பயன் படுகிறது. 17ஆம் நூற்றாண்டு களில் இப்பகுதியே முதன்மை நடிப்பிடப் பகுதியாக விளங் கியது இதுமேடைத்தள அரங்கின் முகப்புத் திரைக்கும் முகப்பின் அலங்கார வளைவுக்கும் இடைப் பட்ட பகுதியைக் குறிப்பிட்டே அமைகிறது.

Form:

வடிவம்

படைப்பிலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிலான அமைப்பினைக் (shape) கொண்டு விளங்குகின்றன. இவ்வமைப்பே வடிவம் எனப்படுகிறது. 'இலக்கியம்' எனப்படுவது தனி வடிவம் கொண்டது. அதுபோலவே நாடகமும் தனி வடிவம் கொண்டதாகும். கதைக் கருவானது முழு வடிவம் பெறும் பொழுது வடிவம் வந்து சேருகிறது.

Formal Setting:

தொகுதிக் காட்சியமைப்பு

நிரந்தரமான காட்சியமைப்புக்கு முன்பாக, ஒரு குறிப்பிட்ட காட்சிக்காக உருவாக்கப்படும் சிறு சிறு தொகுதிகளால் ஆன துண்டுக் காட்சியமைப்புக்களைக் கொண்டு உருவாக்கப்படும் காட்சியமைப்பு இது. இவை சிறியதாகவும் மாற்றத்தக்கதாகவும் ஆக்கப்பட்டிருக்கும். இவை தொகுதிக் காட்சித்திரை அமைப்பு (Detail scenery) எனவும் அழைக்கப் பெறும்.

Formalism:

விதிமுறைப் பண்பு

ஒரு விதிமுறையைக் கடைப்பிடித்து நிற்கும் நிலை இது. உருகியப் புரட்சிக்குப் பின்பு உருசியாவில் கடைப்பிடிக்கப் பெற்ற கண்டிப்பான நாடக நடைமுறை இது. மேயர் ஹோல்டு இதனை வழுவாது பின்பற்றலானார். செயலாக்கவும் செய்தார். இதன்படி நடிகர் எனப்படுபவர் ஒன்றுமில்லாத பொம்மை போல இயக்குநரின் கீழ்ப்படிதலுக்கு உட்பட்டவர் எனும் மரவு பேணப்பட்டது. மேலும் உள்நிலையிலான உண்மையின் பாதிப்பில் வெளி நிலையிலான குறியீட்டமைவு வலியுறுத்தப் பட்டது. இவ்வாறு விதிமுறைகளைக் கண்டிப்பாகப் பேணி அதன் வழி நடப்பவர் விதிமுறை பேணுநர் (Formalist) எனப்படுகிறார். பொதுவாக, கோட்பாடுகளை உருவாக்குவோர் இவ்வகையில் உறுதியான நிலைப்பாட்டில் இருப்போரே ஆவர்.

Formalist:

விதிமுறை பேணுநர்

(பார்க்க: Formalism- விதிமுறைப் பண்பு)

Formesse:

நுட்பத்திறன்

நாடக உருவாக்கத்தில் நாடகாசிரியருக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதி

களுள் ஒன்றாக நுட்பத்திறனும் கொள்ளப்படுகிறது. இது நாடகாசிரியர் நாடகப் பாத்திரங் களை முன்னெடுத்துச் சென்று வளர்ச்சிபெறச் செய்யும்நிலை, நாடகாசிரியரின் உரையாடல் உருவாக்கத் திறன், முரண் வடிவாக்கத் திறன் போன்ற வற்றின் மூலமாக வெளிப்படும்.

Formula:

வழிமுறை

கதைக்கருவிலிருந்து கதைப் பின்னல் உருவாக்கும் படிநிலையே வழிமுறை எனப்படுகிறது. எந்தப் படைப்பிலக்கியமும் அதன் உருவாக்கத்திற்கான வழி முறை களைக் கொண்டு விளங்கும். நாடக உருவாக்கத்தில் கதை, கதைப் பின்னல், பாத்திரப் படைப்பு, முரண், உச்சம், இறக்கம் போன்ற பல நிலைகள் வழிமுறைகளாக விளங்குகின்றன.

Frame:

சுற்றுச் சட்டம்

(பார்க்க: flat- தட்டி)

Freeze:

உறை நிலை

நாடகக் காட்சியின் போது அடுத்த நிகழ்வுக்குப் போகும் முன்பாக முன்காட்சி முடிவை நிலைப்புத்தன்மைக்குக் கொண்டு வந்து நடிகர்களை உறைநிலை செய்யும் பாங்கு இது. நாடகத்தின் முடிவின் போதும் இத்தகைய உறைநிலை உத்தி மேற்கொள்ளப் படுவதுண்டு. இத்தகைய உத்திக்கு ஒளியமைப்பின் பங்கு இன்றியமையாததாகும். குறிப்பாக வெட்டொளி (flash lilght) விளக்கு சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

Front Curtain:

முகப்புத் திரை

நாடக அரங்கின் முகப்பி லிருந்து தொங்கவிடப்படும் முன் திரை முகப்புத்திரை எனப்படு கிறது. தொடக்ககால அரங்குகளில் இவ்வகை முகப்புத் திரைகள் பொதுவாகப் பயன்படுத்தப் பட்டன. இவ்வகைத் திரைகள் கயிற்றால் கட்டப்பட்டு பல வகைகளில் பயன்படுத்தப்பட்டன. ஒரு பக்கமாகச் செல்லும் திரைகள். நடுவில் பிரிந்து இரு பக்கமாக செல்லும் திரைகள். கீழும் மேலுமாகச் செல்லும் திரைகள் போன்றன அமைந்துள்ளன. திரையின் பின்னால் வளையங்கள் பொருத்தப்பட்டு அவற்றினூடே கயிறுகள் இணைக்கப் பெற்ற திரைகள் கயிற்றுத் திரைகள் எனப்பட்டன. சிலப்பதிகாரம் தமிழ் அரங்கின் தொடக்க நிலைக் குறித்துக் குறிப்பிடும் போது

முகப்புத் திரையை 'எழினி' எனப் பெயரிட்டு வழங்குகிறது.

ஒரு பக்கமாகச் செல்லும் திரை ஒரு முக எழினி எனவும், நடுவில் பிரிந்து இருபக்கமாகப் பிரிந்து சென்றும் பின்னர் பொருந்தியும் வரும் முகப்புத்திரை பொருமுக எழினி எனவும், மேலும் கீழும் ஏறி இறங்கும் முகப்புத் திரை கரந்துவரல் எழினி எனவும் சுட்டப்படுகிறது. தற்காலத்தில் இவ்வகைத் திரைகளின் பயன் பாடு அதிகமாகக் காணப்பட வில்லை. மேனாடுகளில் இதற் கெனத் தற்போது அடிப்படை வசதியே அரங்க முகப்புக்களில் அமைக்கப்படுவதில்லை. ஒளியமைப்பின் ஆழமான பயன் பாடு இவ்வகைத் திரைகளின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்துள்ளன.

Front House:

பார்வையாளர் பகுதி

அரங்கில் பார்வையாளர் பயன்பாட்டுக்கென உள்ள பகுதி அனைத்தும் இதில் அடங்கும். நடிகர்கள் பயன்படுத்தும் மேடைப் பகுதி தவிர்த்த பிற பகுதி யாவும் இதன் கீழ் அமையும். அரங்கப் பகுதி, ஓய்விடம், உணவிடம், பொழுது போக்கிடம், கட்டணம் வழங்கும் பகுதியாவும் பார்வை யாளர் பகுதியின் பாற்பட்டதே ஆகும். அரங்கப் பொறுப்பாளர் இப்பகுதியின் மேற்பார்வை யாளராக விளங்குவார். அரங்கில் மேடை யின் முகப்புப் பகுதியை ஒட்டி பொருத்தக்கூடிய ஒளியமைப்பு, பார்வையாளர் பகுதி ஒளியமைப்பு (front house of lighting) ஆகும். மேடையின் முன் பகுதியை பிறை விளக்குகளால் ஒளியூட்ட இவ்வகை ஒளியமைப்பு பயன்படும்.

Front of House Lighting:

பார்வையாளர் பகுதி ஒளியமைப்பு

(பார்க்க: Front of house- பார்வையாளர் பகுதி)

Full Scenery:

நிறை காட்சித்திரை

ஒரு மேடையில் அமைக்கப் படும் காட்சிகள் குறிப்பிட்ட அந்த காட்சிக்குரியதாக மட்டுமே இருக்கும் நிலை. அடுத்த காட்சி யில் அக்காட்சித் திரை முழுதும் மாற்றப்பட்டு வேறு காட்சித் திரை அமைக்கப்படும். இவ் வகைக் காட்சித்திரைகள் இக் காலத்தில் ஓரங்க நாடகங்களில் மட்டுமே பயன்படுத்துப் பெற்று வருகின்றன.

Gaff:

எளிய அரங்கு

ஏழைகளின் அரங்கமெனப் பெயர்பெற்று பத்தொன்பதாம்

நூற்றாண்டுவாக்கில் இலண்டனிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்று விளங்கிய அரங்கம் இவ்வகைப்பட்டது. இவ்வகை அரங்கின் மிக மிக தாழ்ந்த நிலையில் அமைந்த அரங்கு 'பிளட் டப்' எனவும் 'ஜெக்ஜி' எனவும் பெயரிட்டு வழங்கப் பட்டன.

Gallery:

அடுக்கிருக்கை

நாடக அரங்கில் பார்வை யாளரை அமரச் செய்யுமுகத் தான் உருவாக்கப்பட்ட உச்ச நிலையிலமைந்து செல்கின்ற வகையில் மேல்படியாக அமைக்கப் பெற்ற இருக்கை வசதிகள் அடுக் கிருக்கை எனலாம். பத்தொன்ப தாம் நூற்றாண்டில் இவ்வகை அடுக்கிருக்கைக் கூடங்கள் பயன் பாட்டில் சிறப்புற்று விளங்கின. இவ்வகை இருக்கைகள் பெரும் பாலும் மரத்தால் செய்யப் பெற்று பின்சாய்வுப் பகுதி இல்லாத நிலையில் அமைந்திருந்தன. அடுக்கிருக்கைப் பார்வை யாளர்கள் கரவொலி எழுப்புவதில் வல்லவர்களாக விளங்கினார்கள். இவ்வகை அடுக்கிருக்கை அமைப்பு தமிழகத்தில் நாடகத்துக்கெனப் பெரும்பா

லும் பயன்பாட்டில் இருக்க வில்லை.

Gauze - cloth:

மென்துணி

மேடையில் வளைவு காட்சித் திரையாகவும், சிறப்புச் செயலாக்கத் திரையாகவும் பயன்படுகின்ற மெல்லிய கண்ணாடி போன்று ஊடுருவத் தக்க துணி மென்துணி எனப் படுகிறது.

Geggie:

தாழ்நிலை எளிய அரங்கு

(பார்க்க: Gaff - எளிய அரங்கு)

Gesture:

சைகை

'அவிநயம்' எனப்படும் நடிப்புக் குறிப்பில் சைகை (sign) முக்கிய பங்கு வகிக்கிறது. பரதநாட்டியம் போன்ற பரம்பரை நடனக் கலையில் சைகையே அடிப்படைக் கூறாக விளங்குகிறது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் அவிநயக் குறிப்புகளில் பலவிதமான சைகைகள் குறித்து விவரிக்கப் பட்டுள்ளன.

Ghost effects:

பொய்த் தோற்றம்

(பார்க்க: Peppers ghost- பெப்பரின் பொய்த் தோற்றம்)

Ghost glide:

பொய்த் தோற்றச் சறுக்கு தளம்

இரண்டு சறுக்குத் தளங்களுக் கிடையே அமைக்கப்படும் மயிரிழை வண்ண மேடை அடி அமைவுப் பகுதியில் ஒரு சறுக்குத் தளம் உயரும்போது மேடை அடி அமைவுப் பகுதி மேடையின் குறுக்கே இழுக்கப்படும். மற்றொரு சறுக்குத்தளம் பின் பகுதியை மறைத்துக் கொள்ளும். இவ் வேளையில் வெளிப்படும் நகர்வுத் தடத்தில் நின்று கொண்டிருக்கும் நடிகர் பொய்த் தோற்றச் செயலாக்கத்தினைத் வெளிப் படுத்தி நிற்பார். இவ்வகைச் செயல்பாட்டுக்கு சறுக்குத் தளங்களே முக்கிய பங்கு வகிப்ப தால் பொய்த் தோற்றச் சறுக்குத் தளம் என்றழைக்கப்படுகிறது.

Gods:

அடுக்கு வரிசைப் பார்வையாளர்

பத்தொன்பதாம் நூற்றாண்டு களில் மேனாடுகளில் நாடக அரங்கத்தின் பதிவு செய்யப் படாத இருக்கைகள் மிகவும் மலிவானதாக இருக்கும். மரச் சட்டங்களினாலான, சாய்வுப் புறம் இல்லாத அமர்வுகள் இவை. இதில் சுமார் 1752 பேர் அமர் வதற்கான வசதி உண்டு. இதில் அமர்வோரே அடுக்கு வரிசைப் பார்வையாளர் அல்லது காட்ஸ் (Gods) என்று அழைக்கப் பட்டனர்.

Grand Master:

முதன்மைக் கருவி

(பார்க்க: Grand master system - முதன்மைக் கருவி முறை)

Grand Master System:

முதன்மைக் கருவி முறை

மேடையில் ஒளியமைப்புக் கான பல்வேறு வடிவ விளக்கு களும் தனித்தனியாக இயக்கப் படும் நிலை இருந்து வந்தது. இதற்கென ஒளியமைப்பைக் கட்டுப்படுத்தவல்ல முதன்மைக் கருவி (Grand master) உருவாக்கப் பெற்றது. குறிப்பாக ஒளி நிலை மாற்றி (Dimmer) விளக்குகளுக் கான இவ்வித அமைப்பினை மாற்றி ஒருங்கிணைப்பு செய்து ஒருவரே அனைத்தையும் கையாளும் வண்ணம் சக்கர வடிவிலான முதன்மைக் கருவி யில் விளக்குகளின் மின் இணைப்புக் கருவிகள் பொருத்தப் பட்டன. இதுவே முதன்மைக் கருவி முறை எனப்பட்டது. இவ்வகையில் ஒரே ஒரு தொழில் நுட்பாளரே இதனை இயக்கிட முடியும்.

Grand Rehearsal:

மேடையேற்ற நிலை ஒத்திகை

ஒரு நாடகம் அரங்கேற்றம் செய்யப்படும் முன் மேற்கொள்ளப் பெறும் ஒத்திகை இது. நடிகர் களுடைய உள்வரு நிலை, வெளியே செல்நிலை, நாடகக் கால அளவு, இசைக் கோர்வை போன்ற அனைத்தும் துல்லியமாகக் கணக்கிட்டு இவ் ஒத்திகை மேற்கொள்ளப்படும். நாடக உடையுடன் கூடிய ஒத்திகையும் மேற்கொள்வதுண்டு.

Grave Trap:

கல்லறை மேடை அடி அமைவு

மேடையின் நடுவில் 6 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட புதை குழி தோண்டப் பட்டிருக்கும். அதன் அடியில் மேலும் கீழும் அசையக் கூடிய பலகை பொருத்தப்பட்டிருக்கும். காம்லெட் (Hamlet) நாடகத்தில் வரும் கல்லறைக் காட்சியினை ஒட்டி இவ்வகை மேடை அடி அமைவு கல்லறை மேடை அடி அமைவு எனப்படுகிறது.

Greek Tragedy:

கிரேக்க துன்பியல் நாடகம்

கிரேக்க துன்பியல் நாடகத்திற் கென உறுதியான திட்டமிடப் பெற்ற உருவமைப்பு இருந்தது. இவ்வகை நாடகத்துக்கென நான்கு முக்கிய பகுதிகள் அமைந்து நின்றன. தொடக்கத்தில் பயின்று வந்த உரையாடற் பகுதி, அதனைத் தொடர்ந்து வந்த குழுவின் (chorus) பகுதி, அடுத்து வந்த நான்கு அல்லது ஐந்து நிகழ்வுப் பகுதிகள், கடைசியில் இடம் பெற்ற நிறைவுப் பகுதி என்பன பொதுவான அமைப்புகளாக விளங்கின. சில நாடகங் களில் ஒப்பாரிக் கெனத் தனியாக ஒரு பகுதியும் அமைந்து மொத்தம் ஐந்து பகுதிகள் இடம்பெற்றன.

Green Man:

பசுமை மனிதன்

மேலை நாடுகளில் மே தினத் தில் நடைபெறும் நாட்டுப்புற விழாக்களின் போது வெளிப் படும் மனிதன் பச்சை வண்ணம் கொண்டும் சில நேரங்களில் பசுமையான, பூத்துக் குலுங்கும் தழைகளைக் கொண்டும் உடம்பை அலங்கரித்துக் கொள்வது இவ்வுருவத்தின் வழக்கம். பூமி புத்துயிர் பெறுவதென்ற உணர்வை ஊட்டுவதே இதன் நோக்கம். மர மனிதன் (wood man) என்றும் இவனுக்கு வேறு பெயர் உண்டு.

Green Room:

நடிகர் அமர்வறை

மேடைக்குப் பின்பகுதியில் அமைக்கப்படும் அறை இது. நடிகர்கள் ஓய்வெடுத்துக் கொள்வதற்கும், அளாவளாவுவதற்குமான காட்சி அறை (scene room) எனவும் அழைக்கப்படுவதுண்டு.

Grid Iron:

திரைச் சட்டம்

நாடக மேடையில் திரைகளைத் தொங்க விடுவதற்காக மேலே உட்கூரையை ஒட்டி அமைக்கப்படும் சட்டம் இது.

Grooves:

வரித்தடம்

மேடையமைப்பில் இது ஒரு உத்தியாகும். தட்டிகளும், பக்கத் தட்டிகளும் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் பார்வையாளர் பார்வைக்குட்பட்டே சாயும் வண்ணம் இவ்வரித்தடம் மூலம் இயக்கப்படும். தட்டிகளின் மேல்பக்கமும் கீழ்ப்பக்கமும் இரண்டு மரச்சட்டங்களில் அமைக்கப்படும் வரித்தடங்களின் மீது பொருத்தப் பட்டிருக்கும். எனினும் இதன் செயல்பாடு அவ்வளவாக வரவேற்பு பெறவில்லை. வெற்று மேடைகளில் இதனைச் செய்து காட்டுவதென்பது அவ்வளவு எளிதானதல்ல. மேலும் ஒரு மேடையினின்று, இன்னொரு மேடைக்கு மாற்றம் செய்யும் போது மேடையின் அளவு வேறுபடுவதால் தட்டிகள் பயனற்றுப் போகும். பற்றுக் கொக்கிகளால் தாங்கப்பெறும் தற்காலத் தட்டிகள் மேற்சொன்ன பழைய முறையைக் காணாமல் செய்து விட்டது என்பதே உண்மை.

Ground Row:

தரை வரிசைத் தட்டி

தொடக்க காலத்தில் வரிசையாக வைக்கப் பெற்ற காற்றழுத்த விளக்குகள் மேடையின் பின் பகுதிக் காட்சிக்காகப் பயன் படுத்தப்பட்டன. வளர்ச்சியடைந்த நிலையில் மரச்சட்டத்தில் வரிசையாகப் பொருத்தப் பட்ட விளக்குகள் மேடைப் பரப்புக்குள் உள்ள பள்ளத்தில் வைக்கப்பட்டோ அல்லது 'தரை வரிசைத் தட்டி' என்னும் தட்டியால் மறைப்பு செய்யப் பெற்றோ பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மறைப்பு செய்யப் பயன்படும் தரை வரிசைத்தட்டி முரட்டுத் துணியால் சட்டமிடப் பெற்று உருவாக்கப்பெறும். இத்தட்டிகளின் மேற்பகுதி ஓரம் அலைகளைப் போல வெட்டப்

பட்டிருக்கும் ஒன்றன்பின் ஒன்றாக வைக்கப்படும் இவ்வகைத் தட்டிகள் அலைகள் போன்ற தோற்றத்தினையும் தருவதால் இவை அலைவரிசைத் தட்டிகள் (water rows) எனவும் பெயர் பெறுகின்றன.

Guest actor:

ஆதரவு நடிகர்

நாடகத்தில் ஒரு குறிப்பிட்ட நாடகப் பாத்திரத்தை முன்வந்து ஏற்றுக்கொள்ளும் நடிகர் ஆதரவு நடிகர் எனப்படுகிறார். வீட்டில் ஒரு விருந்தனர் போல நாடகக் குழுவோடு இவர் நடந்து கொண்டு ஆதரவு அளிக்கிறார். மிகப் பிரபலமான நடிகர்கள் கூட குறிப்பிட்ட நாடகக் குழுவினர் மீது அல்லது அதன் தயாரிப்பாளர் மீது அக்கறை கொண்டு இவ் வகையில் வேடமேற்பதுண்டு. குறிப்பிட்ட குழுவினரின் வெற்றிக்காக இத்தகைய செயல்பாடு அமைகிறது. பெரும்பாலும் இவ்வகை ஆதரவு நடிகர்கள் பொருளாதார ரீதியான பலன் எதையும் எதிர்பார்ப்பதில்லை என்று நம்பப்படுகிறது.

Hall Keeper:

அரங்க வாயிற்காப்பாளர்

நாடக அரங்க மேடையின் பின்பகுதியில் அல்லது ஓரமான பகுதியில் தடுக்கப்பட்டிருக்கும் பகுதி வாயில் அரங்க வாயில் எனப்படுகிறது. இவ்வாயில் வழியாக மேடைக் கலைஞர் களும் பணியாளர்களும் மட்டுமே வந்து செல்வதைக் கண்காணிப்பதும், முன் அனுமதி யின்றி அயலார் வராமல் பார்த்துக் கொள்வதும் அரங்க வாயிற் காப்பாளர் பணியாகும். மேடைக் கலைஞர்களுக்கும், தொடர்புடைய வர்களுக்கும் ஏதேனும் செய்திருப் பின் அவற்றைப் பரிமாற்றம் செய்வதும் இவரது கடமையாகும்.

Ham Acting:

உள்ளுணர்வற்ற நடிப்பு

நடிப்புத் திறனற்ற நடிகர்களின் நடிப்புத்தன்மை உள்ளுணர் வற்று நாடகத் தளத்துடனே அமைந்து நிற்பதுண்டு. நடிகரின் உள்ளார்ந்த நிலை வெளிப் படாமல் போவதால் முகத்தை மறைக்கத்தக்க வகையில் தொழில் நுட்ப வித்தைகள், ஒளியமைப்பு கள், வெடிச் சத்தங்கள், அர்த்த மற்ற சைகைகள் பயன்படுத்தப் படுவதுண்டு.

Hand Prope:

கையாளும் காட்சிப் பொருட்கள்

மேடையில் கலைஞர்கள் கையால் பயன்படுத்தத்

தக்கனவான காட்சிப் பொருட்கள் கையாளும் காட்சிப் பொருட்கள் எனப்படுகின்றன. காட்சியில் வரும் எளிதாக கையாளத்தக்க கடிதங்கள், பத்திரிகைகள், ஆவணங்கள், துப்பாக்கிகள், கத்திகள், சிறு பெட்டிககள், பேனா, பென்சில், சிறு குவளைகள் போன்ற பொருட்கள் இவ் வகைப்படும். கலைஞர்கள் உள்ளே நுழையும்போது அவர்களிடமே இவை ஒப்படைக்கப்படுவதும், காட்சி முடிந்து அவர்கள் திரும்பி வரும்பொழுது இவற்றை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதும் வழக்கமான நடைமுறையாக உள்ளது.

Hand - Puppet:

கைப் பொம்மை

கையால் இயக்கப்படும் பொம்மைகள் முழு வடிவத்துடனோ அல்லது நிழற் கூத்துக்களில் பயன்படுத்தப்படுவன போல தட்டையாகவோ இருக்கும். கையால் இயக்கப்படும் பொம்மைகளின் தலைகளும் கைகளும் மிகவும் வலுவானதாக அமைந்திருக்கும். இப் பொம்மைகள் மரத்தினாலோ, காகிதக் கூழினாலோ உருவாக்கப்பட்டு தளர்வான உடையுடன் காணப்படும். இவ்வுடை வழியாக பொம்மலாட்டக்காரர் கையை விட்டு சுண்டு விரலை பொம்மையின் தலையிலும், இரண்டாவது விரலையும் கட்டை விரலையும் அவற்றின் கைகளிலும் பிடித்த படி திரைக்குப் பின்புறமாக அல்லது கூண்டுக்குள் நின்று கொள்வார். பொம்மலாட்டக்காரர் பொம்மையை அசைத்த படி எளிய நகைச்சுவை மிகுந்த உரையாடல்களைப் பேசிய படியே பல நுணுக்கமான கூறுகளையும் செய்து காட்டுவார்.

Hand working:

கயிற்றுத்திரை இழுப்பு

மரபு வழியிலான மேடைத் திரையை மேலிழுக்கும் வழிமுறை இது எனலாம். அரங்க மேடையில் தொங்கவிடப்பட்டிருக்கும் திரையினூடே கோல் இல்லாத தூண்டிற்கயிறு மூன்று பகுதிகளினூடே செலுத்தப் பட்டு அவை அரங்கின் மேல் கட்டப்பட்டிருக்கும் மூன்று கம்பி வழியாக இணைக்கப் பட்டிருக்கும். கம்பிகள் வழியாக இணைக்கப்பட்டுள்ள மூன்று கயிறுகளின் முனைகளும் மேடையின் ஓரத்தில் இணைக்கப்பட்டு சீராக ஒரே நேரத்தில் இழுக்கப் படும். தொடக்க காலத்தில் இவ்வாறு கயிற்றினை மைய

மாகக் கொண்ட திரைகள் பயன் படுத்தப்பட்ட நாடக அரங்கினை கயிற்றரங்கு என்றும் சணற் கயிற்றரங்கு என்றும் பெயரிட்டழைத்தனர்.

Happening:

நிகழ்ச்சி

இயற்கைத் தன்மைமற்ற, பிரதி நிதித்துவமில்லாத மேலுரு வாக்கம் செய்யப்பட்ட நிலையில் உள்ள ஒரு அரங்கக்கலை வடிவம் இவ்வாறு பெயரிட்டு அழைக்கப் பெறுகிறது. இவ்வரங்கக் கலையில் காதுக்கும் கண்ணுக்கும் விருந் தளிக்கக் கூடிய கூறுகள் எதிரும் புதிருமாக அமைக்கப்படுவதாக இருக்கும். இசை, நடனம், திரைப் படம், ஒளியமைப்புகள், வன்மை யான சத்தங்கள், வாசனைகள் போன்ற யாவும் ஒரே நேரத்தில் கலந்து வழங்கப்படுவதாக இக் கலை அமைந்துள்ளது.

Harangue:

எழுச்சி உரை

நாடகத்தில் பார்வையாளரை நோக்கிப் பேசுவதாக அமையும் ஆவேசப் பேச்சு இவ்வகைப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தில் கட்டப்பொம்மன் பேசுவதாக அமைந்துள்ள உரை யும், ஜூலியஸ் சீசர் நாடகத்தில் அந்தோணியின் பேச்சும் இவ் வகைப்பாற்பட்டதேயாகும்.

Harleguin:

கோணங்கி

நகைச்சுவை அல்லது எள்ளல் நாடகத்தில் தோன்றும் கோமாளி நடிகர் இவர். முகப்பூச்சு அல்லது முகமூடி தரித்து, நகைச்சுவையும் குழந்தைத்தனமும் கலந்த தோற்றத்தில் பல வண்ண ஆடை யணிந்து இவர் காட்சியளிப்பது வழக்கம்.

Harleguinade:

கோணங்கிப் பாத்திரம்

(பார்க்க: Harleguin- கோணங்கி)

Heavy Character:

ஆளுமைப் பாத்திரம்

நாடகத்தில் பெருமிதமான ஆளுமையுடன் கூடிய பாத்திரப் படைப்பு இது. முரண் பாத்திரப் படைப்புக்கூட இவ்வகைப் பண்புடைய பாத்திரப்படைப் பாகவே கருதப்படுகிறது.

Hemp House:

சணற் கயிற்றரங்கு

(பார்க்க: Hand working- கயிற்றுத் திரை இழுப்பு)

Hero:

கதைத் தலைவன்

நாடகத்தில் முதன்மைக் கதை மாந்தராகத் திகழும் ஆண், கதைத் தலைவன் என்றழைக்கப் படுகிறான். நாடகத்தின் கதைப்

பின்னல் பெரும்பாலும் கதைத் தலைவனையும் கதைத் தலைவியையும் மையப்படுத்தியே அமையும். கதைத் தலைவன் என்ற பண்பு நிலைப் பாத்திரப் படைப்பு தொன்மைக் காவியங் களில் கற்பனையாக படைக்கப் பட்டு கடவுளையொத்த தன்மை கள் அவர்களுக்கு இருந்ததாகச் சித்திரிக்கப்பட்ட நிலையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

Heroic Drama:

வீரகாவிய நாடகம்

வீரச் செயல்களும் வலுவான உரையாடல்களும் கொண்டு வன்செயல்கள், முரண், வளமான காட்சியமைப்புகள் கொண்ட தன்மையுடன் வீர காவிய நாடகம் விளங்குகிறது. துன்பியலாகவோ, இன்பியலும் துன்பியலும் கலந்ததாகவோ இது அமைகிறது.

Heroine:

கதைத் தலைவி

நாடகத்தின் முதன்மைக் கதை மாந்தராகத் திகழும் பெண், கதைத் தலைவி என்றழைக்கப் படுகிறார். இவரும் கதைத் தலைவனுக்கொத்த நிலையில் நாடகங்களில் பங்களிப்புச் செய் கிறார். நாடகத்தில் கதைத் தலைவனுக்குரிய தனித்தன்மை வாய்ந்த பண்பு நலன்களைப் போன்று கதைத் தலைவிக்கும் தனித்தன்மை வாய்ந்த பண்பு நலன்கள் உண்டு.

High Comedy:

உயர் நகைச்சுவை

நகைச்சுவையை நளினமாக வும் கவர்ச்சியாகவும் அமைத்துக் காட்டவல்லதால் உயர் நகைச் சுவை எனப் பெயர் பெறுகிறது.

Historical Play:

வரலாற்று நாடகம்

வரலாற்று நிகழ்வுகள், வரலாற்று நாயகர்கள், வரலாற்றுப் படையெடுப்புகள் போன்ற வற்றை அடியொற்றி அமைந்து வரும் நாடகம் வரலாற்று நாடகம் என்றழைக்கப்படுகிறது. தமிழில் தேசபக்த சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன், இராஜராஜ சோழன் போன்ற பல நாடகங்கள் இருபதாம் நூற்றாண்டின் சிறப்புமிக்க வரலாற்று நாடகங்களாக விளங்குகின்றன.

Historical Present:

வரலாற்று முன்னிலை

கடந்தகால வரலாற்று நிகழ்வு களை மேடையில் பார்வையாளர் முன்னால் நிகழ்த்திக் காட்டும்

போது அப்போதுதான் அது நடைபெறுவது போல சித்திரிப்பதற்கு ஏதுவாக நிகழ் காலத்தில் கதை கூறிச் செல்லும் உத்திமுறை இது. உடனடியாக உணரும் தன்மைக்கு இவ்வுத்தி பயன்படுவதாக உள்ளது.

Humour:

நகைத்திறம்

புன்முறுவல் பூக்கச் செய்யும் நகைச்சுவைத் தன்மை நகைத் திறன் என அழைக்கப்படுகிறது. பார்த்து, புரிந்து கொண்டு நகைச்சுவையுணர்வுக்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் தன்மையும் இதன்பாற்படும். எனவே சூழல் நகைத் திறனுக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

Hyperbole:

மிகைப் பேச்சு

நாடகத்தில் குறிப்பிட்ட சூழலை அழுத்தமுடையதாக்க வேண்டி வேண்டுமென்றே இயல்புக்கு மாறான பேச்சினை பேசும் உத்தியினைக் கையாள்வதுண்டு. இப்பேச்சினை இலக்கிய ரீதியாக அப்படியே பார்வையாளர்கள் எடுத்துக் கொள்ளாமல், சூழலைப் புரிந்து கொண்டு அதன்படிக் கைக்கொள்ள வேண்டுவது அவசியமாகிறது.

Ideal Cast:

சீர்மிகு நடிகர் குழு

ஒரு நாடகத்தில் பொருத்தமாக அமைந்து வரும் குழு தொடர்பான நிலைப்பாடு முக்கியமான ஒன்றாகும். பாடப் பகுதிக்கேற்ப சரியான, பொருத்தமான நடிகர் குழு அமைந்து வரும் பொழுது அது வெற்றி பெறும் நிலையில் சீர்மிகு நடிகர் குழு என்றாகிறது.

Ideal Spectator:

சீர்மிகு பார்வையாளர்

ஒரு நாடகத்தை மனதாரக் கண்ணாலும் மனத்தாலும் உள்வாங்கிக் கொள்ளும் வண்ணம் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் பார்வையாளர்களே இவ்வகைப்படுவர். இவர்களின் போக்கில் நாடகம் புதுப் பொலிவு பெற்று விளங்கும் சூழல் உருவாவதும் உண்டு. நாடகக் கலைஞர்களை ஊக்கப்படுத்தித் தங்கள் பங்களிப்பினையும் இவர்கள் செய்து கொள்வார்கள்.

Illusion:

காட்சி மயக்கம்

போலியான தோற்றத்தை உண்மையானதாக ஏற்றுக் கொள்ளச் செய்யும் மயக்க உணர்வு நிலையே இது. சிக்கலானதாகக்

கருதப்பட்டாலும் இத்தகைய தோற்றம் இரசிப்புத் தன்மைக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நாடகப் பார்வையாளர்களுக்கு மேடையில் இடம்பெறும் காட்சிகளை நடப்பியல் போன்ற மயக்க உணர்வோடு ஏற்றுக் கொள்ளச் செய்வது இவ்வகைக் காட்சி மயக்கமே ஆகும்.

Image:

காட்சிப் படிமம்

நேரடிப் பார்வையில் வருகிற வடிவங்களான மனிதன், மிருகம் அல்லது சிற்பமாக வழங்கப் பட்ட அல்லது ஓவியமாக வரையப்பட்ட உருவங்கள், புகைப் படங்கள் யாவும் காட்சிப் படிமங்களே ஆகும். மேலும் மனத்தில் பதிகின்ற சொல். சொற்றொடர் போன்ற உருவாக்கும் காட்சிப் பரிமாணங் களும் இவ்வகைப் படிமங்களே.

Imagery:

காட்சிப் படிமப் புனைவு

நடிப்பு, மனிதத்தன்மை பொருட்கள், மற்றும் கருத்துக் களைப் பிரதி நித்துவம் செய்யும் வண்ணம் மனத்தில் காட்சிப் படிமங்களைப் புனைந்து காட்டுதலே இவ்வாறு குறிப்பிடப் பெறுகிறது. பாத்திரங்களின் பரிமாணம் பார்வையாளர் களைச் சென்றடைவது படைப் பாளியின் இத்தகைய காட்சிப் படிமப் புனைவுத் திறனிலேயே அடங்கியுள்ளது எனலாம்.

Imagination:

கற்பனை

மனத்திற்குள் படிமங்களை உருவாக்கி, எண்ணங்களைச் சேகரித்து புதிய நோக்கில் வெளிப் படுத்தும் தன்மையே கற்பனை யின் முக்கியமான கூறெனலாம். பொதுவாகவே, நாடகம் உள்ளிட்ட அனைத்துப் படைப்பிலக்கியங் களிலும் உற்று நோக்கப்பெறும் நிகழ்வுகளும், பதிவு செய்யப் பெறும் ஆதாரங்களும் இருப்பி னும் கூட கற்பனை மிகப் பெரிய பங்கினைக் கொண்டிருக்கும்.

Imaginative Writing:

கற்பனைப் படைப்பு

மனத்தின்கண் உருவாகும் காட்சிப் படிமம், கொள்கை களைச் சார்ந்தே படைப்புகளின் கூட்டமைவு நிகழ்கிறது. நாடகங்கள், கவிதைகள், சிறு கதைகள், நாவல்கள் யாவும் கற்பனைப் படைப்புத்திறனைக் கொண்டே மதிப்பீடு செய்யப் படுகின்றன. அறியப்பட்ட

ஆவணங்களை அடிப்படை யாகக் கொண்ட படைப்புகளும் உண்மை நிகழ்வோடு கற்பனை யையும் கலந்து தரவேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகின்றன.

Imitaion:

போலச் செய்தல்

(பார்க்க: imitative action- போலச் செய்யும் நடிப்பு)

Imitative action:

போலச் செய்யும் நடிப்பு

நடப்பியலை ஒட்டிய நிகழ்வு களை ஒத்து அப்படியே செய்து காட்டும் அல்லது நடித்துக் காட்டும் நிலை இது. நாடகம் என்பது போலச் செய்யும் கூறினை அடிப்படையாகக் கொண்டது. வாழ்வியல் கூறுகளைப் பார்த்து அதைப் போலச் செய்து பார்த்தலே போலச் செய்தல் (imitation) எனப் படுகிறது. சில பாத்திரங்களை நடித்துக்காட்ட சில மாதிரி நடைமுறை மாந்தர்களை மனத் தில் கொண்டு நடிப்பது போலச் செய்யும் நடிப்பு ஆகும். குறிப்பாக துன்பியல் பாத்திரங்களில் வரும் துன்பம், இறக்கம், பரபரப்பு போன்ற யாவுமே நடைமுறை யைப் பார்த்துப் போலச் செய்யும் தன்மையிலமையும் நடிப்பே எனலாம்.

Impersonation:

வேடமாற்றம்

ஆண் பெண்ணாகவும், பெ... ஆணாகவும் அல்லது நடிகர்கள் மிருகம் உள்ளிட்ட வேறு வேடங் களில் தோன்றும் நிலை இது. தமிழிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதியிலும் பெண்களுக்கான வேடங்களை ஆண்களே ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்து வந்தது. பெண்களை நாடகம் நடிப்பதற்காக அனுமதிப்பதில் சமுதாயக் கட்டுப்பாடுகள் இருந்து வந்துள்ள தால் ஆண்களே பெண் வேடங் களை ஏற்கலாயினர். பாலர் சபைகளில் ஆண்கள் மட்டுமே நடிக்கும் நிலை இருந்ததால் 'ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி' என்னும் பெயர் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வகை வேடத்திற்கேற்ப தலை மயிரை இயல்பாகவே நீளமாக நடிகர்கள் வளர்த்திருந்தார்கள். பெண் களை மிஞ்சும் அழகும் கவர்ச்சி யும் கொண்டு பல நடிர்கள் பெண் வேடங்களில் சிறப்புற்று விளங்கி யுள்ளனர். இது போலவே காலம் செல்லச் செல்ல பெண்களும் தமிழ் நாடக மேடையில் அறிமுகமான பிறகு பல பெண்கள்

ஆண் வேடமேற்று நடித்துச் சிறந்துள்ளனர்.

இவை தவிர ஆண் பெண்ணாக ஆள் மாறாட்டம் செய்யும் நிலையின் போதும் அந்நிகழ்வுக்காக மட்டுமே வேடம் மாற்றிக் கொள்வதும் உண்டு.

Implication:

உணர்வுக் குறிப்பு

பின்னால் வரப்போகும் நாடக முடிவினை முன்கூட்டியே உணரச் செய்யும் வண்ணமான இயற்கையான செயல்பாடு மூலம் குறிப்பால் வெளிப்படுத்தும் தன்மை இது. பார்வையாளர்கள் வரப்போகும் நாடக முடிவினைக் கற்பனை செய்து கொள்ள இவ் வகைக் குறிப்பு உதவுகிறது.

Implicit:

பொதி பொருள்

வெளிப்படையாகக் கூறாமல் பொருளை உள்ளடக்கமாக வைத்துக் கூறும் நிலை இது. நாடகங்களில் பாத்திரங்களுக் குள்ளான உரையாடல் சிறப்புக் கும், பாத்திரத் தன்மையின் வெளிப்பாட்டிற்கும் இத்தகைய பாங்கு சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

Impressionism:

பாவியல் கலைத்திறன்

நாடகம் உள்ளிட்ட படைப்பு களில் ஆசிரியர் இயல்புத் தன்மையை அதிகம் வலியுறுத் தாமல் தமது மனத்தில் உள்ள எண்ணங்களின் தாக்கங்களை காட்சிகளாக்கித் தரும் நிலை இவ்வகைப்படுகிறது. எண்ணங் களின் வெளிப்பாடாக மட்டுமே இலக்கியம் விளங்க வேண்டுமே தவிர வெறும் காட்சித் தொகுப்பாக இருத்தல் கூடாது என்னும் கோட்பாடே இதன் அடிப் படையாக அமைந்து நிற்கிறது.

Improvisation:

மேலுருவாக்கம்

முன்கூட்டிய திட்டமிடுதல் ஏதுமில்லாமல் அந்த இடத்தில் அந்த நொடியிலேயே ஒன்றை மேலுருவாக்கிக் காட்டுதல் இது. நாடகக் காட்சிகளின் ஒத்திகை யின் போது தற்காலத்தில் நவீன நாடகமாக்கலின் இம்முறை வெகுவாகக் கையாளப்படுகிறது. நாடகமேலுருவாக்கத்தில் நடிகரின் சுயதிறனே முக்கிய பங்காற்று கிறது.

Incident:

தனிநிகழ்வு

நாடகத்தின் நடிப்புக் கூறில் நிகழ்வின் ஒரு பகுதியாக இது

அமைந்து நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழலை விளக்குவதாக இது பயின்று வரும். இந் நிகழ்வுகள் ஒன்றையொன்று தொடர்புபடுத்தி கோர்வையாகப்படும் போது நாடகத்துக்கான கதைப் பின்னலாக அவை வடிவம் பெறுகின்றன.

Incidental music:

நிகழ்வு இசை

ஒரு நாடகத்தில் குறிப்பிட்ட நிகழ்வுக்காக உருவாக்கப்படும் தனி இசை இது. சில நேரங்களில் ஒரு நிகழ்வுக்காக உருவாக்கப்படும் இசை வெற்றி பெறாமல், நாடகக் காட்சிக்கும் பயன் தராமல் போவதும் தற்செயலாகச் சேர்க்கப்படும் தனி இசை பொருந்தி நாடகம் வெற்றி காண்பதும் நடைமுறையில் காணக்கிடக்கிறது.

Inferior Character:

கீழ்நிலைப் பாத்திரப்படைப்பு

நாடகத்தில் அதிக முக்கியத்துவமில்லாத நிலையில் தாழ்ந்த சிறிய பாத்திரப் படைப்பு இது.

Informality:

முறைமையின்மை

நாடகத்தில் சில பாத்திரங்கள் ஒழுங்குமுறைமையற்ற நிலையில் வரையறுக்கப் பெறாத உரையாடல்களைத் தன்னிச்சை... பேசுவது அல்லது பேசி நடி... போன்ற நிலைகளில் செயல்ப... துண்டு. சில நாடகாசிரியர்க... இவ்வகையிலேயே சில பாத்திரங்களை உருவாக்கிக் கொள்வதும் உண்டு. இவையாவும் வழக்கத்துக்கு மாறாக அமைந்திருக்கும்.

Initial incident:

தொடக்க நிகழ்வு

ஒரு நாடகத்தில் கதைப் பின்னல் உருவாக்கத்திற்கான முரண் தோன்றும் முதல் நிலையே தொடக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது.

Inmadias res:

நிகழ்விடைத் தோற்றம்

பார்வையாளர்களிடையே கவனப்படுத்தி உடனடி ஆர்வத்தினை உருவாக்கிக் கொள்வதற்காக நிகழ்வுகளுக்கு நடுவே கதை கூறல் மூலம் நடத்திக் காட்டப்படும் ஓர் உத்தி இது. சில நேரங்களில் முன்னிகழ்வுகளை நினைவுபடுத்திக் காட்டுவதாக அமையும் காட்சிக்கூட இவ்வாறு நடத்திக் காட்டப்படுவதுண்டு.

Inner proscenium:

சாயல் முன்மேடை முகப்பு

(பார்க்க: False proscenium- சாயல்மேடை முகப்பு)

Inner stage:

உள்மேடை

(பார்க்க: discovery space- பார்வை வெளி)

Inset:

உள் வைப்புக் காட்சியமைப்பு

சிறியதாக வடிவமைக்கப்பட்டு மேடையின் ஒரு மூலையில், ஓரமாக வைக்கப்படும் காட்சியமைப்பு இது. சில நேரங்களில் பின்னால் உள்ள காட்சிகள் பார்வையாளருக்குத் தெரியாமலிருக்க இவ்வகை உள் வைப்புக் காட்சியமைப்பு பயன்படுவதுண்டு.

Interior monologue:

உள்ளுணர்வு மொழி

நாடகத்தில் தனியொரு பாத்திரத்தின் உள்ளுணர்வு பேசுவதாக அமையும் ஒரு மொழிப் பகுதி இது. தனி மனிதரின் உணர்வுகள், அனுபவங்கள் ஆகியன இம்மொழியின் மூலம் ஏற்ற இறக்கத்துடன் வெளிப்பட்டு வருவதுண்டு. இவ்வகை மொழியில் நாடகாசிரியரின் எண்ண ஓட்டங்களும் கூட குறிப்பிட்ட பாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதுண்டு.

Interlude:

இடையீட்டுக் காட்சி

நாடக நிகழ்வின்போது நாடகக் காட்சிகளுக்கிடையே அல்லது அங்கங்களுக்கிடையே ஒரு குறிப்பிட்ட பகுதியில் இடையீடாக அமைந்து வரும் சிறு நாடக வரைவு இது. இது குறிப்பிட்ட நாடக நிகழ்வுக்குத் தொடர்பில்லாத பிற காட்சியாகவும்கூட இருக்கலாம். முதன்மை நாடகத்தின் கதைப் பின்னலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் இது அமைவதால் இடையீட்டுக் காட்சி எனப் பெயர் பெறுகிறது.

Intermedio:

இடை நிகழ் மன அமைவுக்காட்சி

மன அழுத்தம் தரவல்ல காட்சிகளுக்கிடையே அதன் வலிமையைப் போக்கும் வண்ணம் நிகழ்த்திக் காட்டப்படும் மென்மையான நகைச்சுவை ததும்பும் காட்சி. இது சண்டைக் காட்சியாகவும் கூட இருக்கலாம். இத்தாலியின் 15, 16ஆம் நூற்றாண்டுகளில் இது வழக்கில் இருந்து வந்துள்ளது. இவ்வகை நிகழ்வுகள் தொன்மக்கதைகளாகவோ அல்லது காவியப் பண்புடைய கதைகளாகவோ

அமைந்து வருவதோடு தனிப் படைப்பாகவும் படைத்துக் காட்ட வல்ல கூறுகளைக் கொண்டு விளங்கும்.

Intermission:

இடைவேளை

நாடகத்தின் இடையே காட்சி மாற்றத்திற்காக என்று இல்லாமல் நடிகர் ஓய்வுக்காகவும் பார்வையாளர் அயர்வு நீங்கிக் கொள்ளவும் விடப் பெறும் ஓய்வு வேளை இது. இவ்வேளையைப் புதிய காட்சியமைப்பின் மாற்றத் திற்காகவும் பயன் படுத்திக் கொள்வதுண்டு.

Intonation:

ஒலி நயம்

இசைக்கூறு பாங்கில் ஏற்படும் அழுத்த வேறுபாடு பேச்சில் மாற்றத்தினை ஏற்படுத்தி தன்மையான குரலை உருவாக் கும். இசையில் இது மிக முக்கிய மான கூறாக விளங்குகிறது.

Intrigue:

உட்கிளர்ச்சி

வஞ்சகம் நிறைந்த கதைப் பின்னல் கொண்டு விளங்கும் நிலையில் இவ்வகைத் தன்மை உருவாகும். இரகசிய உடன் படிக்கைகள், பரிமாற்றங்கள் இதன் முக்கிய கூறாக அமையும்.

Intrinsic:

உயிர்க்கூறு

ஒரு படைப்பின் உயிர் நாடியாக விளங்கக்கூடிய கூறு இவ்வகைப் படும். அடிப்படைக் கதைக் கருவை வலுப்படுத்தும் வண்ணம் அமைந்து வரும் தனிக் கூறு இது.

Iron Curtain:

இரும்புத் திரை

மேடை முகப்பில் பாதுகாப்புக் காக அமைக்கப்படும் பாதுகாப்புத் திரை (Safety Curtain)யினை அதன் உறுதியான அமைப்பின் காரணமாக இரும்புத் திரை என்னும் பெயரிட்டு அழைக் கின்றனர்.

Irony:

எதிரமைவு

வாழ்த்துவதுபோலத் திட்டுவதும், புகழ்வதுபோல இகழ்வதுமாக வஞ்சப் புகழ்ச்சி யாக ஒரு பொருளுக்கு நேர் எதிரான சொல்லைக் கூறி நகைப்பை வரவழைக்கும் நிலை இது.

Jack-Knife stage:

கத்தி வடிவ மேடை

நடிப்புப் பரப்பில் வந்து போகும் காட்சிகளுடனான இரண்டு நகர்வுத் தடங்கள் முன்

மேடைக்கும், பின் மேடைக் கும் மாறி மாறி நகர்ந்து செல்லும். இவ்வகை நகர்வுத் தடங்கள் கத்திமேடை அல்லது கத்திரிக் கோல் மேடை (scissor stage) என்றழைக்கப்படுகிறது.

Jester:

விகடன்

(பார்க்க: Court fool- அரசவை விகடன்)

Jig:

ஜிக்

எலிசபெத்திய மேடையில் வழங்கப்படும் முடிவமைதி நாடகம் (after piece) இது. சுமார் நான்கு பாத்திரங்களடங்கிய இக் குழுவில் கோமாளி உறுதியாக இடம் பெற்றிருப்பார். மேலும் ஒலியியைபுடைய உரையாடல் கள் கொண்டு துடிப்பான ஆடல் பாடலுடன் இது விளங்கும்.

Kabuki:

கபுகி

சப்பான் நாட்டில் பதினேழாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றிருந்த நாடகக் கலை வடிவம் இது. விரிவான ஆடையலங்காரம், சந்த நயமிக்க உரையாடல்கள், நேர்த்தியான நடிப்பு கொண்டு தனித்துவம் பெற்று இந்நாடகம் விளங்கியது. இசையும் நாடகமும் இணைய ஈடுபாட்டோடும் பாங்கான நடிப்போடும் நிகழ்த்தப்படும் கலையாக இக்கலை சிறப்புற்றுத் திகழ்வதால் காவியப் பாங்குடனும் பாடலுட னும் அமைந்து விளங்கிய சப்பானின் இன்னொரு நாடக வடிவமான ‘நோ’ (Noh) நாடகத்தினின்று இது வேறு பட்டு விளங்கியது.

Kallapart:

திருடன் வேடதாரி

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகங்களில் ஏற்றுக்கொண்ட வேடத்திற் கேற்ப கலைஞர்களை அடை மொழியிட்டு வழங்கும் வழக்க மும் இருந்து வந்தது. இவ்வகை யில் அக்காலகட்ட நாடகங் களில் மக்களைக் கவர்ந்த ‘திருடன்’ வேடமிட்டு கள்ளம், கபடம் செய்யும் பாத்திரத்திற்கு ‘கள்ளபார்ட்’ என்றே பெயரிடப் பெற்றது. நாடகக் காட்சியில் விறுவிறுப்பு ஊட்டுவதற்காக இத்தகைய நாடகப் பாத்திரத் தினைப் பெரும்பாலான நாடகங் கள் காட்சிப்படுத்தியிருந்தன. இப்பாத்திரத்தின் தாக்கம் பேசும் திரைப் படத்திலும் தொடரலா யிற்று.

Kamerny Theatre:

காமர்னி அரங்கம்

சோதனை முயற்சி நாடகங்களுக்காக 1914இல் மாசுகோவில் அலெக்சாண்டர் டெய்ரோல் என்பவரால் இவ்வரங்கம் தோற்றுவிக்கப்பெற்றது. கூட்டிணைப்பு (synthetic) முறையிலான அரங்கச் செயல்பாடு இங்கே சோதனை செய்து பார்க்கப் பெற்றது. இவ்வரங்கம் மேனாட்டு நாடகங்களைப் படைத்து வழங்குவதில் பெரும் பணியாற்றியது. இவ்வகையில் உருசிய நாடகங்களுக்கும் மேனாட்டு நாடகங்களுக்கும் இணைப்பு ஏற்படுத்த இவ்வரங்கு மேற் கொண்ட முயற்சி குறிப்பிடத்தக்கதாகக் கருதப் படுகிறது. அலெக்ஸாண்டர் டெல்ரேஸின் மறைவுக்குப் பின் இவ் வரங்கில் பணியாற்றிய பலர் புதிதாகத் திறக்கப்பெற்ற புஷ்கின் அரங்கில் சேர்ந்து கொண்டனர்.

Keening:

ஒப்பாரி

நாடகங்களில் அவலச் சுவையுடனான ஒப்பாரியை மட்டுமே மையமாக்கி நடத்தப்படும் நாடங்களும் உண்டு. இவை பெரும்பாலும் ஓரங்க நாடகமாக அமைக்கப்படுகின்றன.

Kirby's Flying Ballet:

கிர்பியின் பறக்கும் நடனம்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கிய பறக்கும் நடனக் குழுவினரின் நடனம் இது. வியக்கத்தக்க வகையில் கலைஞர்களை மேடையில் பறக்கவிட்டு நிகழ்த்திக் காட்டப் பெறும் இந் நடனத்தில் நடிகர்களின் முதுகுப் பகுதியிலிருந்து கொக்கி இழையின் மூலம் இணைக்கப் பெறுகின்றனர். முதுகுக்குப் பின்னால் உள்ள கொக்கி வெளியே பார்வையாளர்க்குத் தெரியா வண்ணம் ஆடையால் மூடப்பட்டிருக்கும். கொக்கியிலிருந்து இணைக்கப் பெறும் இழைக்கு 'கிர்பி இழை' என்றே இன்று பெயரிடப் பெற்று அழைக்கப் பெறுகிறது. கொக்கியில் இழையை எளிதாகப் பொருத்துவதற்கும், பிரிப்பதற்கும் ஏதுவாக வடி வமைப்பு செய்யப்பட்டு பறக்கும் போது விடுபட்டுவிடாதபடி பாதுகாப்பாகவும் உள்ளது.

Kitchen Sink Drama:

இழிநிலைச் சித்திரிப்பு நாடகம்

வாழ்வின் தாழ்ந்த நிலையையும், சீர்கேட்டையும் அவலங்களையும் சித்திரிக்கின்ற நாடகம் இது.

Kolattam:

கோலாட்டம்

கோலாட்டம், பெண்கள் விரும்பி ஆடும் ஆட்டமாகும். இதுவும் நாட்டுப்புறக்கலை வடிவை சார்ந்ததாகும். இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதச் செய்து ஒலியெழுப்பி பெண்கள் ஆடும் ஆட்டம் இது. கோலாட்டத்தை வடமொழியில் 'தண்டலாசியா' என்பர். இராசத்தானில் 'கண்டியராக்' என்று கூறுவர். காஞ்சிப் புராணத்தில் 'செவ்வாய்ச்சியர் கோலாட்டம்' என்ற குறிப்பு கிடைக்கிறது. தொடக்க காலத்தில் கண்ணனைப் போற்றும் பாடல்களே கோலாட்டப் பாடல்களாக அமைந்தன. காலம் செல்லச் செல்ல அரசியல், அறிவியல், சமுதாயச் சிந்தனைகள் யாவும் கோலாட்ட வடிவமாயின. தற்போது அனைத்து விழாக்களிலும் பெண்களால் கோலாட்டம் ஆடப்பெறும் நிலையைக் காண முடிகிறது. கோலாட்டத்தைக் கோலாட்டம், பின்னல் கோலாட்டம், கோலாட்டக் கும்மி என மூன்று வகையாகப் பிரிக்கலாம். கோல்களுக்கு வண்ணங்கள் பூசி அழகு செய்யப்படுகின்றன. சலங்கையும் அவற்றில் கட்டப்படுகின்றன. ஒயிற்கும்மியைப் போன்று கோலாட்டத்தை ஆண்கள் ஆடும் நிலையும் அறிய முடிகிறது. கழியாட்டத்தினை ஆண்கள் ஆடும் கோலாட்டம் என நா. வானமாமலை குறிப்பிடுகிறார், குலோட்டம் சமயம் சார்ந்த நாட்டுப்புறக் கலையாகத் தோற்றம் பெற்று காலமாற்றத்திற் கேற்ப தற்போது சமூகச் சார்புக் கலையாக மாற்றம் பெற்று வருகிறது எனலாம்.

Kummi:

கும்மி

கும்மியாட்டம் நாட்டுப்புறக்கலைவடிவங்களுள் ஒன்றாகும். பெண்கள் ஆடும் ஆட்ட வகையில் குறிப்பிடத்தக்கதாகவும் இது விளங்குகின்றது. பெண்கள் வட்டமாகச் சுற்றிவந்து பாடிய படியே கைக்குவித்தாடும் கூத்தாக இது அமைந்துள்ளது. 'கும்முதல்' என்ற சொல்லுக்குக் 'கைக் கொட்டுதல்' என்ற பொருள் கூறப்படுகிறது. 'கும்மு' என்ற சொல் மருவி 'கும்மி' என்றானதாக அ.கி. பரந்தாமனார் குறிப்பிட்டுச் சொல்கிறார். சங்க இலக்கிய அகநானூறு கும்மியை 'கொப்பி' என்று குறிப்பிடுகிறது. கும்மியை 'கொம்மை' என சீவக

சிந்தாமணி குறிப்பிடுகிறது. பொதுவாக கும்மி எனப்படுவது கும்மியடித்தல் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. பெண்கள் ஒப்பனையுடன் வட்டமாக நிலவுக் கும்மியடிப்பர். இக் கும்மியாட்டத்தை ஆந்திரத்தின் கர்பா நடனத்துடனும் இராசத் தானில் கும்மார் ஆடலுடனும் தொடர்புபடுத்துவர். கிராமப் புறங்களில் நடைபெறும் மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் திருவிழாக்களில் முளைப்பாலிகையைச் சுற்றி நின்று பெண்கள் கும்மியடிப்பர். மழைக்காகவும், பெண்கள் பருவச் சடங்கின் போதும், பொழுது போக்கிற்காகவும் கூட கும்மியடிப்பதுண்டு. 'கும்மிப் பாட்டு' தென்னாற்காடு மாவட்டத்தில் 'கன்னிப்பாட்டு' என்று வழங்கப்படுகிறது. கன்னிப் பெண்கள் பெரும்பான்மை யாகப் பங்கேற்பதால் இப்பெயர் வந்திருக்க இடமுண்டு. ஆண்கள் கொட்டும் கும்மி 'ஒயிற்கும்மி' என்று தனியாக பெயரிடப் பெற்று அழைக்கப் பெறுகிறது. ஒயிற் கும்மியின்போது முழுக்க ஆண்கள் தலைப்பாகையுடனும் கைக் குட்டை ஏந்திக் கொண்டும் காலில் சலங்கை கட்டிக் கொண்டும் ஆடுகின்றனர். கிறித்தவக்கும்மி, இசுலாமியர் கும்மி, வரலாற்றுக் கும்மி, புராணக் கும்மி, விடு தலைக் கும்மி என பாடு பொருளுக்கேற்ப கும்மிகள் பல தோற்றம் கண்டுள்ளன.

Label names:

பண்புப் பெயர்கள்

ஒருவரது ப ணி அல்லது பண்பு நலனைக் கொண்டு பெயரை அமைத்துக் கொண்டு அப் பெயரிலேயே நாடகங்களில் பாத்திரமாகப் படைத்துக் காட்டும் நிலை இது. நகைச்சுவை நாடகங் களில் நகையுணர்வினை ஊட்டு வதற்காகப் பெரும்பாலும் இவ் வகைப் பெயர்களே நகைச்சு வைப் பாத்திரங்களுக்கு வைக்கப் படுகின்றன.

Leaflet:

துண்டிதழ்

(பார்க்க: phamphlet- விளம்பரச் சிற்றேடு)

Legitimate Drama:

முறைமை நாடகம்

நடிப்பைமட்டுமே முக்கியத்துவப் படுத்தி அமையும் நாடகம் இது. இதை நேரடி நாடகம் என்று கூடக் கூறலாம். ஏனெனில் பாடல் களோ, ஆடல்களோ, ஆடம்பர இசைக்கூறுகளோ குழு நடனக் காட்சி நிகழ்வுகளோ இவ்வகை

நாடகங்களில் இடம் பெறுவதில்லை. அக்காலகட்டத்தில் ஆங்கிலேயே நாட்டில் பாடல்கள், இசை நிகழ்வுகள் தவிர்த்த நாடகங்களுக்கே முறைப்படியான உரிமம் வழங்கப்படும் நிலை இருந்து வந்தபடியால் இப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

Lighting technique:

ஒளியமைப்பு உத்தி

மேடையில் நாடகத்தின் போது காட்சிக்கேற்ப ஒளியினை அமைக்கும் நிலை ஒளியமைப்பு உத்தி எனப்படுகிறது. பகல் இரவுச் சூழல்கள், விளக்கு ஒளிச் சூழல் போன்றன குறிப்பிடத் தக்கவையாகும்.

Little theatre:

சிற்றரங்கம்

வியாபார நோக்கிலமையாமல், சோதனை நோக்கில் குறிப்பிட்ட சிறிதளவிலான பார்வையாளர்களை மையமாகக் கொண்டு நாடகம் நடத்தப்படும் நிலை இது. இது பயின்முறை (amateur) சார்ந்த அரங்கமாகும். நடிகர்களின் சிறப்பை உயர்நிலைப் படுத்தி அமைவதன்றி பொருளாதார வெற்றியைப் பற்றி இவ்வகை அரங்கு கவலை கொள்வதில்லை.

Liturgical Drama:

நற்கருணை நாடகம்

கிறித்துவ தேவாலயங்களில் வழிபாட்டு நோக்கில் நிகழ்த்திக் காட்டப்பட்ட நாடக வகை இது. தேவாலயத்தின் இறுதி உணவு விழா வழிபாட்டு முறைமையிலான நடைமுறைக் கூறுகளினாலும் இசைப் பாடல்களாலும் நாடகத்தின் அனைத்துக் கூறுகளையும் கொண்டு விளங்கியது. இவ்வகை நாடகங்களில் சமயக் குருமார்கள் பங்கு கொண்டதால் மிகவும் செல்வாக்கு பெற்று விளங்கியது.

Locale:

இடச்சார்பு

இது நாடகத்தில் காட்சி சார்ந்த கூறாகும். காட்சி நடைபெறும் இடம் இதில் முக்கியமாகக் கருதப் படுகிறது.

Lyric:

இசைப்பாடல்

இசைத்தன்மையுடைய சிறு பாடல் இது. கதைச்சூழலோடு பாடலாசிரியரின் உள்ள உணர்வை வெளிப்படுத்த வல்லது.

Make up:

ஒப்பனை

படைப்பாக்கக் கலைக்கான ஒப்பனை முறை எனப்படுவது

முன்னைக் காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வந்துள்ளது. வழிபாட்டு நிகழ்வாக நடத்துக் கலை விளங்கிய காலத்திலிருந்தே ஒப்பனை குறித்த சிந்தனை இருந்திருக்க வேண்டும். பலியிடும் நிகழ்வில் அந்தக் குருதிக் கறையை கைகளில் அப்பிக் கொண்டு ஆடுவதும், புனிதமெனக் கருதப் படும் வேள்விச் சாம்பலை அள்ளி முகத்தில் பூசிக் கொள்வதும் கூட ஒப்பனையின் பாற்பட்ட தொன்மைக்கால நிகழ்வுகளாகவே கருதப்படுகின்றன. ஒரு நடிகன் தாம் ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்திற் கேற்ப தம்மை மாற்றிக் கொள்வதற்கும், பார்வையாளரிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்வ தற்கும் ஒப்பனை பயனுள்ளதா கிறது.

தொடக்க காலத்தில் கடவுளர் சார்ந்த கதைகளே நாடக மாக வும், கூத்துகளாகவும் வழங்கப் பட்ட நிலையில் அவ்வகை ஒப்பனைகள் மிக வளமான தாகவும், கவர்ச்சிமிக்கதாகவும் அமைந்திருக்க வேண்டும். இவ் வகைக் காட்சிகளில் வரும் அரக்கர்கள் வேடம் கொடூர மானதாக அமைக்கப் பட்டிருக்கும் முகமூடிகள் (masks) இவ்வகை ஒப்பனைகளில் பெரும் பங்கு வகித்திருக்க வாய்ப்பு உண்டு.

தெருக்கூத்துக் கலைகளில் ஒப்பனைக்காக பலவகை நிறங் களிலான வண்ணப்பூக்கள் பயன் படுத்தப்படுகின்றன. அரிதாரம், செந்தூரம், காக்காப்பொன் போன்றவை குறிப்பிடத்தக்க ஒப்பனைப் பொருட்களாக விளங்குகின்றன.

இக்கால நாடகங்களில் ஒப்பனை இயல்பாகவும் எளிமையாகவும் மட்டுமே மேற்காள்ளப்பட்டு வருகின்றன. எனினும் 'பார்சி' நாடகங்களின் தாக்கம் பாலர் நாடக சபைகளில் ஒப்பனையில் மிகப் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. பகவத் கீதை, கிருஷ்ண லீலை போன்ற நாடகங் கள் மிகவும் வளமாக அமைந் திருந்தன. டி.கே.எஸ். சகோதரர் களின் 'எதுவாழ்வு' நாடகத்திலும் 'சிவலீலா' நாடகத்திலும் மிகச் சிறந்த ஒப்பனை முறை மேற் கொள்ளப்பட்டிருந்தது. தமிழ் நாடகத்தின் மிகச் சிறந்த ஒப்பனைக்கு எடுத்துக்காட்டாக தி.க. சண்முகம் 'அவ்வையார்' நாடகத்தில் ஏற்றுக்கொண்ட 'அவ்வை' வேடத்தைக் குறிப்பிட லாம்.

Malapropism:

ஒலி வழு

ஒரு சொல்லுக்குப் பதிலாக அதேபோல் ஒலிக்கும் தன்மை கொண்ட இன்னொரு சொல்லைப் பயன்படுத்துதல் இது. இது நகைப்புக்குரிய செயல்பாடாக அமைவதுண்டு. நாடகத்தில் நகைச்சுவைக்காக இவ்விதமான சொற்களைப் பேசுவது வழக்கில் உள்ளது.

Male impersonation:

ஆண் மாறுவேடம்

(பார்க்க: impersonation- மாறு வேடம்)

Manager:

மேற்பொறுப்பாளர்

நாடகக் குழுவை நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ளவர் இவராவார். தயாரிப்பாளருக்கு மிகவும் உறுதுணையாக இருப்பவரும் இவரே. பாலர் சபைகளில் இவ்வகை மேலாளரின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. நிரந்தரக் குழுமுறை நாடகக் குழுக்கள் யாவும் மேற்பொறுப்பாளரின் நேரடிச் செயற்பாட்டிலேயே இயங்கி வரலாயின. குழுவின் பொருளாதார நிலை, வரவு செலவு, நாடகப் பிரதிகளை வாங்குதல், பராமரித்தல், நாடகக் கொட்டகை களை வாடகைக்கு எடுத்தல் உள்ளிட்ட யாவும் குழு மேற் பார்வையாளர் (troupe manager) பணியாகும்.

Manducus:

மந்துகசு

இது உரோமன் நாடகத்தின் நிலையான பாத்திரமாகும். அகன்ற வாயும், பெரியதான பற்களும் கொண்டு விளங்கும் இவ்வகைப் பாத்திரம் பயத்தை ஊட்டும் நோக்கத்திற்காக மட்டுமே உருவாக்கப்பட்ட பாத்திரப் படைப்பாகும்.

Marakkattu:

மகரக்கட்டு

(பார்க்க: Voice change- குரல் மாற்றம்)

Mask:

முகமூடி

முகத்தை மறைக்கும் வண்ணம், கண்களுக்கும் வாய்க்கும் மட்டும் திறப்பு விடப்பெற்று வடிவமைக்கப் படும் ஒப்பனை சார்ந்த வடிவமே முகமூடி எனப்படுகிறது. தொடக்க காலத்தில் இவ்வகை வடிவங்கள் மரத்தினால் செய்யப்பட்டன. வடிவமைப்புக்கு ஏற்ப இவை உருவாக்கப்பட்டு வண்ணம் பூசப் பெற்றன. காலம் செல்லச் செல்ல

துணிகளும், இரப்பர் விரிப்பு களும் இதற்காகப் பயன் படுத்தப் பெற்று வருகின்றன. தமிழ் நாடக மேடையில் இவ்வகை முகமூடி களின் பயன்பாடு பெரும்பாலும் தெருக்கூத்துக் கலையில் அமைந்து வருகின்றது. நாடகங் களில் கடவுளர் உள்ளிட்ட தொன்மைப் பாத்திரச் சித்திரிப்பு களுக்கும் இவை முக்கியமாகப் பயன்படுகின்றன. நகைச்சுவைப் பாத்திரங்களுக்கான வேறுபட்ட முகவடிமைப்பிற்காகவும் முக மூடிகள் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

Masking Unit:

புற மறைப்புத் தொகுதி

மேடையின் பின்பகுதியை மறைப்பதற்கு ஏதுவாக உருவாக்கப் பெறும் காட்சியமைப்புக் கூறு களின் ஒட்டுமொத்த வடிவமே புறமறைப்புத் தொகுதி எனப்படு கிறது. மேலும் காட்சித் திரைத் தளத்தின் அடுக்குகளை மறைக்க வும் இது பயன்படுகிறது. இக் காலத்தில் காட்சித் திரைக்குப் பதிலாக கறுப்பு வண்ணத் திரை களும் பயன்படுத்தப்பட்டு வரு கின்றன. சில நேரங்களில் ஒரு நடிகரை மறைப்பதற்காக இன்னொரு நடிகரே தேவையின் அடிப்படையில் மறைப்பாளராகச் செயல்படுவதும் உண்டு.

Masque:

ஆடலிசை நாடகம்

ஆடல், இசை, உரையாடல் கலந்த நாடக வகை இது. இவ்வகை நாடகம் பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டு வாக்கில் மேனாடுகளில் மிகவும் வளர்ச்சி பெற்று விளங்கியது.

Mass Media:

மக்கள் தொடர்பு ஊடகம்

பெருமளவிலான மக்களைச் சென்றடையத்தக்க நிலையில் தொடர்புக் கருவியாகச் செயல் படும் ஊடகங்கள் இவ்வகையில் கருதப்படுகின்றன. நாடகம் தற்காலத்தில் மிகச் சிறந்த மக்கள் தொடர்புக் கருவியாகப் பயன் படுத்தப்படுகிறது இதனடிப் படையில் பல கருத்தமைவு நாடகங்கள் நடத்தப்பெறு கின்றன. தமிழகத்தில் திராவிட இயக்கக் காலகட்டத்தில் திராவிட இயக்கக் கொள்கைகளை மக்களை நோக்கி கொண்டு செலுத்த நாடகமே மக்கள் தொடர்புக் கருவியாகப் பயன் படுத்தப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. தற்பொழுதும் மருத்துவம், கல்வி, சமுதாய ஒழுக்கங்கள்

குறித்துப் பல கருத்துகள் அரசின் ஆதரவுடன் நாடகங்கள் மூலமே பிரச்சாரம் செய்யப்படுகின்றன.

Melodrama:

இன்பியல் நாடகம்

இயல்பான உணர்ச்சிகளை அதிகப்படுத்தி, உணர்ச்சி வயப் படச் செய்வதோடு துடிப்பான நடிப்புத் தன்மையையும் உள்ளடக்கி நிற்கக்கூடிய நாடக வடிவமாக இவ்வகை நாடகம் விளங்குகிறது. தொடக்க காலத் தில் இவ்வகை நாடகங்கள் பாடல், இசை, ஆடல் கலந்தவை யாக விளங்கின. தற்பொழுது பொருத்தமான கதைப் பின்ன லுடன், சுவை இறக்கமும் கொண்டு இன்பமான முடிவைத் தருவனவாக இவை விளங்குகின்றன.

Melopoeia:

இன்னிசையாக்கம்

நாடகப் படைப்பில் இசைக் கூறுகளை உருவாக்கம் செய்யும் பகுதியைக் குறிப்பது இது.

Message:

செய்தி

நாடகம் உள்ளிட்ட படைப்பு கள் வெளிப்படுத்தும் பொது வான கருத்துரை அல்லது அறிவுரையே செய்தி எனப்படு கிறது.

Method acting:

முறைமை நடிப்பு

நடிப்பிற்கான அணுகு முறையே நடிப்பு முறைமை என அறியப்படுகிறது. சானிசுலா வுசுகி (Stanislasvsky) என்பார் உருவாக்கிய நடிப்பு தொடர் பான முறைகளே இவ்வாறு அழைக்கப்படுகிறது. இம் முறைமையை ஆதரிப்பவர்கள். எதிர்ப்பவர்கள் என இருவகையி லும் கருத்துகள் பரிமாறப் பட்டன. இம்முறைமையினுள் நடிகர்கள் தாம் ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்திற்கு. தமது ஈடுபாட்டின் காரணமாக, உட்பொருளை வெளிப்படுத்தும் வண்ணமான கருத்துருவாக்கத்தினை காட்சிப் படுத்த முடியுமென்பது இம் முறைமையானது. குறிப்பிட்ட நடிகரின் உள்வாங்கலை அதிகப் படுத்துவதால் பிற நடிகர், பார்வையாளரோடான அவரது ஈடுபாடு அல்லது ஊடாடுதல் அற்றுப்போகச் செய்வதாக எதிர்ப்பாளர் கருத்துக் கொண்டுள்ளனர்.

Mime:

சைகை நடிப்பு

முக அசைவுகளாலும் சைகை களாலும் நடித்துக்காட்டும் முறைமை இது. உடலசைவும் இதற்குப் பயன்படுகிறது.

Mimesis:

போலச் செய்தல்

(பார்க்க: imitation- போலச் செய்தல்).

Mimetic:

நடிப்புப் போலி

குரலும் நடவடிக்கைகளும் பிறரை ஒத்து அமையும் வண்ணம் மாற்றிச் செய்யும் போலியான நடிப்பு இது.

Minstrel:

பாட்டுக் கலைஞர்

இசைப்பதிலும் பாடல் பாடுவதிலும் பாடல் இயற்றுவதிலும் தேர்ந்து நிகழ்ச்சியினை நடத்துபவர். நாடோடிப் பாடகராகவும் விளங்க வல்லவர்.

Miracle play:

அற்புத நிகழ்வு நாடகம்

இயேசுநாதரின் அற்புதங்களை மையப்படுத்தும் நாடகம் இது. பைபிள் கதைகள் அல்லது தூதர் கதைகள் இதில் இடம் பெறும். நற்கருணை நாடகங்களின் (liturgical dramas) வளர்ச்சி நிலையே இதன் வடிவம் எனலாம்.

Mise en scene:

காட்சி எச்சம்

நடிக்கப்பட்ட நாடகத்தின் காட்சித் திரைகள் உள்ளிட்ட உடைமைகள் நிகழ்ச்சியின் சூழல்கள் இதில் அடங்கும். இது ஆட்டத்திற்கு உதவிய மேடையமைப்பின் தோற்றமாகவும் அமையும்.

Modern Drama:

இக்கால நாடகம்

வரலாற்று நிலையில் அண்மைக் காலம் முதற்கொண்டு மாற்றம் பெற்று நடைமுறையில் இன்றளவும் செயல்பட்டு வரும் நாடகம் இக்கால நாடகம் எனப்படும். இவ்வகைக் காலகட்ட நாடகம் ஒரு சில கூறுகளில் ஏதேனும் பொதுமைப் பண்பினைக் கொண்டு விளங்கக்கூடும்.

Modernism:

புது நிலையாக்கம்

மரபுசார்ந்த நிலைப்பாடுகளினின்று மாறுபட்டு, காலத்துக்கேற்ப மாறுதல்களை ஏற்றுக் கொண்டு, நடைமுறை வழக்கத்தினின்றும் வேறுபட்ட நிலையில், இலக்கியம் உள்ளிட்ட வடிவங்களில் வடிவத்தையும் பாங்கினையும் மாற்றி உருவாக்கம் செய்தல் இவ்வகைப்படும். பொதுவாக புதிய கோட்பாடுகள் யாவும் இவ்வகைப் புதுமையாக்க முயற்சிகளின் வெளிப்பாடே என்று கூறலாம்.

Modulation:

சொல்லாடல்

ஒழுங்கு முறையுடன், இசைவானதாகச் சொல்லைப் பயன்படுத்தும் நிலை இது. அடிப்படை ஒலிப்புக் கூறுகளிலிருந்து அழுத்தம், தொனி யாவும் ஒலியியையுடன் மாறி வரும் தன்மை இதன் முக்கியக் கூறாகும். சொல்லழுத்தத்திற்கு ஏற்ப அதனை மாற்றிக்கொள்ளுதலும் முக்கியமானதாகும். தமிழ் நாடக உரைநடை உச்சரிப்பில் இவ்வகைச் சொல்லாடல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

Mono acting:

முறைமை நடிப்பு

ஒரு நடிகர் தான் மேற்கொள்ளும் பாத்திரத்தின் தன்மையை அறிந்து அதனோடு முடிந்த அளவு நெருக்கமாக இயைந்து அதன் பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அதே வேளையில் இயல்பாகவும் தனித்தன்மையோடும் படைத்துக் காட்ட மேற்கொள்ளும் கொள்கையும் உத்தியுமே முறைமை நடிப்பு எனப்படுகிறது.

Mono Drama:

ஒற்றை மாந்தர் நாடகம்

ஒரே ஒரு நாடக மாந்தரை மட்டுமே கொண்டு விளங்கும் நாடகம் இது. இந்நாடகத்தில் ஒரே ஒரு நடிகர் மட்டுமே இடம் பெறுவார்.

Monologue:

ஒரு மொழி

ஒரு நபரின் மூலம் வெளிப்படும் ஒரு சொல் அல்லது ஒரு பேச்சு இது. நாடகத்தில் ஒரு நடிகர் மூலம் நாடகத்தின் ஒரு பாடப் பகுதி பேசப்படுவதாக அமைந்து வரும். இவ்வகையில் ஒரு பொதுவான எண்ணத்தினை ஒரு பாத்திரம் மூலமாக வெளிப்படுத்துதல் ஒரு மொழி எனப்படுகிறது (interior monologue).

Monopolylogue:

பலவேடக் கலைஞர் நாடகம்

ஒரே ஒரு கலைஞர் மட்டுமே ஒரு நாடக நிகழ்வில் இடம் பெறுவதாக அமைந்து அந்த நடிகரே அந்நாடகத்தில் இடம் பெறும் பல பாத்திரங்களையும் வேடமேற்று நடிக்கும் தன்மை வாய்ந்த நாடகம் இவ்வாறு அழைக்கப்பெறுகிறது. இக்கலைஞர் மிகவும் திறம்பட்டவராகவும், முழுமையான நடிகராகவும் விளங்குபவராக அமைய வேண்டியது இன்றியமையாததாகிறது.

Montage:

ஒட்டிணைப்பு

வேறு வேறு பகுதிகளை ஒன்றாக இணைக்கும் நிலை இது. உள்ளுணர்வு ஒருமொழியைப் பயன்படுத்தும் நிலையில் நாடகாசிரியர் இவ்வுத்தியைக் கையாள்வதுண்டு.

Mood:

மனவுணர்வு

நாடகம் உள்ளிட்ட அனைத்து படைப்புகளிலும் ஆசிரியரின் மனவுணர்வின் தாக்கம் ஏற்படுவது இயல்பானது. எனினும் நகைச்சுவைக் காட்சிகள் உருவாக்கத்தில் ஆசிரியர் முற்றிலும் மாறுபட்ட மனவுணர்வுச் சூழலுக்கு உட்படுத்தப்படுகிறார் என்பதே உண்மை.

Moral interlude:

ஒழுக்கமுறை இடையீடு

நல்லொழுக்க நாடகத்திற்கும், இடையீட்டு நாடகக் காட்சிக்கும் பொதுவான பண்பு நலன்களைக் கொண்டு விளங்கும் நாடக வகை இது. ஒழுக்க நெறியைவிட அதிகமாக நகைச்சுவையையே இது கொண்டு விளங்குகிறது.

Morality Play:

நல்லொழுக்க நாடகம்

அறக்கருத்துகள் மூலம் நல்லொழுக்கம் புகட்டும் நாடக வகை இது. நொண்டி நாடகம் இவ்வகை நாடகத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். தீயொழுக்கமுடைய ஒருவன் தண்டனை பெற்று முடமாகிப் பின் திருந்தி நல்லவனாக மாறுவதான கதையும் அதில் அமைந்து வரும் உரையாடல்களும் அறக் கருத்துகளை வலியுறுத்துவனவாகும்.

Motion:

அசைவு

இயங்கு சக்தியுடனான நிலை அசைவு எனப்படுகிறது. அசைவற்ற தன்மைக்கு மாறுபட்ட நிலைப்பாடு இது. இக்காலத்தில் திரைப்படங்கள் அவற்றின் அசைவுத் தன்மையின் அடிப்படையில் அசைவுப் படங்கள் (Motion picture) என்று வழங்கப்படும் நிலையும் காணமுடிகிறது. இதுபோலவே மேனாடுகளில் நிழற்கூத்துகள் இவ்வகையில் பெயரிட்டு அசைவுக் கூத்துகள் என்று அழைக்கப்படும் நிலையும் அறிய முடிகிறது.

Motivation:

செயல் நோக்கம்

நாடகச் செயல்பாட்டுக்கான காரண காரியங்களை நம்பகத் தன்மையுடன் தோன்றச் செய்தலே செயல் நோக்கமெனப்படும். நாடகாசிரியர்கள் தாம் படைக்கும் பாத்திரங்களுக்கான செயல் நோக்கங்களை உருவாக்கும் போது அவை செய்ய வேண்டுவன, செய்யக்கூடாதன, சொல்லக்கூடாதன போன்ற கூறுகளின் அடிப்படை யிலேயே அவற்றை உருவாக்கம் செய்வர்.

Movement:

நகர்வு

நாடகம் படைத்தளிக்கப்படும் நிலையில் மேடையில் நாடகப் பாத்திரங்கள் மேற்கொள்ளும் நடிப்புக்கான இடப்பெயர்வு நிலையே நகர்வு எனப்படுகிறது. நடிப்புக்கான அடிப்படைக் கூறுகளில் நகர்வும் ஒன்றாகும். முன் மேடையிலிருந்து பின் மேடைக்கும், பின்மேடையி லிருந்து முன் மேடைக்கும் இடது வலதாகவும், வலது இடதாகவும், குறுக்காகவும் என பல நிலை களில் இவ்வகை நகர்வுகள் அமைந்து நிற்கும்.

Multiple setting:

பல்நிலைக் காட்சியமைப்பு

(பார்க்க:Composite setting- பன்முகக் காட்சியமைப்பு)

Mummery:

முகமறைக் கூத்து

முகத்தினை முகமூடியால் மூடிக்கொண்டு நடத்தப்படும் நாடக நிகழ்வு இவ்வகைப்படும். ஊமைக்கூத்து வடிவில் இது வடிவமைக்கப்பட்டிருக்கும்.

Mumming play:

முகமறை நாடகம்

(பார்க்க: Mummery - முக மறைக் கூத்து)

Musical comedy:

இசையணி நகைச்சுவை நாடகம்

இசை விரவி வரும் நகைச்சுவை நாடக வடிவம் இது. பாடல், இசை, உரையாடல் கலந்த வடிவ மாக இது வடிவமைக்கப் பட்டிருக்கும். மிக எளிய கதைப் பின்னல் கொண்டு பாடல், ஆடல், குழுவினர் செயல்பாடு ஆகிய வற்றை அதிகமாகக் கொண்டு நகைப்பினை ஊட்டும் வண்ணம் அமைந்திருக்கும்.

Mystery play:

இயேசுநாதர் வாழ்க்கை நிகழ்வு

இயேசுநாதரின் பிறப்பு, இறப்பு தொடர்பான நிகழ்வுகளை

விவரிக்கும் நாடகம் இது. புனித வேதாகம நூலின் கதைகளையும் இது சித்திரிப்பதாக அமையும்.

Mystery story:

புதிர்க் கதை

விளக்காத அல்லது விவரிக்கப் படாத நிகழ்வினை மையமாகக் கொண்டமையும் கதை இது. நாடகம், சிறுகதை, புதினம் போன்ற வடிவங்களில் இது பயின்று வரும்.

Mythological Drama:

பழங்கதை நாடகம்

மரபுசாந்த வழிபாடுகள், நம்பிக்கைகள் போன்றவற்றை மையமாகக் கொண்டு அமைந்து வரும் நாடகங்கள் இவ்வகைப் படும். அறிவியல் சாராத, நம்பகத் தன்மையற்ற வகையில் பெரும்பாலும் இவ் வகை நாடகக் கதைகள் அமைந்து விளங்கும்.

Narration:

கதை கூறல்

நிகழ்வுகளைக் கோர்வையாக கதை மூலம் வாய்மொழியாகக் கூறிச்செல்லும் கலை இது. வரலாறு, வரலாற்று நிகழ்வுகள், நாட்டுப் புறக்கதைகள் போன்றன இவ்வாறு கதை கூறலுக்கான களங்களாக அமை... இவ்வாறு கதை கூறல் பா... யாளர்களின் உணர்வு... கேற்ப அமைந்து சிறக்கும் தமி... வில்லிசை நிகழ்வுகள், பாட்டு... கச்சேரிகள், கதை நிகழ்வுகள் போன்றன கதை கூறல் மூலம் வெளிப்படுத்தப்படும் கலை களாக விளங்குகின்றன.

Narrative theatre:

கதைக் கூற்றரங்கு

கதை கூறல் முறையில், அங்க அசைவுகளின் துணையோடு காட்சிகளை விளக்கிச் செல்லும் வடிவம் இது. தமிழில் வில்லுப் பாட்டு எனப்படும் நாட்டுப்புறக் கலைவடிவம் இவ்வகைப் பாற் பட்டதாகும். மக்களுக்கு அறிமுக மான தொன்ம வரலாற்றுக் கதைகள், நாட்டுப்புறத் தெய்வ வரலாறுகள் போன்றன உரையும் பாடலும் கலந்த வடிவத்தில் இவ்வாறு படைத்தளிக்கப் படுகின்றன. 'புலவர்' எனப்படும் தலைமைப் பாடகர் கதைப் பாடலைப் பாட குழுவினர் பின் பாட்டுப் பாடுவர். நாண் பூட்டப் பெற்ற வில் வடிவிலான இசைக் கருவி முதன்மை இசைக் கருவி யாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் சலங்கைகள் கோர்க்கப் பட்டிருக்கும். பானை மீது

இவ்விசைக்கருவி வைக்கப் பெற்று இசைக்கப்படும். இன்றும் தமிழகத்தின் நாட்டுப்புறக் கோயில் கொடை விழாக்களிலும், சிறு தெய்வக் கொடை விழாக்களி லும் வில்லிசை எனப்படும் கதைக் கூற்றரங்கு மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. மிகச் சிறந்த கருத்துப் பிரச்சாரக் கருவியாகவும் இக்கலை பயன் பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தி லும் திருநெல்வேலி மாவட்டத்தி லும் இன்றும் வளமாக இக்கலை விளங்குகிறது.

Narrative verse:

கதைக் கூற்றுப்பா

கதை கூறிச்செல்லும் பாடல் வடிவம் இவ்வாறு அழைக்கப்படு கிறது. இவ்வகைக் கதைப் பாடல் கள் காப்பியக் கதைகள், காதல் கதைகள், நாட்டுப்பாடல் போன்றவற்றை அடிப்படை யாகக் கொண்டு அமைகின்றன. எனினும் சில கதை கூற்றுப் பாடல்கள் எவ்வகைப் பாகு பாட்டிற்கும் உட்பட்டு வருவ தில்லை. தமிழகத்தில் வில்லிசைப் பாடல்கள் கதை கூற்றுப் பாடல் களாகவே அமைந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

Narrator:

கதை கூறுநர்

கதைகூறலில் கதை கூறிச் செல்கின்ற கலைஞர் கதை கூறுநர் எனப்படுகிறார். இவர் பெரும் பாலும் வாய்மொழியாகவே இக்கதையினைக் கூறிச் செல்வார். கதை கூறுநர் ஒருவராகவோ ஒரு குழுவாகவோ கூட அமைதல் உண்டு. வில்லுப்பாட்டு போன்ற வற்றில் கதை கூறல் நிகழ்வில் தலைமைக் கதை கூறுநர் மட்டு மன்றி அவருக்குத் துணையாக உடனிருக்கும் கலைஞர்களும் கதைகூறலில் பங்கேற்பதுண்டு. எனினும் குழுவினரின் பங்களிப்பு தலைமைக் கதைக் கூறுகளுக்கு துணை செய்வதாகவும், கதை யின் தெளிவான விளக்கத்திற்கு வகை செய்வதாகவும் மட்டுமே அமைந்திருக்கும். நாடகத்தைப் பொறுத்தவரை 'கட்டியங்காரன்' எனப்படுபவர் நாடகக் கதை, கதை நடைபெறும் இடம், கதைச் சூழல், பாத்திரச் சிறப்புக்களைத் தொடக்கத்தில் கூறி நாடகத்தின் (கூத்தின்) போக்கிற்குத் துணை செல்வார்.

Naturalism:

இயற்கைக் கோட்பாடு

மனித மாண்பினைச் சிறிதும் மாறுபடாமல் அப்படியே

விளக்கிக் காட்டும் தன்மையின் பாற்பட்டதே இயற்கைக் கோட்பாடு எனக் குறிக்கப் பெறுகிறது. மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் மிருகக் குணங்கள்கூட அப்படியே வெளிக் கொணரப் பட்டு தம்மைத் தாமே நிலைப் படுத்திக் கொள்ளப் போராடும் மனிதனின் இயல்பு நாடகங் களின் மூலம் படம் பிடித்துக் காட்டப்படும் நிலை இக்கோட் பாட்டின்பாற்பட்டதேயாகும்.

Naturalistic drama:

இயற்கை சார்ந்த நாடகம்

வாழ்க்கையின் இயல்புக் கூறுகளைப் பிரதிபலிக்கும் நாடக வகை இது. இயற்கைத் தன்மையும், நடப்பியல் தன்மையும் ஒருங்கிணைந்த நிலையில் இது வடிவாக்கம் பெற்றமைகிறது.

New comedy:

தூய நகைச்சுவை நாடகம்

கி.மு. மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் கிரேக்க நாட்டில் செல்வாக்குப் பெற்று விளங்கிய நகைச்சுவை நாடக வடிவம் இது. சமூக அவலங்களை வெளிக்கொணர்ந்து திருத்த முயலும் தன்மையில் இது அமைக்கப் பெற்றிருந்தது. ஒரே மாதிரியான கதைப் பின்னல் கொண்டு, வழக்கமான திருப்பங்களுடன் மட்டுமே கதைப் போக்கு அமைந்திருந்தது.

Noh:

நோ

சப்பானின் காவிய நாடகம் இது. பதினான்காம் நூற்றாண்டில் பின்டோ வழிபாட்டு முறையினின்று உருவாக்கம் பெற்ற சடங்கு முறையை அடிப் படையாகக் கொண்ட நாடகம் இது. இவ்வகை நாடகங்கள் ஒழுங்கு முறைக்குட்பட்ட, நுணுக்கம் நிறைந்த கலை வடிவமாகத் திகழ்வனவாகும்.

Obligatory Scene:

கடப்பாடுடைக் காட்சி

குறிப்பிட்ட காட்சியில் நாடகாசிரியர் குறிப்பிட்ட நிகழ்வுகளை காட்சிப்படுத்தியே தீருவார் என பார்வையாளர்கள் நம்பிக்கை கொள்ளும் நிலையில் அவ்வாறே அமைக்கப்பட்டு வரும் காட்சி இவ்வகைக் காட்சி யின்பாற்படும்.

Oblique:

நேரல்லா நிலை

நாடகப் பாத்திரங்களின் குண நலன்களை நேரடி விளக்கம் மூலமாக வெளிப்படுத்தாமல் அப்பாத்திரங்களின் செயல் பாடுகள் குறிப்புகளின் மூல

மாகவே சித்திரித்துக் காட்டும் நிலை இது.

One act play:

ஓரங்க நாடகம்

சிறுகதையைப் போல ஓரங்க நாடகமும் ஒரு குறிப்பிட்ட கதைக் கருவை மட்டுமே மைய மாகக் கொண்டு அமையும். அதன் வடிவம், காட்சியமைப்பு, கதைப் பின்னல் யாவும் சுருக்கமாகவும் வரையறுக்கப் பெற்றதாகவும் அமைந்திருக்கும்.

Opera:

இசை நாடகம்

இசையினை மூலமாகக் கொண்டு வடிவமைக்கப்படுகிற நாடக வகை இது. நாடகக் கூறுகள் இசையின் மூலமாகவே வெளிப் படுத்தப்படும். இசைக்கு முக்கியத் துவம் அளிக்கப் பெற்றுள்ள நிலையிலும் இசை நாடகங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வேகமானதாகவும், இசை நகைச் சுவை நாடகங்களைவிட மேம் பட்டதாகவும் விளங்குகின்றன.

Opera bouffe:

மிகு கற்பனை இசை நாடகம்

நகைச்சுவை கலந்த மிகவும் கற்பனை வளம் செறிந்த இசை நாடகம் இது.

Oral transmission:

வாய்மொழிப் பரப்பீடு

பாடல்களைப் பாடுவதன் மூலமும் உரையாற்றுபவர் பேசு வதன் மூலமும் வாய்மொழியாக வெளிப்படுத்தப்படும் பரப்பீடு முறையையே இது குறிக்கிறது. இசை நாடகமாயினும், நகைச் சுவைத் தோரணங்களாயினும் வாய்மொழியின் வாயிலாகவே அவை சிறப்படைகின்றன. மேலும் பொதுவாகவே சாதாரண மக்களுக்கான வாய்மொழி இலக்கியங்களாகவே பல கலை வடிவங்களும் இருந்து வந்தன என்னும் கொள்கையும் இங்கே பொருத்திப் பார்க்கத்தக்கதா கிறது.

Oration:

விழா நிகழ்வுப் பேச்சு

குறிப்பிட்ட விழாவின்போது அவ்விழா குறித்து பேசப்படும் பேச்சு இவ்வகையில் குறிப்பிடப் பெறுகிறது. ஏற்ற இறக்கங்க ளோடு இப்பேச்சு அமைந் திருக்கும். தமிழ் நாடகங்களில் கூட இவ்வகை விழா நிகழ்வுப் பேச்சுகள் நாடகக் காட்சி களாகச் சித்தரிக்கப்படும் நிலை யைப் பல நாடங்களில் காணமுடி கிறது.

Pace:

நகர்வு வேக அளவு

நாடகங்கள் நகர்வு வேகத்தின் தன்மையை அதிகப்படுத்திக் கொள்ளும் வண்ணம் தொடர் நிகழ்வுகளைக் கொண்டு விளங்கும். இவ்வகை நகர்வு வேகம் கதை விளக்கக் கூறு களையும், வெளிப்பாடுகளையும் இலக்காகக் கொண்டிருக்கும். இசைப் பாடல் நாடகங்கள் மிக வேகமான நகர்வுகளைக் கொண்டு விளங்கும். பொதுவாக நடிப்பு வேகத்திற்கேற்பவும், மனநிலைக் கேற்பவும் இவ்வகை நகர்வு வேக அளவு மாறுபட்டு அமையும்.

Pace egging play:

முட்டை ஆடல் நாடகம்

நன்றாக வேகவைத்த முட்டை களை வண்ணச்சாயம் பூசியபின் ஒன்றன் மீது ஒன்னொன்றை உருளச் செய்து மோதி உடையும் வரை உருட்டிய பின் அவற்றை சாப்பிடுவதாக நாடகம் அமை யும். இது ஊமை நாடகமாக எவ்வித உரையாடலுமின்றி அமைந்துள்ள நாடகமாகும். இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாளைக் கொண்டாடும் வகை யில் இவ்வகை நாடகம் நடத்தப் பெறும்.

Pageant:

காட்சி மேடை

இடைநிலைக் காலத்தில் நாடக நிகழ்வுகளுக்கென இவ் வகை ஆடம்பரக் காட்சி மேடை கள் அமைக்கப் பெற்று அவற்றில் நாடகங்கள் நடத்தப் பெற்றன.

Pamphlet:

விளம்பரச் சிற்றேடு

சில பக்கங்களைக் கொண்ட சிற்றேடு இது. தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் பல நாடகக் குழுக் களும் இவ்வகைச் சிற்றேடு மூலம் நடிகர்கள், நாடகக் காட்சி, கதைச் சுருக்கம் இவற்றைக் குறிப்பிட்டு நாடகங்களை அறி முகம் செய்தும் விளம்பரம் செய்தும் வந்தன. குறிப்பாக மதுரை ஸ்ரீபாலசண்முகானந்தா சபா, டி.கே.எஸ். நாடக சபா ஆகியவற்றைத் திறம்பட நடத்திய தி.க. சண்முகம் சகோதரர்கள் இவ்வடிவில் விளம்பரம் செய்து தங்களின் பல நாடகங்களை தமிழகத்திலும் வெளிநாடுகளி லும் பிரபலப் படுத்தினார்கள். நவாப் ராஜமாணிக்கம் அவர் களும் தமது நாடகங்களுக்கு இவ் வகையில் நாடகக் குறிப்புக் களுடன் விளம்பரம் மேற்

கொண்டிருந்தார். தொழில் முறை குழுக்களைப் போன்று பயின்முறைக் குழுக்களும் தங்கள் நாடகங்கள் பற்றிய சிற்றேடு களைப் புகைப்படங்களுடன் அச்சிட்டு வழங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

Panorama:

பரப்புக் காட்சி

குறிப்பிட்ட படக்காட்சியை திரைவடிவில் பார்வையாளர் முன்னால் அவிழ்த்து உருள விடப்படும் நிலை இது.

Pantaloon:

கேலிக்கிடமானவர்

கோமாளியின் நகைச்சுவை யின் மூலம் கேலிக் கூத்துக் குள்ளாகும் வயதான நடிகர் இவர். இவரது தோற்றமே நகைப்பைத் தோற்றுவிக்கத் தக்கதாக விளங்கும்.

Pantomime:

சைகை நாடகம்

இவ்வகை நாடகத்தின் கலைஞர்கள் வாய் பேசாது தங்கள் கருத்துத்தையும் நடிப் பையும் மெய்யசைவின் மூலம் சைகை வழி வெளிப்படுத்துவர். இவ்வகை உத்தி முறை பேசா திரைப்படங்களிலும் பயன் படுத்தப்படுகிறது. சைகை நாடகங் களில் உரையாடல் ஏதும் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Paper boys play:

காகித உடை அணி நாடகம்

முழுக்க ஆண்களே வேட மேற்கும் நாடகம் இது. காகிதத் தால் ஆடையணிந்து நடிப்பதால் இப்பெயர் பெற்றது.

Parabasis:

அவைநோக்கு நாடகம்

பார்வையாளர்களாக அமர்ந் திருக்கும் அவையோரை நோக்கிப் பாடப்படும் எளிய இனிய இசை நாடகப் பாடல் இது. இது கிரேக்க நாட்டில் வழக்கில் இருந்து வந்த நாடக முறையாகும்.

Parable:

நீதிக்கதை

நீதிபோதனைகளை மக்களிடையே பரப்பும் வண்ணத்திலமைந்த கதைகளை நாடகமாக்கும் நிலையில் அவை நீதிக்கதை நாடகங்களாகின்றன. மதக்கோட்பாடுகள், ஒழுக்க நீதிகள், உண்மைகள் போன்றவை இவற்றில் இழையோடுவதாக அமையும். இவை உண்மையான நிகழ்வுகளோடு ஒப்புமைப்படுத்தி

வருவதாய் அமையும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல நாட்டுப்புற நாடகக் கதைகள் நீதிக் கதை களாகவே அமைந்திருந்தன.

Paradox:

முரணுரை

நாடகத்தில் இடம்பெறும் உரையாடல்களில் வரும் வெளிப் பாடுகள் சில நேரங்களில் இயல்புக்கு மாறானதாக அமைந்து வருதல் உண்டு. ஆனாலும் அது ஒரு நேர்முக உண்மையையே புலப் படுத்துவதாக அமையலாம். எடுத்துக்காட்டாக 'குழந்தை பிறக்கும்போது ஒரு தாயும் பிறக்கிறாள்' 'வீரன் ஒருமுறை சாவான்; கோழையோ பலமுறை சாகிறான்' என்பது போன்ற உரையாடல்களைக் கொள்ள லாம்.

Parallel:

இணை மேடை

மேடையின் மேல் அமைக்கப் பட்டு நிற்கும் தட்டு போன்ற சற்று உயர்ந்த அமைப்பு இது. இதனைத் தற்காலிகமாகப் பொருத்தவும், பிரிக்கவும் ஏது வாக மேல் பக்கமும் பக்க வாட்டுப் பிரிவுகளும் அமைக்கப் பட்டிருக்கும். தவிரவும் பிரித் தெடுக்க இயலாத மேடைத் தட்டுகளும் அமைக்கப்படுவ துண்டு. மேடையின் மேல் அமைக்கப்படும் மேடையாத லால் இது இணை மேடை எனப் படுகிறது. இதற்கு மேடைத் தட்டு (rostrum) என்ற பெயரும் உண்டு. இந்த மேடையில் ஏறுவதற்கும், இறங்கி அரங்கினுள் செல்வதற் கும் இணைப்புப் படிகள் உண்டு. சில வேளைகளில் இணை மேடை யின் முன்பகுதியைப் பார்வை யாளரிடமிருந்து மறைப்பதற் காக விரிப்பால் மூடப்படுவதும் உண்டு.

Parody:

நையாண்டிப் போலி

நகைச்சுவை, எள்ளல் நாடகங் களில் இன்னொரு நபரைப் போலவோ நிகழ்வைப் போலவோ போலியாக செய்து காட்டுவது நையாண்டிப்போலி எனப்படும். இவ்வகை நையாண்டி, அறிவுபூர்வமற்ற நிலையில் அமைந்துவர விமர்சனம் மட்டும் அறிவார்ந்த போலியாக அமை யும்.

Parsi troupe:

பார்சி நாடகக் குழு

பெர்சிய நாட்டின் தீவழிபடு இனத்தவரே 'பார்சி'கள் எனப்படு

வோராவர். இவர்கள் வியாபார நிமித்தமாக பம்பாயில் குடியேறிய வர்களாவர். நாடகத்தின் மேல் தீராப்பற்றுக் கொண்டு விளங்கிய வர்கள். மேனாட்டு நாடக உத்தியை நன்கு அறிந்திருந்தவர்கள். இதனால் அவ்வுத்திகளின் பால் ஈர்ப்புக் கொண்டு இந்தியாவில், அவ்வகை யில் நாடகம் நடத்த விரும்பினர். எனவே, வியாபார நோக்கிலமைந்த நாடகக் குழுக்களை மேனாட்டு பாணியில் 'தியேட்டிரிக்கல் கம்பெனி' (Theatrical company) எனப் பெயரிட்டுத் தொடங் கினர்.

வளமான காட்சிகள், மாறி வரும் காட்சிகள், பிரமாண்டமான காட்சி அமைப்புகள் இவற்றுடன் பல புதிய உத்தி களையும் இணைத்து 'பார்சி' நாடகக் குழுக்களின் தொன்ம (புராண) நாடகங்கள் இந்தியா வெங்கும் அரங்கேறத் தொடங்கின. கண்கவர் 'பார்சி' நாடகங்கள் பல மாநிலங்களிலும் மக்களால் விரும்பப்பட்டதால் வட்டார நாடகங்கள் நிலை குலைந்து போயின. 'பார்சி'யின் தாக்கம் எந்த வட்டார மேடையையும் விட்டு வைக்கவில்லை. தமிழக மும் இக்குழுக்களின் நாடகங்களி லிருந்து தப்ப முடியவில்லை. அதன் தாக்கம் தமிழ் நாடக மேடையில் பாதிப்பை ஏற்படுத் தியது. குறிப்பாக பாலர் சபைகள் இவ்வகை மாற்றத்தை விரும்பி ஏற்றுக் கொண்டன. பார்சி நாடகங்களில் 'இந்திர சபா' நாடகம் பெருவெற்றி பெற்ற குறிப்பிடத்தக்க நாடகமாகும்.

Pasquinade:

வசைப் பாடல்

இது கீழ்த்தர வகையிலான அங்கதச்சுவையிலமைந்த வசைப்பாடலாகும். பொது இடங் களில் இப்பாடல் நிகழ்ச்சி நடத்தப்படுவதாக இருக்கும். 'பாஸ்குயினேட்' என்ற சிலை யின் பெயரால் இப்பாடல் வழங்கப்படுகிறது. பழுதடைந்த நிலையில் 1501இல் கண்டெடுக்கப் பெற்ற இந்தச் சிலைக்கு வணக்கம் செலுத்தும் வண்ணம் செயின்ட் மார்க்ஸ் நாளில் அங்கதச் சுவையுடன் இவ்வகைப் பாடல் நிகழ்ச்சி இலத்தின் பாடல் வடிவில் நிகழ்த்தப்படுகிறது.

Pass door:

கடந்து செல்வாயில்

நாடக அரங்க முகப்பினின்று அவைக்குச் செல்வதாய் அமைந்து அரங்கின் ஓரத்திற்கும் பின்னரங்

கிற்கும் கடந்து செல்வதற்கான வாயில் இது. இவ்வாயில் மேடையோடுதொடர்புடைய நடிகர்களும், தொழில்நுட்பக் கலைஞர்களும், பிற பணியாளர்களும் மட்டுமே பயன்படுத்தத் தக்கதாகும். பார்வையாளருக்கு இவ்வாயில் பொது வழியாக அமைவது இல்லை.

Passion Play:

துயர நாடகம்

இயேசுநாதர் சிலுவையில் பட்ட துன்பங்களைக் காட்டும் சமய நாடகம் இது. பொதுவாக துயரங்களைச் சித்திரிக்கும் அனைத்து நாடகங்களும் இவ்வகையிலேயே பெயரிட்டு அழைக்கப் பெற்றன. எனினும் இயேசுநாதரின் வாழ்வு, சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகியன பதினேழாம் நூற்றாண்டு முதல் செருமனியில் இவ்வகை நாடகமாகப் படைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

Pastoral play:

மேய்ப்பர் நாடகம்

ஆடு மேய்ப்போரை மையப்படுத்தி அவர்களது வாழ்க்கையைப் படம் பிடிப்பதாக அமையும் நாடகம் இது. மேலும் நாட்டுப்புற வாழ்வின் கூறுகளை விவரிப்பனவாகவும் இவ்வகை நாடகம் அமைந்து வரலாம்.

Patent:

காப்புரிமை

ஒரு நாடகக் குழு அல்லது நாடகம் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ளும் உரிமை காப்புரிமை எனப்படுகிறது. இவ்வகையில் அந்த நாடகக் குழுவுக்கு குறிப்பிட்ட நாடகங்களை நடத்திக் கொள்வதற்கான உரிமை பாதுகாக்கப்படுவதாகிறது. இவ்வுரிமை காப்புரிமைப் பட்டயம் வழி உறுதி செய்யப்படுகிறது. மேலை நாடுகளில் இவ்வகை உரிமைச் சட்டத்தின் கீழ் காப்புரிமை நாடகக் குழுக்கள் (patent theatre) 1662லேயே தோற்றம் பெற்றுள்ளன.

Pathos:

அவலம்

நாடகத்தில் இரக்கவுணர்வினைப் பார்வையாளர்களிடையே உருவாக்கும் வல்லமை கொண்ட துன்ப நிகழ்வுகளைச் சித்திரித்துக் காட்டுவது அவலச் சுவையின் சிறப்பாகும். நாடகத்தின் விறுவிறுப்பான போக்கிற்கும் உச்சத்திற்கும் இச்சுவை துணை செய்கிறது.

Patron:

புரவலர்

நாடகம் உள்ளிட்ட கலை வடிவங்களை நடத்திக் காட்டுவதற்குரிய அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கிட நடிகர், எழுத்தாளர், இசையமைப்பாளர், நிறுவனம் இவற்றிற்கு பணமாகவோ, பரிசுப் பொருட்களாகவோ ஆதரவு காட்டுபவர் புரவலர் எனப்படுகிறார். நாடகச் செலவைக்கூட சொந்தமாக ஏற்றுக்கொள்ளும் புரவலர் குறித்தும் அறியக் கிடைக்கிறது.

Pattern:

பாங்கு

நாடகங்களின் பாத்திரப் படைப்பு, நடிப்புருவாக்க நிலையின் பண்புநலன், போக்கு இவை ஒத்திருக்கிற தன்மையையும் ஒழுங்கு முறை யையும் கொண்டு விளங்கும் போது சிறப்படைகிறது. இதன் பாங்கு தொடர்ந்து வரும் நாடகப் படைப்புகளின் வடிவமைப்பில் முறையான தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது. மேலும் இத்தகைய பாங்கு நடிப்புத் தன்மையின் வளர்ச்சிப் போக்கினடிப்படையிலும் உருவாதல் உண்டு.

Pause:

இடைத்தடை

ஒழுங்காகச் செல்லும் உரையிடையில் ஏற்படும் சிறிது இடைவெளி இது. ஒவ்வொரு வாக்கிய முடிவிலும் இது இயல்பாக நிகழுமாயினும், கவிதைகளுக்கு வரியிடைத்தடை வருதல் அடிக்கடி ஏற்படும். நாடக உரையாடல் வெளிப்பாட்டின் போதும் இது நிகழ்வதுண்டு.

Pavilion:

காட்சி மாடம்

இது அழகுபடுத்தப்பட்ட மண்டபம் ஆகும். பழங்கால அரண்மனைகளில் இதுபோன்ற அமைப்பு இப்பொழுதும் காணக் கிடைக்கின்றன.

Pedantic humour:

கல்விச் செருக்கு நகைத்திறம்

மெத்தப் படித்தவர் போல நடந்து கொள்கிறவர் மூலம் உருவாகும் நகைத்திறம். மேனாட்டுச் சொற்றொடர்கள், உவமைகள் போன்றவற்றைத் தமது பேச்சினிடையே உட்புகுத்திப் பேசிக்கொள்ளும் போது நகைப்பு தோன்றும்.

People show:

மக்கள் காட்சி

மேனாடுகளில் நாடகத்திற்காக மேற்கொள்ளப் பெற்ற

தோர் பரிசோதனை முயற்சி இது. கூட்டாக்கம் என்னும் முறையின் கீழ் இது மேற்கொள்ளப் பெறலாயிற்று. இதன்படி உரையாடலில் ஒரு பகுதி மட்டுமே நடிகர்களுக்கு வழங்கப்பட்டு நாடகக் கதை விளக்கப்பட்டது. மீதி உரையாடல் மேடையேற்றத்தின் போது நடிகர்களால் பேசிக் கொள்ளுமாறு செய்யப்பட்டது. நாடக ஆசிரியர், இயக்குநர் ஆகியோரின் துணையின்றி நடிகர்கள் இப்பணியை மேற்கொள்ளலானார்கள். ஒவ்வொரு நாடகப் படைப்பும் புதுமையுடன் படைக்கப் பெற்று ஒவ்வொரு நடிகரும் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாக்கித்தரப் பெற்றது. இவ்வகையில் முதல் முயற்சி 1966இல் இலண்டன் மாநகரில் அமைந்தது.

Peppers Ghost:

பெப்பரின் பொய்த் தோற்றம்

மேடையில் பொய்யான தோற்ற உருவங்களைச் செய்து காட்டுதலை அறிமுகப்படுத்திய ஜெ.எச். பெப்பர் என்ற இலண்டன் மாநகரத்தைச் சார்ந்த அறிஞர் பெயரில் இது வழங்கப்படுகிறது. உண்மையான மனிதரை மேடையில் நிற்க வைத்து அவருக்குப் பக்கத்திலேயே இவ்வகைத் தோற்றம் இவ்வறிஞரால் உருவாக்கப்பட்டது முதன் முதலாக 1862ஆம் ஆண்டு இம்முயற்சி மேற் கொள்ளப் பெற்றது. பிரதிபலிக்கத் தக்கனவாகவும் ஊடுருவத்தக்கனவாகவும் உள்ள கண்ணாடிப் பரப்பு இவ்வுத்திக் காகப் பயன்படுத்தப் பட்டது. எனினும் இதனைச் செய்து காட்டுவதில் உள்ள சிரமங்களும், பொய்த் தோற்ற உருவத்தின் பேச முடியாத நிலையும் இவ்வகைச் செயல்பாட்டுக்கு இடையூறு விளைவித்தன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இதன் செல்வாக்கு மேனாட்டு நாடக மேடையில் இடம் பெறலாயிற்று.

Perch platform:

மேடைத் தள பீடம்

மேடையில் ஒளியமைப்புக் கருவிகளை பொருத்துவதற்கான சற்று உயரமான அமைப்பு இது. அரங்கமுகப்புச் சுவருக்குப் பின்னால் இது அமைக்கப் பட்டிருக்கும்.

Performance:

நடத்துகை

(பார்க்க: performing art- நடத்துக் கலை)

Performance rate:

நடத்துகை அளவு

நாடகம் மேடையேற்றம் செய்யப்பெறும் அளவு நிலை இது. ஒரு நாளில் எத்தனை காட்சி ஒரு மாதத்தில் எத்தனை நாள்கள், நடைபெறும் காட்சி என்பன போன்ற அளவீடுகள் இதன் கணக்கிடுதலுக்குப் பயன் படக்கூடும். நாடகக் குழுக்களின் செயல்பாட்டில் இது முக்கிய மான விளைவுகளை ஏற்படுத்த வல்லது. நல்ல நாடகம் நடிகர் களுக்கும் குழுக்களுக்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் அளவீடு களைக் கொண்டிருக்கும்.

Performing Art:

நடத்துக்கலை

பார்வையாளர் முன்னால் நடத்திக்காட்டப்படும் அனைத் துக் கலை வடிவங்களும் நடத்துக் கலைகளே ஆகும். 'நட, நடி,' என்னும் அடியிலிருந்து நடத்துக் கலை என்னும் வடிவம் ஆக்கம் பெறுகிறது. செய்து காட்டுதல், போலச் செய்தல் போன்ற கூறு களும் இவ்வகைக் கலைகளுக்குத் துணை நிற்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரை கூத்து, ஆட்டம் ஆகிய கலை வடிவங்கள் சங்க கால நடத்துக் கலை வடிவங்களாக அறியக் கிடைக்கின்றன. துணங்கை, வெறி, வள்ளி, துடி போன்றன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன வாகும். மாதவி ஆடியதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடும் பதினோராடல் வடிவங்களும் நடத்துக்கலை வடிவங்களே நாடகம். தெருக்கூத்து, நடனம், நாட்டுப்புறக் கலைகள் யாவும் நடத்துக்கலை வடிவங்கள் என்ற வகைக்குள் வருவனவேயாகும். இவ்வகை நடத்துக்கலை வடிவங்கள் படைப்பாக்கமாக நடத்தப்படும்போது அவை நடத்துகை (performance) என்று ஆகின்றன.

Performing stage:

நடத்துமேடை

(பார்க்க: Stage- மேடை)

Performing style:

நடத்துப்பாணி

(பார்க்க: Style- பாணி)

Performing text:

நடத்துப் பாடம்

(பார்க்க: text- பாடம்)

Peripetia:

நிகழ்வு மாற்றம்

நாடகத்தில் திடீரென ஏற்படும் நிகழ்வு மாற்றநிலை இது. நாடகத்

தின் முக்கிய கதை மாந்தர்க்குத் தங்களது வளத்தில் ஏற்படும் தலைகீழ் மாற்றம்கூட இவ்வகைப் பட்டதே ஆகும்.

Permanent setting:

நிரந்தரக் காட்சியமைப்பு

மேடையில் நிரந்தரமாக வடிவமைக்கப் பெற்று, காட்சி மாற்றத்தின்போது அதன் சிறு பாகங்கள் மட்டுமே மாற்றிய மைக்கத்தக்கதாக உருவாக்கப் படும் காட்சியமைப்பு நிரந்தரக் காட்சியமைப்பாகும். காட்சிய மைப்புக்கான அதிக செலவினத் தைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வகைக் காட்சி அமைப்பு களை பெரும்பாலான குழுக்கள் கையாளத் தொடங்கியுள்ளன.

Permanent troupe:

நிரந்தரக் குழு முறை

ஒரு குழுவில் பணியாற்றும் அனைத்துக் கலைஞர்களும், ஒருசேர நாடகம் நடத்துவதற்கு ஏதுவாக நிரந்தரமாக அக்குழுவி லேயே ஒன்றாகத் தங்கியிருந்து நாடகம் நடத்தும் குழு முறை நிரந்தரக் குழு முறை எனப்படு கிறது. இவ்வாறாகக் குழுக்கள் ஓரிடம் விட்டு வேறிடம் செல்லும் போதும் ஒன்றாகவே செல்லும். இக்குழுவிற்கெனப் பல வகைப் பயிற்சியாளர்களும் நிரந்தர மாகவே குழுவோடு தங்கி இருப்பர். காட்சியமைப்புக்கான கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள் உடை வடிவமைப் பாளர்கள், ஒலி, ஒளி, தொழில் நுட்பாளர்கள் போன்றோரும் கூட இருப்பர். வரவு செலவு களை முறையாகக் கவனிப்பதற் கென்றே தனிப் பணியாளர் அமர்த்தப் பெற்றிருப்பார். கலைஞர்களுக்கும் பெரும்பாலும் மாத ஊதியமாகவே வழங்கப் பெறுவதுண்டு. தமிழகத்தில் பல தொழில் முறைக் குழுக்களும், குறிப்பாக பாலர் சபை நாடகக் குழுக்கள் ஒரு நிறுவனம் போல நிரந்தக் குழு முறையின் கீழ் செயல்பட்டு வந்தன.

Persiflage:

கிண்டல் பேச்சு

நாடகத்தில் பாத்திரங்களுக் கிடையே நடைபெறும் உரை யாடல்களில் கிண்டல் கலந்து பேசும் வண்ணம் அமைக்கப்பட்டு நகைச்சுவையை ஊட்டுவது அல்லது குறைகளைச் சுட்டிக் காட்டுவது என்பவற்றை முக்கிய மாகக் கொள்ளும் நிலை இது.

Physical action:

உடலியக்க நடிப்பு

நடிப்பு உடலியக்கம் சார்ந்த ***கூறு என்***பது பொதுவான நியதி. ***எனினும்*** சில நேரங்களில் உடல் **இயக்கம்** மிகைப்பட நடிப்பு **வெளி**ப்படும்போது இது **உடலியக்க** நடிப்பு என்றாகிறது. '*கூத்து*' வடிவத்தில் இதன் செயல் பாடு தெளிவாகத் தெரியவரும்.

Pin-spotting:

குறுகிய ஒளிவட்ட விளக்கு

ஒளிவட்ட விளக்கின் மீது நீளமான கூம்பு போன்ற வடிவத்தினை இணைத்துக் குறுகிய ஒளி வட்ட விளக்கு உருவாக்கப்படுகிறது. நடிகர்களின் நகர்வின் போது அவர்களை இலக்காகக் கொண்டு தொடர்வதற்கு இவ் வகை குறுகிய ஒளிவட்ட விளக்குகள் பயன்படுகின்றன.

Pipe:

இடைநிலைக் கட்டை

மேடையின் மேல் ஒளிய மைப்புக்கான கருவிகளைத் தொங்க விடுவதற்காகப் பயன்படுத்தப் படும் கட்டை இவ்வாறு அழைக்கப் படுகிறது. இடை நிலையில் தொங்கும் இக்கட்டையில் ஒலி விளக்குத் தொகுதி பொருத்தப் பட்டிருக்கும்.

Pipe pattern:

குழாய் உருளைச் சட்டம்

கனமான உருளை வடிவச் சட்டம் குழாய் உருளைச் சட்டம் எனப்பெயர் பெறுகிறது. மேடையின் மேல் கம்பியில் இது கட்டப் பெற்று காட்சித் திரைகளும் ஒளியமைப்புக் கருவிகளும் கட்டப் பயன்படுத்தப்படுகின்றன. ஒளிவட்ட விளக்குகள் கட்டுவதற்கான சட்டமாகவும் இது பயன்படுகிறது. குழாய் உருளைச் சட்டம் பயன்பாட்டிற் கேற்ப சுழல் உருளைச் சட்டம் என்றும் பெயர் பெறுகிறது.

Pit:

நிலத்தளம்

அரங்க நாடக மேடையை ஒட்டிய அவைப் பகுதியில் நிலத்தைத் தோண்டி குழியாக்கி உருவாக்கப்படும் தளம் நிலத் தளம் எனப்படுகிறது. தொடக்க கால நாடக மேடை தரை மட்டத்தில் அமைக்கப்பட்டது. மேடைக்கு முன்னாலமைந்த இடம் குழியாக்கப்பட்டு சேவல் சண்டைக்காகப் பயன்படுத்தப் பெற்றது. பின்னர் இப்பகுதி இசைக் குழுவிற்கான பகுதியாக வும் பார்வையாளருக்கான முன்வரிசைப் பகுதியாகவும் பயன்படுத்தப் பெற்றன. தற்காலத்

தில் இவ்வகை நிலத்தளப் பகுதி அரங்குகளில் அமைக்கப்படுவதில்லை.

Pitch:

தொனிநிலை மாற்றம்

உரையாடலின்போது உச்சரிப்பில் ஏற்படும் சொல்லழுத்தத்தில் தொனியை ஏற்றி இறக்குவது இவ்வகைப்படுகிறது. இவ்வகை ஏற்ற இறக்கத்தில் உருவாகும் அதிர்வுகளின் ஆழத்தைப் பொறுத்து தொனிநிலையின் ஏற்றமும் இறக்கமும் கணக்கிடப்பெறும்.

Platform:

மேடைத் தளம்

மேடையின் மேல்பரப்பில் நாடகக் காட்சிப்படுத்துதலுக்காக மேடாக அமைக்கப்படும் தளம் மேடைத்தளம் எனப்படுகிறது. மேடைத்தட்டும் காட்சியமைப்பும் மேடைத் தளத்தின் மேற்பரப்பிலேயே வைக்கப்படுகின்றன.

Platform Stage:

தள மேடை

(பார்க்க: Forestage- மேடை)

Plausibility:

நம்பகத்தன்மை

நாடகத்தில் உருவாக்கம் பெறுகிற பாத்திரங்கள், எண்ணங்கள், நிகழ்வுகள் [illegible]வற்றின் ஏற்றுக் கொள்ள[illegible] நிலையே நம்பகத் தன்[illegible] எனப்படுகிறது. இவ்வகையி[illegible] இடம் பெறுகிற பாத்திரங்கள், நிகழ்வுகள் மற்றும் உரை யாடல்கள் யாவும் முழுதும் உண்மையென்றில்லாவிட்டாலும் அவை காரண காரியத்தோடு அமைந்து வரும். இத்தகைய நாடகப் படைப்பு சிறப்பான படைப்பாக அமைவதுண்டு. உண்மை வரலாற்று நாடகங்கள் பெரும்பாலும் இவ்வகையிலேயே நாடகமாக்கம் செய்யப் பெறுகின்றன.

Play:

நாடகம்

(பார்க்க: Drama- நாடகம்)

Play bill:

நாடக விளம்பரம்

நாடகம் நடைபெறப்போவது குறித்த விளக்கமான விளம்பரங்கள் இவ்வகைப்படும். சுவரொட்டி வடிவிலோ பிற வடிவிலோ இது அமையலாம். சுவரொட்டியிலேயே நாடகத்தின் முக்கிய காட்சியை முன்னிலைப்படுத்தி இவ்வகை விளம்பரம் செய்யப் படுவதும் உண்டு. கையால் எழுதப்படும் நாடக விளம்பரங்களும் இதில் அடங்கும்.

Play house:

நாடக சாலை

தமிழகத்தில் நாடகம் நடத்தப் படும் கொட்டகை 'நாடகசாலை' எனவும் பெயரிட்டு வழங்கப் பட்டு வந்த செய்தி வரலாற்றுக் குறிப்புகள் மூலம் காணக் கிடைக்கின்றது. அவை எனப் படுவது பொதுவான நடத்துக் கலைகளுக்கான நடத்து இட மாக பொருள்பட்டு நிற்க நாடக சாலை நாடகக் கலைக்கான நடத்து இடமாக மட்டுமே பரிணமித் திருக்க வேண்டுமென எண்ண முடிகிறது. கி.பி. 6-8ஆம் நூற்றாண்டு வரையதாகக் கருதப் படும் தேவராப் பாடல்கள் 'ஆடக சாலை' என ஆட்ட அரங்கி னைக் குறிக்கிறது. இதனைத் தொடர்ந்து பத்தாம் நூற்றாண்டு வாக்கில் சோழர்காலக் கல் வெட்டு 'நாடகசாலை' என்ற ஒரு குறிப்பினைத் தருகிறது. அது போலவே திருவிடைமருதூர் கல்வெட்டு அரங்கினை 'நாடக சாலை' எனப் பெயரிட்டுக் குறிக் கிறது. இதில் ஏழு அங்க ஆரியக் கூத்து நடத்தப் பெற்றதாகவும் அறிய முடிகிறது. குமரி மாவட்டத் தில் சுசீந்திரம் கோயிலில் அரங்கினைச் 'சபா மண்டபம்' என்ற பெயரில் அழைக்கக் காண லாம்.

Play plan:

நாடக உருவரைக் குறிப்பு

நாடகத்தின் முக்கிய கூறு களான நடிப்பு, பகுப்பு, நடிகர் களின் உள்வருகை, வெளியேற்றம் போன்ற குறிப்புகளைத் தரும் நிலை உருவரைக் குறிப்பாகும். பயன்பாட்டு நோக்கில் மட்டுமே வடிவமைக்கப்பட்ட இக் குறிப்புகள் நாடகத்தின் படைப்புக்கும், காட்சியமைப்புப் பொருள்களின் செயன்மைக்கும் உதவிப் புரிவதாய் அமைகிறது.

Play reading:

நாடக வாசிப்பு

நாடக ஒத்திகையில் மிக முக்கியமான கூறு இது. முறை யான ஒத்திகை ஆரம்பிக்கப்படும் முன்பு அனைத்துக் கலைஞர் களையும் ஒரு சேர வைத்துக் கொண்டு உரிய நாடகப் பிரதி யினை ஒவ்வொரு நடிகரைக் கொண்டும் வாசிக்கச் செய்வது மிகவும் பயனுள்ள விளைவினைத் தரவல்லது. குறிப்பாக நாடகத்தின் ஆழத்தையும், அதன் கருவையும் புரிந்து கொள்ள இது பயன்படும். மேலும் யார் யாருக்கு எந்தப் பாத்திரம் பொருந்தி வருமென்பதை அறிந்து கொள்ளவும், அப் பாத்திரத்தின் மேல் குறிப்பிட்ட

நடிகர் தன்னம்பிக்கை கொள்ளவும் இம்முறை பயன்படும்.

Play with in a play:

நாடகத்துள் நாடகம்

ஒரு முழு நீள நாடகத்தின் நடுவே சிறு வடிவிலான நாடகம் ஒன்றினைத் தொடர்புபடுத்தி நடத்திக் காட்டுதல் நாடகத்துள் நாடகம் எனப்படுகிறது. முதன்மை நாடகக் கதைக்கு வலு சேர்க்கும் வண்ணம் இவ்வகை உத்தி கையாளப்படுகிறது. தி.க.சண்முகம் சகோதரர்கள் படைத்து வழங்கிய 'உயிரோவியம்' என்னும் நாடகத்தில் 'துரோபதை' என்னும் சிறு நாடகம் அமைக்கப் பெற்றிருந்தது. இந்நாடகக் காட்சிக்காக, அரங்கிற்குள் ஒரு சிறு அரங்கம் அமைக்கப்பெற்றது. அக்காலக் கட்டத்தில் ஒளி குறைப்புக் கருவியின் துணையுடன் இக்காட்சி செய்து காட்டப்பட்டது. 'இவ்வுள் நாடகத்திற்காக அமைக்கப்பட்ட திரைகளின் அழகையும், அப்படுதாக்களில் கணத்துக்குக் கணம் வர்ண விசித்திரங்களைப் புரியும் விளக்குகளின் வரிசைகளையும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்' எனப் பிரகண்ட விகடன் பத்திரிகை அப்போது இவ்வுத்தியினைப் பாராட்டி எழுதியிரு... இங்கு குறிப்பிடத்தக்கது.

Play writer:

நாடகாசிரியர்

நாடகத்தை எழுதியளிப்பவர் இவரே. நாடகத்தின் கதையைத் தேர்ந்து அதற்குரிய கருவை மையப்படுத்தி கதைப் பின்னலை உருவாக்கி, பாத்திரங்களைப் படைத்தல் செய்து உரையாடல்களையும் உருவாக்குபவர் இவர். மேலும் நாடகக் கூறுகளான தொடக்கம், ஏற்றம், முரண், உச்சம், வீழ்ச்சி (இறக்கம்), முடிவு போன்ற வடிவ அமைப் பையும் மனத்தில் கொள்ள வேண்டியது இவரது நாடக ஆக்கத்தின் முக்கியமான பணியாகும். நாடகாசிரியர் தமது சொந்த எண்ணங்களையும், கற்பனைகளையும் கூட தாம் படைக்கும் பாத்திரங்கள் மூலமாக உயிர் பெறச் செய்ய வல்லவர்.

Plot:

கதைப் பின்னல்

நாடகக் கதை நிகழ்வுகளின் வைப்புமுறையே கதைப் பின்னல் எனப்படுகிறது. மிகவும் கவனமாக அடுக்கப்படும் தொடர்புடைய செய்கைகளினால் உணர்ச்சிப் போராட்டத்தை

உருவாக்கி எதிரெதிரான சக்திகள் மூலம் உச்சநிலை ஏற்படுத்தப் பெறும். அவ்வகையில் உருவாகும் உச்சம், அதனைத் தொடர்ந்து வரும் வீழ்ச்சி இவற்றின் தொகுப்பே கதைப் பின்னல் எனலாம். நாடகத்தின் சிறப்புக்கு இக்கதைப் பின்னல் மிகவும் முக்கியமானதாக அமைகிறது.

Poetic drama:

கவிதை நாடகம்

கவிதை வடிவிலான நாடகம் இது. உரையாடல்கள் யாவும் பாடல் வரிகளால் ஆக்கப் பட்டிருக்கும். தமிழில் பல கவிதை நாடகங்கள் வெளி வந்துள்ளன. இவை பெரும்பாலும் படித்தற் குரியனவாகவே அமைக்கப் பட்டுள்ளன. மனோன்மணீயம், கயற்கண்ணி, பனிமொழி, அனிச்ச அடி போன்றன இவ்வகையில் குறிப்பிடத் தக்கவையாகும்.

Poetic Justic:

கவிதை நீதி

கதைகூறல் முறையில் அமைந்து வரும் கதைக்கூற்று நாடகங்களின் கவிதைகளில் நன்மை வெற்றி பெறுவதாகவும், தீமை தண்டிக்கப் படுவதாகவுமான நீதி சொல்லப் படுவது வழக்கமாகக் கொள்ளப் படுகிறது. தமிழகத்தின் வில்லிசைப் பாடல்களில் இவ்வகை கவிதை நீதியே விஞ்சி நிற்பதைக் காணலாம்.

Poetic license:

கவியுரிமை

ஒரு கவிஞன் தன் படைப்புக் களுக்காக நடைமுறையில் உள்ள கவிதை வரையறைகளினின்று மாறுபட்டு தாம் விரும்பும் வண்ணம் தனது கவிதையை ஆக்கிக்கொள்வதே கவியுரிமை என்றழைக்கப் பெறுகிறது. மரபுக் கவிஞர்கள் பெரும்பாலும் இவ்வகை உரிமையை எடுத்துக் கொள்வதில்லை. இதுபோலவே கவிதை நாடகங்களிலும் சில நேரங்களில் இக்கவியுரிமை பேணப்படுகிறது.

Point of attack:

தாக்கு நிலை

நாடகக் கதையில் முதன்மை நடிப்பு உருவாகும் கட்டமே தாக்குநிலை எனப்படுகிறது. இத்தாக்குநிலை நாடகத்தின் தொடக்கத்திலோ அல்லது நாடகத்தில் உச்சநிலைக் கட்டத் திற்கு சுற்று முன்பாகவோ அமைந்து வரும்.

Point of view:

நோக்கு நிலை

இது படித்தற்குரிய இலக்கியங் களில் அதன் ஆசிரியரின் கருத்துக்

களின் தாக்கத்தின் அடிப்படை யில் அமைந்து வரும் நிலை. நாடக இலக்கியத்திலும் அவ்வகையில் பயின்று வருதலுண்டு. ஆசிரியரின் மனநிலை, தனிக் கருத்து, செயலறிவிலான குறிப்பு போன்றன இவ்வகைத் தாக்கத்தினை ஏற்படுத்தவல்லன.

Political play:

அரசியல் நாடகம்

இலக்கியங்கள் அரசியலின் ஆக்கத்தில் பெரும் பங்கு வகிக் கின்றன. நாடகமும் இதில் பங்களிப்பு செய்து வருகின்றன. அரசியல் கட்சிகளின் கொள்கை விளக்கங்கள், கருத்துக்கள் நாடகங்களின் கதையாகவோ அல்லது உரையாடலாகவோ அல்லது காட்சியாகவோ வடிவம் பெறுவதுண்டு. தமிழ் நாடக மேடையும் இதற்கு விதி விலக் கல்ல. திராவிட இயக்கக் கொள்கை களைப் படம் பிடிக்கும் பல நாடகங்கள் தமிழில் ஆக்கம் பெற்றுள்ளன. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் நாடகங்கள் திராவிட இயக்க உணர்வு நாடகங்களாகும். ‘சோ’ அரசியலை நையாண்டி செய்யும் வண்ணம் ஆக்கியுள்ள நாடகங் களும் அரசியல் நாடக வகை யைச் சார்ந்தவையே.

Popular Ballad:

மக்கள் கதைப்பாடல்

தனி மனிதரை முன்னிலைப் படுத்தா நாட்டுப்புறக் கதைப் பாடல் மக்கள் கதைப்பாடல் எனப்படு கிறது. வாய்மொழி இலக்கிய மாகப் பாடல் வடிவில் இது வெளிப்படுகிறது.

Portal opening:

அணி வாயில்

மேடைக்கு மேல் உள்ள அரங்க முகப்புப் பகுதியைச் சிறிய தாக்கும் பொருட்டு அரங்க முகப்புக்குப் பின்னால் தற்காலிக மாக அலங்காரம் செய்து வடிவமைக்கப்பட்ட அகலமான அரங்க முகப்பு வைக்கப்படுகிறது. இவ்வாறு செய்யும்போது அரங்க முகப்புவாயில் சிறியதாகிறது. இதுவே அணிவாயில் எனப்படு கிறது. உள்ளே மேடையில் காட்சித் திரைகளின் அளவு சிறியதாக இருக்கும் நிலையில் இதுபோன்ற அணி வாயில் உருவாக்கப்பட்டு சரி செய்யப்படுகின்றன.

Portrayal:

உருவப்படுத்துதல்

நாடகத்தில் ஒரு கதை மாந்தராக வேடமேற்கின்ற நடிகரின் பாத்திரத்திற்கேற்ற நடிப்புத் தன்மை உருவப்படுத்துதல்

மூலமே வெளிப்படுகிறது. ஏற்றிருக்கின்ற பாத்திரத்தோடு ஒன்றி ஒப்புருவம் கொள்ளும் வகையில் இது நிகழும்.

Pot boiler:

வயிற்றுப் பிழைப்புக் கலை

கலை அல்லது இலக்கியப் படைப்பினை தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக மட்டுமே மேற்கொள்ளும் கலைஞர்கள் அல்லது படைப்பாளிகளின் நிலை இவ்வாறு குறிப்பிடப் பெறுகிறது.

Pre presentation:

முன் படைப்பு

இது ஒரு ஒத்திகை முறையின் நிறைவுப் பகுதியாகும். நாடகம் மேடையேற்றப்படும் முன்பு திருத்தங்கள் மேற்கொள்வதற்காக உடை, ஒப்பனையோடு நாடகம் படைத்தளிக்கப்படும் முறை இதுவெனலாம். இது முறையான நாடகப் படைப்பினை ஒத்தே விளங்கும்.

Precept:

முதுமொழி

நாடகங்களினூடே மக்களுக்கு நல்லுரை புகட்டும் வண்ணம் மக்களிடையே நன்கு அறிமுகமான முதுமொழிகளை கூறிச் செல்லுதல் நடைமுறையில் உள்ளது. பல நாட்டுப்புறக் கதை நாடகங்களும், தொன்ம நாடகங்களும் முதுமொழிகளை உரையாடலினூடே புகுத்தி மக்களுக்கு நீதி போதனை செய்த தன்மை தமிழகத்திலும் நடைமுறையில் உள்ளது. சங்கரதாச சுவாமிகளின் பல நாடகங்கள் இவ்வகையில் அமைந்து நிற்கின்றன.

Preface:

முன்னுரை

ஓர் இலக்கியப் படைப்புக்கான அறிமுக உரை இது. நாடகப் படைப்புகளுக்கும் இது பொருந்தும். பல நாடகாசிரியர்கள் தங்களது நாடகம் உருவான சூழல், வரலாற்றுக் குறிப்புக்கள். அந்நாடகம் மேடையேற்றம் செய்யப் பெற்றபோதான அனுபவங்கள் போன்ற பல குறிப்புகளையும், எந்த நோக்கத்திற்காக நாடகம் ஆக்கப்பட்டது என்ற தன்னிலை விளக்கத்தினையும் முன்னுரையிலே குறிப்பிடுவதுண்டு.

Prefatory character:

தொடக்க நிலை அறிமுகப் பாத்திரம்

நாடகத்தின் தொடக்கத்தில் அறிமுகமாகும் பாத்திரம் இவ்வகைப்படுகிறது. பொதுவாக குழுவின் அறிமுகம் இவ்வகை

யில் அமையும். தமிழில் நாட்டுப்புறக் கதை சார்ந்த நாடகங்களில் கட்டியங்காரன் இவ்வகைப் பாத்திரமாக அறிமுகமாவதுண்டு. நகைச்சுவை நாடகங்களில் வேலைக்காரனின் தோற்றமே தொடக்க நிலையில் அமைந்து வரக் காணலாம்.

Prelude:

அறிமுகவுரை

நாடக நிகழ்வுக்கு முன்பாகத் தொடக்கத்தில் நிகழ்த்தப்படும் நாடகத்தோடு தொடர்புடைய உரை அல்லது பேச்சு இவ்வகைப் படுகிறது. தொடக்க கால கிரேக்க நாடகங்களில் குழுவினரின் மேடை அறிமுகத்திற்கு முன்பாக இது நிகழ்த்தப்பட்டது. பின்னால் நடக்கவிருக்கும் நிகழ்வுகளின் முகவுரையாகவும் இது அமைந்தது. தமிழில் நாட்டுப்புற நாடகங்களில் கட்டியங்காரன் நிகழ்த்தும் உரைகூட இவ்வகையிலேயே அமைகிறது எனலாம். நகைச்சுவையும் நாட்டு நடப்பும் கலந்த இப்பேச்சு தொடரவிருக்கும் நாடகத்திற்கேற்ற இனிய சூழலை உருவாக்கிடுவதில் முக்கிய பங்காற்றுகிறது.

Premiere:

முதல் நடத்துகை

காட்சி நிலையில் ஒரு நாடகம் அல்லது திரைப் படத்தின் முதல் நடத்துகை. சில நேரங்களில் குறிப்பிட்ட அணுக்கமானவர்களைக் கொண்டு மட்டுமே நடத்தப்படுவதுமுண்டு. பொது நடத்துகைக்கு முன்பு இது நிகழ்வதாக அமையும்.

Primary charcter:

தலைமைப் பாத்திரம்

ஒரு நாடகத்தில் இடம்பெறும் முதன்மையான பாத்திரப் படைப்பு இது. இது ஆண் பாத்திர மாகவோ, பெண் பாத்திரமாகவோ அமையலாம். பொதுவாக இப்பாத்திரத்தை மையமாகக் கொண்டே கதை நிகழ்வுகள் முழுக்க பின்னப்பட்டிருக்கும்.

Primary female character:

தலைமைப் பெண் பாத்திரம்

நாடகத்தில் முதன்மையாக விளங்கும் பெண் பாத்திரம் இது.

Primary male Character:

தலைமை ஆண் பாத்திரம்

நாடகத்தில் முதன்மைப் பெற்று வரும் ஆண் பாத்திரம் இது.

Primary source:

முதன்மைத் தரவுகள்

வரலாற்று நாடகங்கள் பெரும்பாலும் சில அடிப்படைத் தரவுகளின் பின்னணியிலேயே வடிவமைக்கப் பெறுகின்றன. இவ்வாறு

பயின்றுவரும் தரவுகள் முதன்மைத் தரவுகள் எனப்படுகின்றன. தமிழில் இராசராச சோழன், வீரபாண்டிய கட்ட பொம்மன், இமயத்தில் நாம் போன்ற நாடகங்களை இவ் வகைத் தரவுகளின் அடிப்படை யிலமைந்த நாடகங்களாகக் கொள்ளலாம்.

Principal Boy:

தலைமைச் சிறுவன் வேடம்

ஆங்கிலச் சைகை நாடகத்தில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரம் இது. ஆனால் மரபு வழியாக இதை ஒரு பெண்ணே ஏற்று நடிப்பது வழக்கமாக உள்ளது. உடைகளை மாற்றிக் கொண்டு ஆண் வேடத் தைப் பெண்களும், பெண் வேடத்தை ஆண்களும் மாறி மாறி ஏற்றுக் கொள்வது இவ் வகையில் நடைமுறை வழக்க மாக உள்ளது.

Problem play:

சிக்கல் நாடகம்

சமுதாயப் பிரச்சினையை மையமாகக் கொள்ளும் நாடகம் சிக்கல் நாடகம் என அறியப்படு கிறது. இவ்வகையில் சிக்கல் நாடகம் முரண்பாட்டுக் கூறு களைக் கொண்ட பாத்திரப் படைப்பினைக் கொண்டிலங்கு கிறது. இவ்வகைச் சிக்கல் நாடகங் கள் சமுதாயச் சிக்கல்களைப் பிரதிபலிப்பதோடு அவற்றுக் கான தீர்வுகளைச் சொல்வதிலும் முயற்சி மேற்கொள்கின்றன.

Producer:

தயாரிப்பாளர்

நாடகத்தை முழுப் பொறுப் பேற்றுத் தயாரித்து வழங்குபவர். பணச் செலவு குறிப்பாக, இவரது பொறுப்பில் இருக்கும். தமிழகத் தில் பல நாடகக் குழுக்கள் குறிப்பாக பாலர் சபை நாடகக் குழுக்கள் தயாரிப்பாளரின் பொறுப்பிலேயே இயக்கம் பெற்றன.

Production:

தயாரிப்பு

ஒரு நாடகம் அனைத்து நிலை யிலும் முழுமையாக உருவாக்கம் செய்யப்படும் நிலை. மேடைப் பொருள்களின் தயாரிப்பும் இதில் அடங்கும்.

Professional actor:

தொழில்முறை நடிகர்

நாடகத்தை தமது வாழ்வுக் கான ஆதாரமாகக் கொண்டு, தொழில் முறை நாடகக் குழுக்க ளோடு இணைந்து நடிக்கும் நடிகர் இவ்வாறு அறியப் பெறு கிறார். இருபதாம் நூற்றாண்டின்

முற்பகுதியில் செல்வாக்குடன் விளங்கிய பாலர் சபை உள்ளிட்ட பல நாடகக் குழுக்கள் தொழில் முறை நாடக நடிகர்களைக் கொண்டே இயங்கின.

தொழில்முறை நடிகர்கள், தொழில்முறை நாடகக் குழுக் களில் பெற்றுக் கொள்ளும் அடிப் படைப் பயிற்சியினால் பேசுவதி லும், நடிப்பதிலும், மேடைத் தவறுகளை சமாளித்துக் கொள் வதிலும் தேர்ந்து விளங்குவர். எந்தப் பாத்திரத்தையும், எந் நேரத்திலும் ஏற்று நடிக்கும் வல்லமையும் பெற்றிருப்பர். முழு நேரமும் தங்களது நாடகப் பாத்திரம் குறித்தும், நாடகக் காட்சி குறித்தும் மட்டுமே சிந்தனை கொண்டிருப்பர். பாடல் பாடுவதி லும், நடன அசைவுகளிலும் கூட வல்லவராக விளங்குவர். பல தொழில்முறைக் கலைஞர்கள், பல வருட நாடகப் பணிக்குப் பின்பு தனிக்குழுக்களை அமைக் கும் திறன் வாய்ந்தவர்களாகவும் விளங்கியுள்ளனர். தொழில் முறை நடிகர் போலவே இவ்வகை யில் இடம் பெறும் நடிகையர் தொழில் முறை நடிகையர் (professional actress) எனப்படு கின்றனர்.

Professional Drama:

தொழில் முறை நாடகம்

தொழில்முறை நாடகக் குழுக்கள் மூலமாக, தொழில் முறை நாடகக் கலைஞர்களைக் கொண்டு படைத்தளிக்கப் பெறும் நாடகங்கள் தொழில் முறை நாடகங்கள் ஆகும். ஒரே நாடகம் தொழில் முறை நாடகக் குழு மூலமாகவும் பயின் முறை நாடகக் குழு மூலமாகவும் பாடைக்கப் பெறுவதுமுண்டு. பயின்முறை நாடகமான 'மனோகரா' அக்கால கட்டத் தில் பல தொழில் முறை நாடகக் குழுக்களும் விரும்பி மேடை யேற்றிய நாடகமாகவும் விளங்கியது.

Professional troupe:

தொழில் முறை நாடகக் குழு

நாடகத்தை ஒரு முழுநேரத் தொழிலாகக் கருதி வருமானத்தை உருவாக்கிக் கொண்டு செயல் படும் நாடகக் குழுக்கள் இவ் வகைப்படும். இக்குழுக்களின் சிந்தனை முழுக்க நாடகம் படைத்தளித்தலை மையமாகக் கொண்டே அமைந்திருக்கும். இவை பெரும்பாலும் நிரந்தரக் குழு முறையிலேயே செயல் படுவனவாகும்.

தமிழகத்தில் தொழில் முறைக் குழுக்கள் தவத்திரு சங்கரதாச சுவாமிகளின் முயற்சியால் சீரமைக்கப் பெற்று பாலர் சபை முறையின் கீழ் அவை பரிணாமம் பெறலாயின. அதனால் நாடகக் குழுக்கள் திட்டமிடுதலுடன் கடமையுணர்வும் கொண்டு செயல்படத் தொடங்கின. பல தொழில்முறை நாடகக் குழுக்கள் தமிழகமெங்கும் செயல்பட்டு வரத் தலைப்பட்டன. நல்ல நாடகங்களைப் போட்டி போட்டு மேடையேற்றுவதிலும் இவை முயற்சி மேற்கொள்ளலாயின. விளம்பர முறைகளிலும் புதுமைகள் ஏற்படத் தொடங்கின. நடிகர்களின் திறமையையும் நாடகக் காட்சிகளின் சிறப்பையும் விளக்கமாகப் படங்களுடன் வெளியிட்டு விளம்பரங்கள் செய்யும் வழக்கம் அறிமுகமாக தொழில்முறை நாடகக் குழுக்கள் முக்கிய காரணமெனலாம்.

நாடகத்தைத் தொழிலாகக் கொண்டிருந்த போதும், கலையை தமது வாழ்வுக்காவும், அதைப் பார்ப்போர் மன நிறைவடையும் வண்ணம் மக்கள் வாழ்வுக்காகவும், கலையின் வாழ்வுக்காகவும், தொழில்முறை நாடகக் குழுக்கள் பங்கு பணியாற்றியுள்ளன.

Profile board:

ஓரத்தட்டி

தட்டிகளின் விளிம்பில் ஓரம் அமைத்து உருவாக்கப்படும் தன்மையில் இப்பெயர் பெறுகிறது. தட்டிகளின் வடிவமைப்புக்கு ஏற்ப இவ்வகை ஓரங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

Profile spot:

ஓரக் குறியிட ஒளிவட்ட விளக்கு

நிலைப்படுத்தப்பட்ட விளக்கும், நகரக்கூடிய குவிப்பானும் கொண்டு, பிரதிபலிப்பானுடன் விளங்கும்படி ஓரக் கதிர்களைப் பாய்ச்சும் விளக்கு இது. குறிப்பிட்ட இடத்தைக் குறி வைத்துப் பாய்ச்சும் வண்ணம் மூடிகளைப் பொருத்திப் பயன்படுத்த ஏதுவானது.

Projector:

ஒளி உருப்படிவுக் கருவி

திரைப்படச் சுருள்களில் உள்ள உருவங்களை வெண் திரைக்குக் கொண்டு சென்று காட்சிப் படுத்தும் கருவி இது. கண்ணாடி வடிவிலான ஊடுருவத்தக்க எந்த உருவத்தையும் இது காட்சிப் படுத்தும். மின் விளக்கு குவிப்பான், படச்சுருள் அச்சு போன்ற பல பொறிகளுடன் இது இயங்குகிறது. திரைப்படக் கூடங்களில் இதன்

பயன்பாடு மிக அதிகம். நாடக மேடையிலும் சில காட்சிகள் இடையீடாக ஒளி உருப் படிவுக் கருவி மூலமாகக் காட்சிப்படுத்தப் படுவதுண்டு.

Prolepsis:

வருபொருள் உரைத்தல்

பின்னால் வரவிருப்பதான ஒரு நிகழ்வினை முன்கூட்டியே கூறுதல் இது. நாடகக் கதைப் போக்கில் இதுபோன்ற உத்தி கையாளப் பட்டு கதைப் பின்னலில் சுவை யான திருப்பத்தினை உருவாக்க இயலும்.

Proletarian play:

உழைக்கும் வர்க்க நாடகம்

உழைக்கும் மக்களின் வாழ்வு, நடைமுறைகளைச் சித்தரிக்கும் நாடகம் இது. இம் மக்களின் சிரமமான பொருளா தார நிலை இவ்வகை நாடகங் களில் சித்திரிக்கப்படுகிறது.

Prologue:

நிகழ்வுரை

நாடகம் உள்ளிட்ட படைப்பு களில் தொடரக்கூடிய நிகழ்வு கள் குறித்த அறிமுகம் அமைதல் இருக்குமாயின் அதுவே அறிமுகவுரை எனப்படுகிறது. நாடகாசிரியரின் உணர்வுகள் கூட இவ்வுரையில் இடம் பெற லாம். இலக்கியங்கள் நாடகமாக ஆக்கப்படும்போது அது தொடர் பான நடைமுறைகள், வரலாற்றுப் பின்னணிகள் போன்றன நாடக அறிமுகவுரையாக அமையக் கூடும்.

Prompt:

நினைவூட்டுதல்

(பார்க்க: Prompt copy- நினை வூட்டுப் பிரதி)

Prompt copy:

நினைவூட்டுப் பிரதி

நாடகப் பிரதியின் முக்கிய நெறிப்படுத்துக் குறிப்புகளையும் உரையாடல்களின் இறுதிச் சொல்லையும் அடையாளப் படுத்தி மேடையில் பயன்படுத்தப் படும் நாடகப்பிரதி நினைவுட்டுப் பிரதி எனப்படுகிறது. இதனை மேடையில் பொறுப்பேற்றுப் பயன்படுத்துபவர் நினைவூட்டுநர் எனப்படுகிறார். இவர் நடிகருக்கு மறந்துபோகும் உரையாடலை அடியெடுத்துத் தருதலை முக்கிய மாகக் கவனிக்கிறார். மேலும் முழு நாடகத்தின் போக்கையும் நினைவூட்டுப் பிரதியின் துணை யுடன் தொடர்ந்து கண்காணிக் கிறார். நினைவூட்டுப் பிரதிகளின் குறிப்புகள் நினைவூட்டுகளுக்கு மட்டுமல்லாது நாடக மேடை

வரலாற்றுக்கான வளர்ச்சி நிலை குறித்த ஆவணமாகவும் கருதப் படுகிறது.

Prompt corner:

நினைவூட்டுநர் அமர்விடம்

மேடையில் நடிகருக்கு இடப் புறமாக முன் முகப்பினை ஒட்டி அமைக்கப்படும் மேசையில் நாடகப் பிரதி, இயக்கக் குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கும். இந்த இடமே நினைவூட்டுநர் அமர் விடம் எனப்படுகிறது. இவ்வகை இட அமைப்பு ஆங்கில அரங்குகளிலேயே பெரும்பாலும் வழக்கத்தில் உள்ளது.

Prompt side:

நினைவூட்டுநர் பக்கமேடை

மேடையில் நடிகருக்கு இடது பக்கமாக உள்ள இடம் இது. அந்த இடத்தில் நினைவூட்டுநர் தமது பணிகளை மேற்கொள்வ தால் அந்த இடம் இவ்வாறு பெயர் பெறுகிறது.

Prompter:

நினைவூட்டுநர்

(பார்க்க: Prompt copy- நினை வூட்டுப் பிரதி)

Prop:

மேடையுடைமை

நாடக அரங்க மேடையில் நடிப்புக்குத் துணை நிற்கும் உடை, காட்சித் திரை, காட்சிப் பொருள்கள் தவிர்த்த யாவுமே மேடையுடைமையின் கீழ் வருகின்றன. குறிப்பாக நடிகர்கள் கையாளும் பொருட்களான கடிதங்கள், ஆவணங்கள், துப்பாக்கிகள், கத்திகள், செய்தித் தாள்கள், சிறு குவளைகள் போன்றவை கையாளுதற்கான மேடையுடைமைகளாக அமைகின்றன. மேலும் கிளிக் கூண்டுகள், உணவுப் பாத்திரங் கள் போன்றவையும் இவ்வகைப் படும்.

Propaganda play:

கருத்துப் பிரச்சார நாடகம்

கருத்துகள், எண்ணங்கள், தகவல்கள், நம்பிக்கைகள், இயக்கங் கள், தனி மனிதர்கள், குழுக்கள் போன்றவற்றை ஆதரித்தோ எதிர்த்தோ கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யும் நாடகங்கள் இவ்வகைப்படும். தமிழகத்தில் விடுதலை இயக்க காலத்தில் பல நாடகங்கள் தேசியக் கருத்து களைப் பிரச்சாரம் செய்தன. கதரின் வெற்றி, தேசியக் கொடி போன்ற நாடகங்கள் சமுதாய நாடகங்களாக அமைந்த கருத்துப் பிரச்சார நாடகங்களா கும். இமயத்தில் நாம், முதல் முழக்கம் போன்றன தேசியக்

கருத்துப் பிரச்சாரம் செய்த வரலாற்று நாடகங்களாகும். வள்ளித் திருமணம் போன்ற நாட்டுப்புறக் கதைப் பாடல் நாடகங்களும், சிறப்பு நாடகங்களும் வெள்ளையரை எதிர்த்து கருத்துப் பிரச்சாரம் செய்தன. நாடகப் பாடல்கள் மூலமாகவும் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது. திராவிட இயக்கக் கொள்கைகளும் நாடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்ட நிலையும் தமிழகத்தில் காணமுடிகிறது. தற்காலத்தில் அரசியல் பிரச்சாரங்களும் அரசின் நல் வாழ்வுத் திட்டங்களும் விழிப் புணர்வுத் திட்டங்களும் நாடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப் படுகின்றன.

Prophet play:

அருளாளர் நாடகம்

கிறித்துவ சமயம் சார்ந்த நாடகம் இது. பழைய ஏற்பாட்டில் உள்ள வருவது கூறும் அற்புத நிகழ்வுகளையெல்லாம் தொகுத்துக் கதை கூறல் முறையில் நடத்திக் காட்டப்படும் நாடகமாக இது அமைகிறது.

Proportion:

சரி அளவு

ஒரு படைப்பாக்கத்தின் கூறுகள் விகித அளவில் சம அளவுக்குப் பொருந்தி வருமாறு அமைதல் முக்கியம்.

Proposition:

முன்மொழிவுரை

நாடகப் படைப்பின்போதும் பிற இலக்கியப் படைப்புகளின் போதும் படைப்பாசிரியர் தமது கருத்து நிலைகள் அல்லது எண்ணத்தைக் கூறி தம்முடைய படைப்பினை முன்மொழிந்து அறிமுகப்படுத்தும் பகுதி இது. படைப்பாசிரியர் தமது குறிப்புகளை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இவ்வுரையில் கூறிச்செல்வார்.

Proscenium:

அரங்க முகப்பு

நாடக அரங்கின் முன்பகுதி இது. முகப்புத் திரைக்கும் இசைக் குழுவிற்கும் இடையேயுள்ள பகுதி அரங்க முகப்புப் பகுதியாகக் கொள்ளப்படுகிறது. அரங்கினையும், பார்வையாளர் பகுதியையும் வேறுபடுத்துவதில் அரங்க முகப்பு முக்கிய பங்காற்றுகிறது. இப் பகுதி அரங்குகளில் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ அமைக்கப் பட்டிருக்கும். முகப்புத்திரை இப்பகுதியிலிருந்துதான் தொடங்கவிடப்பட்டிருக்கும். அரங்க முகப்பின் அலங்கார

வளைவுகளினாலும், வேலைப் பாடுகளினாலும் முகப்புத் திரையின் அளவினைச் சிறிதாக்கிக் காட்ட இயலும். அரங்க முகப்பு கலை வேலைப்பாடுகள் மிக்கது. மேலும் காட்சியையும், 'அவை' யையும் ஒருங்கிணைப்பு செய்வதி லும் இது பெரும்பங்கு ஆற்று கிறது. திறந்த வெளி அரங்குகளில் இது போன்ற பகுதி அமைய வாய்ப்பில்லை. தற்காலத்திய அரங்குகளிலும் இப்பகுதி நாடகக் காட்சிப் படுத்தலுக்குத் தடை யாகக் கருதும் நிலையும் உருவாகி யுள்ளது.

Proscenium arch:

மேடை முகப்பு வளைவு

மேடையின் முன்பக்க முகப்பில் அமைக்கப்பட்டிருக்கும் வளைவு இது. இவ்வரங்க முகப்பு முன் வளைவிற்கு முன்பாக உள்ள மேடைப்பகுதி முன் மேடை (apron stage) எனப்படும்.

Proscenium Border:

மேடை முகப்பு மறைப்பு ஓரம்

பின்னரங்கின் மேற்பகுதியை மறைப்பதற்காகக் கட்டப்படும் மறைப்பு ஓரம்.

Proscenium Doors:

மேடை முகப்பு வாயில்

முன்னரங்கின் இரு பக்கங்களி லும் அமைந்துள்ள வாயில்கள் இவை. நாடக நடிகர் உள்ளே வரவும், வெளியே செல்லவுமான நிகழ்வுகளுக்குப் பயன்படுவ தோடு, வழக்கமாக அழைப்பு மணிகள் பொருத்தப்பட்டு அமைந்துள்ளது. ஒரு வாயில் வழியாக நடிகர் உள்ளே வந்து இன்னொரு வாயில் வழியாக வெளியேறும்போது அவர் வெளியே செல்வதைப் போலவோ அல்லது இன்னொரு அறையில் இருப்பது போலவோ தோன்று மாறு செய்ய இவ்வகை வாயில்கள் பயன்படுவதுண்டு, இவ்வேளை யில் பக்கத் தட்டிகளோ, பின் திரைகளோ எந்த மாற்றமும் செய்யப் பெறாமல் அப்படியே இருக்கும். பெரும்பாலும் இரண்டுக்கு மேற்பட்ட வாயில் கள் அமைக்கப்பட்டிருக்கும். முன்னர் இவ்வாயில்கள் நாடக முடிவிற்குப்பின் நடிகர் தலை தாழ்ந்து மேடை வணக்கம் செய்ததற்குப் பயன்படுத்தப் பட்ட நிலையில் இவை மெய் வளை வாயில்கள் (call doors) என்றழைக்கப் பெற்றன.

Proscenium Pelmet:

மேடை முகப்புக்கழி மறைப்பு ஓரம்

திரைச் சீலைகளைத் தொங்க விடப் பயன்படுத்தப்படும் கழி களை மறைப்பதற்காக முன்

திரைக்கு முன்னால் மேடை முகப்பை ஒட்டி தொங்கவிடப் படும் மறைப்பு ஓரம் இது.

Protogonist:

முதன்மை நடிகர்

நாடகத்தின் முன்னணி நடிகர் இவ்வாறு குறிப்பிடப்பெறு கிறார். இந்நடிகர் கதைத் தலைவனாக இல்லாதிருந்தாலும் கதையின் மைய மாந்தரான முக்கிய பாத்திரமாக விளங்கு வார்.

Protasis:

தொடக்கநிலை அறிமுகம்

முந்தைய காவிய நாடகங்களின் போது பாத்திரமேற்று நடிக்கும் நடிகர்களையும், கதையையும் நாடகத்தின் முகப்பகுதியில் அறிமுகம் செய்யும் நிலை இவ்வாறு வழங்கப்படுகிறது.

Proverb Dramatique:

பழமொழி நாடகம்

பழமொழிகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்படும் நாடகம் இவ்வகைப்படும். தொடக்க காலத்தில் நாடகத்திற்கு அடிப் படையாக அமையும் பழ மொழியை வெளிப்படையாகக் கூறாமல் பார்வையாளர் சிந்தனைக்கு விட்டனர். பிற்காலத்தில் பழ மொழி வெளிப்படையாக தெரியப் படுத்தப்பட்டது. தமிழில் பல பழமொழிகள் நாடகக் கருவாக அமைந்து விளங்கியமையைக் காணமுடிகிறது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழமொழியே நொண்டி நாடகங்களுக்கான கருவாயிற்று.

Psychological play:

அக மன நாடகம்

மனித மனநிலைச் செயல்பாடு களின் அடிப்படைக் கூறுகளை ஆராயும் வண்ணம் அமைந்து வரும் நாடகங்கள் இவை எனலாம். இவ்வகை நாடகங்களில் நிகழ்வு கள் எப்படி நடை பெறுகின்றன என்பதைவிட ஏன், எங்கே நடை பெறுகின்றன என்பது குறித்த செய்திகள் கவனப்படுத்தப்படு கின்றன.

Pulitzer prize:

புலிட்சர் பரிசு

அமெரிக்கர் வாழ்க்கை முறை பற்றி சித்திரிக்கக் கூடிய சிறந்த நாடகங்களுக்காக, 1918இல் தோற்றுவிக்கப் பெற்ற பரிசு முறை இது. முந்தைய பன்னிரண்டு மாதங்கள் மேடையேற்றம் செய்யப் பெற்ற நாடகங்களிலிருந்து சிறந்த நாடகம் தேர்வு செய்யப் பெறும்.

Pun:

சொல்லாட்சி நாடகம்

சொல் வன்மையின் அடிப் **படையில்** அதன் நகையுணர்வுக் **கூறுகளி**ன் மேல் வடிவமைப்பு **செய்யப்ப**டும் நாடகம் சொல்லாட்சி **நாடகமா**கும். சொல்லின் நகை **நகைப்பி**ன் தாழ்நிலையில் உள்ள நாடகம் எனக் கருதப்படுகிறது. கேட்போரின் காதுகளில் ஈட்டி போலப் பாயும் வன்மை கொண்டு மாறுபட்டமையும் இந்நாடகச் சொல்லாட்சி குறிப்பிடத்தக்க தாகும்.

Puppet play:

பொம்மலாட்டம்

சின்னச் சின்ன பொம்மை களை இழையால் இயக்கி, சிறிய மேடையில் செய்து காட்டும் நாடகம் போன்ற நிகழ்வு இது பாத்திரங்களுக்கேற்ப (மனிதன், மிருகம், பிற) பொம்மைகள் உருவாக்கப் பெற்று, குச்சிகள், இழைகள், கட்டைகள் இவற்றின் துணையோடு விரல் கொண்டு இயக்கப்படும். இப்பாத்திரங் களுக்கான உரையாடலை பொம்மைகளை இயக்குபவரே பேசுவார். தோலால் ஆன பொம்மைகளை வடிவமைத்து கயிற்றில் கட்டிய அந்தப் பொம்மைகளை இயக்கி அவற்றின் நிழலை திரைப்படுத்தி நடத்தப்படும் வடிவம் தோற்பாவை நிழற்கூத்து என வழங்கப்படுகிறது.

Puppet show:

பாவைக் கூத்து:

(பார்க்க: Puppet play- பொம்ம லாட்டம்)

Queentor's Theatre:

குயென்டர்ஸ் அரங்கம்

இலண்டன் மாநகரில் 1929இல் இவ்வரங்கம் தோற்றுவிக்கப் பெற்றது.

Quibble play:

சொற்புரட்டு நாடகம்

வார்த்தைகளை அடிப்படை யாகக் கொண்டு செயற்கைச் சொல் திறமாக விளையாட்டாக்கி நகைப்பை உருவாக்கும் நாடகம் இவ்வகையைச் சார்ந்தது.

Quick change room:

அவசர ஆடை மாற்றறை

மேடையோரத்தில் இடை ஓய்வுக்கென அமைக்கப் பெற்றுள்ள மறைவிடம் இது. காட்சியின்போது கிடைக்கும் சிறிது கால வெளியில் கலைஞர் கள் தங்களது ஆடைகளை அவசரமாக மாற்றிக்கொண்டு

காட்சிக்குத் தயார் செய்து கொள்ள இது பயன்படுத்தப்படு கிறது. ஆடை மாற்றத்துக்கெனக் கலைஞர்கள் தங்களது ஆடை மாற்று அறைக்குச் செல்ல வேண்டிய தேவையைத் தடுக்கிறது.

Rails:

படுக்கை நிலைச் சட்டங்கள்

(பார்க்க: Flatp- தட்டி)

Rain Box:

மழையொலிப் பெட்டி

செயற்கை முறையில் மழை பெய்வது போன்ற செயலாக்கத் தினைச் செய்து காட்டப் பயன் படுத்தப்படும் பெட்டி வடிவக் கருவி. உட்கூடான பெட்டியில் பட்டாணிகளைப் போட்டுக் குலுக்கி இவ்வகை ஒலி உருவாக்கப் படும்.

Rajapart:

ஆண் வேடதாரி

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகங்களில் ஆண் பாத்திரமேற்கும் நடிகர் இராஜபார்ட் என்று பெயரிட் டழைக்கப் பெற்றார். 'இராஜ' என்பது ஆண்களுக்கான ஆளு மைக் குறியீடாக கருதப்பட்டு இப்பெயர் வழங்கப்பட்டது. பிற நடிகர்களிடமிருந்து அனைத்து நிலையிலும் இராஜபார்ட் நடிகர் சிறப்பானவராகக் பட்டார்.

Rake:

சாய்வு நிலை

மேடையின் பின் சுவர்ப் பகுதியிலிருந்து மேடை அடித் திரை விளக்குப் பகுதி வரை அமையும் சாய்வு நிலைப்பகுதி இது. இப்பகுதியில் நிற்கும் நடிகர்கள் பார்வையாளர்க்குத் தெளிவாகத் தெரிய முடியாத படியால் இப்பகுதியின் பயன் பாடு இக்காலத்தில் அருகிலேயே காணப்படுகிறது. மேலும் இப் பகுதிகளில் காட்சித் திரைகள் மற்றும் தட்டிகள் வைப்பதற்கும் இசைவாகப் பொருத்துவதற்கும் சிரமம் ஏற்படுவதுண்டு.

Reaction:

மறுவினை

நாடகத்தில் முரண் நிகழ்வு களின் போது இவ்விதமான எதிர்வினைகள் அல்லது மறு வினைகள் நிகழ்தல் உண்டு. நேருக்கு மாறான மறுவினை நிகழ்வுகள் முரணுக்குக் காரண மாகும். நேர்நிலைத் தலைமைப் பாத்திரத்திற்கு எதிரான விளைவு களை முரண் பாத்திரம் மேற் கொள்ளல் உண்டு. தலைமைப் பாத்திரமே ஒரு வினைக்கு மறு

வினை மேற்கொள்ளுதலும் உண்டு.

Realism:

நடப்பியல்

வாழ்வின் யதார்த்த நிலையினை உள்ளபடியாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்துவதாக நடப்பியல் அமையும். மேலும் நடுத்தர, தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் அன்றாட வாழ்க்கை முறையை இயல்பாகச் சித்திரிப்பதாகவும் அமையும். இத்தகைய நிலையைப் படம் பிடிக்கும் வண்ணம் பல நாடகங்கள் தோற்றம் கண்டுள்ளன. அவை உரையாடல் மூலமும் காட்சியமைப்புப் பின்னணி மூலமும் இக்கூற்றினை ஆழமாக வெளிப்படுத்துவனவாக உள்ளன.

Redundary:

மிகைச் சொல்

ஒரே சொல்லையோ, தொடரையோ ஒன்றன் மேல் ஒன்றாகப் பலமுறை அடுக்கிச் சொல்லுதல் முறைமையை இது குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட நிகழ்வினை வலுயுறுத்துவதற்காகவோ, அல்லது குறிப்பிட்ட உரையாடலின் இன்றியமையாமையைத் தெளிவுபடுத்துவதற்காகவோ இத்தகைய உத்தி கையாளப்படுகிறது. சேக்சுபியரின் நாடகங்களில் இது போன்ற முறையில் பல உரையாடல்கள் வரையப்பட்டுள்ளன. தமிழிலும் பல சமுதாய நாடகங்களில் இத்தகைய சொல் மேல் சொல் அடுக்கிச் செல்லும் முறை அறியக் கிடைக்கிறது.

Regional Play:

வட்டார நாடகம்

ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தை, வழக்கத்தை அல்லது பிரிவினரை முன்னிலைப்படுத்தி ஆக்கப்படும் நாடகம் இவ்வகைப்படும். அக்குறிப்பிட்ட பகுதியின் அல்லது பிரிவினிரின் பேச்சு, நடைமுறைகள், வழக்கங்கள், நாட்டுப்புறக் கூறுகள், நம்பிக்கைகள், உடைகள், வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் நாடகம் அமைந்து நிற்கும்.

வட்டார வழக்கு நாடகம் அனைத்து நாடுகளுக்கும் பொதுவான நிலையாகும். நாடக வரலாற்றில் வட்டார நாடகங்களின் இடம் அறியலாகிறது. தமிழில் பள்ளு, நொண்டி, குறவஞ்சி போன்றன இவ்வகையிலமைந்த சிற்றிலக்கிய நாடக வடிவங்களாகும்.

Rehearsal:

ஒத்திகை

ஒரு நாடகத்தைப் படைப் பாக்கத்திற்குத் தயார்படுத்து வதற்காக இயக்குநர், நாடகக் குழுவினர், தொழில் நுட்பக் குழுவினர் யாவரும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் செய்து பார்த்தல் முறைக்கான பயிற்சியே ஒத்திகை எனப்படு கிறது. ஒருங்கிணைந்த ஒத்திகை முறைகள் குறித்த செய்திகள் அண்மைக் காலமாகவே தமிழில் காணக் கிடைக்கின்றன. மேனாட்டுத் தாக்கம் தமிழில் வந்த பிறகே ஒத்திகை முறைக் கான முக்கியத்துவம் அதிகம் உணரப்பட்டது. குறிப்பாக நாடகம் என்ற வடிவம் முழு அளவில் செயல்படத் தொடங்கிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தமிழில் ஒத்திகை முறை திட்டமிட்டு மேற்கொள்ளப் பெறலாயிற்று.

1891க்குப் பின் சங்கரதாச சுவாமிகள் பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோர் ஒத்திகை முறையைத் தவறாது கடைப் பிடித்தனர். தொழில் முறையின் கீழான நிரந்தரக் குழுக்கள் மற்றும் பயின்முறை நாடக சபைகள் யாவும் இதற்கென உரிய காலத்தை [illegible] நாடகத்துக்கான தயார[illegible] பணிகளில் ஈடுபடலாயின. ட[illegible] சபை நாடக முறையின் [illegible] ஒத்திகைக்கு மிக்க முக்கியத்துவ[illegible] அளிக்கப்பட்டது. பயிற்சியொடு அமைந்த ஒத்திகை (training based rehearsal) இங்கு செயலாக்கம் பெறலாயின. இசைப் பயிற்சி, நடிப்புப் பயிற்சி தொடர்ந்து நாடகப் பயிற்சி என்னும் ஒத்திகை முறை நடை பெறலாயிற்று.

இப்பொழுதும் தமிழ் நாடகங் கள் யாவும் முறையான ஒத்திகைக்குப் பின்னரே மேடை யேற்றம் செய்யப்படுகின்றன. மேடையேற்றத்துக்கு முந்தைய ஒத்திகை மேடையேற்ற நிலை ஒத்திகை (grand rehearsal) எனப் படுகிறது.

Repartee:

மறுமொழி

ஒருவரது சொல்லுக்கு அல்லது வார்த்தைக்கு உடனடியாக தக்க மறுமொழி அளிக்கும் நிலை இது. இது சில நேரங்களில் நகைப்பை ஊட்டுவதாகக் கூட இருக்கலாம்.

Repertoire:

நாடக இருப்புத் தொகுதி

ஒரு நாடகக் குழுவில் நடிகர் களால் நடிப்பதற்கு தயாராக

வைக்கப்பெற்றிருக்கும் நாடகங்களின் பட்டியல் இவை. மேலும் ஒரு நாடகத்தின் தேர்ந்த காட்சிகளின் தொகுப்பாகவும் இவை அமையலாம். இவ்வகை நாடகங்களை படைத்தளிக்கும் நாடக அரங்குகள் நாடக இருப்புத் தொகுதிப் படைப்பரங்கம் (Repertory Theatre) என்றழைக்கப் படும்.

Repertory:

கையிருப்புத் தொகுதி

(பார்க்க: Repertoire -நாடக இருப்புத் தொகுதி)

Repertory Theatre:

நாடக இருப்புத் தொகுதிப் படைப்பரங்கம்

(பார்க்க: Repertoire -நாடக இருப்புத் தொகுதி)

Resolution:

சிக்கலறுப்பு

நாடகத்தில் உச்சத்தினைத் தொடர்ந்துவரும் கட்டம் இது. இதில் நாடகச் சிக்கல் விடுபடும் வண்ணம் காட்சிகள் அமைந்து நிற்கும். நாடகப் பிரச்சினைக் கான தீர்வு தருவதாகவும் இது விளங்கக் கூடும்.

Restoration Comedy:

மீட்பு நகைச்சுவை

இது செயற்கையாக உருவாக்கப் பெறும் நகைச்சுவையை அடிப் படையாகக் கொண்டது. இவ்வகை நாடகங்கள் ஆங்கில ஏகாதி பத்தியத்தின் மீட்பான 1660 முதல் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலான காலக் கட்டத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தில் இடம்பெற்று வந்தன. மேல் நிலைச் சமுதாயத்தை அடியொற்றி அமையும் நாடகமாக இவ்வகை நாடகம் அமைந்தன.

Revenge Tragedy:

கறுவும் உணர்ச்சிக் கூற்றுத் துன்பியல் நாடகம்

இந்நாடகம் பழிக்குப் பழி வாங்கும் படலத்தைக் காட்சிப் படுத்தும் வண்ணம் வடிவமைக்கப் பெற்றுள்ள நாடகமாகும். வன்முறை, இரத்தக் களரி, மயிர்க் கூச்செறியும் செயல்பாடுகள் கொண்ட செய்முறைகளும், பேய், பிணங்கள், தற்கொலை நிகழ்வுகள் கொண்ட காட்சிகளுமாக நாடகம் அமைக்கப் பட்டிருக்கும்.

Reverberator:

எதிரொளி

(பார்க்க: lighting- ஒளியமைப்பு)

Revolving stage:

சுழல் மேடை

கபுகி மேடை வழி 17ஆம் நூற்றாண்டில் அறிமுகமாகி

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயே நாட்டாரின் நாடக மேடையை ஆக்கிரமித்துக் கொண்ட உத்தி முறை இது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட காட்சிகளை ஒரே நேரத்தில் இவ்வகை மேடைச் சுற்றுத் தளத்தில் முன்கூட்டியே நிர்மாணித்துவிட்டு சுழலச் செய்து வேகமாகக் காட்சி மாற்றம் செய்ய இயலும்.

Revolving wings:

சுழல் பக்கத்தட்டி

(பார்க்க: Book wings- சுழல் பக்கத்தட்டி)

Revue:

கோர்வை நாடகம்

நடனம், குழுப்பாடல், பாடல், அண்மை நிகழ்வுகள், குறுநாடக நிகழ்வுகள் எனக் கோர்வைப் படுத்தி நடத்திக் காட்டுவது இவ்வகை நாடகப் படைப்பாக விளங்குகிறது. சமகால நிகழ்வுகளை நையாண்டி செய்வது முக்கியமாக அமைவதால் கதைக்கரு குறிப்பிடத் தக்க நிலையில் அமைந்து நிற்காது. என்னும் மேடை அமைப்பு, காட்சியமைப்பு, ஆடையணி களால் வளமான்தாக இவ்வகை நாடகம் படைக்கப்படுகிறது.

Rhetoric:

சொல்லணி

மொழியை அலங்காரமாகப் பயன்படுத்திச் செல்லும் கலை இது. பெரிய செய்திகளைச் சிறிது படுத்தியும் சிறிய செய்திகளைப் பெரிதுபடுத்தியும் வெளிக்கொணர இக்கலை பயன்படுகிறது.

Ridicule:

எள்ளி நகையாடும் செயல்

எழுத்து, பேச்சு, செய்கையால் பிறரைக் கேலி செய்து அதன் மூலம் சிரிப்பை வரவழைக்கும் செயல் முறை இது. நையாண்டி மொழியே இதற்குப் பயன் படுத்தப்படுகிறது. கேலிக்குரிய பொருளாக மனிதனோ அல்லது கருத்துகளோ அல்லது தனி நிறுவனமோ கூட அமைவ துண்டு.

Rise and Sink:

எழுமறைக்காட்சி

காட்சி மாற்ற உத்திகளில் இதுவும் ஒன்று. மரச்சட்டங்கள் உதவியுடன் மேடையின் மேல் இதற்கான உரிய வெளி உருவாக்கப் படும். பின் திரையின் பாதியளவு மறைக்கப்பட்டு, மேல்பகுதிக் காட்சி மாற்றப்பட்டவுடன், கீழ்ப்பகுதிக் காட்சி மேலெழும்பி வருவதாக இவ்வுத்தி முறை

அமையும். இக்காலத்தில் இவ்வுத்தி முறை பெரும்பாலும் வழக்கில் இல்லை.

Rising action:

எழுநடிப்பு

நாடகத்தில் சிக்கல், முரண் உருவாக்கம் பெறத்தக்க வகையில் நாடகக் கதைப் பின்னல் அமைந்து அது உச்சமடையும் நிலைக்குத் தள்ளப்படும் வேளை அந்த இடத்தில் எழுநடிப்பு அமைகிறது. ஐந்து அங்கங்கள் கொண்ட ஒரு நாடகத்தில் பெரும்பாலும் மூன்றாவது அங்கத்துக்குள்ளேயே இவ்வகை நிகழ்வு அமைந்துவரும்.

Ritornello:

இடை இசைக்காட்சி

இசை நாடகத்திற்கு நடுவே இடைவெளியில் நடத்தப்படும் சிறு கால அளவிலான இடைக் காட்சி இது.

Ritual:

சடங்கு

மரபு வழியாக நடத்தப்பெற்று வரும் சில நடைமுறைகளே நாடகங்களாக அறியப்படு கின்றன. சங்க காலம் தொட்டு இன்று வரைத் தமிழகத்தில் பல சடங்குகள் நடைபெற்று வரு கின்றன. இவை மக்களின் நம்பிக்கை சார்ந்த சமுதாய நடப்பாகும். பொங்கலிடுதல், ஆடு, மாடுகள், கோழிகள் பலியிடுதல் போன்றன நாட்டுப்புறச் சடங்குகளில் குறிப்பிடத்தக்கனவாகும்.

Robinhood Theme:

இராபின்ஹுட் கதைக்கரு

வறுமைநிலையிலுள்ளோரும், இயலாமையில் உள்ளோரும், வெளியொரு சக்தியின் உதவி யுடன் வாழ்வில் வெற்றி பெற்று வளம்பெறுவதாக அமையும் கதைக்கரு இவ்வகைப்படுகிறது. அந்த வெளி சக்தி எனப்படுவது இருப்போரிடமிருந்து எடுத்து இல்லாதோருக்குக் கொடுக்கின்ற பாத்திரமாகும். ஆங்கிலக் கற்பனைப் பாத்திரமான 'ராபின் ஹுட்' என்னும் குற்றவாளிப் பாத்திரத் தின் பெயர் கொண்டு இவ்வகைக் கதைக்கரு பெயரிடப் பெற்றுள்ளது.

Roll ceiling:

சுருள் நிலை உட்கூரைத் துணி

உட்கூரைத் துணியின் (ceiling cloth) அகன்ற பக்கங்கள் இரண்டி லும் நீளமான மரச்சட்டங்கள் இணைக்கப்பெற்று சுருட்டு வதற்கு ஏதுவானதாக அமைக்கப் பட்டிருக்கும். இதுவே சுருள்

நிலை உட்கூரைத் துணி எனப்படு கிறது.

Roll out technique:

துணி உருளை உத்தி

மேடை நாடகத் தந்திரக் காட்சி வகைகளில் இது முக்கியமானது. உருட்டப் பெற்ற முரட்டுத் துணியுடன் அமைக்கப் பெற்ற வடிவமானது ஏதேனும் ஒரு காட்சித் திரையின் கீழ் வைக்கப் பெற்றிருக்கும். அது திடுமென பின்னிருந்து முன்னோக்கி உருண்டு வர அதிலிருந்து பாய்ச்சலுடன் நடிகர் ஒருவர் வெளிப்படும் நிகழ்வு வியக்க வைப்பதாக அமையும்.

Romantic Comedy:

காதலின்ப நகைச்சுவை

நாடகத்தில் காதல் மையப் பொருளாக இன்பியலாக முடியும் வண்ணம் அமைந்து வரும் நகைச்சுவை நாடகம் இவ்வகைப் படும்.

Rope house:

கயிற்றரங்கு

காட்சித் திரைகளை கயிறுகளில் இணைத்துக் கையால் இயக்கும் நிலைப்பாடு இது. இது சற்று பழமையான திரைமாற்ற இயக்க முறையாகும். சட்டத்தில் கட்டப் பெற்ற கப்பிகளின் வழியே திரைகளின் கயிறுகள் இழுக்கப் பெற்று மறுமுனையில் திரை இழுப்பவர் கைக்குள் சேருமாறு அமைக்கப் பெற்றிருக்கும். இவ்வாறு கயிறுகளைக் கொண்ட மேடைத் திரையமைப்புகளுடன் செயல் படும் அரங்குகள் கயிற்றரங்குகள் என்றழைக்கப்படுகின்றன.

Rostrum:

மேடைத்தட்டு

(*பார்க்க*: Parallel -இணை மேடை)

Round:

முழுமை

(*பார்க்க*: Round Character- முழுமைப் பாத்திரம்)

Round Character:

முழுமைப் பாத்திரம்

நாடகம் உள்ளிட்ட படைப்புக் களில் பார்ப் போர்க்கோ அல்லது படிப்போர்க்கோ ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தும் வண்ணம் படைக்கப்படும் பாத்திரம் இவ்வகையில் பெயர் பெறுகிறது. இது ஆழமான, பாத்திரத்தின் முழுப் பரிமாணங் களைப் பிரதிபலிப்பதாக அமையும். பார்ப்போரை அல்லது படிப்போரை அவ்வப்போது ஆச்சரியத்தில் ஆழ்த்தத்தக்கதான

முழுமைக் கூறுகளைக் கொண்டு விளங்கும். பொதுவான, எந்தப் படைப்பும் முழுமையான, முழுமையற்ற பாத்திரங்களைக் கொண்டே அமைந்து நிற்கும்.

Royalty:

உரிமைத் தொகை

நாடகத்தைப் பொறுத்த வரையிலும் நாடகாசிரியருக்கு வழங்கப்படும் தொகையாகும். ஒவ்வொரு மேடையேற்றத் திற்கும் (காட்சிக்கும்) இவ்வளவு தொகை என அளிக்கப்படும் தொகை உரிமைத் தொகை எனப் படுகிறது. மேனாடுகளில் இது முறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழகத்தில் நாடக மேடையேற்றத்திற்கு முன்பே உரிய தொகையினை ஒரே தடவையில் கொடுத்து இவ்வுரிமை பெறப்படுவது வழக்கமாக உள்ளது. இவ்வுரிமை பெறப்பெற்ற பின்னர் இந்நாடகத்தைக் குறிப்பிட்ட குழுவைத் தவிர பிற குழுக்கள் மேடையேற்றம் செய்வது சட்டப்படி குற்றமான தாகக் கருதப்படுகிறது.

Run:

நாடக ஓட்டம்

ஒரு நாடகம் தொடர்ந்து நடை பெறும் மொத்த நாட்களும் காட்சிகளும் (shows) கணக்கிடப் படும் நிலை இது. ஒரே நாடக அரங்கில் ஒரு நாடகம் தொடர்ந்து காட்சிப்படுத்தும் மொத்த காட்சி நாட்கள் இவ்வாறு முக்கியமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பெறும். முதல் மேடையேற்றத் தின் போதே வெற்றி பெறுவதாக அமையும் நாடகங்கள் தொடர்ந்து மேடையேற்றம் செய்யப்படுவ தும், வெற்றிபெறாத நாடகங்கள் கைவிடப்படுவதும் உண்டு.

Safety Curtain:

பாதுகாப்புத் திரை

முன்னரங்கின் முன்னால் தீயினின்று பாதுகாப்பாக இருப் பதற்காக இரும்பினால் அல்லது தீ எதிர்ப்புப் பொருட்களால் வடிவமைக்கப்பட்டுள்ள மறைப்புத் திரை பாதுகாப்புத் திரை எனப்படுகிறது. இவ்வித மறைப்புத் திரைகள் அவை யினின்று மேடையைப் பிரிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக் கும். ஒவ்வொரு நாடகத்தின் காட்சி இடைவேளையின் போதும் இப்பாதுகாப்புத் திரை கீழிறக்கப் படும்.

Sand cloth:

மணற்பரப்புத் துணி

அரங்க மேடையில் பாலை வனக் காட்சிகளின் போது

மணற்பாங்கான தோற்றத்தையும் சூழலையும் பின்னணியில் உருவாக்குவதற்காக மணல் தூவப்பட்ட அல்லது தீட்டப் பட்ட துணியினை மேடைத் தளத்தில் விரிப்பாகப் பயன் படுத்தும் துணி மணற்பரப்புத் துணி எனப்படுகிறது.

Satire:

அங்கதம்

மனிதனுடைய குறைகளையோ பழிக்குணங்களையோ பேச்சு, நகைச்சுவை மூலமாக வசைத் தாக்குதல் செய்யும் நிலை இது. இலக்கிய முறைமைகளில் குறிப்பிடத்தக்கதாகக் கருதப் படும் அங்கதம், நகைப்பு, விமரிசனப் போக்கினை அடிப் படையாகக் கொண்டு மனிதச் செயல்பாடுகளையும், நிறுவனங் களையும் மையமாக்கிக் கொண்டு வெளிப்படுகிறது. மனித நீதியை யும், மரபுகளையும் சீர்படுத்து தற்கும் இத்தகைய அங்கதம் பயன்படுத்தப்படுகிறது. நகைச்சுவை நாடகங்கள் பெரும் பாலும் இத்தகைய அங்கதச் சுவையை அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றன.

Satirical Play:

அங்கத நாடகம்

அங்கதச் சுவையை அடிப் படையாகக் கொண்டு நகைச் சுவை, சிரிப்புணர்வை உருவாக்கும் நாடகங்கள் அங்கத நாடகங்கள் எனப்படுகின்றன. நாடகங்களில் அங்கதச் சுவை மென்மையாகவும் வன்மை யாகவும் பயின்று வருவதுண்டு. எனினும் அவற்றின் அடிப்படை நோக்கம் சமகாலச் சமுதாயத் தின் அவலங்களைக் குத்திக் காட்டி அவற்றைச் சீர் செய்ய முயற்சிப்பதே ஆகும்.

Scenario:

காட்சிக் குறிப்பு

நாடகக் கதைப் பின்னலில் இடம்பெறும் பாத்திரங்கள், காட்சியமைப்புகள் சூழல்கள் குறித்த திட்ட வரைவு இது. தொடர்ந்து வரும் காட்சிகள். காட்சியமைப்புகள், பாத்திரங் கள் குறித்த சுருக்க விவரங்கள் இவ்வரைவில் இடம் பெறு கின்றன.

Scene:

காட்சி

நாடகத்தின் கதை நிகழிடக் காட்சிக் கூறுகளின் ஒரு பகுதி இது. நாடக அங்கத்தின் ஒரு

பகுதியாகவும் இது அமைந்து வருவதுண்டு. நாடகக் காட்சிப் படுத்துதலின் ஒரு வடிவமைக்கப் பெற்ற தனிக் கூறாக இது விளங்கி நிற்கிறது.

Scenery:

காட்சித்திரை

நாடகக் காட்சிகளுக்கேற்ப பின்னணியில் அமைக்கப் பெறும் திரை, காட்சித்திரை எனப்படு கிறது. காடுகள், சாலைகள், அரண்மனைக் கூடங்கள், கடல், குளம், ஆறு, மலை போன்ற இயற்கைக் காட்சிகள் போன்றன வண்ண ஓவியங்களாக வரையப் பெற்று நாடகக் காட்சிக்கு ஏற்பப் பயன்படுத்தப்படுவதுண்டு. பார்சி நாடகக் குழுக்களின் வருகைக்குப் பின் தமிழ் நாடங்கள் வளமான காட்சித் திரைகளைக் கொண்டு விளங்கின. எனினும் தற்காலத்தில் தேவைக் கேற்ற காட்சித் திரைகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன.

Schematic:

திட்டமிடல்

நாடகக் காட்சிப் படுத்துதலுக் கான திட்டமிடல். இது நாடகக் காட்சிக் குறிப்பு வரைவு நாடகத் திட்டமிடலுக்கு முக்கிய பங்களிப்பு செய்கிறது.

School Drama:

பள்ளி நாடகம்

பள்ளிக் கல்விக்குப் பயன்படும் வண்ணம் படைத்தளிக்கப்படும் நாடகம் இது. ஆக்க நாடகம் (Creative Dramatics) என்ற வகையில் மாணவர்களைக் கொண்டே இவ்வகை நாடகம் படைத் தளிக்கப் படுகிறது. பாடத் திட்டத்தில் உள்ள பகுதியை நாடகமாக்கி வகுப்பறையில் நடத்தப்படுவ தென்பது மேனாடுகளில் ஒரு கற்பித்தல் உத்தியாக நடை முறைப்படுத்தப்படுகிறது. வகுப்பறை நாடகம் (Class Room Theatre) என்பதும் இவ்வகைப் பட்டதே ஆகும். பள்ளி விழாக் களின்போது மாணவர்களால் நடிக்கப்பெறும் நாடகங்களும் இப்பிரிவில் அடங்குவனவே.

Science Drama:

அறிவியல் நாடகம்

அறிவியல் பூர்வமான கருத்தமைவுகளையும், சிந்தனை களையும் கதைப் பின்னலாக்கிக் கொண்டு உருவாக்கப்படும் நாடகங்கள் அறிவியல் நாடகங் கள் எனப்படுகின்றன. அறிவியல் கொள்கைகள், அறிவியல் கண்டு பிடிப்புகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் காட்சியமைப்புகளையும்

இவ்வகை நாடகங்கள் கொண்டமையும், சந்திரமண்டலத்தில் மனிதன், விண்வெளி ஆராய்ச்சியில் மனிதன் போன்ற அறிவியல் செயல்பாடுகளும் கற்பனைப் பாத்திரங்களைக் கொண்டு நாடகமாக்கப்படுகின்றன.

Scissor stage:

கத்தரிக்கோல் மேடை

(பார்க்க: Boat truck -நகர்வுத் தடம்)

Screen play:

காட்சித் தொகுப்பு

பொதுவாக திரைப்படத்திற்கான காட்சிப்பட்டியல், பாகுபாடு, பிற விவரங்களின் தொகுப்பு இவ்வாறு குறிக்கப் பெறுகிறது. நாடகங்களைத் திரைப்படத்திற்காக தழுவல் செய்யும் போதும் இப்பெயர் பயின்று வருகிறது.

Secondary character:

துணைநிலைப் பாத்திரம்

நாடகப் படைப்பாக்கத்தில் தலைமைக் கதைமாந்தர் பாத்திரம் தவிர்த்த அனைத்துப் பாத்திரங்களும் துணைநிலைப் பாத்திரங்களே ஆகும். முழுமையான நாடகப் படைப்பின்போது இப்பாத்திரங்களின் திறமையான, ஒருங்கிணைந்த திறமை வெளிப்படுகிறது. நாடகத்தின் சிறப்பான படைப்பாக்கத்திற்கு இப்பாத்திரங்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும். தமிழகத்தில் தொழில் முறை யிலான நிரந்தரக் குழு முறையில் நூற்றுக் கணக்கான நடிகர்கள் இப்பாத்திரங்களை ஏற்பதற்கு ஏதுவாக குழுக்களில் இடம் பெறலாயினர். இவர்கள் அனைவரும் ஒரு சேரத் தங்க வைக்கப் பெற்றனர். நாடகப் பயிற்சி, இசைப்பயிற்சி யாவும் இவர்களுக்கு முறையாக வழங்கப் பட்டன.

பயின்முறை நாடகக் குழுவின் துணைநிலைப் பாத்திரங்களை ஏற்கும் நடிகர்கள் குறிப்பிட்ட வேளையில் மட்டுமே ஒன்றாகக் கூடினர். துணைநிலைப் பாத்திரங்களில் பெண் பாத்திரங்கள் துணைநிலைப் பெண் பாத்திரங்கள் எனவும், துணைநிலைப் பாத்திரங்களில் ஆண் பாத்திரங்கள் துணைநிலை ஆண் பாத்திரங்கள் எனவும் பெயர் படும்.

Secondary Female Character:

துணைநிலை பெண் பாத்திரம்

(பார்க்க: Secondary character- துணைநிலைப் பாத்திரம்)

Secondary Male Character:

துணைநிலை ஆண் பாத்திரம்

(பார்க்க: Secondary character- துணைநிலைப் பாத்திரம்)

Semblance:

போலித் தோற்றம்

நாடகக் காட்சிகளில் ஒன்றைப் போல அல்லது ஒரு கதைப் பாத்திரத்தப் போலத் தோற்ற மளிக்கும் இன்னொரு கதைப் பாத்திரம் அல்லது உருவம் போலித் தோற்றம் என்று அழைக்கப் படுகிறது.

Sentimental Comedy:

உணர்வுநிலை நகைச்சுவை

இது ஒரு தனித்துவம் வாய்ந்த நகைச்சுவைக் கூறு ஆகும். நாடகத்தின் தலைமைக் கதை மாந்தர் இரக்க குணமுடைய வராகவும், பெருந்தன்மையுடைய வராகவும் படைக்கப்படுவது குறிப்பிடத் தகுந்தது. இந்நாடகத் தில் வரும் பாத்திரங்கள் நல்ல தன்மை, மோசமான தன்மை எனக் கலப்புடன் காணப்படும். இவ்வகை நாடகத்தினை உணர்வு நாடகம் எனவும் குறிப்பிடுவர்.

Sequal:

பின் விளைவு

நாடகத்தில் முன்வரும் நிகழ் வைப் பின் தொடர்ந்து அடுத்து வருவதாக அமைகிற நிகழ்வு இது. கதைப் பின்னலுக்கு இந்நிகழ்வு மிகவும் இன்றியமையாததாகும்.

Sequential:

வரிசைத் தொடர்

நாடகத்தின் நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசை முறையில் தொடர்ந்து வருவதையொத்து நடிப்புத் தன்மையும் தொடர்ந்து வரும் நிலை வரிசைத் தொடர் எனப்படுகிறது. நாடகத்தின் நிகழ்வுகள் திட்டமிட்டு வரிசைப் படுத்தப்படுகின்றன.

Setting:

காட்சியமைப்பு

நாடக நிகழ்விடச் சூழலை உருவாக்கிக் காட்டும் தன்மை யுடன் உருவாக்கப்படும் காட்சித் திரைகள், காட்சிப் பொருட்கள் யாவும் வடிவம் பெற்று காட்சி யமைப்பு என்றாகிறது.

Shadow show (shadow theatre):

நிழற் கூத்து

(பார்க்க: puppet play- பொம்ம லாட்டம்)

Shakespearian Sonnet:

சேக்சுபியரின் உணர்ச்சிப் பாடல்

உணர்ச்சிப் பாடல்களுக்கான இலக்கணமாக பதினான்கு அடிகளுடன் விளங்குவன இப்

பாடல்கள். சேக்ஸ்பியர் இத்தகைய உணர்ச்சிப் பாடல் சூழலுருவாக்கத்தில் தேர்ந்து விளங்கியமையால் இப்பெயர் பெறலாயிற்று. முதல் பன்னிரு அடிகளும் மூன்று மூன்றாகப் பிரிக்கப்பட்டு கடைசி இரண்டு அடிகள் அந்த உணர்ச்சிப் பாடலின் கருவிகளை உணர்த்துவதாகவும் அமைந்து வருவது இவ்வகை உணர்ச்சிப் பாடலின் குறிப்பிடத்தக்கத் தன்மையாகும்.

Show place:

கூத்தாட்டவை

(பார்க்க: Auditorium -கேள் அவை)

Sketch:

குறு நாடகம்

குறுகிய அளவிலாக வடிவமைக்கப்பட்டு படைத்தளிக்கப்படும் நாடகம் இவ்வகைப்படுகிறது. மேலும் ஒரே ஒரு பாத்திரப் படைப்பு கொண்டதாக அல்லது ஒரே ஒரு காட்சி அல்லது ஒரே ஒரு நிகழ்வு கொண்டதாக அமைந்திருந்தாலும் இவ்வாறு பெயர் பெறும்.

Slang:

கொச்சை வழக்கு நாடகம்

கொச்சையான சொற்கள் பயன்பட்டு வரும் நாடகம் இது. எனினும் செயற்கைத்தன்மை அற்றதாக விளங்கவல்லது சொல்ல வரும் கருத்தைக் குறுகலாக்கிச் சொல்ல இவ்வழக்கு பயன்படுத்தப்படுவதும் உண்டு. எனினும் பாத்திரப் படைப்புக் கேற்பவே இவ்வகை வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்படும்.

Slapstick:

கைத்தடி நாடகம்

பேரிரைச்சலை உருவாக்கி நகைப்பைத் தூண்டும் நாடகம் இது. கோமாளியின் கையில் இருக்கும் கைத்தடியின் பெயர் கொண்டு இந்நாடகம் அழைக்கப் படுகிறது. சக நடிகரை இக் கைத் தடியால் அடிக்கும்போது எழும் சத்தம் முக்கியமானதாக அமைகிறது.

Slice of life:

வாழ்க்கைக்கூறு நாடகம்

நடைமுறை வாழ்வில் நடந்ததான ஏதேனும் அனுபவக் கூறுகளை உள்ளடக்கும் நாடகம் இவ்வகைப்படும். இவ்வகை நாடகத்தில் நாடகப் பாத்திரங்கள் குறித்து கணிப்பதற்கான வாயில் பார்வையாளர்களுக்காகத் திறக்கப்படும். பின் கணிப்பினை அவர்களுடைய முடிவுக்கே விடும் வண்ணம் வாயில் மூடப்படும்.

இது நடப்பியல் கூறுகள் அதிகம் கொண்ட நாடக வடிவமாகும்.

Slip stage:

நழுவு மேடை

(*பார்க்க*: Boat truck -நகர்வுத் தடம்)

Sociological play:

சமூகவியல் நாடகம்

சமூகம் தொடர்பான கேள்வி களை எழுப்பி அவற்றிற்கு விடை தேடும் நாடகம் இது. இந்நாடக வகை சுற்றுச் சூழல், பண்பாட்டுக் கூறுகள் இவைகளை மையமாகக் கொண்டு அமையுமே தவிர தனி மனிதரை மையப்படுத்துவதில்லை. தமிழில் இவ்வகை நாடகங்கள் பல தோன்றியுள்ளன. ப.நீலகண்டனின் 'முள்ளில் ரோஜா' இவ்வகை நாடகத்திற்கான எடுத்துக் காட்டு ஆகும்.

Soliloquy:

தனி மொழி

ஒரு பாத்திரம் தனியாக இருக்கும் நிலையில் பேசப்படும் மொழி தனி மொழியாகும். தமக்குத் தாமே பேசுவதாகவோ அல்லது தம்மைச் சுற்றி யாரேனும் இருப்பின் கவலைப் படாமல் அவர்கள் கேட்குமாறு பேசுவதாகவோ அமையும். மொழியில் அடிமன ஆழத்தி லிருந்து வெளிப்படும் உணர்வுகள் முக்கியமாக இடம் பெறும். மேலும் பார்வையாளருக்குத் தேவையான அல்லது உணர்த்தப் பட வேண்டியனவும் இப்பேச்சின் மூலமாக வெளிப்படும்.

Solution:

தீர்வு

நாடகத்தின் முடிவில் வெளி யாகும் பதிலே நாடகத்தின் தீர்வு என்றாகிறது. கதைப் பின்னலுக் குரிய சிக்கல் தீர்வின் மூலமே முடிவுக்குக் கொண்டு வரப்பெறு கிறது.

Song:

பாடல்

பாடுவதற்கேற்ற இசைக் கூறு களுடன் அமைந்த கோர்வை யான வடிவம் பாடல் எனப்படு கிறது. நாடகங்கள் பாடல் வடிவில் அமைவதும், நாடகங் களில் ஆங்காங்கே பொருத்த மான பாடல்கள் இடம் பெற்று வருவதும் இயல்பாக உள்ளன. தமிழில் இருபதாம் நூற்றாண் டின் முற்பகுதியில் அதிகமான பாடல்களைக் கொண்டு நாடகங் கள் விளங்கின. காலம் செல்லச் செல்ல பாடல்கள் எண்ணிக்கை வரையறுக்கப் பெற்றது. இவ் வகைப் பாடல்கள் நாடகக் கதையோடு ஒட்டியே அமையும்.

எனினும் விடுதலை இயக்கக் காலக்கட்டத்தில் இயக்க உணர்வுப் பாடல்கள் பொருத்தமின்றி கூட தமிழ் நாடகங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளன. 'வள்ளித் திருமணம்' என்றும் தொன்ம நாடகத்தில் முருகனும், வள்ளியும் விடுதலை வேட்கை ஊட்டும் பாடல்களைப் பாடியபோது கூட தமிழ் மக்கள் அவற்றை ஏற்றுக் கொண்டனர்.

Sonnet:

உணர்ச்சிப் பாடல்

பதினான்கு அடிகளுடன் குறில் நெடிலான ஈரசைச் சீர் கொண்ட யாப்பு வடிவமே உணர்ச்சிப் பாடலாகும். ஒரு குறிப்பிட்ட தனித்துவமிக்க ஆனால் முழுமையான எண்ணங் களை வெளிப்படுத்துவதாக இவ் வகைப் பாடல் அமையும்.

Sonnet sequences:

உணர்ச்சிப் பாடல் வரிசை

ஓர் இசையமைப்பாளரால் இசையாக்கம் செய்யப்பட்டு ஒருங்கிணைந்த கதைக்கரு அல்லது பொருண்மையில் உருவாக்கம் செய்யப்படும் உணர்ச்சிப் பாடல்களின் தொகுப்பே இவ்வகைப்படுகிறது.

Sonneteer:

போற்றிப் பாடல்

நாடகப் பண்பமைந்த பாடல் இது. மாலை நேரப் பாடலாகக் கருதப்படும் இவ்வகைப் பாடல் காதலியின் பலகணியருகே சென்று காதலன் பாடும் பாடலாகும்.

Sophoclean:

சோபோக்கிளின் தாக்கம்

கிரேக்க நாடகசிரியர் சோபோக்கிள்ஸ்ன் தாக்கம் தொடர்ந்து நாடகங்களில் வெகுவாக அமையலாகும் தன்மை இவ்வண்ணம் குறிப்பிடப் பெறு கிறது. மிகச் சிறந்த துன்பியல் நாடகாசிரியராகவும், வரம் பெற்ற கவிஞராகவும், விளங்கியவர் சோபோக்கிள்ஸ்.

Source:

தரவு

ஒரு படைப்புக்கு ஆதாரமாக அமையும் செய்திகளைத் தருவது இதுவே. குறிப்பாக வரலாற்று நிகழ்வுகள் வரலாற்று நாடகங் களுக்கும், இலக்கியத் தரவுகள் இலக்கிய நாடகங்களுக்கும் முக்கியமானவையாக அமை கின்றன.

Spectacle:

கண்கவர் காட்சி

மனத்தில் நிற்கும் வண்ணம் ***பார்வைக்***கு விருந்தாக அமையும் ***காட்சி***. நாடகத்தில் காட்சிய ***மைப்பி***ன்போது வளமாக ***அமையு***ம் காட்சிகள் கண்கவர் ***காட்சி***யாக அமையும். 'பார்சி' நாடகக் காட்சிகள் கண்கவர் காட்சிகளே! தி.க. சண்முகம் சகோதரர்களின் 'இராசராச சோழன்' நாடகமும் காட்சிய மைப்பு, உடை, ஒப்பனையில் கண்கவர் தன்மை கொண்டு விளங்கின. நவாப் ராசமாணிக்கம், ஆர்.எஸ்.மனோகர் ஆகியோரும் நாடக மேடையில் இவ்வகைக் காட்சிப்படுத்துதலில் சிறந்து விளங்கினர்.

Spectator:

பார்வையாளர்

நாடகப் படைப்பின் மூல ஆதாரமாக விளங்குவோர் பார்வையாளரே ஆவர். பார்வை யாளரை நம்பியே ஒரு நாடகம் படைத்தளிக்கப்படுகிறது. பார்வையாளருக்கு ஏற்ப நாடகங் களைப் படைப்பதும், படைக் கின்ற நாடகங்களைப் பார்க்கும் நிலைக்குப் பார்வையாளரை உருவாக்குவதும் நாடகப் படைப் பில் இருநிலைக் கூறுகளாகும். நல்ல நாடகங்கள் நல்ல பார்வை யாளரைப் பெற்றுக் கொள்ளும் அல்லது உருவாக்கிக் கொள்ளும்.

தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாடகமேடை பால் பார்வை யாளர் காட்டிய வெறுப்புணர்வே அடுத்தகட்ட நாடக வளர்ச்சிக் கானப் படிக்கல்லாகவும் அமைந்தது. நல்ல பார்வை யாளர்களை உருவாக்கி தமிழ் நாடகக் கலையை வளர்க்க வேண்டுமென்ற குறிக்கோளி லேயே சங்கரதாசு சுவாமிகள், சம்பந்த முதலியார், தெ.பொ. கிருட்டிணசாமிப்பாவலர், தி.க. சண்முகம் சகோதரர்கள் போன் றோர் நாடகப்பணியில் ஈடுபட்ட வரலாறும் இதனையே வலியுறுத் தும். இவர்களைப் போன்ற பலரின் முயற்சிகளும், பாலர் சபை போன்ற குழுக்களும் நல்ல பார்வையாளரைத் தமிழ் நாடக மேடைக்குப் பெற்றுத் தந்துள்ளன.

Spot bar:

குறியிட ஒளிவட்ட விளக்குச் சட்டம்

(பார்க்க: Pipe Batten- குழாய் உருளைச் சட்டம்)

Stage:

மேடை

அவையோர் முன்பாக நடிகர் கள் (கலைஞர்கள்) நாடகக்

காட்சிப்படுத்தலுக்காகத் தோன்றும் இடம் மேடை எனப் படுகிறது. அரங்கின் படைப்பிட மாக மேடை காட்சியளிக்கிறது. பார்வையாளர்கள் மத்தியில் இவ்விடம் சற்று உயரமானதாக பார்வையாளர்களின் ஆக்கிர மிப்பில்லாத பரப்பாக விளங்கு கிறது. பார்வையாளர் பகுதி யினின்று உயரமாக அமைக்கப் படும் மேடையின் தற்போதைய தோற்றம் தொடக்கக் கால மேடையினின்று முற்றிலும் மாறுபட்டு உள்ளது. நாடகம் நடத்திடும் களமாக விளங்க, அது தரை மட்டத்தில் அமைந்து சுற்றிலும் பார்வையாளர் வரிசை கள் அமைக்கப்பட்ட நிலையைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்து கின்றன. ஆடுகளம், பாடுகளம் என நடத்துக் கலைகளுக்கான நடத்திடங்கள் பெயர் பெற்றிருந்தன. சிலப்பதிகாரம் நாடக இலக்கண அமைப்புட னான மேடையின் அளவு குறித்த குறிப்பினைத் தருகின்றது. நாடக இலக்கண நூல்மரபின்படி மனிதனின் இருபத்து நான்கு விரல், அதாவது ஆறு பிடி கொண்ட ஒரு அளவு கோலினைக் கொண்டு, ஒருகோல் உயரமுள்ள மேடையும், ஏழு கோல் அகலமும், எட்டுகோல் நீளமும், நான்கு கோல் உயரமும் கொண்... விளங்கியது. மேடை... வருவாயில், செல்வாயில் ... இரண்டு வாயில்கள் அமைக்... பெற்றிருந்தன. தற்கால மேடை யானது அரங்க முகப்புகள் மேடைத் தளம், பக்கத்தட்டிகள், பக்கத்திரைகள், காட்சித் திரை கள், முகப்புத் திரை, மறைப்புத் திரைகள், தொங்கு திரைகள், ஓரங்கள், ஒளி, ஒலியமைப்புடன் ஒப்பனை அறை வாயில்கள் போன்ற வசதிகளுடன் அமைக்கப் பெறுகின்றன. மின்சாரத்தின் பயன்பாடு நாடக மேடையின் மாற்றத்தில் பெரும் பங்கு புரி கின்றது. தற்காலத்தில் மேடை யினைக் கீழ்மேடை, மேல்மேடை எனப் பயன்பாட்டு அடிப்படை யில் பிரித்துக் கொள்வதுண்டு. மேலும் மேடையின் மேற்பரப் பினை ஒன்பது பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளும் நிலையும் தற்காலத்தில் நடைமுறையில் உள்ளது. மேல் இடது, மேல் நடு, மேல் வலது எனவும் கீழ் இடது, கீழ் நடு, கீழ் வலது எனவும் இடது பின் நடு, பின் நடு, வலது பின் நடு எனவும் அவ்வகைப் பிரிவுகள் அமைந்து நிற்கின்றன.

Stage Directions:

மேடை நடைமுறைக் குறிப்புகள்

நாடகப் பிரதியில் உள்ள காட்சிகளைக் காட்சிப்படுத்துத லுக்கு ஏற்ப மேடையில் தேவை யானதென்று உணரப்பட்டு சேர்க்கப்படும் நடைமுறைக் குறிப்புக்களே மேடை நடை முறைக் குறிப்புக்கள் எனப்படு கின்றன. இவை பொதுவாக நடிகர் நகர்வுகள், காட்சித் திரை கள், மேடைச் செயலாக் கங்கள் குறித்து அமையும்.

நடிகர் நகர்வைப் பொறுத்த மட்டிலும் பார்வையாளர் நிலையிலேயே பக்கம் வகைப் படுத்தப்படுகிறது. மேடையின் பின்னிருந்து முன்னோக்கி வருவது 'முன்னரங்கு நகர்வு' (down stage movement) எனவும் பார்வையாளர் நிலையிலிருந்து விலகிச் செல்வது 'பின்னரங்கு நகர்வு' (upstage movement) எனவும் வழங்கப் பெறுகிறது.

மேடையானது ஒன்பது பகுதி களாகப் பிரிக்கப்படுகிறது. முன்னரங்கின் (down stage) மூன்று பகுதிகள் இடது முன்னரங்கு, நடு முன்னரங்கு, வலது முன்னரங்கு என்பதாகும். நடு அரங்கின் (centre stage) மூன்று பகுதிகள் இடது, நடு, வலது என்பதாகும். மூன்று பின்னரங்கப் பகுதிகள் (upstage) வலது பின்னரங்கு, நடு பின்னரங்கு, இடது பின்னரங்கு எனப் பெயர் பெறுகின்றன.

மேடையில் நடிகர் நகர்வு களுக்கான நிலைகளும் (positions) முக்கியமாகின்றன. குறுக்கு வெட்டு(Cross) நகர்வு எனப் படுவது ஒருபக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு மேடையின் நடுப்பக்கமாக நகர்வதாகும். கத்தரிக்கோல் குறுக்கு வெட்டு (Scissor cross) எனப்படுவது இரண்டு நடிகர்கள் ஒருவரை ஒருவர் எதிரெதிராகக் கடந்து செல்லும் நிலையைக் குறிப்ப தாகும். மேலும் ஏதேனும் ஒரு பொருளை மையப்படுத்திய நகர்வாயின் அந்தப் பொருளுக்கு மேலே (above) அல்லது கீழே (below) என்று அமையுமேயன்றி அந்தப் பொருளுக்கு முன்னே (Front) அல்லது பின்னே (behind) என்று அமைவதில்லை.

நடிகர் தொடர்பான மேடை நகர்வில் மேலும் ஒரு குறிப்பிடத் தக்க கூறு உள்ளே, வெளியே என்பதாகும். உள்ளே வருவதகு வருநிலை (enter) எனவும் வெளியே செல்வதற்கு செல்நிலை (exit)

எனவும் பெயர் கொண்டழைக்கப் படுகிறது.

மேலும் நினைவூட்டுநர் பக்கம் (Prompt side) மேடையில் இடது புறம் அமையும். இவ்விடத்தில் நினைவூட்டுநர் இருப்பிடம் (Prompt corner) அமைந்திருக்கும். இதற்கு எதிர்ப்புறமான இடம் மேடையின் வலது பக்கமாகும்.

Stage time:

மேடைக் காலம்

மேடைக் காலம் என்பது இருபத்து நான்கு மணி நேரத்துக் குள்ளாக அமைய வேண்டு மென்பது பொது விதியாக பதினாறாம் நூற்றாண்டில், அரிஸ்டாட்டிலின் கோட் பாட்டினை அடியொற்றி கொள்ளப்பட்டிருந்தது. பல நாடகாசிரியர்கள் இதனைக் கணக்கில் கொள்ளவில்லை. எனினும் காலம் செல்லச் செல்ல மேடைக்காலம் சுருங்கிக் கொண்டது.

தமிழிலும் மேடைக்காலம் என்பது விடிய விடிய அமைந் திருந்த நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தது. பல இரவுகள் கூட ஒரே கதை தொடர்ந்தது. 'அரிச்சந்திர விலாசம்' என்ற தெருக்கூத்து மாதங்களாக நீண்டு பூ... வரலாறாக உள்ளது. ஒரு நா... எழுபது பாடல்வக... கொண்டிருந்த நிலை... இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காணமுடிந்தது. காலம் செல்லச் செல்ல மூன்று மணி நேரமாகச் சுருங்கியது. இக்காலத்தில் இரண்டு மணி நேரத்துக்குள்ளாகவே இது முடிந்து விடுகிறது.

Stage Whisper:

மேடை மறைவுரை

பார்வையாளருக்கு மட்டுமே கேட்பதாக எழுப்பப்படும் ஒலி குறைந்த குறு உரை. சக பாத்திரங் கள் உணர வேண்டிய வார்த்தை கள் இதில் வருவதில்லை. உள் தொனிச் சொல் (aside) ஒத்த வெளிப்பாட்டு நிலையில் இது அமைந்து வரும்.

Staging:

மேடையேற்றம்

நாடகத்தை மேடையில் படைத்தளிக்கும் நிலை இவ்வாறு அறியப்படுகிறது. நாடகம் எழுதுதல், தயாரித்தல், ஒத்திகை, நடிப்புப் பயிற்சி, நடிப்பு யாவுமே மேடையேற்றத்திற்கான அடிப்படைகளாகும்.

– Stanislavski Method:
தானிசுலாவுசுகி முறை

இயற்கையோடியைந்த, தனித்தன்மை வாய்ந்த நடிப்பு முறை இவ்வாறு தானிசுலாவுசுகி முறை என்று அழைக்கப்படுகிறது. உருசிய நாடக ஆசிரியரும், இயக்குநரும், நடிகருமான தானிசுலாவுசுகி (1863-1938)யின் நாடகக் கோட்பாட்டு முறை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நடிகர், பாத்திரத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு தனித் தன்மையோடு, அமைதியாக, இயல்பாக நடிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்பது இவரது நடிப்புக் கோட்பாட்டின் முக்கியமான செய்தியாகும். இயற்கைக்கு மாறான நடிப்பையும், பொருத்தமில்லாத உடைகளையும் தவிர்த்து இயல்பான தன்மையைக் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தும் வண்ணம் நடிகர்களுக்கான பயிற்சி முறைகளை இவர் வகுத்துள்ளார்.

Static Character:
நிலைப்புப் பாத்திரம்

நாடக ஓட்டத்தின்போது குணநலன்களில் எந்த மாற்றமும் கொள்ளாமல் அப்படியே நிலைத்து நிற்கும் பாத்திரம் இது.

Stereo type:
மாறாநிலை வடிவம்

ஒரே மாதிரியான தன்மையுடைய வடிவம் இது. நாடகக் கதைகள் சில ஒரே மாதிரியான வடிவமுறைகளைக் கொண்டு அமைந்து வரும். அதுபோன்ற நாடகப் பாத்திரங்கள், குறிப்பாக முழுமை பெறாத அரைகுறைப் பாத்திரங்களின் மாறாநிலை வடிவம் பெற்றமையும். இவை யாவும் நாடகத்தைப் பொறுத்த வரை மாறாநிலை வடிவும் பெற்றவை என்றறியப்படுகின்றன.

Stichomythi:
உறள்கவியடி

ஓரடியிலமைந்த உரையாடல் பரிமாற்றம் இவ்வகையில் அழைக்கப்படுகிறது.

Stiripart:
பெண் வேடதாரி

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகங்களில் பெண் பாத்திரமேற்கும் நடிகையர் 'ஸ்திரீபார்ட்' என்று பெயரிட்டு அழைக்கப்பட்டனர். 'ஸ்திரி' என்ற சொல் பெண்களைக்

குறிப்பதாக அமைகிறது. பெண் வேடமேற்பதால் 'ஸ்திரிபார்ட்' எனப் பெயர் பெற்றது.

Stock Character:

நிலைபடு பாத்திரம்

சில பாத்திரங்கள் பல நாடங்களுக்கும் பொதுவான பாத்திரமாக அமையும். இவை முழுமையற்ற பாத்திரமாக விளங்கி நிற்கும். அரச விகடன், கட்டியங்காரன் போன்ற பாத்திரங்களும் சில கோமாளி வேடங்களும் இவ்வகையில் பொதுவான தன்மையுடன் பல நாடகங்களுக்கான நிலையான பாத்திரங்களாக விளங்குகின்றன.

Stock company:

நிலைபடு குழு

மேலை நாடுகளில் 1850 வாக்கில் நடைமுறையில் இருந்த நிரந்தர நாடகக் குழுக்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டிருந்தது. இவ்வகையில் நிரந்தரக் குழுவில் இடம் பெற்றிருந்த நடிகர்கள் உண்மையான நாடக இருப்புத் தொகுதிப் படைப்பரங்க (repertory) நிலையில் நாடகம் படைத்தளிக்கும் நிலையில் மட்டுமே இப்பெயர் பொருந்தி வந்தது. புதிதாகத் தோற்றம் பெறும் நாடகக் குழுக்களினின்று வேறுபடுத்திக் காட்டவே இத்தகைய நிலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வகை நடிகர்கள் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்க வல்ல திறன் பெற்றிருந்தார்கள். இக்குழுவின் தலைமைத் துன்பியல் வேடதாரியான ஒரு நடிகர் மிகச் சிறந்த முறையில் நகைச்சுவைப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கும் வல்லமை பெற்றிருந்தார். சிறு சிறு வேடங்களில், அதிக முக்கியத்துவம் இல்லாத வேடங்களை ஏற்போர் பயன்பாட்டு (utility) நடிகர்கள் எனப்பட்டனர். மிகக் குறைந்த ஊதியமே இவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் இவர்களது பங்களிப்பு என்பது சில நேரங்களில் மேடையில் வந்து செய்வதாக மட்டுமே கூட அமைவதுண்டு. இது தவிர கூட்டத்தில் நிற்பதில் ஓர் ஆளாக நடிக்கும் எந்த முக்கியத்துவமுமில்லாத வேடமேற்போரை குழுநிலை நடிகர்கள் (super) எனப் பெயரிட்டழைக்கலாயினர். சில நேரங்களில் மட்டுமே இவருக்கு ஓரிரு வரிகளிலான உரையாடல் ஒதுக்கப்பட்டிருக்கும்.

Stock response:

நிலைபடு மறுகுறிப்பு

இது பார்வையாளர் பார்ப்பட்ட நிலையான ஏற்பு நிலை.

ஒரே பாங்கான, விமரிசனமற்ற குறிப்பினை மறுமொழியாகத் தெரிவிக்கும் தன்மை இது. கதைத் தலைவனைப் பாராட்டுவதும், முரண் பாத்திரத்தாரை கூச்ச லிட்டு எரிச்சல் படுத்துவதும் பார்வையாளரின் நிலைப்பான மறு குறிப்புச் செயலாகும்.

Stock situation:

நிலைபடு சூழல்

திரும்பத் திரும்ப வரும் பாங்கு, நிகழ்வு, சூழல் போன்றன நாடகங் களில் பயின்று வரும் நிலை இவ்வாறு அமைகிறது. பழிக்குப் பழி வாங்குதல், காதலுக்கு எதிர்ப்பு நிலை கொள்ளல், தவறாகப் புரிந்து கொள்ளுதல் போன்ற நாடகங்களில் அடிக்கடி பயின்று வரும் சூழல்களாகும்.

Story:

கதை

ஒரு கதைமாந்தரை மையப் படுத்தியோ, ஒரு சூழலை மையப் படுத்தியோ, ஒரு கதைக்கருவை மையப்படுத்தியோ பொதுவாக ஒரு கதை உருவாக்கப்படுவதுண்டு. பாத்திரங்கள் உருவாக்கப்பட்டு, உரையாடல்கள் வடிவமைக்கப் பட்டு உரிய கதைப் பின்னலுடன் பார்வையாளர்களுக்குப் பிடிக்கும் படியாக அது முன் வைக்கப்படும். இவை நாடகம் உள்ளிட்ட அனைத்து இலக்கிய வடிவங்களுக்குமான பொதுவான கதை கூறல் முறையாகும்.

Street Play:

தெரு நாடகம்

தெருக்களில் அல்லது வீதி களில் நடத்தப்பெறும் நாடகம் இது. தெருக்கூத்து இவ்வகையில் நடத்தப்பெற்று வருகிறது. மேலும் சில நவீன நாடக முயற்சிகளும் தெருக்களை மையப்படுத்தி நடத்தப் பெறுகின்றன. அறி வொளி இயக்க நாடங்கள், மக்கள் விழிப்புணர்வு நாடகங்கள் போன்றவும் தெரு ஓரங்களில், மக்கள் நடமாட்டமுள்ள இடங் களில் நடத்தப் பெறுகின்றன. இவை தனித்தன்மை வாய்ந்த நாடகவடிவமைப்பையும் கொண்டு விளங்குகின்றன. உரை நடையும், பாடலும் கலந்த உரையாடல் கொண்டு நடிகர்களின் உடல் உழைப்பை ஆதாரமாகக் கொண்டு இவை நடத்தப் பெறுகின்றன. பார்வையாளரோடு நேரடியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்வது போன்ற பாங்கில் இவை படைக்கப்படுகின்றன. இவ்வகை நாடகங்களை படைத்தளிக்கும் அரங்கக் குழு தெரு அரங்கம் அல்லது வீதி அரங்கம் (Street

Theatre) எனப்படுகிறது. தமிழகத்தில் பல வீதி நாடகக் குழுக்கள் உள்ளன.

Street Theatre:

தெரு அரங்கம்

(பார்க்க: Street play- தெரு நாடகம்)

Strophe:

சுற்றுப் பாடல்

கிரேக்க நாடகத்தில் மேடையின் வலது புறத்திலிருந்து இடது புறமாகச் செல்லும் குழுவினர் பாடிச் செல்லும் பாடல் இவ்வகையில் பெயர் பெறுகிறது. இதனைத் தொடர்ந்து எதிர்ச் சுற்றுப்பாடல் (Anti-strophe) நிகழ்வு நடைபெறும்.

Structure:

அமைப்பு

இலக்கியத்தின் திட்டமிடப் பெற்ற அமைப்பு முறை இது. நாடகமானது களம், காட்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. மேலும் பாத்திரங்களுக்குள் உருவாகும் ஒன்றோடொன்றான சார்பு நிலையும் நாடகத்துக்கான தனித்தன்மை வாய்ந்த கூறாகும். எனினும் நாடகத்தின் திட்டமிடப்பெறாத கூறுகளாக நடிப்பும் காட்சிகளும் அமையும்.

Style:

பாணி

ஒரு படைப்பாக்கத்தில் ஆசிரியர் கையாளும் தனித் தன்மையான ஆக்க முறையே பாணி எனப்படுகிறது. நாடகத்திற்கும் இது பொருந்தும்.

Sub Plot:

கிளைக் கதைப்பின்னல்

முதன்மைக் கதைக்குத் துணையாகவோ, தனியாகவோ அமைக்கப் படும் துணைக் கதைப் பின்னல் இவ்வகையில் அமைகிறது. இக்கதைப் பின்னல் முதன்மைக் கதைப் பின்னலிருந்து மாறுபட்டோ, ஒன்றுபட்டோ அல்லது தனித்தோ அமைந்து வரலாம்.

Sub Text:

துணைப் பாடம்

மேடையில் எழுத்துவடிவில் அமைக்கப்படும் உரையாடல் அல்லாத பேசப்படா மொழி இது. 'மேடையில் பாத்திரங்கள் பேசும் மொழி என்பது மட்டும் போதுமானதன்று' என்ற ஜீன் ஜேக்கசு பெர்னால்டு (1888-1972) என்பாரின் கோட்பாட்டின் அடிப்படையில் இது உருவாக்கம் பெற்றது. உரையாடலின் இடையே வரும் இடைத் தடை (pause),

மவுனம் (silence) ஆகியவற்றின் மூலமாக இவை உருவாக்கம் பெறும்.

Surprise ending:

எதிர்பாரா முடிவு

திடுமென எதிர்பாராத திருப்பம் தோற்றம் பெறுவதும் அதனால் முடிவில் மாற்றம் ஏற்படுவதும் இயல்பு. இதுவே எதிர்பாராத முடிவு எனப்படுகிறது. முற்குறிப்பு மூலம் முன் கூட்டியே இது புலப்படுத்தப்படவில்லை யெனில் எதிர்பாரா முடிவு எனப்படுவது திட்டமிட்டு செய்யப்படக்கூடிய உத்தியெனவே கொள்ளலாம்.

Suspense:

எதிர்பார்ப்பு நிலை

மனத்தளவில் எதிர்பார்ப் பினைத் தோற்றுவிக்கும் வண்ணம் முடிவு செய்ய இயலாத நிலை இது. நாடகத்தைப் பொறுத்த மட்டிலும் 'அடுத்து நடக்க விருப்பது என்ன?' என்ற எதிர் பார்ப்பினை உருவாக்கி கதைப் போக்கிற்குத் துணை செய்வது இவ்வகை நிலையே ஆகும்.

Switch back:

முன் கூர்தல்

(பார்க்க: Flash back -முன் கூர்தல்)

Sword Dance:

வாள் நடனம்

ஒருவருடம்முடிந்து இன்னொரு வருடம்தொடங்குவதைக் குறிக்கும் வண்ணம் அமையுமாறான நாடக வடிவிலான நடன நிகழ்வு இது. சடங்கு சார்ந்து அமைவது. இந்நாடகத்தில் ஒரு பாத்திரம் இறந்து மீண்டும் உயிர்பெற்று எழுவதாகப் படைக்கப்படும்.

Symbolic Action:

குறியீட்டு நடிப்பு

ஒரு படைப்பாளி நாடகத் தைப் படைக்க முற்படும் பொழுது தமக்குத்தாமே பாத்திரமாக மாறிக்கொள்ளும் நிலையை இது குறிப்பிடுகிறது. மேலும் தமது மனத்தில் உள்ள உணர்வுகளை அல்லது குறைகளை நிவர்த்தி செய்வதாக நினைத்து ஒரு படைப்பை உருவாக்க முற்படுகை யில் இவ்வித குறியீட்டு நடிப்புக்கு தம்மை ஆட்படுத்திக் கொண்டு அதன் மூலமாக பாத்திரங்களைப் படைக்கிறார். இதன் மூலம் ஒரு படைப்பாளி தம்மையே எழுத்து வடிவில் வெளிப்படுத்துபவரா கிறார். இதை ஒரு கோட்பாடாக அறிமுகம் செய்தவர் கென்னட் பர்க் (Kenneth Burke) என்பவராவார்.

Syncopation:

இசை அசைக்குறை

இசையின்பாற்பட்ட நிகழ்வு இது. அதன் போக்கிலிருந்து மாறுபட்டு, அசையெழுச்சி நிலையினின்றும் வேறுபட்டு அமையும் தன்மை இது.

Tableau:

உறைநிலைக் குழுமம்

கலைஞர்கள் உரியமுறையில் உடையணிந்து, அமைதியாக உறைநிலையில் குழுவாகத் தோற்றமளித்து ஓவியம் போலக் காட்சியளிப்பது இவ்வகையில் அழைக்கப்படுகிறது. இசை நகைச் சுவை நாடகங்களிலும், பிற நாடகக் காட்சிச் சித்திரிப்புகளிலும் இவ்வகைத் தோற்றம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நாடகச் சூழலை வலியுறுத்திக் காட்டுவதற்காக அல்லது வேறுபடுத்திக் காட்டுவதற்காக இவ்வகை உறை நிலைக் குழுமம் செய்து காட்டப் பெறுகிறது.

Technician:

தொழில் நுட்பாளர்

ஒவ்வொரு துறைக்கும் தொழில் நுட்ப வல்லுநர்கள் இருப்பது போலவே நாடகத்திற்கும் மேடையில் பல தொழில் நுட்பாளர்கள் பணியாற்றுகின்றனர். ஒளி, ஒலி, காட்சியமைப்பு, காட்சித் திரைகள் போன்ற கூறுகளில் தேர்ந்த தொழில் நுட்பாளர்கள் மேற்கொள்ளும் கடின உழைப்பு நாடகத்தின் வெற்றிக்குப் பெரும் பங்கு பணியாற்றுகின்றன. மின்சாரத்தின் பயன்பாட்டிற்கு முன்னரும் இயற்கையான உபகரணங்களைக் கொண்டு உடல் வருத்துதல் மூலம் காட்சிப் பரிமாணங்களைப் பல தொழில் நுட்பாளர்கள் செய்து காட்டியுள்ள நிலை குறிப்பிடத்தக்கதாகும்.

Technique:

உத்தி

நாடகத்தில் ஒரு நாடகாசிரியரோ அல்லது நாடகத்தை நெறிப்படுத்துநரோ தமக்கென உருவாக்கிக் கொள்ளும்முறை அல்லது செயல்திறனே உத்தி எனப்படுகிறது. ஒரு நாடகாசிரியரின் உத்தி அவர் உருவாக்கிக் கொள்ளும் பாத்திரப்படைப்பு, உச்சம், முரண், திருப்பங்கள், உரையாடல் போன்ற வற்றில் அமைந்து வரும். நாடக நெறிப்படுத்துநரின் உத்தி நாடகக் கதையைச் சித்திரித்துக் காட்டும் போது உருவாக்கிக் காட்டும் காட்சிகள், தடைச் செப்பங்கள்,

உச்சம், வீழ்ச்சி, முடிவு இவற்றில் முக்கியமாகப் பயின்று வரும்.

Television:

தொலைக்காட்சி

ஒரு காட்சியை அல்லது காட்சிப் படிமத்தை ஒளியலைகள் மூலம் பரப்புதல் செய்து அதனை தொலைக்காட்சிப் பெட்டிக்குள் காட்சிப்படுத்துதல் இன்று முக்கியமான ஒன்றாகியுள்ளது. இன்றைய அறிவியல் உலகத்தில் தொலைக்காட்சியின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். மேடை நாடகங்கள் பலவும் இவ்வகையில் காட்சிப் படுத்தப்பட்டு அதன் பரிமாணம் மாற்றப்பட்டு வீட்டுக்குள்ளேயே கொண்டு வரப்படுகின்றன. இதனால் மேடை நாடகத்தின் சில கூறுகள் சிதைந்து போவதும் தவிர்க்க முடியாததாகிறது.

Tempo:

வேகவீதம்

நாடகம், பண்பு நிலையில் கொண்டுள்ள போக்கு, பாங்கு, நகர்வுவேகம் இவற்றை மிளிரச் செய்வது அவற்றின் வேகவீதமேயாகும். துப்பறியும் நாடகங்களின் வேக வீதம் மற்றெந்த நாடகங்களையும் விட அதிகமாக அமைந்துவரும்.

Tenor:

கருத்துப் பொதுமை

ஒரு நாடகப் படைப்பின் உரையாடல்களில் வெளிப்படும் எண்ணமும் அதன் அர்த்தமும் பொதுவான நோக்கினை வெளிப் படுத்துவதாக அமையும். எடுத்துக் காட்டாக தமிழ்ச் செல்வம் நாடகத்தில் வரும் உரையாடலைக் குறிப்பிடலாம். ஆங்கில வெறியரொருவர் 'தமிழிலே என்ன இருக்கு?' எனக் கேட்க அதற்கு பதில் தரும் தமிழாசிரியர் 'தமிழில் என்னதான் இல்லை? எல்லாம் இருக்கிறது நீங்கள் படிக்கவில்லை. பல மொழிகளையும் கற்றறிந்த உலக அறிஞர்களில் பலர் தமிழைக் கற்று மிகவும் பாராட்டியிருக்கின்றனர்.' (த.செ. காட்சி.1) எனக் குறிப்பிடுகிறார். இவ்வுரையாடலில் தமிழ் என்பதே கருத்துப் பொதுமையாக விளங்குகிறது.

Tension:

உள்ளலைவு

படைப்பின் எழுத்து நிலைக்கும் அதன் பாதிப்பிற்கும் இடையே இயக்கம் உள்ளூர ஊடாடுகிறது. இவ்வியக்கமே உள்ளலைவு எனப்படுகிறது. இவ்வியக்கம் தான் படைப்பின் வடிவத்திற்கும்

ஒற்றுமைக்குமான பண்பினைத் தருகிறது.

Text:

பாடம்

நாடகத்திற்கான பாத்திரங்களுக்குரிய பகுதியே, பாடம் எனப்படுகிறது. ஒவ்வொரு பாத்திரத்திற்கான பகுதியும் அவரவர்களுக்கான நாடகப் பாடம் எனப்படும்.

Theatre/Theater:

அரங்கு

ஒரு கட்டடமாகவோ, ஒரு கட்டடத்தின் பகுதியாகவோ அல்லது திறந்தவெளியாகவோ அமைந்து நாடகக் கலையின் படைப்பிடமாகத் திகழும் இடம் அரங்கு எனப்படுகிறது. இவ்வகையில் நிகழும் நடத்துக்கலைகள் அரங்கக் கலைகள் என்று அழைக்கப்படுகின்றன. நாடகம் உள்ளிட்ட நடத்துக்கலைகளைப் பார்க்கும் இடமே அரங்கு எனப் பெயர் பெறுகிறது. 'தியேட்டர்' என்ற கிரேக்க வார்த்தைக்கு 'பார்க்கும் இடம்' என்ற பொருள் அறியப்பெறுகிறது. இந்திய நாடக அரங்கம் குறித்த செய்திகளை 'ஜதகா' கதைகள் குறிப்பிட்டுச் சொல்கின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முந்தையதாக கருதப்படும் 'ஜதகா' கதைகள் திறந்தவெளி அரங்கு குறித்த செய்திகளைத் தருகிறது. பார்வையாளர் இருக்கைகள் சுற்றிலும் தட்டுகளாக தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தன. நடுவிலுள்ள வெற்றிடமே அரங்கமாயிற்று. நடுவிலுள்ள அரங்கு 'ரங்க மண்டல்' எனவும் அதனைச் சுற்றியுள்ள இடம் 'ரங்க மண்டபம்' எனவும்அழைக்கப் பெற்றது. அர்த்தசாத்திரமும் அரங்கு குறித்த செய்தி தருகின்றது. பரதரின் நாட்டிய சாத்திரமும் அரங்கு குறித்துப் பேசுகின்றது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த 'பாஷன் 'என்பார் அரங்கு மேடைப் பொருள்கள் குறித்த குறிப்புக்களைத் தந்துள்ளார்.

தமிழகத்தில் அரங்கு குறித்த செய்திகளைச் சங்ககாலம் முதலாக அக்கால இலக்கியங்களைக் கொண்டு அறிய முடிகின்றது. சங்ககால அரங்கு வயல் வெளி, ஆற்றுப்படுகை, குன்றின் பரப்பு போன்ற திறந்த வெளிகளில் அமைந்திருந்தது. களம், ஆடுகளம் போன்ற சொல்லாட்சிகளே இதற்குச் சான்று பகரும். நடத்தப்பட்ட நடத்துக்கலைகள் யாவும் கூத்து வகையாக அமைந்திருந்தன. கூத்தின் தன்மைக்கேற்ப அரங்கின்

தன்மை அமைந்திருந்தது. திருவள்ளுவர் கூத்து நடந்த இடத்தினைக் 'கூத்தாட்டவை' எனப் பெயர் கொண்டழைக் கிறார். கிபி.ஆறாம் நூற்றாண்டினதாகக் கருதப் பெறும் சிலப்பதிகாரம் அடைப்பு அரங்கு குறித்த செய்தி தருகிறது. பொதுவியல் நிலையில் அமைந்த திறந்தவெளி அரங்கும், வேத்தியல் நிலையில் அமைந்த அடைப்பு அரங்கும் இக்கால கட்டத்தில் பயன்பாட்டில் இருந்தமைக்கான செய்திகள் கிடைக்கின்றன. அரங்கு அமையுமிடம் குறித்த அரிய செய்திகளைச் சிலப்பதிகாரம் தருகிறது. தெய்வத்தானம், அறவோர்ப் பள்ளி, அந்தணர் இருக்கை, போர்க்களம், சேரி, யானை கட்டுமிடம், குதிரைச் சாலை, பாம்புப் புற்று ஆகிய இடங்கள் தவிர்த்த இடங்களே அரங்கிற் கேற்ற இடங்களாகும் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அரங்க வாயில்களின் உயரம் குறித்தும் பார்வையாளர் அமர்வுகள் தரத்திற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தமை குறித்தும் குறிப்புகள் கிடைக்கின்றன. அரங்க மேடையின் அளவு துல்லியமாக கணக்கிட்டு தரப் பட்டுள்ளது. அரங்கினை கூத்தப் பள்ளி, கூத்தாட்டிடம், ஆடம் பலம், நாடகசாலை எனப் பலவாறாக அழைத்த நிலையும் அறியக் கிடைக்கிறது. சோழர் காலத்தில் நடத்துக் கலைக்களுக்கான மண்டபங்கள் அமைக்கப் பட்டன. தாராசுரம் கோயிலின் இராஜ கம்பீர மண்டபம் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றிருந்த தெருக்கூத்து அரங்கு திறந்தவெளியில் கோயில் முற்றங்கள், களத்துமேடுகள், தெரு முனைகளில் அமைக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் மேனாட்டு நாடகத் தாக்கத்தினை அடியொற்றி நவீன நாடக அரங்குகள் அமைக்கப் பெற்று உரிய அரங்க மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒலி, ஒளி, காட்சியமைப்பு போன்ற அனைத்துக் கூறுகளும் நவீனப் படுத்தப் பெற்றுள்ளன.

Theatre in the round:

சுற்று அரங்கு

(பார்க்க: Arena Theatre- *களத்து அரங்கு*)

Theatre of the absurd:

இயல்பு முரண் நாடகம்

நாடகத்துக்கென வரையறுக்கப்பட்டுள்ள

அடிப்படைக் கொள்கையைத் தவிர்த்து படைக்கப்படும் நாடகம் இவ்வகை நாடகமாகும். நாடக வடிவம், கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு போன்ற அடிப்படைக்கூறுகள் தவிர்க்கப் பட்டோ சிதைக்கப்பட்டோ அமைந்துவரும். பகுத்தறிவுக்கு மாறான தன்மைகள் வலியுறுத்தப் பட்டு மனிதத் தன்மைகள், மன அழுத்தங்கள் போன்றவற்றை மையக் கருத்தாக்கி இவ்வகை நாடகம் படைத் தளிக்கப் படுகிறது. பாத்திரப் படைப்பு வேறுபட்ட வகைகளில் மாறி வரும் படியாகவும், காட்சி களுக்கென குறிப்பிட்ட காட்சியமைப்பு, கால அளவு போன்றன வரையறுக்கப்படாத படியும் அமைந்துவரும்.

Theatrical:

நடிப்புக்குரிய

(பார்க்க: Theatrical acting- மேடைப்பண்பு நடிப்பு)

Theatrical acting:

மேடைப் பண்பு நடிப்பு

நடிப்புக்குரிய வகையில் அமைந்து வருவதாயினும், செயற்கைக் கூறு மிக்க நடிப்பு வெளிப்பாடு இவ்வகைப்படு கிறது. பாத்திரத்தின் பண்புக் கூறு களை உணர்ச்சியைத் தூண்டும் வகையில் சித்திரிப்பு செய்யும் நோக்கில் இவ்வகை வெளிப்பாடு மேற்கொள்ளப்படுவதுண்டு.

Theatricalism:

நாடகமேடைப் பண்பு

(பார்க்க: Theatricality -நாடக மேடைப்பண்பு முனைப்பு)

Theatricality:

நாடக மேடைப்பண்பு முனைப்பு

மேடையில் நாடகக் காட்சிப் படுத்தலின் போது வெளிப்படும் நடிப்புத் தன்மை, காட்சிகளில் செயற்கைக் கூறுகள், கண்கவர் கூறுகள் அல்லது பகட்டான தன்மைகள் வெளிப்படும் பண்பு நிலையே (Theatricalism) நாடக மேடைப் பண்பு முனைப்பு எனப் படுகிறது. இது ஒருவகையான கண்காட்சிக் கொப்பான காட்சிப் படுத்தலாகும். இசை நாடகங்கள் இவ்வகைத் தன்மையைக் கொண்டிருக்கக் கூடும்.

Theatrically:

நாடக முறையிலான

நாடகப் பண்பு முறையில் நடைபெறும் யாவுமே இவ்வகை யில் அழைக்கப்படும். நாடகம் மற்றும் நாடகத் தன்மையுடைய தாக நடக்கும் பிற நிகழ்வுகளும் இத்தன்மைத்தே ஆகும்.

Theatricals:

நாடக மேடைக்காட்சிக் கூறுகள்

நாடக மேடையில் காட்சிப் படுத்தப் பயன்படும் பொருட்கள், காட்சிப்படுத்தலுக்குத் துணை புரியும் ஆட்கள், காட்சிகள் மற்றும் நாடகக் காட்சிகளின் செய்தி நிலையிலான வெளிப்பாடுகள் யாவும் இவ்வகையில் அடங்கும்.

Theme:

கதைக்கரு

கதையின் மையமாகவும் முதன்மையாகவும் அமையக் கூடிய கூறே கதைக்கரு எனப் படுகிறது.

Thesis play:

சிக்கல் விளக்க நாடகம்

(பார்க்க: Problem play -சிக்கல் நாடகம்)

Three Unities:

மூவொருமைகள்

அழகியல் குறித்த அரிஸ்டாட்டிலின் கோட்பாடு நாடகத்திற்கான முதன்மையான கூறுகளாக மூன்று ஒருமைகளைக் குறிக்கின்றது. அவை ஒரு நாள் (கால ஒருமை), ஒரு இடம் (இட ஒருமை), ஒரு கதைப் பின்னல் (செயல் ஒருமை) ஆகியனவாகும். இவையே மூவொருமைகள் என்றழைக்கப்படுகின்றன.

Total Theatre:

முழுமை அரங்கு

இயக்கஞ்சார்ந்த அனைத்துக் கூறுகளையும் மேடைக்குள் கொண்டு வந்து நாடகம் செய்யும் பொழுது அது முழுமை அரங்கப் படைப்பாகிறது. ஒளி, ஒலி, இசை, நடனம், உடை, களரி போன்ற உடல் விளையாட்டுகள், கண் கவர் காட்சியமைப்புகள் போன்ற யாவும் நடிப்பின் வேகத்தினை அதிகப்படுத்தத்தக்க நிலையில் பயன்படுத்தப்படும். திரைத் துணுக்குகள், கருத்துப் படங்கள் யாவும் ஊடே பயன் படுத்தப் பட்டு நடிப்பு வேகப் படுத்தப் படுவதும் உண்டு. கி.பி. 1920 வாக்கில் வால்டர் கிரோபியசு என்பவரால் திட்டமிடப் பெற்ற இவ்வுத்தி நாடக இயக்குநரான இர்வின் பிசுகேடர் (1893-1966) என்பவரால் முதலில் நடை முறைப்படுத்தப் பெற்றது.

Tradition:

மரபு

தலைமுறை தலைமுறையாக அல்லது காலம் காலமாக தொடர்ந்துவரும் வழக்கங்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள் இவைகளின் ஒருங்கிணைந்த நிலையே மரபு எனப்படுகிறது.

நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள், நாட்டுப்புற இசைப் பாடல்கள் போன்றன இவ்வகையில் தோற்றம் பெற்றவையே யாகும். இவை சார்ந்த நாடகங்களும் மரபு போற்றும் நாடகங்களாக அறியப்பெறுகின்றன. தமிழில் சங்க காலக் கூத்து மரபு இன்றும் பல்வேறு வகைகளிலும், வடிவங்களிலும் தோன்றுவதை உரிய சான்றாகக் கொள்ளலாம்.

Tragedy:

துன்பியல் நாடகம்

மன உளைச்சல் தரும் வகையிலான நிகழ்வுகளைக் கொண்டு, துன்பம் தரத்தக்க முடிவுடன் அமையும் நாடகம் துன்பியல் நாடகம் எனப்படுகிறது. நாடகத்தில் துன்பியல் நாடகங்கள் நடிப்பின் பல்வேறு பரிமாணங்களை ஆழமாகவும் உணர்ச்சிகரமாகவும் வெளிப்படுத்தி நிற்கும். சமுதாய அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுவதில் துன்பியல் நாடகங்கள் பெரும் பங்களிப்பு செய்கின்றன. இவ்வகை நிகழ்வுகளே நாடகத்தின் துன்பியல் சார்ந்த முடிவிற்கு இட்டுச் செல்லும் வீழ்ச்சிக்குக் காரணிகளாகவும் விளங்குகின்றன.

Tragedy of revenge:

கறுவும் உணர்ச்சிக்கூற்றுத் துன்பியல் நாடகம்

(பார்க்க: Revenge tragedy- கறுவும் உணர்ச்சிக் கூற்றுத் துன்பியல் நாடகம்)

Tragic Comedy:

துன்ப இன்பியல் நாடகம்

துன்பத்தையும் நகைச்சுவையையும் கலந்து தரும் நாடகம் துன்ப இன்பியல் நாடகம் எனலாம். துன்பியலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாடகத்தில் திடீரென இன்பச் சூழல்கள் உருவாகி அதன் மூலம் துன்பியல் நிலை தவிர்க்கப்பெற்று இன்பியலாக முடிவடையும் நிலை உருவாகிறது.

Transition:

பரிணாமம்

ஒரு படைப்பில் தொடர்ந்து வரும் நிகழ்வுகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்கி வளர்ச்சியடையச் செய்யும் உத்தியே பரிணாம முறை எனப்படுகிறது. நாடகத்தில் இவ்வகைப் பரிணாமம் உரையாடல் மூலமாகவோ, பயன்படுத்தப்படும் உவமைகள் மூலமாகவோ, தொடர்கள் மூலமாகவோ உருவாக்கப்படும். மேலும் ஒளிச்

செயலாக்கம், ஒளிமாற்றம், இசை போன்றவற்றாலும் இவை மேற்கொள்ளப்படும்.

Triology:

முத்தொகுப்பு

ஒரே கருத்தமைவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று தனி நாடகங்களின் தொகுப்பே முத்தொகுப்பு என்றழைக்கப்படுகிறது. தமிழில் இவ்வகை நாடகங்கள் அரிதாகவே காணப்படுகின்றன.

Tritagonist:

மூன்றாம் நிலை நடிகர்

கிரேக்க துன்பியல் நாடகத்தில் இடம்பெறுவதாக அமையும் அதிக முக்கியத்துவமில்லாத மூன்றாவது நிலை நடிகர்.

Troupe:

குழு

(பார்க்க: Drama company- நாடகக் குழு)

Unit setting:

தொகுதிக் காட்சியமைப்பு

நிரந்தரமாக வைக்கப்படும் ஒரு காட்சியமைப்புக்கு முன்பாக சிறு சிறு காட்சியமைப்புத் துண்டுகள் (pieces of scenery) கொண்டு மாற்றியமைக்கும் படியாகச் செய்து ஒரு குறிப்பிட்ட காட்சிக்கேற்ப காட்சியமைப்பினை அமைத்துக் கொள்ளும் முறையே தொகுதிக் காட்சியமைப்பு எனப்படுகிறது. இதனைத் தொகுதிக் காட்சித் திரை அமைப்பு (detail scenery) என்றும் குறிப்பிடுவதுண்டு.

Unities (Three):

கூட்டொருமைக்கூறுகள் (மூன்று)

அரிசுடாட்டிலின் கோட்பாட்டுப்படி அறியலாகும் காலம் (time), இடம் (place), நடிப்பு (action) தொடர்பான மூன்று ஒருமைக் கூறுகள் இவ்வகையில் அறியப்படுகின்றன. இக்கோட்பாட்டின்படி ஒரு நாடகமானது ஒரு நாளில் நடப்பதாக அமையவேண்டும் (கால ஒருமை). அது போல ஒரே இடத்தில் நடைபெறுவதாக அமைய வேண்டும் (இட ஒருமை). மேலும் ஒரே ஒரு கதைப் பின்னலுடன் அமைய வேண்டும் (நடிப்பு ஒருமை). இவ்வகைக் கால, இட, நடிப்பு அடிப்படையில் நாடகம் படைக்கும் முயற்சிகள் பெருமளவில் நடைபெறவில்லை. நாடக நிகழ்வு இவ்வகை வரையறைகளைக் கடந்து நிற்பது என்றே கருதப்படுகிறது. எனினும் சேக்சுபியரின் தி டெம்பசுடு (The Tempest) இவ்வகை ஒருமைக்

கூறுகள் கொண்டமைந்த நாடகத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

Unity:

ஒருமை

ஒரு படைப்பில் அனைத்துக் கூறுகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு ஒருமைக் கூறாக விளங்க வேண்டுவது இன்றியமையாததாகும். எனினும் இது படைப்புக்கும் படைப்பு வேறுபட்டமையும், கதைப்பின்னல் அல்லது பாத்திரப்படைப்பு அல்லது சூழல் அல்லது கதைக்கரு இவற்றில் ஏதேனும் ஒரு கூறு இவ்வகை ஒருமை உருவாக்கக் காரணியாக அமையலாம்.

Upstage:

பின் மேடை

மேடையினுடைய பின் பகுதியை இது குறிக்கிறது. பின் மேடை மூன்று பிரிவுகளாகி வலது பின் மேடை (up right), இடது பின் மேடை (up left), நடு பின் மேடை (up centre) என்றும் வழங்கப்படுகிறது.

Utility:

பயன்பாட்டு நடிகர்

(பார்க்க: Stock company- நிலைபடு குழு)

Valance:

மேடை முகப்புக்கழி மறைப்பு ஓ...

(பார்க்க: Proscenium pel... மேடை முகப்புக்கழி மறைப்... ஓரம்)

Vandeville:

கலைக்கலவை

தனி நடத்துக்காட்சிகள், நடிப்புகள், நடனங்கள், குறு நாடகங்கள், வித்தைகள், கலை வடிவத் துணுக்குகள் ஒருங்கே கலந்த நிகழ்ச்சி இது.

Vice:

தீயொழுக்கப் பாத்திர வேடதாரி

அறவழிப்படுத்தும் நாடகங்கள், நல்லொழுக்க நாடகங்களில் பாவம் சேரத்தக்க செயல்களைச் செய்து அதனால் அல்லலுறும் பாத்திரத்தின் வேடத்தை ஏற்கும் நடிகர் இவ்வாறு அறியப்படுகிறார். தமிழில் நொண்டி நாடகத்தின் நொண்டி பாத்திரம் ஏற்பவருக்கு இப்பெயர் பொருந்துமாறு அமையும்.

Villain:

முரண் பாத்திரம்

நாடகத்தைப் பொறுத்த வரையிலும் கதைப்பின்னலில், மையக் கதைக்கூறுக்கு உகந்த வகையில் அல்லாமல் எதிராக

வும், மாறுபட்ட செயல்பாடு களைக் கொண்டும் அமையும் பாத்திரம் இவ்வகைப்படுகிறது. பொதுவாக முரண் பாத்திர மானது கதைத் தலைவனாகிய நேர்நிலைப் பாத்திரத்திற்கு எதிரான செய்கைகளைக் கொண்ட மையும். சில நேரங்களில் முரண் பாத்திரமே கூட முதன்மைப் பாத்திரமாக அமைந்து வருவ தும் உண்டு. முரண்பாத்திரத்தின் செயல்பாடு பொதுவாக மாறு பட்டமைவதால் அந்நிலை யானது முரண்பாடு (Villainy) என்றழைக்கப்படுகிறது.

Villainy:

முரண்பாடு

(பார்க்க: Villain- முரண் பாத்திரம்)

Visor:

முகக்கவசம்

(பார்க்க: Mask -முகமூடி)

Visual form:

காட்சி வடிவம்

ஒரு காட்சியை அல்லது நிகழ்வை அல்லது ஒரு கதைக் கூறினை மேடையில் சுவைபட நடத்திக்காட்டுதலே அக்காட்சி யின் அல்லது நிகழ்வின் அல்லது கதைக்கூறின் காட்சி வடிவ மெனப்படும். காட்சி வடிவம் பெறும்போது பல சுவைகள் உட்புக நேரிடும். அக்காட்சி வடிவத்தில் நாடக அல்லது பிற படைப்பின் நெறிப்படுத்துநரின் (Director) கைவண்ணமும், கற்பனைத்திறனும், பங்கேற்கும் பிற கலைஞர்களுடன் இணைந்து மிளிரும்.

Voice:

குரல்

மொழியைப் பேசுதற்கு அடிப் படையாக அமைவது குரலே ஆகும். குரலின் தன்மைக் கேற்பவே ஒலியும் அமைந்து சொல் வெளிப் படுகிறது. நாடகத்தின் மேடை யேற்றத்தில் ஒரு நடிகருக்கு குரல்வளம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நல்ல குரலினை உடைய தன்மையே குரல் வள முடைய (voiceful) தன்மை ஆகிறது.

Voice change:

குரல் மாற்றம்

சிறு வயது நடிகர்கள் தங்களது வாலிப வயதினை அடையும் நிலையில் (சுமார் பதிமூன்று வயது) பேச்சில் பிசிறு தெரியும். குரல் சற்று கரடு முரடாக மாறத் தொடங்கும். இந்த நிலையே ‘மகரக்கட்டு’ எனப்படுகிறது.

பாலர்சபை நாடகத்தின் சிறு வயது நடிகர்களுக்கு இவ்வகை மாற்றம் தங்களது எதிர் காலத்தை மாற்றியமைப்பதாக அமைந்த துண்டு. இக்குரல் மாற்றத்திற்குப் பின்னர் உரிய வேடங்களில் தொடர்ந்து நடிப்பதும், வேறு வேடங்களை மாற்றிக் கொள்வதும் இயல்பான நடை முறையாகும்.

Voice culture:

குரல் பதம்

குரலை அதன் இயல்புத் தன்மை மாறுபடாமல் சீராக வைத்திருத்தல் இது. இசைத் துறையில் உள்ளோர் இதில் ஆழ்ந்த கவனம் செலுத்துவர். நாடக நடிகர்களும் இதில் கவன மாகவே இருத்தல் வேண்டும். குரல் பதத்துக்கான எளிய பயிற்சி களும் உண்டு. எளிய மருத்துவ முறைகளும் உண்டு.

Voice modulation:

குரல் அலை அமைவு

வார்த்தை உச்சரிப்புக்கேற்ப ஏற்ற இறக்கங்களோடு அதனை மாற்றும் நிலை இது. உரையாடல் உச்சிரிப்புக்கும், இசைப்பாடல் உச்சிரிப்புக்கும் இவ்வகைக் குரல் அலைகளின் அமைவு மாற்றங் கள் மிகவும் வேறுபட்டிருப்ப துண்டு. நடிகரின் நடிப்பு பாட்டில் இவ்வகைக் குரல் மாறுபாடு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி நிற்கும்.

Voiceful:

குரல் வளமுடைய

(பார்க்க: Voice -குரல்)

Waggon Stage:

நழுவு மேடை

பின் மேடையில் அமைக்கப் பட்டிருக்கும் இரண்டுக்கு மேற் பட்ட காட்சியமைப்புத் தொகுதி களைச் சுழற்சி மூலமாக உரிய நிலைப்பாட்டிற்குக் கொண்டு வர உதவும் தளம் நழுவுதள மாகும். இது தண்டவாளத் தொகுதி, மேலெழுப்பி போன்ற வற்றின் துணையோடு இயக்கம் பெறும் வண்ணம் அமைக்கப் பட்டிருக்கும். பெரிய மேடை களில் ஐந்திற்கும் மேற்பட்ட நழுவு மேடைத் தொகுதிகள் பல்வகைக் காட்சித் திரைகளைச் சுமந்தபடி செயல் பாட்டுக்குக் கொண்டு வரப் படுவதுண்டு. இவை நடிப்புப் பரப்பிலிருந்து பல திசைக்கும் நகரக்கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டிருக்கும். எட்டு இணைப் பக்கத் தட்டிகள் பயன் படுத்தப்

படுவதுண்டு. இப்பக்கத் தட்டிகள் ஓரங்களால் வடிவமைக்கப் படுவதும் உண்டு. பக்கத் தட்டிகளே காட்சியமைப் பின் முக்கிய கூறாகக் கருதப்படு கின்றன.

Waits:

குழுப் பாடகர்

இரவு நேர அரண்மனைக் காவலராகவும் இருந்து கொண்டு, நாடகக் குழுக்களில் அவசரத் தேவைக்கான பாடலைப் பாடு பவராக அல்லது இசையை நிகழ்த்துபவராக அறிமுகமாகி பின்பு தொடர்ந்து குழுக்களில் இடம் பெற்றுக்கொண்டோர் இவ்வகையினராவர். இவர்களது ஊதியம் மிகக்குறைவே. ஆயினும் பார்வையாளரிடமிருந்து அதிக தொகையை அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளும் வழக்கத் தினைக் கொண்டிருந்தனர். இக்காலத்தில் பெரும்பாலான குழுக்கள் தனி இசைக் கருவி களைக் கொண்டுள்ளன.

Well made play:

செறிவுறு நாடகம்

ஒரு நாடகத்துக்கான அனைத் துக் கூறுகளையும் உள்ளடக்கி, மேடையேற்றத்தில் சிறக்கும் நாடகம் இது எனலாம். இவ்வகை நாடகமானது அளவான திட்ட மிடப்பெற்ற உரையாடலுடன் இயங்கு நிலையிற் சிறந்து விளங்கும் இதனை ஒரு நாடக உருவாக்கக் கொள்கையாகவே யூசின் கிரைபு (Eugene Scribe: 1791-1861 என்பார் செயலாக்கம் செய்தார்.

Wig:

பொய்ச் சிகைத் தொகுதி

ஒப்பனையின் முக்கிய கூறு களில் தலைமுடியை வடிவமைக் கும் சிகை ஒப்பனை ஒன்றாகும். உடல், வேடப்பொருத்தம், ஏற்றுக் கொள்ளும் பாத்திரப்படைப்பு போன்றவற்றிற்கு ஏற்ப சிகை வடிவமைப்பு செய்யப்பெறும். இயற்கையான தலை மயிர் இல்லாத நிலையில் முற்றிலும் செயற்கை இழைகளால் இவ் வமைப்பு உருவாக்கப்பெற்று பொருத்தப்படும். பல்வேறு வடிவங்களிலும், அளவுகளிலும் ஆயத்த நிலையில் தயாரித்து பல்வேறு நாடகங்களுக்கும் பொதுவாகப் பயன்படுத்தும் வண்ணம் பாதுகாக்கப்படுவதும் உண்டு. தொன்ம நாடகங்கள், வரலாற்று நாடகங்களுக்கான பாத்திரங்களுக்கும் பெண் வேடதாரிகளுக்கும் மிக நீளமான அளவில் பொய்ச் சிகைத்

தொகுதிகள் உருவாக்கப் படுவதுண்டு. சமூக நாடகங்களில் பங்கேற்போருக்கான இயல்பான அளவில் நீளமாகவோ குறுகலாகவோ இவை ஆக்கப் பட்டிருக்கும். பாத்திர வடிவமைப்பில் இது முக்கியமான பங்களிப்பு செய்கிறது.

Wing:

பக்கத்தட்டி

மேடையில் இருபுறமும் வைக்கப் படும் தட்டி பக்கத் தட்டி எனப் படுகிறது. அவை இணையாக ஒன்றை ஒன்று முகம் பார்த்த படியோ, பார்வையாளரைப் பார்த்த படியோ வைக்கப்பட்டிருக்கும். பொதுவாக 3 முதல் 4 இணைப் பக்கத் தட்டிகள் பயன் படுத்தப்படுவதுண்டு.

Wit:

அறிவார்ந்த நகைத்திறன்

மகிழ்ச்சியினையும் குதூகலத்தையும் தரத்தக்க வல்ல நகைப்பை உருவாக்கத்தக்க புத்திசாலித் தனமான எண்ண வெளிப்பாடே அறிவார்ந்த நகைத்திறன் எனப் படுகிறது. இவ்வகை நகைத்திறன் அறிந்து கொள்ளுதலை அடிப் படையாகக் கொண்டது ஆகும். எனவே புரிந்து கொள்ளும் நோக்கிலேயே இது அமைந்து வரும். நகைத்திறனோடு (humour) ஒப்பிட்டு நோக்கின் அறிவார்ந்த நாடகத் திறனானது வேகமான, அறி வார்ந்த எண்ணங்களின் பிரதிபலிப்பாக அமையும். மேலும் இவ்வகை நகைத்திறன் சரியான சொற்றொடரை அடிப்படை யாகக் கொண்டு அமைந்து வரும். நகைத்திறன் பெரும்பாலும் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு அமையும். ஆனால் அறிவார்ந்த நகைத்திறனோ விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு சிறக்கும்.

Women's Theatre:

மகளிர் நாடக அரங்கு

மகளிர் விழிப்புணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் 1960களில் அமெரிக்காவில் இவ்வகை அரங்கச் செயல்பாடு துவக்கம் பெற்றது. எனினும் மகளிர் மட்டுமே பங்காளர் களாகி நாடகம் படைத்தளித்த வகையில் தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மகளிர் நாடகக் குழுக்கள் செயல்பாட்டில் இருந்தன. பாலாமணி அம்மாள், அரங்கநாயகி போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு

செய்துள்ளனர். 'பாலாமணி ஸ்பெஷல்' என்னும் பெயரில் தனிப் புகைவண்டி பாலாமணி அம்மாள் நாடகங்களுக்காக இயக்கப் பெற்ற நிலை இதன் சிறப்பினை வெளிப்படுத்தும்.


தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்
தமிழ் நாடு
அச்சகம்